















தமிழ்நாடு
அரசின்

# தமிழரசு

10 ஆண்டுச்
சாதனைச்
சிறப்பு மலர்
2

16-7-1987

ரூ. 1



# நிறுவன நிதித்துறை
# நிறுவன நிதி உதவி



**சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்கள் வாழ்வு மலர, குறைந்த வட்டிக்கு நீண்டக் காலத் தவணைகளில் அரசும், கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகளும் நிறுவன நிதித் துறையுடன் இணைந்து பல்வேறு திட்டங்களுக்கு கடன்கள் அளிக்கப்படுகின்றன. சில இனங்களுக்கு அரசு மான்யமும் உண்டு.**

பாரத பிரதமரின் படித்த
வேலையில்லாத இளைஞர்களுக்கான
சுயவேலை வாய்ப்புத் திட்டம்.

(1983 ஆம் ஆண்டு முதல்
1987 மார்ச் வரை)

பயன் அடைந்த குடும்பங்கள்
52,710

(தொகை ரூ. கோடியில்)
98.73

சிறிய மற்றும்
மிகச் சிறிய
விவசாயிகளுக்கான
விவசாய உற்பத்தியை
பெருக்குவதற்கான திட்டம்.

(1983 ஆம் ஆண்டு முதல்
1987 மார்ச் வரை)

| பயன் அடைந்த நபர்கள் | (தொகை ரூ. கோடியில்) |
|---|---|
| சிறு பாசனத்திற்கு 1,37,179 | 28.95 |
| நிலமேம்பாட்டிற்கு 32,413 | 5.55 |

ஒருங்கிணைந்த
ஊரக வளர்ச்சித்
திட்டம்

(1980 ஆம் ஆண்டு முதல்
1987 மார்ச் வரை)

பயன் அடைந்த நபர்கள்
18,64,535

(தொகை
ரூ. கோடியில்)
219.69

சமுதாயத்தில்
நலிந்த பிரிவினருக்கு
கடன்கள்

(1983 ஆம் ஆண்டு முதல்
1987 மார்ச் வரை)

பயன் அடைந்தோர் எண்ணிக்கை
22,74,231

(தொகை ரூ. கோடியில்)
1027.27

பலரும் பயன் பெற, பெற்ற கடனை தவணை தவறாமல் திரும்பச் செலுத்திடுவீர்.

DIPR /MS/87 (R)

“நமது சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் நல்லிணக்கமான முறையில் சீரான முன்னேற்றம் பெற உத்தரவாதம் தரப்பட வேண்டும். சமநிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வளர்ச்சிகள் அமைய வேண்டும். அமைதியான சூழ்நிலையில் - சட்டம் ஒழுங்குக்கு எவ்வித பாதகமும் நேராத வகையில் மக்களின் நல்வாழ்வையே இலக்காகக் கொண்டு நிர்வாக இயந்திரம் இயங்க வேண்டும். இதுவே எங்களுடைய அரசியல் சமுதாய தத்துவமாகும். நாங்கள் இதுவரை சாதித்த சாதனைகளைக் காட்டி மெத்தனமாக இருந்துவிடப் போவதில்லை. புதியதோர் சமுதாய அமைப்பு எனும் இலட்சிய புரியை நோக்கி நாங்கள் தொடர்ந்து முன்னேறி வருவோம். மக்களுக்கு மகத்தான முறையில் தொண்டாற்ற வேண்டுவதற்காக ஈடு இணையற்ற விசுவாசத்துடன், கடமைப்பற்றுடன் தமிழக மாந்தரின் மாபெரும் ஆதரவுடன் எங்களது இலட்சியப் பயணம் இடையறாது தொடர்ந்து தொய்வின்றி நடந்துகொண்டிருக்கும்!”

—டாக்டர் எம்.ஜி.ஆர்



## சாதனைச் சிறப்பு மலர்–2

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018
பிரபவ-ஆனி 32

மலர் : 18 இதழ் : 2

16-7-1987

# புதிய சாதனைகள் பொன் மகுடங்கள்

அண்ணாவின் அரசு எனத் திண்ணாரும் புகழ் பெற்ற தமிழக அரசு கடந்த பத்தாண்டுக்காலத்தில் புதிய சாதனைகளை உருவாக்கிப் பொன் மகுடத்தைச் சூட்டிக் கொண்டிருக்கிறது.

அவற்றில் ஒரு சில இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

**வேளாண்மைத்துறை:**

'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை' என்று பழுதின்றிச் சொன்னார் ஔவைப் பாட்டி.

வேளாண்மை உற்பத்தியில் முன்னேற்றம் விளைத்துள்ளது தமிழகம். 1976-77 இல் ஒரு எக்டேருக்கு சராசரி 55 கிலோ உற்பத்தியாகியுள்ளது. உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்கத்தில் தமிழகம் அனைத்திந்தியாவிலும் 2 ஆம் இடத்தைப் பெறுகிறது. கரிம உர உற்பத்தியிலும் முன்னோடியாகத் திகழ்கிறது தமிழகம்.

**தொழில்துறை:**

'தொழிலே எழில்' என்றார் பாவேந்தர் பாரதிதாசன். அவரது மொழியை மெய்யாக்கும் வகையில் தமிழக அரசு தொழில் வளத்தில் அக்கறை காட்டி அருஞ்சாதனை செய்து வருகிறது. தொழில் துறை உற்பத்தியில் நிகர மதிப்பினை ஒப்பிடும்போது இந்தியாவில் 2 ஆம் இடத்தைப் பெறுகிறது தமிழகம்; தொழில் தொடங்குவதற்கு உரிமம் வழங்குவதில் 3 ஆம் இடத்தை வகிக்கிறது.

1977-இல் தமிழகத்தில் இருந்த சிறு தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 18824. இது 1987 இல் 80,865 ஆக உயர்ந்திருக்கிறது.

வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு அளிக்



கும் திட்டத்தின் கீழ் 1983-84, 1984-85, 1985-86, 1986-87 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் குறித்த இலக்கினை எய்தி, தொடர்ந்து சாதனைச் சரிதத்தைப் படைத்திருக்கிறது தங்கத் தமிழகம்.

**கைத்தறி நெசவுத் துறை:**

கவின்மிகு கைத்தறி நெசவை வளர்க்கும் கண்ணான பணியில் பேரறிஞர் அண்ணா காண்பித்த ஆர்வம் நாடறிந்ததாகும். இதை உணர்ந்த அண்ணாவின் அரசாம் தமிழக அரசு, கைத்தறியாளரின் நலன் கருதி, 70 விழுக்காடு கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ்கொண்டு வந்துள்ளது. இந்த வகையில் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது தமிழகம்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடை முதலுக்கு, குறைந்த அளவு வட்டி வழங்குவதில் 58 விழுக்காடு சாதனையைத் தமிழகம் புரிந்துள்ளது.

இந்திய நாட்டின் மொத்தக் கைத்தறிகள் 30 இலட்சம். இதில் தமிழகத்தில் உள்ள கைத்தறியின் எண்ணிக்கை மட்டும் 5.56 இலட்சம்.

அனைத்திந்தியாவிலும் உள்ள கூட்டுறவுச் சாய ஆலைகள் 887. அன்னைத் தமிழகத்தில் மட்டும் உள்ள சாய ஆலைகளின் எண்ணிக்கை 282.

நெசவாளர் சேமிப்பு, பாதுகாப்புத் திட்டத்தை நெறியுடன் துவக்கி முன்னோடியாக விளங்குகிறது தமிழ்நாடு.

1986-87ல் 102 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை செய்து, இந்தியாவிலேயே முதலிடம் பெற்று விளங்குகிறது தமிழ்நாடு கோ-ஆப்டெக்ஸ்.

**நெசவாலைகள்:**

அனைத்திந்தியாவிலும் உள்ள நூற்பாலைகள் 732. தமிழகத்தில் மட்டும் உள்ளவை 415. இந்தியாவிலேயே இந்த வகையில் முதலிடம் பெறுவது தமிழகம் தான்.

உற்பத்தி, உற்பத்தித்திறன், நிதிச் செயலாக்கம் ஆகியவற்றில் சேலம் கூட்டுறவு நூற்பாலை இந்தியாவிலேயே சிறந்து விளங்குகிறது.

விசைத்தறிகள் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் இந்தியாவில் 3ஆம் இடத்தைப் பெறுகிறது முத்தான தமிழகம். 1.01 இலட்சம் மின்விசைத்தறிகள் இங்கே செயல்படுகின்றன. பருத்தித் தறிகளைப் பொறுத்த அளவில், இந்தியாலேயே 2 ஆம் இடம் தமிழகத்திற்குத்தான்.

**மின்சார வாரியப் பணிகள்:**

1976-77ல் மின்சாரத் துறையின் நிதி ஒதுக்கீடு ரூ.75.45 கோடி. 1986-87ல் இந்த ஒதுக்கீடு 5 மடங்காகப் பெருகி ரூ.393.36 கோடியை எட்டியுள்ளது.

1976-77ல் தமிழக மின் உற்பத்தி 2364 மெகாவாட். 1986-87ல் மின் உற்பத்தி 3987 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது.

மின்வாரியத்தின் உற்பத்தி 1976-77ல் 2176 மில்லியன் யூனிட்; தமிழக அரசின் தனி முயற்சியால் 1986-87ல் உற்பத்தி 6129 மில்லியன் யூனிட் ஆகப் பெருகியுள்ளது.

பம்பு செட்டுகளின் இணைப்பைப் பொறுத்த வரையில் தமிழகம் அனைத்திந்தியாவிலும் முதலிடம் வகிக்கிறது. இந்திய நாடு முழுதும் இணைப்புப் பெற்றுள்ளவை 65 லட்சம் பம்பு செட்டுகள். இதில் ஆறில் ஒரு பங்கு தமிழகத்திலேயே இடம் பெற்றுள்ளது என்பது எண்ணி எண்ணி மகிழத் தக்கது.

சிறப்பான உற்பத்திக்குரிய பரிசளிப்புத் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி அனல் மின் நிலையம் 1984, 1986 ஆண்டுகளில் இந்திய அரசின் பதக்கங்களுடன் பரிசுத் தொகை முறையே ரூ. 6 லட்சம், ரூ. 10 இலட்சம் பெற்றுச் சிறப்புற்றது.

எண்ணூர் மின் நிலையமும் இந்தச் சிறப்பை எய்தியுள்ளது. 1985, 1986 ஆண்டுகளில் முறையே ரூ.3.6 இலட்சம், ரூ.5.4 இலட்சம் பரிசு பெற்றுள்ளது.

55 கிலோவாட் உற்பத்தித் திறன் கொண்ட காற்று மின் உற்பத்திக் கருவிகள் 16, அனைத்திந்தியாவிலும் தமிழ் நாட்டில்தான் முதல்முறையாக நிறுவப்பட்டுப் பெருமை தேடித் தருகின்றன.

1984-85ன் பிற்பகுதியிலிருந்து சிறு விவசாயிகள் ஒரு இலட்சம் பேருக்கும் குடிசை வாழ் மக்கள் 7½ இலட்சம் பேருக்கும் இலவசமாக மின்சாரம் அளித்து இணையிலாப் பெருமை பெற்றது தமிழகம்.

**ஊரக வளர்ச்சியில் உருவான முன்னேற்றம்:**

**சாண எரிவாயு**

சாண எரிவாயுவைச் சிறப்பான வகையில் பயன்படுத்திய சாதனைக்காக 1984-85ல் இரண்டாம் இடமும், 1985-86ல் முதலிடமும் பெற்று, பதக்கமும் சான்றும் அடைந்தது தமிழகம்.

1984-85ன் குறியளவோ 10000 கரிமவாயுக் கலன்கள்; நிறுவப்பட்டதோ 17549 கலன்கள். இந்த வகையில் இந்திய நாட்டில் இரண்டாம் இடத்தைப் பெற்ற தமிழகம் பதக்கமும் சான்றும் பரிசாய்ப் பெற்றது. கரிமவாயுக் கலன்களைப் பயன்படுத்திய வகையில் சிறந்த மாவட்டமெனத் தேர்வு பெற்றது பெரியார் மாவட்டம்; சிறந்த ஒன்றியம் எனத் தேர்வு பெற்றது அம்மாபேட்டை ஒன்றியம்.

இரண்டும் முறையே 50 ஆயிரம், 25 ஆயிரம் என ரொக்கத் தொகையைப் பரிசாகப் பெற்றன.

1985-86ல் மூன்றாம் இடத்தைப் பெற்றது தமிழகம்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தும் செம்மை சேர் பணியில் மூன்றாம் இடத்தைப் பெற்றது தமிழகம்.

**நாட்டு நலம் பெருக குடும்பநலம்:**

குடும்பநலம் காக்கும் குறிக்கோளில் ஒவ்வோராண்டும், இலக்கினை எய்தி ஈடில்லாச் சாதனைச் சரிதம் படைக்கிறது தமிழகம்.

*1983-84* முதல் *1986-87* வரை தொடர்ச்சியாக ஆண்டுதோறும் நூறு விழுக்காட்டுக்கு மேலே சாதனை நிகழ்த்தியுள்ளது.

இந்தப் பணிக்காக இரண்டரை கோடி ரூபாயைத் தமிழகம் மைய அரசிடமிருந்து இருமுறை (1984-85, 1985-86) பரிசு பெற்றது இனிய செய்தியாகும்.

மைய அரசு *1985-86*ல் உருவாக்கிய பத்துவாரச் சிறப்புப் பயிற்சியில் திறம்படச் செயல் புரிந்த நேர்த்திக்காக ரூ. 4½ இலட்சம் பரிசு பெற்றுச் சிறப்புறுகிறது தமிழகம்.

**பாரில் சிறந்த பாம்பன் பாலம்:**

நீர்ப்பகுதியையும் நிலப்பகுதியையும் இணைக்க உதவுவது பாலம்; தமிழ்நாட்டில் தென் கோடியில் உள்ள இராமேஸ்வரம் தீவுக்குத் தரை வழியாகப் பாலம் அமைக்கும் பணி 20 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகிறது. இந்தப் பாலம்தான், தென்னிந்தியாவிலேயே மிக நீளமான பாலம் ஆகும். இந்தியத் திருநாட்டில் கடல் நீர்ப் பரப்பிற்கு மேல் கட்டப்படும் முதல் பாலம் என்ற சிறப்பும் இதற்குத்தான் சேர்கிறது.

**பொதுமக்களுக்கு உதவும் போக்குவரத்துத்துறை:**

பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் முக்கிய இடம் பெறுகிறது போக்குவரத்து.

ஒரு இலட்சம் மக்களுக்கு *34* பேருந்துகள் என்னும் விகிதத்தில் *16,467*பேருந்துகளைத் தன்னகத்தே கொண்டு இந்தியாவில் முதன்மையாக விளங்குகிறது தமிழகம். அரசுடைமையாக்கப்பட்ட *11,167.* பேருந்துகளைக் கொண்டு இந்தியாவில் 2 ஆம் இடத்தை வகிக்கிறது தமிழகம்.அந்நாளில் இருந்த போக்குவரத்துக் கழகங்கள் 7. இந்நாளில் இருப்பவை 15.

எரிபொருள் மிச்சப்படுத்திய இணையிலாச் சாதனைக்காக சோழன் போக்குவரத்து, பாண்டியன் போக்குவரத்து 1981, 82,86 ஆகிய ஆண்டுகளில் தேசிய விருது பெற்றன.

உற்பத்தித் திறனை அதிகரித்த உன்னதமான சாதனைக்காக, சோழன், தந்தை பெரியார், திருவள்ளுவர், பாண்டியன், பல்லவன் 1982,83,84,85,86 ஆகிய ஆண்டுகளில் விருது பெற்றுள்ளன.

உடல் ஊனமுற்றோருக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு அளித்த ஒப்பற்ற சாதனைக்காக 1978,82 ஆகிய ஆண்டுகளில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் விருதுகள் பெற்றுள்ளது.

தொழிற்சாலையில் விபத்தின்றிப் பாதுகாப்பு உணர்வுடன் பாங்குறப் பணியாற்றிய சாதனைக்காக 1983ல் சோழன் போக்குவரத்துக் கழகம் விருது பெற்றிருக்கிறது.

புதிய கண்டு பிடிப்புகளை அறிமுகம் செய்த பொன்னான பணிக்காக 1984ஆம் ஆண்டில் சோழன் போக்குவரத்துக் கழகம் விருது பெற்றுள்ளது. டயர் பயன்பாட்டில் சிக்கனத்தைக் கடைப்பிடித்த சீரான பணிக்காக 1986ல் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் விருது பெற்றுள்ளது.

**மீன் வளத்திலே மேன்மைகள்:**

மீனவர் நலனில்மேன்மைமிகு பணிகள் இயற்றிப் பெருமை எய்திபது தமிழகம். மீனவர் நலனுக்காக உருவாக்கிய ஜனதா விபத்துப் பாதுகாப்புத் திட்டத்தை 1984-85ல் செயல்படுத்திய வகைக்காகக் கிடைத்தது முதல் பரிசு, தமிழகத்திற்கு!

இராமநாதபுரம் மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்திலும் மீனவர் கூட்டுறவுக் குழுமங்களைத் திறம்பட உருவாக்கி சிறப்பாக இயக்கிய செயலுக்காக 1985-86ல் தேசியப் பரிசு பெற்றது தமிழகம்.

**வயது வந்தோர் கல்வி:**

வயது வந்தோர்க்குக் கல்வி வழங்கும் திட்டத்தில் தமிழகம் ஆற்றிய பணியைப் பாராட்டி யுனெஸ்கோ, நடேஷ்டா க்ருப்ஸ்கயா விருதுடன் *6868.08* டாலர் *பரிசும் 1982*ல் அளித்துப் பெருமை செய்தது.

இதே திட்டத்தின் கீழ் 1982-83ல் அதிக அளவு பெண்களுக்குக் கல்வி அளித்ததன் பயனாய்த் தமிழகம் முதலிடம் பெற்று, ரூ.25 லட்சம் பரிசை அடைந்தது.

அனைத்திந்திய அளவில் சிறந்தது எனத் தேர்வு பெற்றது செங்கை மாவட்டம். ரூ.3 லட்சம் பரிசுத் தொகையாய் ஈட்டிக் கொண்டது.

75 மையங்கள் சிறந்தவை எனத் தேர்வு பெற்றன; ரூ.3.75 லட்சம் பரிசுத் தொகையாய்த் தேடிக் கொண்டன.

*1983-84*ஆம் ஆண்டிலும் முதலிடம் வகித்துப் பரிசுத் தொகையாய் ரூ.32 இலட்சம் பெற்றது தமிழகம்.

**நகராட்சி நிர்வாக இயக்ககம்:**

கழிவுப் பொருள் உரக்கிடங்கு நிறுவிய பணியில் திருச்சிராப்பள்ளி நகராட்சி 1977-78ல் அனைத்திந்திய அளவில் முதலிடம் பெற்றது; அதனால் பரிசுத்தொகை ரூ.25 ஆயிரம் அடைந்து சிறந்தது.



# நிறுவன நிதித்துறையின் நிகரில்லாப் பணிகள்

நிறுவன நிதித்துறை 1983 ஜூலையில் அமைக்கப்பட்டது. அரசுத்துறைகளுக்கும் அமைப்புகளுக்கும் வணிக வங்கிகளுக்குமிடையே ஒரு தொடர்பு அமைப்பாகப் பணி புரியவும், வங்கிகளிடமிருந்து வேளாண்மை, தொழில், பணி வசதித் துறைகளுக்கும் உரிய காலத்தில் எளிதாகக் கடன் பெற்றுக் கொடுப்பதைக் கண்காணித்து உறுதி செய்யவும், சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் பயன் அடையவும் இத்துறை அமைக்கப்பட்டது.

முக்கியமான துறைகளுக்கு 1984 முதல் 1987 முடிய வங்கிகள் செய்துள்ள நிதி ஒதுக்கீடு 1984 முதல் 1986 முடிய வழங்கிய தொகை வருமாறு:

வேளாண்மைக்கு 1984ல் ஒதுக்கப்பட்டது 401 கோடி ரூபாய்; ஆனால் வழங்கப்பட்டது 477 கோடி ரூபாய். 1985ல் ஒதுக்கீடு ரூபாய் 483 கோடி; வழங்கப்பட்ட தொகை ரூ. 630 கோடி. 1986ல் ஒதுக்கீடு ரூ. 611 கோடி; வழங்கப்பட்டது ரூ. 753 கோடி.

இதேபோல் சிறு தொழில்களுக்கு 1984ல் ஒதுக்கீடு ரூ.93 கோடி; வழங்கப்பட்டது ரூ.122 கோடி. 1985ல் ஒதுக்கீடு ரூ.151 கோடி; வழங்கப்பட்டது ரூ.198 கோடி. 1986ல் ஒதுக்கீடு ரூ.188 கோடி; வழங்கப்பட்டது ரூ. 185 கோடி.

பணி வசதிக்காக 1984ல் ஒதுக்கீடு ரூ. 72 கோடி; வழங்கப்பட்டது ரூ. 154 கோடி. 1985ல் ஒதுக்கீடு ரூ. 115 கோடி; வழங்கப்பட்டது ரூ. 210 கோடி. 1986ல் ஒதுக்கீடு ரூ. 165 கோடி; வழங்கப்பட்டது ரூ. 206 கோடி.

அரசு இத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு மற்றும் வழங்கிய தொகை சம்பந்தமாக ஆய்வு செய்கிறது. இந்த ஆய்வு மற்றும் அரசு எடுத்த முயற்சிகளின் காரணமாக இத்திட்டங்களுக்கு 1984ல் அதாவது இத்துறையின் துவக்க காலத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 566 கோடி; 1987ல் ரூ. 12,202 கோடியாக உயர்ந்துள்ளது.

**சமுதாயத்தில் நலிந்தோர்க்குக் கடன் உதவி**

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய அரசின் பல்வேறு திட்டங்களின் வாயிலாக நிதி நிறுவனங்கள் மூலம் நிறுவன நிதித்துறை உதவியளிக்கின்றது. 1983ஆம் ஆண்டிலிருந்து நலிந்த பிரிவினர்க்கு வழங்கப்பட்ட கடன்தொகை வருமாறு:

1983-84ல் 3,76,226 பேருக்கு ரூ. 93.76 கோடி; 1984-85ல் 8,31,238 பேருக்கு ரூ. 240.17 கோடி; 1985-86ல் 9,35,623 பேருக்கு ரூ. 294.12 கோடி; 1986-87ல் (மார்ச் வரை) 11,31,144 பேருக்கு 399.22 கோடி கடன்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இத்துறையின் முயற்சியால், நலிந்த பிரிவினருக்காக 1983-84ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 93.76 கோடி. இது 1986-87ல் ரூ. 399.22 கோடியாக உயர்ந்துள்ளது.





# கைவினைத் தொழிலில் கண்ட மேன்மை!

கைவினைஞர்களுக்கு தொழில் நுட்ப உதவி மற்றும் தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளிப்பதன் மூலமும் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதன் மூலமும் இம் மாநிலத்தில் கைத்திறன் பொருள்கள் வளர்ச்சிக்கும். அதன் விரிவாக்கத்திற்கும் தனித் தன்மை கொடுக்கும் வகையில் புதிய வழிமுறைகளையும், புதிய எழுச்சியையும் உருவாக்கி கைத்திறன் தொழில்வளர்ச்சி அடையச் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இதற்காக 'பூம்புகார்' என்று புகழ் பெற்ற 'தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள்வளர்ச்சி நிறுவனம்' 26-7-73-ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது.

இந்நிறுவனம் 14 உற்பத்தி நிலையங்களும், 17 விற்பனை நிலையங்களும் தமிழ்நாட்டிலும் மற்றும் வெளி மாநிலங்களிலும் கீழ் குறிப்பிட்டுள்ள இடங்களில் நடத்தி வருகிறது.

உற்பத்தி நிலையங்கள் உள்ள இடங்கள்:

காஞ்சிபுரம்
நாச்சியார்கோயில்
ஆயக்குடி
மதுரை (வெண்கலம்)
மதுரை (தகட்டுவேலை)
வாகைக்குளம்
சேலம்
சுவாமிமலை
தஞ்சை
திருநெல்வேலி
மாமல்லபுரம்
கள்ளக்குறிச்சி
திருநெல்வேலி
(மரக்கடைசல்)

பிரம்பு மற்றும் காகிதப் பொருட்கள் உற்பத்தி நிலையம், சென்னை.

விற்பனை நிலையங்கள் உள்ள இடங்கள்:

சென்னை
மாமல்லபுரம்
வேலூர்
சேலம்
ஈரோடு
கோவை
ஊட்டி
கடலூர்
பாண்டிச்சேரி
தஞ்சை
திருச்சி
திருநெல்வேலி
மதுரை
கன்னியாகுமரி
பெங்களூர்
டெல்லி
கல்கத்தா

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:

இந்நிறுவனத்தில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்ய நல்ல திட்டங்களை அனைத்து இடங்களிலும் போடுதல்.

எல்லா வகையிலும் கைத் தொழில்களை வளர்ச்சி செய்தல் மற்றும் தொழில் கலைஞர்களை ஊக்குவிக்கவும், உற்பத்தியை அதிகரிக்கவும் ஆகும்.

இந்நிறுவனம் கைவினைஞர்களுக்கு இத்துறையில் தொழில் துவங்க ஆலோசனைகள், தொழில் நுட்பங்கள், பண உதவிகள் முதலியவற்றைத் தொடர்ந்து அளிப்பதே ஆகும்.

மேலும் இந்நிறுவனம் கைவினைஞர்கள் உற்பத்தி செய்த திறமிக்க கலைமிக்க பொருட்





களைத் தமிழ்நாடு மற்றும் வெளி மாநிலங்களிலும் உள்ள விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய வழி செய்கிறது.

இந்நிறுவனத்தின்பங்கு மூலதனம் ரூபாய் 175 இலட்சம் ஆகும். அதில் ரூபாய் 174.36 இலட்சத்திற்குப் பங்கு மூலதனமாக மாற்றப்பட்டுள்ளது. இதில் ரூ. 109.93 இலட்சம் தமிழ்நாடு அரசின் பங்காகவும், ரூ. 64.50 மத்திய அரசின் பங்காகவும், மற்றும் ரூ. 0.670 இலட்சம் தொழிலாளர் நிலை (கைவினைஞர்கள்) மற்றும் தொழில் கூட்டுறவு, இயக்கங்கள் பங்காகவும் செலுத்தப்பட்டது.

இந்நிறுவனத்தில் உள்ள 14 உற்பத்தி நிலையங்களிலும், பித்தளை விளக்குகள், வெண்கல விளக்குகள், பஞ்ச உலோகத்தினாலான விக்கிரகங்கள், கல் சிற்பங்கள், மரச்சிற்பங்கள், சந்தனப் பொருட்கள், பிரம்பு மற்றும் பட்டிக், துணிக்கலம்காரி கலை வண்ணம் படைத்த துணிகள் ஆகிய பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது.

மற்றும் நமது தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கு கடந்த 10 ஆண்டுகளில் ரூபாய் 49.27 இலட்சம் (மான்யமாகவும்) தள்ளுபடி வகையில் விற்பனை செய்த பொருள்களுக்கு மான்யமாகவும் வழங்கி உள்ளது.

மற்றும் இந்நிறுவனம் 1984 வரை பலதரப்பட்ட கைத்திறன் தொழில்களில் மிகத் தேவையான பணிகளில் பயிற்சி அளித்ததோடு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழும் பயிற்சிகள் அளித்து அதன் மூலம் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பும், சுயமாக வேலைகள் துவக்கவும், அவர்கள் வாழ்வில் ஒளி பெற இந்நிறுவனம் உதவி புரிந்து வருகிறது.

இந்நிறுவனம் பலதரப்பட்ட கைத்திறன் தொழில் பொருட்களின் கண்காட்சிகளை அகில இந்திய கைத்திறன் மிக்க பொருள்களை அன்றாட வாழ்க்கையில் பயன்படவும் சாதாரண நியாயமான விலையில் வாங்கவும் மக்கள் பயன் அடையவும் தமிழகத்திலும் மற்றும் வெளிமாநிலத்திலும் மிகத் தரமான விலையில் விற்கவும் இதன் மூலம் கைவினைஞர்கள் பயன்படவும் உதவுகிறது.

தமிழ்நாடு கைத்திறன்வளர்ச்சிக் கழகத்தின் பத்தாண்டு சாதனைகளைப் பற்றிய விவரங்கள் கீழ் வருமாறு:

1977-78-ல் ரூ. 141.48 இலட்சத்திற்கும்; 1978-ல் ரூ.175.23 இலட்சத்திற்கும்; 1979-80-ல் ரூ. 139.03 இலட்சத்திற்கும்; 1980-81-ல் 143.91 இலட்சத்திற்கும்; 1981-82-ல் ரூ. 191.39 இலட்சத்திற்கும்; 1982-83-ல் ரூ. 227.16இலட்சத்திற்கும்; 1983-84-ல் ரூ. 218.10 இலட்சத்திற்கும் 1984-85-ல் ரூ. 231.40 இலட்சத்திற்கும்; 1985-86-ல் ரூ. 292.37 இலட்சத்திற்கும்; 1986-87ல்ரூ.300.47இலட்சத்திற்கும் விற்பனை ஆகியுள்ளது.

மற்றும் இந்நிறுவனம் தமிழ்நாடு மற்றும் அண்டைய மாநிலங்களின் கோயில்களுக்குக் கலைத்திறன் மிகுந்த கீழ்க்கண்ட மதிப்பு மிக்க வேலைகளைப் பெற்று உள்ளது.

ரூ. 4.22 இலட்சம் மதிப்பில் உடுப்பி கிருஷ்ணன் கோவில் தங்க இரத வேலை.

ரூ.9.66 இலட்சம் மதிப்பில் திருப்பதி வெங்கடாசலபதி கோயில் பித்தளை நடைபாதைக் கம்பிகள் அமைத்தல் மற்றும் இதர வேலைகள்.

ரூ. 6 இலட்சம் மதிப்பில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வெள்ளி ரிஷப வேலை.







படுத்தப்பட்டு இன்று 1.1 சதவீதமாகக் குறைந்துள்ளது.

இந்தப் பத்தாண்டுக் காலத்தில் 36.59 இலட்சம் பேர்களுக்கு மலேரியா இரத்தத் தடவல் பரிசோதனை செய்யப்பட்டது. மாநகராட்சியின் தொடர்ந்த முயற்சியால் கடந்த பத்தாண்டுகளுக்குப் பின் மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை 35 விழுக்காடு குறைந்துள்ளது. கொசுத் தொல்லையைக் குறைக்க 60 புகைபோடும் வாள் பாஃக் எந்திரங்கள் ரூ. 4இலட்சம் செலவில் வாங்கப்பட்டு, நகரெங்கிலும் கொசுக்களைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

நகரத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு மாநகராட்சித் தாய் சேய் நல விடுதிகள் சிறந்த சேவை செய்கின்றன. நகரத்தில் பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் ஒரு பங்கினர் இங்கேயே பிறக்கின்றனர். தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் தடுப்பூசிகள் போடுவதிலும், மருத்துவ வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் மாநகராட்சி சிறப்பான சேவை செய்கிறது.

பத்தாண்டுக் காலத்தின் துவக்கத்தில் 42 ஆக இருந்த தாய் சேய் நல விடுதிகள் இந்தப் பத்தாண்டுகளில் 44 ஆக உயர்ந்துள்ளன. படுக்கை வசதிகளும் 410-லிருந்து 451 ஆக உயர்ந்துள்ளன. இந்தப் பத்தாண்டுகளில் ஆண்டுதோறும் சராசரி, ஒரு இலட்சத்துப் பத்தாயிரம்

# சென்னை மாநகராட்சியின் சீர்மிகு பணிகள்

கடந்த பத்தாண்டுக் காலத்தில் சென்னை மாநகராட்சி சீரிய முறையில் பல திட்டங்களை நிறைவேற்றி நகர மக்களுக்குச் சேவை செய்து வருகின்றது. பொதுச் சுகாதாரம், கல்வி, முதலமைச்சர் சத்துணவு,சாலை விளக்குகள், துப்புரவு, மழைநீர் வடிகால்கள், சாலைகள், பொதுக் கழிப்பிடங்கள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள்போன்ற பலதிறப்பட்ட பணிகளில் மாநகராட்சி முன்னேற்றப் பாதையில் சென்றுள்ளதை கடந்த பத்தாண்டுச் சாதனைகள் தெளிவாகத் தெரிவிக்கும்.

பத்தாண்டுகளுக்கு முன்னர் பொதுச் சுகாதாரத்திற்கு மாநகராட்சி ரூ. 1.47 கோடி செலவிட்டது. இன்று ரூ. 7.30 கோடி செலவிடப்படுகிறது. தொடக்கத்தில் 62 மருத்துவ மனைகளே இருந்தன. இன்றோ 71 உள்ளன. ஆரம்பத்தில் இருந்த சலவைச் சாலைகள் 11. இது 12 ஆக உயர்ந்துள்ளது. கடந்த பத்தாண்டுக் காலத்தில் 6.5 இலட்சம் பேர்களுக்கு யானைக்கால் நோய்க்கான இரத்தப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. ஆரம்பத்தில் 5 சதவீதம் இருந்த யானைக்கால் நோய் மாநகராட்சியின் முயற்சியால் கட்டுப்

- பத்தாண்டுகளுக்கு முன் 28 இலட்சம் மக்களுக்குச் சேவை செய்துவந்த சென்னை மாநகராட்சி, இன்று 41 இலட்சம் மக்களுக்குச் சேவை செய்து வருகிறது.
- பத்தாண்டுகளில் சென்னை மாநகராட்சி 28,000 புதிய வீதி விளக்குகளை அமைத்துள்ளது.

• இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கை கொண்ட சோடியம் ஆவி விளக்குகள் உள்ள நகரம் சென்னைமாநகரம்.

குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசிகளும், தட்டம்மைத் தடுப்பூசிளும் போடப்பட்டுள்ளன. புற நோய்ச் சிகிச்சைப் பிரிவில் ஆண்டு தோறும் 5 இலட்சம் மக்கள் பயன் பெற்றுள்ளனர். இந்தப் பத்தாண்டுக் காலத்தில் மொத்தம் 2.5 இலட்சம் குழந்தைகள் மாநகராட்சி தாய்சேய் நல விடுதிகளில் பிறந்துள்ளன.

தாய்சேய் நலத்தைப்போலவே குடும்ப நலத்திலும் மாநகராட்சி கவனம் செலுத்தி வருகிறது. இப்பத்தாண்டுக் காலத்தில் 24 குடும்ப நல நிலையங்களே இருந்தன. மாநகராட்சியில் முதல் முறையாக அறுவைச் சிகிச்சை செய்வதற்கென 4 பேறு காலப் பின் பணி நிலையங்கள் இந்தப் பத்தாண்டுக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குடும்ப நலத்துறையில் சாதனை இலக்கு மீறிய சாதனை என்றே கூற வேண்டும்.

கடந்த பத்தாண்டுக் காலத்தில் மொத்த இலக்குகளும் சாதனைகளும் :

| | அறுவைச் சிகிச்சை | கருத் தடை வளையம் |
|---|---|---|
| இலக்கு | 3,29,765 | 1,33,366 |
| சாதனை | 3,45,639 | 1,94,718 |
| விழுக்காடு | 105.4% | 146.0% |

பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களுக்கு மாநகராட்சி சிறந்த கல்விச் சேவை புரிகிறது. பத்தாண்டுகளுக்கு முன் 350 துவக்க நடுநிலைப்பள்ளிகளும், 34 உயர்நிலைப் பள்ளிகளுமே இருந்தன. இப்பத்தாண்டுக் காலத்தில் புதிதாக 12 துவக்க நடுநிலைப் பள்ளிகளும், தெலுங்கு பேசுவோர்களுக்கு ஒரு உயர் நிலைப்பள்ளியும், 10 புதிய மேல் நிலைப்பள்ளிகளும் திறக்கப் பட்டன. இப்போது மொத்தம் 397 பள்ளிகள் உள்ளன. இவற்றில் மொத்தம் இரண்டு இலட்சம் மாணவ மாணவியர் கல்வி கற்கின்றனர். 397 பள்ளிகளுள் 14-ஐத் தவிர மற்றவை சொந்தக் கட்டடங்களில் இயங்குபவை.

மாநகராட்சி முதலமைச்சர் சத்துணவுக் கூடங்கள் கல்வித் துறையின் கீழ் உள்ளன. பத்தாண்டுகளுக்கு முன்னர் 60,000 குழந்தைகளே மதிய உணவு பெற்று வந்தனர். 1982-83-லிருந்து முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் சீரிய முறையில் செயற்பட்டு, இப்போது 1,16,172 குழந்தைகள் சத்துணவு பெறுகின்றார்கள். 365 சத்துணவுக்கூடங்கள் உள்ளன. ஆண்டொன்றிற்கு ரூ. 1.3 கோடி சத்துணவுக்கெனச் செலவிடப்படுகிறது. மாநகராட்சியின் கல்வித் துறை அலுவலர்களைத் தவிர பிற துறைகளைச் சேர்ந்த 79 அதிகாரிகளும், ஆணையாளரும் இம்மையங்களைப் பார்வையிட்டுச் சிறப்பாகப் பணியாற்ற உறுதுணை புரிகின்றனர். இத் திட்டத்தால் 1229 பேர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது.

பத்தாண்டுகளுக்கு முன் 1300 கி.மீ. நீளத்திற்கு இருந்த சாலைகள், இந்தப் பத்தாண்டுகளில் 2772 கி.மீ.களாக வளர்ந்துள்ளன. 1976-இல் சாலைகளைப் புதுப்பிக்கவும் பராமரிக்கவும் 124.09 இலட்சங்கள் செலவிடப் பட்டன. இன்றோ ரூ. 940.42 இலட்சங்கள் செலவிடப்படுகிறது. சாலைகளைப் புதுப்பிப்பதோடு நடைபாதைகளைச் சீராக்க ரூ. 100 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சாலைபோடும் பணி நவீன எந்திரங்களால் இப்போது சீராகப் போடப்படுகிறது. பேருந்து வழித்தடங்கள் அதிக உறுதி வாய்ந்த சாலைகளாகப் போடப்பட்டுள்ளன. இவ்வாண்டு இதுவரை 171 தனியார் தெருக்கள் ரூ. 47.35 இலட்சம் செலவில் போடப்பட்டுள்ளன.

கடந்த பத்தாண்டுகளில் போக்குவரத்தை எளிதாக்கவும், விபத்துக்களைத் தவிர்க்கவும் பாலங்களை அகலப்படுத்தி புதுப்பிக்கும் பணிகளும், சுரங்கப் பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மன்ரோபாலம், பேசின் பாலம், குக்ஸ் சாலைப் பாலம், முண்டகக்கண்ணியம்மன் கோயில் சாலைப் பாலம் ஆகிய நான்கும் 111.04 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. காந்தி இர்வின் சாலையில் எழும்பூர் இரயில் நிலையம் அருகில் பாதசாரிகள் கடக்க நடைபாதைப் பாலம் ரூ. 7.26 இலட்சம் செலவிலும், பாரதி சாலை, வடக்குக் கடற்கரைச் சாலை, ஜமாலியா ஆகிய இடங்களில் ரூ. 27 இலட்சம் செலவில் பாதசாரிகள் சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டன. இவற்றைத் தவிர சாலை மையங்களில் வேலி அமைக்கும் பணியும் பாதசாரிகளின் பாதுகாப்புக்காக நிறைவேற்றப்பட்டன.

சாலை விளக்குகள் அமைத்துப் பராமரிக்கும் பணி முக்கிய பணிகளுள் ஒன்று. இப்பத்தாண்டுகளில் சென்னை மாநகராட்சி 28,000 புதிய விளக்குகளை அமைத்துள்ளது. பழுதடைந்த பாதாள மின்கம்பிகளைப் புதுப்பிக்கும் பணியும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு 816 கி.மீ. நீளத்திற்குப் போடப்பட்டுள்ளது. முக்கிய சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகள் போட்டதை முக்கிய சாதனையாகக் கருதலாம். 4000 சோடிய ஆவி விளக்குகள் இப்பத்தாண்டுகளில் ரூ. 3 கோடி செலவில் போடப்பட்டன.

இன்று இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கை கொண்ட சோடியம் ஆவிவிளக்குகள் உள்ள நகரம் சென்னையே ஆகும். புதிய விளக்குகளை அமைப்பதுடன் அனைத்து விளக்குகளையும் எரிய

மயிலை முண்டகக்கண்ணியம்மன் கோயில் தெருவில் பக்கிங்காம் கால்வாயில் குறுக்கே ரூ 35 இலட்சம் செலவில் கட்டப்பட்ட பாலம்.





**பத்தாண்டிற்கு முன் 60,000 குழந்தைகள் மதிய உணவு பெற்றனர். தற்போது 1,00,000 குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் பயன் பெறுகின்றனர்.**

வைப்பதில் மின்துறை சிறப்பாக முயன்றுள்ளது. இதற்கென்றே தனியாக 18 ஹைடிராலிக்(நீரியல் உயர்த்தி) வண்டிகள் ரூ. 76 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன. நேரு விளையாட்டரங்கில் ரூ. 25 இலட்சம் செலவில் ஒளி வெள்ள விளக்குகள் ஏற்படுத்தியது மற்றொரு சாதனையாகும். இன்று மொத்தம் 52,000 சாலை விளக்குகள் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மாநகராட்சியின் தலையாய பணி துப்புரவுப் பணி. பத்தாண்டுகளுக்கு முன் தினசரி 1350 மெட்ரிக் டன் அளவு குப்பை அள்ளப்பட்டது. இன்று தினசரி 2460மெட்ரிக் டன் அளவு குப்பை அள்ளப்படுகிறது. மேலும் துப்புரவுப் பணியை எந்திரமயமாக்கும் செயலும் இப்பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. எந்திரத் துடைப்பான் ஒன்றும் உருளைக் கொள்கலக் குப்பை ஊர்தி ஒன்றும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 208 வண்டிகளுடன், 9462 துப்புரவுத் தொழிலாளர்கள் இப்பணியைச் செய்கின்றனர். தினசரி சாலைத் துப்புரவு, நெருக்கடி மிகுந்த இடங்களில் இரவுத் துப்புரவும் நடைபெறுகின்றது.

**'மணியடித் துப்புரவு' என்ற புதிய முறை 100 இடங்களில் கடைமுறையில் உள்ளது. மணியடித்துக் கொண்டு வண்டி வரும்போது வீட்டில் பக்கத்திலோ, கோணியிலோ சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் குப்பை நேரடியாக வண்டிக்குச் சென்றுவிடும். வீதிகளில் குப்பை கொட்டப்படுவதில்லை.**

நகரெங்கிலும் அழகிய வண்ணக் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. மின் கம்பங்களில் குப்பைப் பெட்டகங்களும் பொருத்தப்பட்டுள்ளன. மெரினா கடற்கரைச் சாலைத் துப்புரவுப் பகுதியாக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது. முதன் முறையாகத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மருத்துவச் சிகிச்சை முகாம்கள் நடத்தியதும் சிறந்த பணியாகும்.

சென்னை மாநகரின் நெடுங் காலத் தேவையான மழைநீர் வடிகால்களுக்கெனத் தனித் துறை ஒன்று இப்பத்தாண்டுகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்னர் இருந்த மொத்த மழைநீர் வடிகால்கள் 454 கி.மீ. நீளம் இருந்தன. 1985-இல் ஏற்பட்ட வெள்ளத்தால் பழுதடைந்த 64 கி.மீ. நீள் வடிகால்களைச் செப்பனிட அரசு ரூ.435.29 இலட்சம் ஒதுக்கியது. இப்பணிகள் மும்முரமாக நடைபெறுகின்றன. இவற்றுள் 34 கி.மீ. தூரத்துக்கான 124 வடிகால்கள் முடிக்கப்பட்டு விட்டன. குடிசைப் பகுதிகளில் 41 கி.மீ. தூரத்திற்கான 53 வடிகால்கள் ரூ. 165 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டன. இன்றைய மழைநீர் வடிகால்களின் மொத்த நீளம் 514 கி.மீ. ஆகும். 60 கி.மீ. நீளத்திற்குப் புதிய வடிகால்கள் கடந்த 9 ஆண்டுகளில் கட்டப்பட்டன; 40 கி.மீ. நீளத்திற்குப்புதுப்பிக்கப்பட்டன. சென்னை மாநகரின் தேவையை நிறைவு செய்திட இன்னும் 533 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளின் துவக்கத்தில் 476 பொதுக் கழிப்பிடங்கள் இருந்தன. இவற்றுள் 23 கட்டணக் கழிப்பிடங்கள். இன்று மொத்தம் 839 உள்ளன: இவற்றுள் 92 கட்டணக் கழிப்பிடங்கள். பல நவீன முறையில் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன. அனைத்துக் கழிப்பிடங்களிலும் தண்ணீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இவை தவிர 93 இடங்களில் குழந்தைகளுக்கென்றே தனிக் கழிப்பிடங்களும் கட்டப்பட்டுள்ளன. அண்மைக் காலத்தில் பீகாரின் புகழ் பெற்ற சுலப் இண்டர் நாஷனல் நிறுவனத்தின் மூலம் புதிய வடிவமைப்பில் கட்டணக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றுள் இரண்டு இப்போது நன்முறையில் இயங்கி வருகின்றன.

மக்களின் நோயற்ற நல் வாழ்வுக்கெனச் சென்னை மாநகராட்சி பூங்காக்களையும், விளையாட்டுத் திடல்களையும் பராமரித்து வருகிறது. பத்தாண்டுக்கு முன்னர் 71 பூங்காக்களும் 75 விளையாட்டுத் திடல்களும் மாநகராட்சியின் பராமரிப்பில் இருந்தன. இன்று இவை 88 பூங்காக்களாகவும், 80 விளையாட்டுத் திடல்களாகவும் பெருகியுள்ளன. இவற்றைத் தவிர மூன்று விளையாட்டரங்கங்களும் உள்ளன. விளையாட்டுத் திடல்களையும் பூங்காக்களையும் பராமரிப்பதற்கென்றே துணை ஆணையாளர் பதவியும் உருவாக்கப்பட்டுள்ளது. சாலையோரங்களில் 10,000 மரக் கன்றுகளை மாநகராட்சி நட்டுள்ளது. இவற்றைப் பாதுகாக்கப் புதிய பாதுகாப்பு வேலைகளையும் மாநகராட்சியே உருவாக்கியுள்ளது.

பத்தாண்டுக்கு முன் 128.23 சதுர ச.கி.மீ. பரப்பளவு இருந்த மாநகராட்சி, இந்தப் பத்தாண்டில் 174 ச.கி.மீ. பரப்பாக விரிந்துள்ளது. பத்தாண்டுக்கு முன் 28 இலட்சம் மக்களுக்குச் சேவை செய்து வந்த மாநகராட்சி இன்று 41 இலட்சம் மக்களுக்குச் சேவை செய்து வருகிறது.



# வெற்றிகரமான வெண்மைப் புரட்சி

**பொ**ன் மனத் தலைவர் ஆட்சியிலே பால் பெருக்குத் திட்டங்கள் புகழ் பரப்பி நடைபோடுகின்றன. சரித்திர நாயகர் டாக்டர் எம்.ஜி.ஆர் ஆசியோடு சிறப்பு மிக்க பால் பண்ணைத் திட்டங்கள் செயல்படத்தொடங்கியுள்ளன. இவை தமிழகத்தில் சமூகப் பொருளாதார மாற்றங்களைத் தோற்றுவித்துள்ளன.

தமிழ்நாட்டில் பால் பெருக்குத் திட்டம் மூன்று அடுக்கு 'ஆனநத' முறையில்-கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட அளவில் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், மாநில அளவில் உற்பத்தியாளர்கள் இணையம் மூலம் செயல்படுத்தி பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு வருடம் முழுவதும் நிலையான விற்பனை ஏற்படுத்தி லாபகரமான விலை வழங்குவதுடன் நகரங்களில் வாழும் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் பாலை வழங்கி செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பால் பெருக்குத் திட்டம தற்பொழுது 12 மாவட்டங்களாகிய செங்கல்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு, தர்மபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், உதகமண்டலம், மதுரை, அண்ணா, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இந்திய பால் பண்ணைக் கழகத்தின் நிதி உதவியுடனும் மற்றும் தேசிய பால் வள வாரியத்தின் தொழில் நுட்ப உதவியுடனும் செயல்படுத்தப்படுகிறது.

இதனைத் தவிர மற்ற மாவட்டங்களாகிய இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மாநில நிதியுதவி வறட்சி நிவாரண பகுதி நிதியுதவி மற்றும் மலைவாழ்பகுதி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டங்களினால் 1977-78-ம் ஆண்டு முதல் 1986-87-ம் ஆண்டு வரை ரூ. 6,022.20 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பாலின் கொன்முதல் விலை 1979-ஆம் ஆண்டில் கிலோ கொழுப்புச்சத்திற்கு ரூ. 24-ஆக இருந்ததை (லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.43) ரூ. 48-ஆக (லிட்டர் ஒன்றுக்கு ரூ. 3.00) படிப்படியாக உயர்த்தி தற்பொழுது வழங்கப்படுவதுடன் உற்பத்தியாளர்களுக்குச் செய்யும் பால் பட்டுவாடா பணம் ரூ. 2,260 இலட்சத்திலிருந்து ரூ. 12,045 இலட்சமாக உயர்ந்துள்ளது.

கிராமங்களில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளை பாதுகாக்க, பராமரிக்க, மேலும் விருத்தி செய்ய எல்லா மருத்துவ வசதிகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. கிராம அளவில் எப்பொழுதும் கால்நடைகளுகளுக்கு முதலுதவி சிகிச்சை கிடைக்க வசதிகளும் செயல்படுத்தப்படுகிறது. கால்நடை பராமரிப்பு திட்டத்தின் கீழ் 30,000 கால்நடைகள் பயன் அடைந்ததை தற்போது 6,60,804 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் கிடைக்கும்தீவன வசதியைப் பெருக்க 1977ஆம் ஆணடு சென்னை, ஆம்பூர்-வட ஆற்காடு ஆகிய இடங்களில் இருந்த கால்நடைத் தீவன நிலையத்தின் எண்ணிக்கையை மூன்றாக உயர்த்தி ஈரோட்டிலும் மற்றொரு கால்நடை தீவன நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் 1977-ம் ஆண்டு இருந்த கால்நடைத் தீவன உறபத்தி 12,999 டன்னை உயர்த்தி 28,750 டன்னாக ஆண்டொன்றிற்கு உற்பத்தி செய்து உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவு சங்கம் மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஆலைகளில் தயாராகும் தீவனம் தவிர பண்ணைகளில் விளைவிக்கப்படும் தீவனமும் கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து தந்து பால் வளம் பெருக்குகின்றது. 1977-ல் 419.74 ஏக்கரில் தீவனம் பயிரிடப்பட்டது. 1986-87-ல் தீவனம் பயிரிடப்படும் அளவு 1884 ஹெக்டேராக உயர்ந்தது.

இவைகள் மட்டுமின்றி கால்நடை இனம் வளர பால் வளம் பெருகச் சிறப்புத் திட்டங்கள் பல நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

1986-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் மேற்கு ஜெர்மனியிலிருந்து



மூன்று வல்லுநர்கள் நம் நாட்டிற்கு வந்து பார்வையிட்டு முதற்கட்டமாக நீலகிரி மாவட்டத்தில் மேற்கு ஜெர்மனி மாடுகளை கொண்டு வந்து பரிசோதனை செய்ய முடிவு செய்து வந்தார்கள். இந்திய பால்வள வாரியம், 250 சினைக்கிடாரிகளைத் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கியது. இன விருத்தி செய்வதற்கு 10 மேற்கு ஜெர்மனி காளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த ஒதுக்கீட்டின்படி 250 சினைக்கிடாரிகளையும் 10 காளைகளையும் தமிழ்நாட்டிற்கு இந்த ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதத்தில தருவிக்கப்பட்டு ஓசூர் கால்நடைப் பண்ணையில் 60 நாட்களுக்கு தடுப்புப் பாதுகாப்பில் வைக்கப்பட்ட பின்பு நீலகிரி மாவட்டத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பயிற்சி அளிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒவ்வொரு கிடாரியை ரூ.6 ஆயிரம் வீதம் இந்திய பால்வள வாரிய நிறுவனம் நிர்ணயித்தபடி வழங்கப்பட்டுள்ளது. மேற்கு ஜெர்மனியிலிருந்து தருவிக்கப்பட்ட 10 காளைகளையும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமாக ஊட்டியில் அமைந்துள்ள நியூக்ளியஸ் ஜெர்ஸி ஃபார்மிற்கு உயிரின அபிவிருத்திக்கு வழங்கப்பட்டது.

பால் வளம் பெருகியதோடு பால் பொருட்கள் விற்பனையும் கணிசமாகப் பெருகியிருக்கின்றன. கிருஷ்ணகிரி, மதுரை, ஈரோடு, சேலம் ஆகிய இடங்களில் பெருமளவில் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலைகள் உள்ளன.

## சென்னை நகரில் பால் விற்பனை

நகரிலுள்ள நுகர்வோர்களுக்கு பால் தட்டுப்பாடின்றி கிடைக்க நல்ல பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் இன்று நாளொன்றுக்கு சராசரி 5.5 இலட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்படுகிறது. இதனால் ஏறத்தாழ 7 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்து வருகிறார்கள். இதனை 511 பால் விற்பனை நிலையங்கள் 53 பாலகங்கள் மற்றும் 100 தானியங்கி பால் விற்பனை நிலையங்களின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. எங்கும் இல்லாத முறையில் தானியங்கி பால் விற்பனை நிலையங்களில் காலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை பால் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பால் விநியோகத்தில் நுகர்வோர்களை ஈடுபடுத்தி நுகர்வோர் பால் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளது. சென்னை நகரில் இன்று பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மொத்தத்திலுள்ள 136 பால் விற்பனை நிலையங்களின் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் மொத்த விற்பனையில் நாளொன்றுக்கு 1,14,027 லிட்டர் பால் விநியோகம் ஆகின்றது.

நுகர்வோர்களுடைய தேவைகளை உடனுக்குடன் கவனிக்க சென்னை நகர் வடக்கு, தெற்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு துணை மேலாளர் பொறுப்பில் இருக்கின்றார். நுகர்வோர்களின் குறைகளை 24 மணி நேரமும் கேட்டறிந்து ஆவன செய்ய நுகர்வோர் நல பிரிவுகள் இயங்கி வருகின்றன. இதனை தவ்ர, வாய்ப்பு கிடைக்கும்பொழுது எல்லா நுகர்வோர்களை, நிர்வாக இயக்குநர் மற்றும் முதுநிலை அலுவலர்கள் நேரடியாக சென்று பார்த்து பால் வழங்கும் பணியை சிறப்புறச் செய்து வருகின்றனர். மொத்தத்தில் இன்று நகர்வாழ் மக்களுக்கு சுகாதார முறையில் தயாரான சுத்தமான பால் நியாயமான விலையில் தாராளமாக கிடைக்க வழிவகை செய்யப்படுவதுடன் வெண்மைப் புரட்சியில் கிராமத்திலுள்ள விவசாயிகள் நலன் நன்கு பாதுகாக்கப்படுகிறது. இன்று சென்னையில் மாதவரம், அம்பத்தூர் ஆகிய இடங்களில் பால் பக்குவப் படுத்தும் ஆலைகள் உள்ளன. வளர்ந்து வரும் சென்னையின் பால் தேவைகளை மனதில் கொண்டு ரூபாய் 4 கோடி செலவில் மற்றும் ஒரு புதிய பால் பண்ணையை தென் சென்னையில் அமைக்கவும், தற்பொழுதுள்ள அம்பத்தூர் பால் பண்ணையை ரூ. 2.45 கோடி மூலதனத்தில் பால் பதப்படுத்தும் திறனை நாளொன்றுக்கு 3 இலட்சத்தில் இருந்து 4 இலட்சம் லிட்டராக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனால் சென்னை நகரில் இயங்கி வரும் 100 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் 1992 இறுதிவாக்கில் 200 ஆக உயர இருக்கின்றன. சென்னையில் மட்டுமின்றி சென்னையின் சுற்றுப்புறங்களான பல்லாவரம், குரோம்பேட்டை ஆகிய இடங்களிலும் தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது. 15 நாட்களுக்கு மேலாக கெட்டுப் போகாத முறையில் பால்களை சிறப்பான சிப்பங்களில் அடைத்து நுகர்வோருக்கு அனுப்பவும் திட்டம் உள்ளது.

தமிழக முதல்வர் ஆசியோடு நிறைவேற்றப்பட்ட பால்வள திட்டங்கள் தமிழகத்திலே நல்ல பலன் கொடுக்கத் துவங்கி விட்டன. இத்திட்டங்கள் தொய்வின்றித் தொடர இத்திட்டத்தால் ஏற்படும் பலன் எல்லோருக்கும் குறைவின்றிக் கிடைக்க இத்துறை மேலும் ஊக்கமுடன் பணியாற்றிட உறுதிபூண்டுள்ளது.

### சென்னை நகரில் பால் விற்பனை

சென்னையிலுள்ளநுகர்வோர்களுக்கு பால் தட்டுப்பாடின்றி கிடைக்க நல்ல பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் தற்போது நாளொன்றுக்கு சராசரி 5.5 இலட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்படுகிறது. இதனால் ஏறத்தாழ 7 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன. 511 பால் விற்பனை நிலையங்கள், 53 பாலகங்கள் மற்றும் 100 தானியங்கி பால் விற்பனை நிலையங்களின் மூலமாக பால் விநியோகிக்கப்படுகிறது.

### பால் பொருட்கள் உற்பத்தி

பால் வளம் பெருகியதோடு பால் பொருட்களின் விற்பனையும் கணிசமாகப் பெருகியிருக்கின்றது. கிருஷ்ணகிரி, மதுரை, ஈரோடு, சேலம், ஆகிய இடங்களில் பெருமளவில் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலைகள் உள்ளன.

| ஆண்டு | வெண்ணெய் | நெய் (டன்களில்) | பால் பவுடர் |
|---|---|---|---|
| 1977-78 | 1086.6 | 337.8 | 850.4 |
| 1980-81 | 1177.4 | 500.6 | 767.0 |
| 1984-85 | 3767.0 | 1157.0 | 3490.0 |
| 1985-86 | 4432.0 | 2824.0 | 4745.0 |
| 1986-87 | 3377.0 | 1705.0 | 3633.0 |




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!

# முன்னோடியாக விளங்கும் மின்சார வாரியம்

கடந்த 1977-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டுகளில் தமிழகத்தில் ஏறபட்டுள்ள பொருளாதார வளர்ச்சியில் மின்சாரம் பெரும்பங்கு வகித்துள்ளது. 1977-87ஆம் ஆண்டுக் காலத்தில் தமிழ்நாடு மின்வாரியத்தால் கூடுதலாக 1120 மெ. வா. நிறுவுத்திறன் ஏற்படுத்தப்பட்டது. இவற்றில் 1986-87-இல் மட்டும் 325 மெ. வா. நிறுவுத்திறன் கூடுதலாக்கப்பட்டது. தமிழ்நாட்டின் மின் உற்பத்தி நிறுவனத்திறன், 1976-77-ஆம் ஆண்டில் 2364 மெ. வாட்டுகளாக இருந்தது, 3987 மெ. வாட்டுகள் அளவினை எட்டியுள்ளது.

1976-77-இல் மின் பயனீட்டளவு 8023 மி. யூனிட்டுகளாக இருந்தது. இது 1986-87-இல் 16,862 மி.யூ. ஆக இப்பத்தாண்டுக் காலத்தல் இருமடங்கெனப் பெருகியுள்ளது. இந்த அளவு மின் வளர்ச்சி உயர்வுக்கான முக்கிய காரணம், அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி 1976-77-இல், 2176 மி.யூ. என இருந்து, 1986-87இல் 6129 மி.யூ. ஆக மும்மடங்கு பெருகியுள்ளது. 1976-77-ஆம் ஆண்டு இறுதியில் தமிழ்நாட்டில் பேசின்பாலம் மற்றும் எண்ணூர் ஆகிய இரண்டு அனல் மின் நிலையங்கள்தான் இயங்கி வந்தன. இவற்றின் நிறுவுத்திறன் 540 மெ. வா. ஆக இருந்தது. கடந்த 10 ஆண்டுக காலத்தில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூலம் 630 மெ. வாட்டும், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் மேட்டூர் அனல் மின் நிலையத்தின் மூலம் 210 மெ. வாட்டுமாகக் கூடுதலாக 840 மெ. வா. அனல் மின் உற்பத்தி திறன் அதிகரிக்கப்பட்டது.

1976-77-இல் தமிழ்நாடு-மின் வாரியத்தில் அனல் மின் நிலையங்களின் சர்ாசரி மின்சுமைக் காரணி 46 விழுக்காடு அளவு இருந்தது, 1986-87-ஆம்ஆண்டில் எப்பொழுதும் நிகழாத சாதனையாக 64.61 விழுக்காட்டினை எட்டியது. இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலுள்ள மின் வாரியங்களை ஒப்பிடும்போது தமிழ்நாடு மின் வாரியம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

துவங்கிய நாள் முதல்கொண்டு சில அமைப்புக்கோளாறுகளினால் எண்ணூர் அனல் மின் நிலையம் சரிவர இயங்காமல் இருந்தது. அந்நிலை மாற்றி, 1985-86-ஆம் ஆண்டில் நிலைய மின்சுமைக் காரணி 52.2 விழுக்காடு எட்டுமளவு மின் நிலையம் முன்னேற்றமடைந்துள்ளது. இந்நிலையத்தின் சிறந்த செயற்பாட்டிற்காக, மைய அரசின் உற்பத்தி திறனுக்கான சிறந்த பரிசினைத் தொடர்ந்து இருமுறை பெற்றுள்ளது. 1985-ல் செயற்பாட்டிற்காக இந்நிலையத்திற்குப் பரிசாக ரூபாய் 3.6 இலட்சமும் மற்றும் 1986-ஆண்டில் ரூபாய் 5.4 இலட்சமும் கிடைக்கப் பெற்றுள்ளன.



தூத்துக்குடி அனல் மின்நிலையமும் ஆரம்ப காலத்தில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கிய போதும் இடைவிடாது எடுக்கப்பட்ட கடும் முயற்சியினால் இவ்வனல் மின் நிலையத்தின் மின் சுமைக் காரணி கடந்த சில ஆண்டுகளாக மகத்தான அளவிற்கு உயர்ந்துள்ளது.

1983-84ஆம் ஆண்டில், 50.5 விழுக்காடாக இருந்த மின் உற்பத்தித் திறன் 1984-85இல் 62 விழுக்காடாகவும், 1985-86-இல் 65:5 விழுக்காடாகவும்,1986-87-ஆம் ஆண்டில் எப்பொழுதும் இல்லாத அளவாக 76.15 விழுக்காடாகவும் உயர்ந்து மகத்தான சாதனையை நிகழ்த்தியுள்ளது. இம் மின் நிலையமும் மத்திய அரசின் உற்பத்தித் திறனுக்கான சிறந்த பரிசினை இருமுறை பெற்றுள்ளது. 1984ஆம் ஆண்டிற்காக ரூபாய் 6 லட்சமும், கேடயமும்,

**1976-77இல் தமிழ்நாடு மின் வாரியத்தில் அனல் மின் நிலையங்களின் சராசரி மின் சுமைக் காரணி 46 விழுக்காடு அளவு இருந்தது, 1986-87ஆம் ஆண்டில் எப்பொழுதும் நிகழாத சாதனையாக 64·61 விழுக்காட்டினை எட்டியது. இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலுள்ள மின் வாரியங்களை ஒப்பிடும்போது, தமிழ்நாடு மின் வாரியம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது.**

மற்றும் 1986-ஆம் ஆண்டிற்கான ரூபாய் 10 லட்சமும், கேடயமும் பெற்றுள்ளது.

நாட்டிலேயே தமிழ்நாட்டில் தான் மிகப்பெரிய மின் கம்பித் தொடர் அமைப்பு உள்ளது. 1976-77-ஆம் ஆண்டில் மொத்தம் 2.85 இலட்சம் கி.மீ. அளவு இருந்த மின் கம்பித்தொடர், 3.72 இலட்சம் கி.மீ. அளவிற்கு (31.3. 86 வரை) அதிகரித்துள்ளது. 1976-77-ஆம் ஆண்டில் 304 துணை மின் நிலையம் மட்டும்தான் இயக்கத்தில் இருந்தது. தற்போது இது 472 துணை மின் நிலையமாக அதிகரித்துள்ளது. 1976-77ஆம் ஆண்டில் மின் பயனீட்டாளர்களின் மொத்த எண்ணிக்கை 32.23 இலட்சமாக இருந்தது, தற்பொழுது இரு மடங்காகி, சுமார் 67 இலட்சமென அதிகரித்துள்ளது.

ஊரக மின் மயமாக்குதலில் தமிழ்நாடு மின்வாரியம் முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழகத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் (15731), அனைத்து ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கும் (26,255) மின் வசதியை அளித்து வாரியம் தனிச் சிறப்பைப் பெற்றிருக்கிறது.

வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிப்பதில் வாரியம் முதன்மை இடத்தை வகிக்கிறது. நாட்டிலுள்ள மொத்தம் 64,79 இலட்ச வேளாண்மை விசையேற்றங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 11.04 இலட்சம் விசையேற்றங்களுள்ளன. இந்தப் பத்தாண்டில் மட்டும் 3.31 இலட்சம் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தெருக்களில் உள்ள எல்லா சாதாரண மின் விளக்குகளையும் மற்றும் 20 வாட் குழல் விளக்குகளையும் மாற்றி, பதிலாக 40 வாட் குழல் விளக்குகள் பொருத்த 1984ஆம் ஆண்டிலிருந்தே நடவடிக்கை எடுக்கப்பட்டு, 31-1-87-இல் இத்திட்டம், முடிக்கப் பெற்றது. இதன்படி 561732 இடங்களில் இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மின்சாரத்தின் பயனைச் சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினரும் முக்கியமாக வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் கிராமப்புற மக்களும் அடையவேண்டும் என்பதற்காக 1979-ஆம் ஆண்டு ''ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு'' என்ற ஒரு திட்டம் முதன் முதலாகத் தமிழ்நாட்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தற்பொழுது 7.49 இலட்சம் குடிசை வாழ் மக்கள் பயனடைகிறார்கள்.

**மின்சாரத்தின் பயனைச் சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினரும், முக்கியமாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கிராமப்புற மக்களும் அடையவேண்டும் என்பதற்காக 1979ஆம் ஆண்டு ''ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு'' என்ற திட்டம் முதன் முதலாகத் தமிழ்நாட்டில் துவக்கப் பட்டது. இத்திட்டத்தின் மூலம் தற்பொழுது 7.49 இலட்சம் குடிசைவாழ் மக்கள் பயனடைகிறார்கள்.**

சிறுவிவசாயிகளை ஊக்குவிக்கும்பொருட்டு, 15-9-84 முதல் இலவசமாக சுமார் ஒரு லட்சம் சிறு விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல், ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் மூலம் பயன் பெறும் குடிசைவாழ் மக்களுக்கும் மின்சாரம் 15-9-84 முதல் இலவசமாக வழங்கப்படுகிறது.



மாற்றுச் சக்திகளிலிருந்து மின் உற்பத்தி செய்வதிலும் தமிழ்நாடு ஒரு முன்னோடியாக உள்ளது. வாரியத்தின் வரலாற்றிலேயே முதல் முதலாக ஒவ்வொன்றிலும் 55 கிலோ திறன் கொண்ட 16 காற்றாலை மின் உற்பத்தி இயந்திரங்களைத் தூத்துக்குடி அருகிலுள்ள முல்லைக்காடு என்னுமிடத்தில் பொருத்தப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன. போட்டா ஓல்டாயில் செல்களை உபயோகப்படுத்தி தெருவிளக்குகளைப் பொருத்தி மலைப்பாங்கான இடத்தில் அமைந்துள்ள 49 பழங்குடிக் கிராமங்களுக்கும் மற்றும் 69 பழங்குடி சிறு கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் நான்கு மீனவர் குடியிருப்புகளுக்கும் மின் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

வாரியத்தின் வருவாய் 1976-77-இல் ரூபாய் 218.42 கோடியிலிருந்து 1986-87-இல் 692.65 கோடியாக உயர்ந்துள்ளது. நிலுவைத் தொகைகளைப் பெறுவதற்கான வாரியம் எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனை அளித்துள்ளது. 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் இருந்த மொத்த நிலுவைத் தொகை ரூபாய் 55.40 கோடி, படிப்படியாகக் குறைக்கப்பட்டு, 1986-மார்ச் இறுதியில் 39.85 கோடியாக இருந்தது.

இந்தியாவிலேயே தமிழகத்தில் குறைவழுத்த மின் கம்பித் தொடர் அமைப்பு மிக அதிகமான அளவும் (2.84 இலட்சம் கி.மீ.) மற்றும் மின் மாற்றிகளின் எண்ணிக்கை (64,750) மிக அதிக அளவு இருந்தும் மின் இழப்பு அகில இந்திய சராசரியான 21 விழுக்காட்டைக் காட்டிலும் குறைவாக 18.7 விழுக்காடு என்ற அளவில் உள்ளது. மின் சாரத் திருட்டினையும் மற்றும் தவறான வகையில் மின் உபயோகிப்பதையும் தடுப்பதற்காக வாரியம் எடுத்த தீவிர நடவடிக்கைகள் பெருமளவிற்குப் பயன் தந்துள்ளன. 1982-இல் ரூபாய் 36 இலட்சம் வருவாய் தரத்தக்க 29 மின் திருட்டுகளே கண்டுபிடிக்கப்பட்டன. ஆயின் 1986-இல் ரூ. 811 இலட்சம் வருவாய் தரத்தக்க 610 மின் திருட்டுக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மின் உற்பத்தியில் தமிழகம் பெருமளவு முன்னேற்றம் கண்டிருந்தும், மின்சாரத்தின் தேவை மின் இருப்பினைக் காட்டிலும் எப்பொழுதுமே அதிகரித்து வருவதன் காரணத்தினால் தமிழகம் மின் பற்றாக்குறை மாநிலமாகவே இருந்து வருகிறது. எனவே, மாநில திட்டத்தில் மின் உற்பத்திக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் மின் உற்பத்தியில் தன்னிறைவைத் தமிழகம் பெற்றிட உகந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**ஊரக மின் மயமாக்குதலில், தமிழ்நாடு மின்வாரியம் முன்னோடியாகத் திகழ்கிறது. மாநிலத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் (15,731), அனைத்து ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கும் (26,255) மின் வசதியை அளித்து வாரியம் தனிச் சிறப்பைப் பெற்றிருக்கிறது.**

# நாடு காத்தோரை



'தாய்நாடு காப்போரை நாம் காத்திடுவோம்' என்ற பெரியாரின் சொல்லுக்கேற்ப போர் விதவைகள், ஊனமுற்ற படைவீரர்கள் முன்னாள் படைவீரர்கள், அவர் தம் குடும்பத்தாரின் மறுவாழ்வு மற்றும் புனர்வாழ்வு, படைவீரர் மற்றும் அவர்தம் குடும்ப வீரரைக் கவனித்திடும் மகத்தான கடமைப் பொறுப்பு தமிழ்நாடு அரசின் பொதுத் துறையின் கீழ் செயல்படும் முன்னாள் படை வீரர் நல இயக்குநரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையின் செயல்பாடுகள் இரு மேல் நிலைக் குழுக்களால் வழிகாட்டி ஒருங்கிணைக்கப்படுகின்றன. ஒன்றிற்கு மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களும் மற்றொன்றிற்கு மாண்புமிகு நிதி மற்றும் முன்னாள் படைவீரர்களின் நல்வாழ்வு அமைச்சர் அவர்களும் தலைவராவார்கள்.

பகைவரிடமிருந்து நாட்டைக் காத்திட எல்லையோரங்களில் பாதுகாப்புப் பணியினை மேற்கொள்ளும்போதும் இயற்கையின் சீற்றத்தால் மக்கள் அல்லலுறும்போது அவர்களைக் காப்பாற்றிடும் பணியினை மேற்கொண்டிடும் போதும் தங்கள் இன்னுயிரை நாட்டிற்காக அர்ப்பணித்த முன்னாள் படைவீரர்களின் நலனில் தங்களுக்குள்ள ஆர்வத்தினையும் ஈடுபாட்டையும் நிரூபித்திடும் வகையில் தமிழக மக்கள் கொடி நாள் வசூலுக்காகத் தாராள நன்கொடையினை ஆண்டுதோறும் அதிக அளவில் வழங்கி நன்றியினை தெரிவித்து வருகின்றனர்.

**1977ஆம் ஆண்டு ரூ 17 இலட்சம் என்ற நிலையிலிருந்து கொடிநாள் வசூல் தமிழக மக்களின் சிறப்பு வாய்ந்த உயர்ந்த செய்கையின் காரணமாக 1986ஆம் ஆண்டு கொடிநாள் வசூல் ரூ. 69.99 இலட்சத்துக்கு உயர்ந்து அகில இந்திய அளவில் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. கொடிநாள் வசூலில் அதிகமாக வசூல் செய்கின்ற மாநிலங்களுக்கு வெற்றிச் சின்னத்தை அளிப்பதற்கு இந்திய அரசு முன்வந்த 1985ஆம் ஆண்டிலேயே அந்த வெற்றிச் சின்னத்தைப் பெற்ற பெருமை தமிழகத்திற்கு உண்டு!**

**தொடர்ந்து 1986ஆம் ஆண்டும் இதனைத் தமிழகம் தக்க வைத்துள்ளது.**

**மேலும் கொடிநாள் வசூலுக்கு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு அளிக்கப்படுகின்ற வெற்றிச் சின்னத்தையும் மற்றும் அதிக பட்ச தொகை வசூலுக்காக அளிக்கப்படுகின்ற வெற்றிச் சின்னத்தையும் 1960ஆம் ஆண்டு தமிழ்நாடு பெற்றுள்ளது. இவ்விரு வெற்றிச் சின்னங்களையும் ஒரே மாநிலம் பெற்றிடும் சாதனையானது தனித் தன்மை வாய்ந்த சிறப்பம்சமாகும்.**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கொடிநாள் வசூலுக்காக சொந்த நன்கொடையாக ரூ.5000 அளித்து வசூலைத் துவக்கி வைக்கிறார் என்பது பெருமிதத்தோடு குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாடு முன்னாள் படை வீரர்களின் மறுவாழ்வு மற்றும் புனர்வாழ்வுக்காகச் செயலாக்கிய புதிய நலத்திட்டங்கள் அகில இந்திய அளவில் வரவேற்பினையும் பாராட்டினையும் பெற்றுள்ளன. 1.1.64க்கு முன் படையிலிருந்து ஓய்வுபெற்று பின் இறந்த முன்னாள் படைவீரர்களின் விதவைகள் குடும்ப ஓய்வூதியம் பெற்றிடத் தகுதியில்லாத நிலைமையினைக் கருத்தில் கொண்டு அவர்களின் துயர் தீர்த்திட இவ்விதவைகளுக்கு மாதம் ரூ. 50 வீதம் அவர்களின் வாழ்நாள் முழுமைக்கும் நிதியுதவி அளித்திடும் திட்டத்தினைத் தீட்டி அதனை முதன் முதலாகச் செயல் படுத்திய மாநிலம் தமிழகமாகும். இத்திட்டத்தினால் சுமார் 1500 விதவைகள் பயன் பெற்றுள்ளனர். இதற்காக ஆண்டொன்றிற்கு ஆகும் செலவு ரூ. 9.6 இலட்சமாகும். இத்திட்டம் 1980ஆம் ஆண்டு அக்டோபர் முதல் செயல்படுத்தப் பட்டுள்ளது.

முன்னாள் படை வீரர்களைச் சுயவேலை வாய்ப்பில் ஊக்கப்படுத்தும் வகையில் வங்கிக் கடன் வட்டி மானிய உதவித் திட்டம் 1978ஆம் ஆண்டு செயலாக்கப்பட்டது. தொழில் செய்திட வங்கிகளிலிருந்தோ அல்லது ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிலிருந்தோ கடன் உதவி பெற்றிடும் முன்னாள் படைவீரர்களுக்கு ரூ. 5000 வரையிலான கடன்களுக்கு 4 விழுக்காட்டிற்கு மேல் செலுத்தப்படுகின்ற வட்டித் தொகையும் ரூ. 5000 மேல் ஆனால் ரூ. 50,000 வரையிலான கடன்களுக்கு 7 விழுக்காட்டிற்கு மேல் செலுத்தப்படுகின்ற வட்டித் தொகையும் மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் கீழ் 31.12.86 முடிய 1543 முன்னாள்படைவீரர்கள் தொழில் செய்திட ரூ. 119.26 இலட்சம் கடனுதவியும் ரூ. 3.08 இலட்சம் வட்டி மானியமும் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.



ரூ. 10 இலட்சமாகும். இப்பணியை மேற்கொள்ளும் முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு மாதம் ரூ. 225 ஊதியமாகவும் அவர்கள் மேற்கொள்ளும் வசூலில் 10 விழுக்காடு ஊக்கத்தொகையாகவும் வழங்கப்படுகிறது.

படையில் சேர்ந்து பணியாற்றும் ஆர்வமும் விருப்பமும் உள்ள நல்ல திடகாத்திரமான உடல் அமைப்பினையுடைய இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் இவர்களுக்கு இத்துறையால் அமைக்கப்பட்ட பயிற்சி முகாம்களில் பயிற்சி அளிக்கப்படடது. இப்பயிற்சி முகாம்கள் 60 நாட்களுக்கு நடததப்பட்டு இறுதியில் படைக்கு ஆள் சோக்கின்ற அமைப்புகளால் இவர்கள் வகைப்படுத்தி தேர்வு செய்யப்படுகின்றனர். இவ்வகையான முகாம்கள் முற்றிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்கு எனத் தனியாகவும் இத்துறையில் நடத்தப்படுகிறது.

# நாம் காப்போம்

1984ஆம் ஆண்டு நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப் பேரவைக்கு ஒரே நாளில் தேர்தல் நடத்த அரசு தீர்மானித்தது. தேர்தல் அமைதியாக நல்ல முறையில் நடைபெற்றிடக் காவல் அலுவலர்களுடன் 15,000 முன்னாள் படைவீரர்கள் சிறப்புக் காவல் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு எவ்வித அசம்பாவிதமும் நடைபெறா வண்ணம் சிறப்பாகத்தேர்தல் பாதுகாப்புப் பணியினை மேற்கொண்டனர். பின்னர், மீண்டும் 1986ஆம் ஆண்டு சுமார் 18,000 முன்னாள் படைவீரர்கள் சிறப்புக் காவல் அலுவலர்களாக உள்ளாட்சித் தேர்தலின்போது தேர்தல் பாதுகாப்புப்பணியை மேற்கொண்டனர். 1985ஆம் ஆண்டு ஆந்திர மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலின்போது அம்மாநில அரசு வேண்டியதன் பேரில் 3000 முன்னாள் படைவீரர்கள் ஆந்திர மாநிலம் சென்று தேர்தல் பாதுகாப்புப் பணியைச் சிறப்பாகச் செய்துவந்தனர்.

திருட்டு, கொள்ளை போன்றவைகள் நடைபெறா வண்ணம் சமூக விரோதக் கும்பலின் செயல்களைத் தடுத்திடும் வகையிலும் முன்னாள் படைவீரர்கள் சிறப்புக் காவல் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு இரவு சுற்றுக் காவலர் பணியை சென்னை, கிழக்கு செங்கல்பட்டு, மேற்கு செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் செயல்படுத்தி வருகின்றனர். இப்பணியினை 574 முன்னாள் படைவீரர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னை மாநகரில் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துவதற்கு ஏதுவாகவும் வாகனங்களைச் சாலையோரங்களில் நிறுத்துவதற்குப் போதிய வசதியைச் செய்திடவும் மாநகராட்சிக்கு வருவாய் கிட்டுவதற்கு ஏதுவாகவும் சென்னையில் முக்கிய இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்குக் கட்டணம் வசூலிக்கும் பணியை சென்னை மாநகராட்சி மேற்கொண்டது. தற்பொழுது இப்பணி முன்னாள் படைவீரர் நல இயக்குநரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்ற மாண்புமிகு முதலமைச்சரின் கொள்கைப்படி இப்பணியில் படை வீரர்கள் மற்றும அவரைச் சார்ந்தவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் 160 முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச்சார்ந்தோர் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர். இதன் ஆண்டு வரவுக் கணக்கு

இந்தப் பயிற்சி முகாம்களில் இது வரை 4478 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்களில் 3014 இளைஞர்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்கென ரூ. 20.52 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் கொடி நாளினை முன்னிட்டு நாட்டுப் பாதுகாப்புப்பணியில் சிறப்புப் பணியாற்றிய மற்றும் கடமையுணர்வுமிக்க முன்னாள் படை அதிகாரிகள் முன்னாள் படைவீரர்கள் மற்றும் இவர்களின் குடும்பத்தினரை அழைத்து ஆளுநர் மாளிகையில் தேனீர் விருந்து அளித்துச்சிறப்பிக்கிறார். இதைப் போன்று மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் முன்னாள் படை அதிகாரிகள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரை அழைத்து தேனீர் விருந்து அளித்துச் சிறப்பிக்கின்றார். இது தமிழ்நாட்டில் மட்டும் காணப்படுகின்ற தனித்தன்மை வாய்ந்த சிறப்பம்சமாகும்.

1.4.82 முதல் முன்னாள் படைவீரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணி இடங்களுக்கு முன்னாள் படைவீரர்களைப் பரிந்துரை செய்திடும் அதிகாரம் அளிக்கப்பட்டு இப்பணியை முன்

னாள் படைவீரர் நல இயக்ககமும் மாவட்ட முப்படை வாரிய அலுவலகங்களும் செய்துவருகின்றன. 31.12.86 முடிய இதன் மூலம் 5448 முன்னாள் படைவீரர்கள் பல்வேறு பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அகில இந்திய ரீதியில் சுயமாகத் தொழில் செய்திட முன்னாள் படைவீரர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற 6 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்களுக்கு அவர்கள் விரும்பும் தொழிலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில் செய்திட வங்கியில் பெறுகின்ற கடனில் 33-1/3 விழுக்காடு அல்லது ரூ. 3000 உதவித்தொகையாக அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்குச் செலவிடப்படும் தொகையினை 1.4.86 முதல் தமிழக அரசு மைய அரசுடன் சரிநிகராகப் பகிர்ந்து கொள்கிறது. இத்திட்டத்தின்கழ இதுவரை 268 முன்னாள படைவீரர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

மாநிலம் முழுவதும் முக்கிய வணிக இடங்களில் ரூ. 13.85 இலட்சத்திற்கு 277 ஜெய்ஜவான் பெட்டிக்கடைகள் நிறுவப்பட்டு வறிய நிலையிலுள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகளுக்கு வியாபாரம் செய்து பொருளீட்ட வழங்கப்பட்டுள்ளது.

இத்துறை, முன்னாள் படைவீரர்களின் பெண்டிருக்கு 12 தையல் பயிற்சி நிலையங்களை நடத்தி வருகிறது. ஓராண்டு தையல் பயிற்சி நிலையங்களை பயிற்சிக்குப் பின்பு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககத்தால்நடத்தப்படும் இவ்வகையான தேர்வினை எழுதுகிறார்கள். இப்பயிற்சியினை மேற்கொள்ளப் போதிய கல்வித் தகுதி இல்லாதவர்களுக்கு ஆறு மாதகாலத் தையல்பயிற்சி அளிக்கப்படுகிறது. 31.12.86 முடிய இத்திட்டத்தின் கீழ் 5200 முன்னாள் படைவீரர் வீட்டுப் பெண்மணிகள் பயிற்சி பெற்றுள்ளனர். 1986-87ஆம் ஆண்டு 133 முன்னாள் படைவீரரைச் சார்ந்த பெண்டிர்கள் மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 58,338 ஜதை சீருடைகள் தைத்துள்ளனர்.

படையில் 15 முதல் 20 ஆண்டுகள் வரை பணியாற்றி ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரர்கள் குடியுரிமையில் மாநிலம் மற்றும் மைய அரசு நிறுவனங்களிலும் அரசு சார் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புப் பெற்றிட நடத்தப்படுகின்ற தேர்வுகளில் புதிதாகப் பட்டம் பெற்று வந்துள்ள இளைஞர்களுடன் போட்டியிட இயலாத நிலையுள்ளது. இந்நிலை பாடத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் உள்ளது. எனவே இம்மாதிரி தேர்வுகளைச் சிறப்பான முறையில் எழுதுவதற்கு ஏதுவாக இவர்களுக்கு இப்பாடங்களில் போதிய பயிற்சி அளிப்பதற்கு முன் தேர்வு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதில் குறிப்பிடத்தக்கது வங்கித் தேர்வாணை வாரியம் நடத்தும் தேர்வாகும். இத்தேர்வுக்கு 1982ஆம் ஆண்டு முதல் முன்னாள் படைவீரர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிக் காலத்தில் ரூ.300 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 43,850 செலவிடப்பட்டுள்ளது.

நல உதவிப்பணிகள் அளவிட முடியாத, ஆனால் அர்ப்பணம் செய்யப்பட்ட ஒன்றாகும். முன்னாள் படைவீரர்கள் அவர்தம் விதவைகள் மற்றும் அவரைச் சார்ந்தோர் பல்வேறு உதவ்கள் பிரச்னைகள் குறித்து அலுவலர்களை அணுகுகஜறனா. சிலர் அறிவுரையும் வேறு சிலர் மற்ற துறைகளில உதவ்யும் கோருகனறனர். இப்பணி பலவேறு துறைகளால் ஒருங்கிணைககப்படடு மாவட்ட அலுவலர்களின் சிறப்பான திறமையான பணிகளினால் தீர்க்கப்பட வேண்டியதாகும்.

வறிய மற்றும் ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்குப் பல்வேறு வழிகளிலிருந்து நிதியுதவிகள மாவட்ட அலுவலர்களால் பெறறு அளிக்கப்படுகிறது. முதிய வயது அடைந்துள்ள ஆதரவற்ற முனனாள் படை வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகளுக்கு நிதியுதவியும் முதியோர் ஓய்வூதியமும் பார்வையற்ற, காசநோய், தொழுநோய், புற்றுநோய் இவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ. 100 வீதம் நிதியுதவியும் அளிக்கப்படுகிறது.

முன்னாள் படைவீரரின் ஒரு மகள் திருமணத்தின்போது திருமண நிதியுதவியாக ரூ. 1000 அளிக்கப்படுகிறது. கல்வி உதவிச் சம்பளமும், பயிற்சிக்கால உதவிப் பணமும் தொகுப்பு நிதி மற்றும் நல நிதிகளிலிருந்து வழங்கப்படுகிறது. மாநில அரசு படைவீரர்களின் குழந்தைக் கல்வி உதவிச் சம்பளம் பெறுவதற்கு இணையாக முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளும் கல்வி உதவிச் சம்பளம் பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது. இச்சலுகை ஆண்டு வருமானம் ரூ. 5000-குறைவாக உள்ளவர்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது.

வறிய நிலையில் உள்ள முன்னாள் படைவீரர்கள் இறந்தவுடன் அவர்களின் அந்திம சடங்குகளைச் செய்திட ஈமச்சடங்கு நிதியுதவி ரூ. 500 வழங்கப்படுகிறது.

சிறுநீரக மாற்றம் இருதய மாற்றம் போன்ற பெரிய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் வறிய நிலையில் உள்ள முன்னாள் படைவீரர்களுக்குத் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ரூ. 20,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதற்கென ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர்களைச் சார்ந்த ஒருவருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெற்றிடுவதற்குத் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இது 1985ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை முன்னாள் படைவீரர்களைச் சார்ந்த 5,900 நபர்களுக்கு வேலை வாய்ப்பில்





முன்னுரிமை பெற்றிட முன்னுரிமைச் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலேயே முன்னாள் படைவீரர்களுக்கான செய்திகளை 27.7.85 முதல் வானொலியில் ஒலி பரப்பிடும் மாநிலமாகத் தமிழகம் உள்ளது. சனிக்கிழமை தோறும் காலை 6.55 முதல் 7.00 மணி வரை சென்னை வானொலியில் சிற்றலை மற்றும் மத்திய அலைவரிசைகளில் இது ஒலிபரப்பப்படுகிறது. 31.12.86 முடிய கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ரூ. 229.91 இலட்சமும், தொகுப்பு நிதியிலிருந்து ரூ. 97.45 இலட்சமும் முன்னாள் படைவீரா மற்றும் அவரைச் சார்ந்தோரின் நல வாழ்வுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் 1956ஆம் ஆண்டு நிறுவன் விதிகளின்படி பதிவு செய்யப்பட்டதாகும். இது முன்னாள் படைவீரர்களுக்குத் திட்டமிடுதல், அமைத்தல் மற்றும் நிதியுதவி பெற்று பல்வேறு தொழிலைத் தொடங்கி நடத்துவதற்கு உதவுகிறது. இக்கழகம் அதிகாரபூர்வமாக மூலதனப் பங்கு ரூ.50 இலட்சத்தினைப் பெற்றுள்ள மாநில அரசு சார் பொது நிறுவனமாகும். மேலும் இக்கழகம் ரூ. 25 இலட்சத்தைத் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வட்டி இல்லாக்கடனாகப் பெறவும் தகுதியுடையதாகும்.

கொடிநாள் நிதி மற்றும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியினைப் பெருக்கும் நோக்கோடு முன்னாள் படைவீரர் மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம் ரூ. 45.00 இலட்சம் செலவில் 1985ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் திறந்து வைக்கபபட்டது. திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், சிவகாசி மற்றும் வேலூரில் ரூ. 72.8 இலட்சம் செலவில் படைவீரர் மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. வேலூரில் ரூ. 9.51 இலட்சம் செலவில் 72 கடைகளைக் கொண்ட படைவீரர் மாளிகை கட்டப் பட்டுள்ளது. தென்னார்க்காடு மாவட்டத்தில் ரூ. 27 இலட்சம் செலவில் படைவீரர் மாளிகை கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்திற்கான மாவட்ட முன்னாள் படைவீரர் நிலையத்தைச் சென்னை சைதாப்பேட்டையில் ரூ.19.25 இலட்சத்தில் கட்டிட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கொடைக்கானலில் ரூ. 5.70 இலட்சம் செலவில் ஓய்வு இல்லம் கட்டப்பட்டு வருகிறது.

புதிதாக மாவட்டங்கள் உருவாக்கப்படும்போது, தனியாக மாவட்ட முன்னாள் படைவீரர் வாரியங்கள் தொடங்குவதற்கு அரசால் அனுமதியளிக்கப்படுகிறது. புதிதாக உருவாக்கப்பட்ட பெரியார், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், அண்ணா, சிதம்பரனார் முதலிய மாவட்டங்களில் மாவட்ட முப்படை வீரர் வாரியங்கள் தொடங்கப்பெற்றுசெயல்பட்டுவருகிறது. இத்துறையின் நிர்வாகச் செலவினங்கள் மாநில மற்றும் மைய அரசால் 50:50 என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஐந்து மாவட்டங்களுக்குத் தனி வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு மாவட்டங்களுக்கு 1987-88ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



# தரம் காப்போம்

வேளாண்மை விளைபொருள்களின் தரக் கட்டுப்பாடு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பணியாகும். வேளாண்மை விற்பனைத் துறை இதில் சிறந்த பணியாற்றிக் கொண்டு வருகிறது. தரம்பிரிப்பு, விளை பொருளின் உபயோகத்தைப் பொறுத்தும், நோக்கத்தைப் பொறுத்தும் முக்கிய இரண்டு இனங்களாகப் பிரிக்கப்படுகின்றது.

அக்மார்க் தரம் பிரிப்பு உள்நாட்டு உபயோகத்திற்கு

உற்பத்தியாளர் மட்டத்தில் தரம் பிரிப்பது அல்லது வணிக முறைத் தரம் பிரிப்பு.

**அக்மார்க் தரம் பிரிப்பு**

நுகர்வோரின் நன்மையைப் பிரதான நோக்கமாகக் கொண்டு உணவுப் பண்டங்கள் அக்மார்க் முறையில் தரம் பிரிக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் கட்டாயம் ஏதும் இல்லை. தாமே முன் வருபவர்களுக்கு இந்த வசதி அளிக்கப்படுகிறது.

இம்முறையில் தரம் பிரிக்கப்படும் மத்தியக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்ட சில உணவுப் பண்டங்களாவன :

நெய்
வெண்ணெய்
உணவு எண்ணெய்கள் :
  நல்லெண்ணெய்
  கடலை எண்ணெய்
  தேங்காய் எண்ணெய்
  விளக்கெண்ணெய்
தேன், மசாலாப் பொருள்கள் முதலியன.

மேற்படி உணவுப் பண்டங்களைத் தரம் பிரிக்க அவற்றின் குண அம்சங்களைப் பகுத்து ஆராய வேண்டியுள்ளது. இதற்காக மாநிலத்தில் கேந்திரமான இடங்களில் அக்மார்க் ஆய்வுக் கூடங்களை அரசு நிறுவியுள்ளது. **இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு 36 ஆய்வுக் கூடங்கள் நம் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.**

இதற்கென சமீபத்தில் மத்திய அரசின் பரிசினையும் தமிழ்நாடு பெற்றுள்ளது. இவ்வாய்வுக் கூடங்களில் பயிற்சி பெற்ற வேளாண்மை அலுவலர்கள் (வேதியியல்), சென்னை வேளாண்மைத்துணை இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றனர்.

ஆய்வுக் கூடங்களில் பகுத்தாய்வு செய்ய வேண்டிய அவசியமில்லாத கீழ்க்கண்ட உணவுப் பண்டங்கள், மத்தியக் கட்டுப்பாட்டிற்கு உட்படாதனவாகும்.

அவை முட்டை, உருளைக் கிழங்கு பழவகைகள், அரிசி, பருப்பு வகைகள், கரும்பு, வெல்லம் முதலியன.

இவையும் வேளாண்மைத் துணை இயக்குநரின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட வேளாண்மை அலுவலர்களைக் கொண்டு தரம் பிரிக்கப்படுகின்றன.

அக்மார்க் முறையில் தரம் பிரிக்கப்படும் பணிகள் யாவும் மத்திய அரசின் 1937-ஆம் ஆண்டின் வேளாண்மை விளைபொருள் (தரம் பிரித்தல், முத்திரையிடுதல்) சட்டம், மேலும் அதற்கான விதிகளுக்குட்பட்டுச் செய்யப்படுகின்றன. மத்திய அரசின் விற்பனை மற்றும் ஆய்வு இயக்ககத்துடன், நம் மாநில வேளாண்மை விற்பனைத் துறையின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்புடன் செயலாக்கப்படுகிறது.

ஆண்டுக்கு சுமார் 80 கோடி ரூபாய் மதிப்புள்ள பண்டங்கள் அக்மார்க் முறையில் தரம்பிரிக்கப்படுகின்றன.



**வணிகமுறைத் தரம் பிரிப்பு**

விளைபொருள் உற்பத்தியாளர்களின் நன்மையே பிரதான நோக்கமாகக் கொண்டு செய்யப்படுவது வணிக முறைத் தரம்பிரிப்பு அல்லது உற்பத்தியாளர்கள் மட்டத்தில் தரம்பிரிக்கும் திட்டம். இத்திட்டத்திலும் கட்டாயம் ஏதுமில்லை. அதே சமயத்தில் சேவைகள் அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. இதன் மூலம், உற்பத்தியாளர்கள், தம் விளைபொருளின் தரத்தை முன் கூட்டியே அறிந்து கொள்வதால், வாங்குவோரிடம், தரத்திற்கேற்ற நியாயமான விலையைப் பெற வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

நெல், நிலக்கடலை (பருப்பு, காய்), கரும்பு, வெல்லம், எள், மிளகாய், பருத்தி முதலிய விளைபொருள்கள் இம்முறையில் தரம் பிரிக்கப்படுகின்றன.

பருத்தியைத் தவிர இதர விளைபொருள்களுக்கு மாநில முழுவதும் 102 இடங்களில் வணிகமுறைத் தரம்பிரிப்பு மையங்கள் உள்ளன. இங்கும் பயிற்சி பெற்ற அலுவலர்கள் வேளாண்மைத் துணை இயக்குநரின் கட்டுப்பாட்டில் தரம் பிரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

பருத்தியைப் பொறுத்தவரையில் அது ஒரு சிக்கலான விளைபொருள் என்பதால், அதன் தரம் பிரிப்புக்கென பிரத்தியேகமாகப் பதினோரு இடங்களில் பருத்தி தரம் பிரிப்பு மையங்களில் தமிழ்நாடு கடந்த பத்து ஆண்டுகளில் சாதனை செய்துள்ளது.

ஆண்டிற்கு 208 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளைபொருள்கள் வணிகமுறைத்தரம் பிரிப்புத் திட்டத்தின் மூலமாகத் தரம் பிரிக்கப்பட்டுள்ளன.

# வனம் தரும் வளங்கள்



தமிழ்நாட்டின் மொத்த நிலப் பரப்பில 17.22 விழுக்காடு காடுகள் உள்ளன. காடுகளின் முக்கியத்துவத்தையும், காடுகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்துல் கொண்டு மாநில அரசு வன வளத்தைப் பெருக்க பல்வேறு முறைகளை மேறகொண்டு வருகிறது. காடுகளைப் பணிப்பாதுகாப்பதற்கு மட்டுமல்லாமல், அன்றாடம் வளர்ந்து வரும் மக்களின் சமூகப் பொருளாதார, மற்றும் வனம் சார்ந்த தொழில்துறை முன்னேறறத்திற்குரிய தேவைகளைப் பூர்த்து செய்வதற்குப் போதிய கவனம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன், வன மேம்பாட்டிற்கு ஒதுக்கபபட்ட நிதி ஒதுக்கீடு; வனங்களைப் பாதுகாப்பதற்கும், வன் வளத்தைப் பெருக்குவதற்கும் தேவைக்குகந்த அளவ்ல் நிது ஒதுக்கீடு அளிக்கப்பட்ட அளவு அமையவில்லை. வனப் பிரிவிற்கு முதல் நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான நிது ஒதுக்கீடு முறையே 0.37, 0.78, 1.09, 0.88 இலட்சங்கள் ஆகும். ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் முதல் நிதி ஒதுக்கீடு போதுமான அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

வனப் பரப்பு, மண் அரிப்பு, தீங்குகள் பரவக்கூடிய மலைப் பகுதிகளில் மொத்த நிலப்பரப்பில் 60 விழுக்காடும், சமப் பகுதிகளில் 20 விழுக்காடும் இருக்க வேண்டுமென 1952ல் தேசிய வன வளக் கொள்கைவலியுறுத்துகின்றது. இச் சிறந்த நிலையை எய்த தமிழக அரசு பெரு முயற்சி எடுத்து வருகிறது. 1977ல் 20,94,440 எக்டேர்களாக இருந்த வனப் பரப்பு 1,43,460 எக்டேர் பரப்பை கூடுதலாகச் சேர்த்து 1986ல் 22,37,900 எக்டேர்களாக உள்ளது.

வருவாயில் பெரும்பங்கு சந்தனமர விற்பனை செய்வதன் மூலமாகவும் மற்றும் வனம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்களை வழங்குவதிலிருந்தும் கிடைக்கின்றது. தடி மரம், விறகு மரம், மூங்கில், முந்திரி, மற்றும் வாட்டில் மரப் பட்டை, மேய்ச்சல் மற்றும் இதர காடுபடு சிறு பொருட்கள் ஆகியவை இதர வருவாய் தரும் வனப் பொருட்களாகும்.

செலவில் பெரும்பகுதி காடுகளை மேம்படுத்தும் பணிகளுக்கென அவற்றின் உற்பத்தித் திறனைப் பெருக்கும்நோக்குடன் மூலதனச்செலவாகச் செலவிடப் படுகின்றது.

ஒதுக்குக் காடுகளில் வனப் பராமரிப்பு ஒவ்வொரு கோட்டத்திற்கெனத் தயாரிக்கப்படும் பத்து ஆண்டு வனச் செயல்திட்டத்தின்படி செயல்படுத்தப்படுகிறது. இம்முறை வனக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்

---

**தமிழ்நாட்டின் வனப் பரப்பு 1977இல் 16 விழுக்காட்டிலிருந்து 1986ல் 17.22 விழுக்காடாக உயர்ந்துள்ளது.**

**1977-1986க்கு இடைப்பட்ட பத்தாண்டு காலத்தில் சுமார் 1.4 இலட்சம் எக்டேர் நிலம் ஒதுக்குக் காடுகளாக மாற்றப்பட்டுள்ளது.**

**வனத்துறையின் வருவாய் 1977ல் ரூ.1285.91 இலட்சத்திலிருந்து 1986ல் 3037.06 லட்சமாகவும், செலவு ரூ 709.01 இலட்சத்திலிருந்து ரூ. 2974.87 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது.**

ஒதுக்குக் காடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட தோட்டங்களின் பரப்பு 1977ல்2,32,546 எக்டேரிலிருந்து 1986 வரை 4,16,076 எக்டேர் அளவில் ஆக 78.92 விழுக்காடு அதிகரித்துள்ளது.

ஒதுக்குக் காடுகளுக்கு வெளியே எழுப்பப்பட்ட காட்டின் பரப்பு 1977ல் 78526 எக்டேரிலிருந்து 1986ல் 3,19,968 எக்டேர் அளவில் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.

பிடிக்கவும், வனங்களைத் தவறான முறையில் பயன்படுத்தப்படாத வகையிலும் அமைகிறது.

அரசு உடைமையான பசுமை நிறைந்த காடுகளை அழித்து காடுகளின் பரப்பைக் குறைப்பதைத் தடுக்கும் நோக்கத்தோடு 1777ல் விறகுக் கூப்புகளை வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. 1982க்குப் பிறகு இத்தடை கடுமையாக அமலாககப்பட்டு வருகிறது. மேலும் வனங்களை வனமல்லாத காரியங்களுக்குப் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்குடன் 1980ல் மத்திய அரசு வனப் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியுள்ளது.

1977ல் ஒதுக்குக் காடுகளுக்குள் உற்பத்தி செய்யப்பட்ட வனப் பரப்பு 2,32,456 எக்டேரும் (வனத் தோட்டக் கழகத்தின் பரப்பு உட்பட) ஒதுக்குக் காட்டிற்கு வெளியே 78526 எக்டேர் பரப்பும் எழுப்பப்பட்டுள்ளது. இது 1986ல் முறையே 4,16,074 எக்டேரும், 3,19,968 எக்டேரும் ஆக உயர்ந்தது.

சமூக நலக் காடுகள் திட்டத்தைத் தொடங்குவதில் தமிழ் நாடு ஒரு முன்னோடியாக விளங்குகிறது. பண்ணைக் காடுகள் எழுப்பும் பல்வேறு திட்டங்களின் கீழ் 1977 வரை 91,289 எக்டேர் பரப்பளவு எழுப்பப்பட்டன. பண்ணைக் காடுத் திட்டங்களுக்காக 1977ல் ரூ. 42.95 லட்சம் ஒதுக்கப்பட்டது. அப்போது 17 கோட்டங்கள் இப்பணிகளை நிறைவேற்றி வந்தன. 1981ல் பல்வேறு பண்ணைக் காடுகள் எழுப்பும் திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு சமூகக் காடுகள் திட்டம் என்ற பெயரில் பெரிய அளவில் ரூ. 108.00 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் 10 ஆண்டுகள் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது.

இதன் முதல் ஐந்தாண்டுக்கான முற்பகுதி ரூ. 42 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் 1981ல் செயல்படத் துவங்கியது. 1981 வரை பண்ணைக் காடுகளின் திட்டத்தின் கீழ் 1,30,107 எக்டேர் பரப்பு எழுப்பப்பட்டன. 1981 முதல் 1986-ஆம் ஆண்டுடன் முடிந்து ஐந்தாண்டுகளில் சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் ஒதுக்குக் காடுகளுக்கு வெளியே 1,67,365 எக்டேர் தோட்டங்கள் எழுப்பப்பட்டன.

இத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

(1). பத்து ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 108 கோடி (2) ஒதுக்குக் காடுகளுக்கு வெளியே சமூகக்காடுகள் திட்டத்தின் கீழ் 1981 முதல் 1986 வரை எழுப்பப்பட்ட தோட்டங்களின் பரப்பு (தொடர் வரிசைத் தோட்டம் மற்றும் தொகுதி தோட்டம் உட்பட) 1,67,365 எக்டேர். 3. இத்திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட நாற்றுகளின் எண்ணிக்கை 18.77 கோடி. 4. மரம் வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொகை ரூ. 17.58 லட்சம். 5. 1985-86 ஆண்டுவரை வேலைவாய்ப்பு அளிக்கப்பட்ட சமூக நல வன ஊழியர்கள் ஆண் 2798 பெண் 210.

காகிதம், ரயான் ஆகியவைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கும் நல்ல மரக் கூழ் தரக்கூடிய கூழ்மர வகை தேவைப்படுகிறது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வனத்துறை கூழ் மரத் தோட்டங்களை எழுப்புகிறது. இத்திட்டத்திற்காக 1977ல் 2470 எக்டேர் தோட்டம் எழுப்புவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 20.64 லட்சமாக இருந்தது 1986-87ல் 16375 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்புவதற்கு ரூ. 451.12 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

பல்வேறு இன வனவிலங்குகளைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழகத்தில் 1977ல் எட்டு(8) வனவிலங்குச் சரணாலயங்கள் பராமரிக்கப்பட்டு வந்தன. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 1977-78ல் ரூ. 22.49 லட்சத்திலிருந்து 1986-87ல் ரூ. 238.72 லட்சமாக 10 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழகத்தில் 12 வனவிலங்குச் சரணாலயங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த மிருகக் காட்சி சாலை வனத்துறைக்கு மாற்றப்பட்டு, சென்னையை அடுத்த வண்டலூரில் 1980ல் 510 எக்டேர் நிலப்பரப்பில் நவீனமான உயிரியல் பூங்காவாக மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் வனத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் 3.63 லட்சம் மலைவாழ் மக்கள் உள்ளனர். ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மலை வாழ் மக்களின் மேம்பாட்டிற்கென மலைவாழ் மக்களின் மக்கள் தொகை நெருக்கமாக உள்ள, தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் உப திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டன.

பழங்குடியினருக்குக் கால் நடைகளை இலவசமாக மேய்ப்ப



திற்கும் மற்றும் அவர்கள் விவசாய மற்றும் குடும்ப உபயோகத்திற்குத் தேவையான சில வனப் பொருள்களை இலவசமாக எடுத்துச் செல்லவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 1978 முதல் தகுதியுள்ள பழங்குடியினர்க்கு வனச் சரகர், வனப் பணியாளர், வனக்காப்பாளர் மற்றும் வனக் காவலர்களாக வனத்துறையில் நியமிக்கப்படுகின்றனர்.

1977ல் வனத்துறை இவர்களுக்கென 12 தொடக்கப்பள்ளிகளும் ஒரு உயர்நிலைப் பள்ளியையும் நிர்வகித்து வந்தது. தற்போது 15 தொடக்கப் பள்ளிகளையும் 2 உயர்நிலைப் பள்ளிகளையும் இத்துறை நிர்வகித்து வருகிறது. முதலமைச்சரின் மதிய உணவுத் திட்டம், சீருடைகள், புத்தகங்கள், பலகைகள் பள்ளிக்குழந்தைகளுக்காக இலவசமாக வழங்கப்படுகின்றன. பழங்குடியினருக்குப் பயனளிக்கும் வகையில் 19 தொழிலாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டிற்கு ஆண்டொன்றுக்கு 8 மில்லியன் டன் விறகு தேவைப்படுகிறது. இத்தேவையை ஒதுக்குக் காடுகளிலிருந்து ஒரு சிறு பகுதியும் வனங்களின் வெளிப் புறத்திலுள்ள சமூக நலக் காடுகளின் மூலமாக ஒரு சிறு பகுதியும் பூர்த்தி செய்கிறது. எனவே, வனத்துறை விறகு மரத் தோட்டங்களை அதிகமாக உற்பத்தி செய்து வருகிறது. 1977ல் இத்திட்டத்தில் 2885 எக்டேர் எழுப்புவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 28.24 லட்சமாகும். 1986-87ல் 3600 எக்டேர் எழுப்புவதற்காக ரூ. 47.55 லட்சமாக உயர்ந்துள்ளது.

மலைப்பகுதி மேம்பாடு திட்டம் தமிழகத்தில் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படும் திட்டமாகும். தென் மாநிலங்களில் தமிழகத்தில் மட்டும் இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது என்பது பெருமைக்குரியதாகும். இத்திட்டத்திற்காக 1977ல் ரூ. 10.74 லட்சங்கள் ஒதுக்கப்பட்டது. 1985-86ல் இத்தொகை 3 மடங்கு உயர்வாக ரூ. 37.60 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இனி ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்
1. இயற்கைச் சூழல் பாதுகாப்பு;
2. இயற்கைச் சூழல் சீரமைப்பு;
3. இயற்கைச் சூழல் மேம்பாடு
ஆகிய நவீன நோக்குடன் திட்டப்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

காடு வளர்ப்பு நிலை மரபியல் ஆய்வு, மண் இயல் ஆய்வு, வன நோய் இயல் ஆய்வு ஆகிய துறைகளில் ஆய்வு மேற்கொள்ளத் தக்க வகையில் ஆய்வுத் துறைக்கு வலிவூட்டுதலே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்கென ஒரு தனி ஆய்வுக் கூடத்தைத் தமிழ்நாடுதான் முதன் முதலாக ஏற்படுத்தியது. ஆராய்ச்சித் திட்டத்திற்கென ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



இத்திட்டம் மத்திய அரசு ஆதரவு பெற்றதாகும். மேற்கு மலைத் தொடரின் இயற்கை வனத்தைப் பயன்படுத்து அப்பகுதியில் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் தேயிலை, கிராம்பு மற்றும் ரப்பர் தோட்டங்கள் இத்திட்டத்தின்படி எழுப்பப்பட்டு வருகின்றன.

சந்தனமரத் தோட்டத்தை அதிகப்படுத்துதல், தீவிர பராமரிப்பு வேலைகள் மூலம் இயற்கைச் சூழலில் சந்தனமர வளர்ச்சியை ஊக்குவித்து, தமிழ்நாட்டில் சந்தன மர வளத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்காக 1977-78ல் ரூ. 6.56 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1986-87ல் ரூ. 27.79 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணியைப் பெருக்கும் முந்திரி மரங்களை, அதிக அளவில், வாய்ப்புள்ள இடங்களில் வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1977ல் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 5.46 லட்சமும், 1986-87ல் ரூ. 10.16 லட்சமும் ஆகும். இதுவரை 23,403 எக்டேர் பரப்பில் முந்திரித்தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

காடுகள் உற்பத்தியில் முக்கிய நோக்கம் வன வள ஆதாரங்களை ஏற்படுத்துதல், பராமரித்தல், மற்றும் பயன்படுத்தலாகும். வன வளர்ச்சியின் அளவானது, வளர்ச்சிக்குத் தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுத்தல், அப்பகுதிக்குத் தகுந்த திட்டங்களைத் தயாரித்தல், தீட்டிய திட்டங்களைச் செயலாக்கும் திறம் ஆகியவற்றைக் கொண்டே நிர்ணயிக்கப்படும். ஆகவே, திட்டம் தயாரிப்பதற்கான திறமையும், நிர்ணயிக்கப்பட்ட இலக்குடைய தனிப்பட்ட அமைப்பு தக்க பணியாளர்களுடன் 1985-86ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென 1985-86ஆம் ஆண்டில் ரூ.3.20 லட்சம் செலவிடப்பட்டது.

1981லிருந்து சமூக நலக் காடுகள் திட்டத்தின் கீழ், தோட்டங்கள் எழுப்புவதற்கு ரூ. 108 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் பத்தாண்டு அமலாக்கப்பட்டு வருகிரது.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்கு அரசாங்கத்தின் மிகுந்த கவனத்தைக் காட்டும் வகையில் 1977ல் ரூ.7.16இலட்சமாக இருந்ததை 17 மடங்கு உயர்ந்து 1986ல் ரூ. 128.07 இலட்சமாக மிகையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ரூ.22.49 இலட்சத்திலிருந்து ரூ. 238.72 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.**

**தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரியதாக அமையவிருக்கும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா 510 எக்டேரில் 1980ல் துவங்கப்பட்டது.**

இயற்கைச்சூழல் பாதுகாக்கப்படவும் மற்றும் பொருளாதார நெருக்கடியினைத் தவிர்க்கவும் மக்கள் அதிக அளவில் மர வளர்ச்சியில் பங்கேற்க முன் வர வேண்டும் என்ற இந்தியப் பிரதமரின் அறைகூவல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். இவ்வழைப்பிற்கிணங்க தக்க முயற்சியை மேற்கொண்டு மரங்கள் அடர்த்தி குறைந்த, காப்புக் காட்டுப் பகுதியில் 5 லட்சம் எக்டேர் பரப்பில் மேம்பாடு செய்ய அண்ணா, தர்மபுரி, செங்கல்பட்டு மாவட்டங்களில் மூன்று புதிய கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி தமிழக அரசு நாட்டிலேயே புதுமையான ஒரு திட்டத்தை முதன் முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது. மரம் வளர்ப்பு பற்றிய முக்கியத்துவத்தை மக்களிடையே பரப்ப, புதிய மரம் வளர்ப்பு விழிப்புணர்வுத் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவர்களுக்கும் மரம் வளர்ப்புக் கலையைக் கற்பித்தற்குரிய வகையில் பாடத் திட்டத்தில் சேர்ப்பதாகும்.



மேற்கு மலைத்தொடரின் கிழக்குச் சரிவுப் பகுதிகளான அண்ணா மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம் வரையில் உள்ள நிலச் சரிவுகளில் பெரியதும் சிறியதுமான நில நீர் பரப்புப் பகுதிகளில் நீர் வள மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள உகந்தவையாகும். இப்பகுதிகளுக்கு அருகாமையிலுள்ள நகரம் மற்றும் கிராமங்களிலுள்ள மக்கள் தண்ணீருக்காகப் பல மைல்கள் நடக்கவேண்டியுள்ளது. இவ்விடங்களில் மரங்கள் அடர்த்தியாக இல்லாத காரணத்தால் மழை மூலமாகக் கிடைக்கும் தண்ணீர் வெள்ளமாக உடனடியாக வெளியேறி விடுகிறது. இவ்வாறு மழை மூலமாகக் கிடைக்கும் தண்ணீரைப் பிடித்து, தேக்கி, ஆவியாவதையும் தடுத்து, சிறிது சிறிதாக ஓடைகளின் வாயிலாக வெளியேற்ற வழிவகை செய்ய வேண்டுமாயின் இந்நீர்ப்பரப்புப் பகுதிகளை மரம் நிறைந்த காடுகளாக மாற்ற வேண்டும்.

இத்தோட்டங்களை எழுப்புவதற்காக நீர்வள மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் அம்சங்கள்:

தோட்டம் எழுப்பப்பட வேண்டிய நீர்ப்பிடிப்புப் பகுதியின் பரப்பு (சுமார்) 18,2250. திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.140 கோடி. பயனடையும் மாவட்டங்கள் அண்ணா, மதுரை, காமராஜர், திருநெல்வேலி, கட்டபொம்மன்.

மறைமுகச் செல்வமாகக் காடுகள் தருவதெல்லாம் விவசாயத்திற்குப் புரியும் துணையும், பருவநிலைக்கு அளிக்கும் பாதுகாப்புமே ஆகும். வனங்கள் நேரடியாகத் தரும் செல்வங்களாவன:

தடிமரம், விறகு மரம், காகிதம் மற்றும் ரயான் தயாரிப்பதற்கு உதவும் கூழ் மரங்கள், வாட்டில், முந்திரி, சந்தனம் மற்றும் காடுபடு சிறு பொருட்கள் ஆகியவைகளாகும். இந்தப் பொருட்களின் வளர்ந்து வரும் தேவைகளைத் தகுந்த திட்டம் மற்றும் உற்பத்தி மூலம் வனத்துறை ஈடு செய்து வருகிறது.

1977ல் 750 டன் சந்தன மரம் விற்றதன் மூலம் ரூ. 205 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது. 1985ல் சந்தனமரத்தின் விற்பனை 2089 டன்னாக உயர்ந்துள்ளது. இதன் மூலம் ரூ.1332 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

வனச் செல்வத்தைச் சீரிய முறையில் பாதுகாக்க 12 வனப் பாதுகாப்புப் படையும் ஒரு சிறப்பு ரோந்து படையும் மூன்று பறக்கும் படையும் இயங்கி வருகின்றன. தற்போது மாநிலத்தில் முக்கியமான இடங்களில் 89 வனச்சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. 1983ஆம் ஆண்டில் ஒரு வனக் குற்றப் பிரிவு வனக் குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், வனப் பொருட்களின் கடத்தலைத் தடுக்கவும் வனக் குற்றப்பிரிவுக் காவல் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையின் கீழ் போதிய பணியாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. சிறந்த முறையில் வனத்தைப் பாதுகாக்க நீலகிரியில் மின் அணு தொடர்புச் சாதனம் அமைக்கப்பட்டுள்ளது. வழக்கமாக வனக் குற்றங்களில் ஈடுபடுபவர்களைக் குண்டர்கள் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க அரசு சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 1974ல் ஆரம்பிக்கப்பட்டது. கூழ் மரம் வளர்த்தல் மற்றும் வனப்பரப்பிலுள்ள முந்திரித் தோட்டங்களின் பராமரிப்பு முதலியவைகள் இக்கழகத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1976ல் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை குடிபெயர்ந்தோருக்கு தேயிலைத் தோட்டத்தில் வேலைவாய்ப்பு வழங்குவது இதன் நோக்கமாகும்.

தமிழ்நாடு அரசு ரப்பர் கழகம் 1984ல் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை குடி பெயர்ந்தோருக்கு ரப்பர் தோட்டத்தில் வேலை வாய்ப்பு வழங்குவது இதன் நோக்கமாகும்.

# விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உதவிகள்



மாநில அரசு, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டத்தினை 1.10.66 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த பத்தாண்டுகளில் இவ்வரசு பல சலுகைகளை அளித்துள்ளது.

முன்பு மூன்று மாதங்கள் சிறை சென்றவர்களுக்கு மட்டுமே மாநில அரசினுடைய ஒய்வூதியம் வழங்கப்பட்டது. அரசு ஆணை எண் 817, பொது (அரசியல் ஒய்வூதியம்.2) நாள் 1.4.80ன் படி மூன்று மாதம் என்பது ஒரு மாதமாகக் குறைக்கப்பட்டது.மேலும் அரசு ஆணை 951, பொது (அரசியல் ஒய்வூதியம்.2) நாள் 18.5.81ன் படி 1.4.80 முதல் மூன்று வாரங்கள் மட்டுமே சிறை சென்றவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

முன்பு மாத ஒய்வூதியம் ரூ.75- ஆக இருந்தது. இது 1.4.79 முதல் ரூ.100- ஆகவும் 25.1.81 முதல் ரூ. 150 ஆகவும் 10.6.86 முதல் மாதம் ரூ. 250 ஆகவும் மாநில ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய ஒய்வூதியமும் மாநில ஒய்வூதியமும் பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாநில ஒய்வூதியமான மாதம் ரூ. 75 25.1.81முதல் மாதம் ரூ.100ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்தவுடன் அவர்களின் மனைவியர் உடனடியாகத் தொடர் ஒய்வூதியம் பெறும் வகையில் மாவட்ட ஆட்சியர்களே ஆணை வெளியிடுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இதனைச் சுலபமாக்கும் வகையில் விடுதலைப் போராட்ட வீரர் இறந்த உடனே அவரின் மனைவி கருவூல அதிகாரியை அணுகி ஒய்வூதியம் பெறுவதற்கு ஏதுவாகத் திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப் படுகிறது.

ஒய்வூதியம் பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 1200 ஆக இருந்தது. இது 2.12.78 முதல் ரூ. 1500 ஆகவும் 9.12.80 முதல் ரூ.5000- ஆகவும் உயர்த்தப்பட்டது. 11.3.83 முதல் இந்த வருமான வரம்பு அறவே நீக்கப்பட்டுவிட்டது.

இறந்துவிட்ட விடுதலைப் போராட்ட வீரரின் ஒய்வூதியத்தினைத் தொடர்ந்து பெற அவரின் விதவை மனைவி மறுமணம் செய்துகொள்ளக்கூடாது என்று இருந்த விதியினைத் தளர்த்தி அவர்கள் மறுமணம் செய்து கொண்டாலும் ஒய்வூதியம் வழங்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராஜரின் சகோதரி திருமதி நாகம்மாள், திரு கக்கன், அவர் மறைவுக்குப் பின் திருமதி சொர்ணம் பார்வதி கக்கன், வாஞ்சிநாதன் சகோதரர் ஆர்.கோபாலகிருஷ்ணன், திரு வி.சீனிவாசராவ் அவர்களின் மனைவி திருமதி நாச்சாரம்மாள், திருப்பூர் குமரன் அவர்களின் துணைவியார் திருமதி இராமாயி, தியாகி திரு. தூக்குமேடை இராஜகோபாலன், அமரர் ஜீவா அவர்களின் துணைவியார் திருமதி ஏ.எஸ்.பத்மாவதி அவர்களுக்கும் அவர்களின் புதல்வர் திரு.மணிக்குமாருக்கும் மற்றும் வ.உ.சியின் பேத்தி திருமதி சேதுலட்சுமி ஆகிய பலருக்கும் அரசு பல சலுகைகள் அளித்து ஆணை பிறப்பித்துள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் சுமார் 4500 நபர்களுக்கு மேல் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஒய்வூதியத்தினை இவ்வரசு வழங்கியுள்ளது. தற்போது 9500 எண்ணிக்கையுள்ள நபர்கள் மாநில அரசு வழங்கும் சுதந்திரப் போராட்ட ஒய்வூதியம் பெற்று வருகின்றனர்.

மருதுபாண்டியரின் வழித்தோன்றல்கள் 202 பேர்களுக்கு அரசு ஒய்வூதியம் அளித்து வருகின்றது.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்குச் சித்த மற்றும் ஆங்கில மருத்துவ பட்டப் படிப்பில் சில இடங்களை இவ்வரசு ஒதுக்கியுள்ளது. ஒய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் அரசு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படும்போது 'பி' வகுப்புப் படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பத்தாண்டுகளுக்கு முன் சுமார் ஒரு கோடிக்குக் கீழ் இருந்த இவ்வோய்வூதியத் திட்டம் தொடர்பான இச்செலவினம் தற்போது ஆண்டொன்றுக்கு சுமார் 2கோடிகளுக்கு மேல் ஆகிறது.



"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்ற பொன்மொழிக்கேற்ப தமிழக அரசு உணவு உற்பத்திக்கும் தொழில் வளர்ச்சிக்கும் சம முக்கியத்துவம் கொடுத்து அதற்கேற்பத் தனது கொள்கையை வகுத்து வருகிறது. சீரான தொழில் வளர்ச்சியால் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி அதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகுக்க முடியும் என்பதை இவ்வரசு உணர்ந்து அதற்கேற்ற வகையில் தொழில் திட்டங்களைத் தீட்டி வருகிறது.

கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்கும் ''சிறுதொழில்'' பெருக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவ்வரசு, அதே நேரத்தில் நடுத்தர மற்றும் பெருந்தொழில்கள் அதிகம் உருவாகி வேலை வாய்ப்புகள் பெருகவும், அதன் மூலம் தமிழகம் முழுவதும் பொருளாதார முன்னேற்றம் அடையவும் வழிவகுக்கிறது.

தொழிலில் பின்தங்கிய பகுதிகளைத் தனியாகப் பிரித்துச் சிறப்புச் சலுகைகள் வழங்குவதன் மூலம் மாநிலம் முழுவதும் சீரான தொழில் வளர்ச்சிக்கு இவ்வரசு ஊக்கமளிக்கிறது. பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்குடன் அதற்கு வேண்டிய சலுகைகளையும் வழிவகைகளையும் உருவாக்கிக் கொடுத்து உதவுகிறது இவ்வரசு.

இதன் காரணமாகத் தொழில் வளர்ச்சியால் முன்னேறிய ஒரு சில மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழகம் தொடர்ந்து இருந்து வருகிறது. தொழில் வளர்ச்சியால் முதலிடத்தைப் பெறுவதற்கு வேண்டிய ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் அனைத்தையும் இவ்வரசு எடுத்துவருகிறது.

தமிழகம் தொழில் வளர்ச்சியால் தொடர்ந்து முன்னேற்றம் காண வசதியாக இவ்வரசு இரு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஒன்று, புதியதாகத் தொழில் தொடங்குவோருக்கு வேண்டிய அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்து புதிய தொழில்களை ஊக்குவிப்பது. மற்றொன்று தமிழக அரசே சில தொழில்களைத் திறம்பட நடத்தி மற்றவர்களுக்கு முன்னோடியாகச் செயல்படுவது.

தமிழகத்தில் புதியதாகத் தொழில் தொடங்குவோர்க்குத் தேவையான நிதியுதவியை அளிப்பதற்காகத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகிய இரு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதற்காகவும் குறிப்பாகப் பின்தங்கிய பகுதிகளில் பல புதிய தொழில்கள் ஏற்படுவதற்கு உதவி செய்வதற்காகவும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொடங்கப்பெற்றுள்ளது. இக்கழகம், தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய நிலம், கட்டடம், இயந்திரம் போன்றவற்றிற்குத் தேவையான கடனுதவியை அளித்து வருகின்றது. அதிகபட்சம் ரூ. 60.00 இலட்சம் வரை கடனுதவி அளிக்கப்படுகின்றது.

இக்கழகத்தின் மூலம் இரசாயனம், உணவு, உணவுப்பொருள், காகிதம், உலோகப்பொருள், தாதுப்பொருள், தோல் முதலியனவை தொடர்பான தொழில்கள் அதிக அளவில் தொடங்கப்பட்டிருக்கின்றன. கடந்த 10 ஆண்டுகளில் இக்கழகம் ரூபாய் 507.66 கோடி கடனுதவி அனுமதித்துள்ளது. இக்கழகத்தின் சீரிய பணியினால் 2,45,400 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

# வளந்தரும் தொழில்களால் வலுப்பெறும் தமிழகம்






**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

இந்நிறுவனம் ஆலங்குளத்தில் சிமெண்ட் ஆலை ஒன்றையும், அரக்கோணத்தில் எஃகு ஆலை ஒன்றையும் அமைக்க ஏற்படுத்தப் பட்டது. பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய பெருந் தொழிற்சாலைகளையும், மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளையும் கூட்டுத்துறையில் நிறுவி வருகிறது. பொதுத் துறையிலும் கூட்டுத்துறையிலும் 45 தொழிற்சாலைகளை இதுவரை நிறுவியுள்ளது. இதனால் 35,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. கடந்த 6 ஆண்டுக் காலமாக இந்நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது.

இந்நிறுவனம் கடந்த 10 ஆண்டுகளில் 550 தொழில் திட்டங்களுக்கு மேல் தவணைக்கடன் அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. சுமார் 158.75 கோடி ரூபாய் தவணைக் கடனாகத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தோற்றுவிக்கப்பட்ட தொழில்கள் தொய்வுறாது, சீராக வளர்வதற்கு ஏதுவாக மூலதன நிதி உதவி விற்பனை வரிக்கடன், மானியம் போன்ற சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இராணிப்பேட்டை, ஒசூர், மானாமதுரை, புதுக்கோட்டை, கடலூர் கும்முடிப்பூண்டி, தூத்துக்குடி ஆகிய 7 இடங்களில் தொழில் இணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தியர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதற்காக அகில உலகக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை பல்வேறு நாடுகளிலிருந்து விவரம் கோரி சுமார் 980 பொது விசாரணைகள் வந்துள்ளன. அயல்நாட்டு இந்தியர்களால் 16 தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை நகரமருகில் ஏற்றுமதியை முறைப்படுத்தும் மண்டலம் ஒன்று மைய அரசினால் அமைக்கப்பட்டுள்ளது இதன் முழு வளர்ச்சிக்கும் தேவையான அனைத்து வசதிகளையும் தமிழக அரசு செய்து வருகிறது.

**தமிழ்நாடு கனிம நிறுவனம்**

தொழில்களுக்குப் பயன்படும் சில முக்கிய கனிமங்களை வணிக முறையில் வெட்டியெடுத்து கருமபாறைகளையும் சாம்பல் நிறப் பாறைகளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்ய, டாமின் என்று அழைக்கப்படும் தமிழ்நாடு கனிம நிறுவனம் 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்நாடு அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இந்நிறுவனம் ரூபாய் 2005.00 இலட்சம் அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுடன் மிக நவீனமான 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய பாறை அறுத்து மெருகிடும் தொழிற்சாலை ஒன்று சென்னைக்கு அருகிலுள்ள மணலியில் ரூ. 640 இலட்சம் மூலதனத்தில் நிறுவப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1986 மார்ச்திங்கள் 25ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது இத்தொழிற் சாலையில் உற்பத்தியாகும் பொருள்கள் உலக நாடுகளில் உற்பத்தியாகும் தரமுள்ள பொருள்களுக்கு இணையாக உள்ளதால் இது உலகப்புகழ் பெற்றுள்ளது. இந்நிறுவனம் 20 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக மதிய உணவு மையங்களைக் கட்டுவது போன்ற பல்வேறு சமூக நலத்திட்டங்களுக்கு நன்கொடை அளித்துள்ளது.

**தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்**

சர்க்கரைத்தொழில், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் கிராமியப் பொருளாதார அபிவிருத்தியில் பெரும் பங்கு வகிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் 5 புதிய சர்க்கரை ஆலைகள் தொடங்கப்பட்டுள்ளன மொத்த ஆலைகளின் அரவைத் திறனும் 39,000 டன்னிலிருந்து 47,650 டன்னாக அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகள் தொடர்ந்து நிலையாக அதிக அளவு சர்க்கரையை உற்பத்தி செய்து வருகிறது. தேசிய அளவிலான சர்க்கரை உற்பத்தியில் தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி 10 விழுக்காடு ஆகும். சர்க்கரை ஆலைகளில் கிராமப்பகுதி மக்களுக்கு நேரடியாகத் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி வருவதோடு மறைமுகமாகவும் இலட்சக்கணக்கான மக்களுக்கு வேளாண்மை மற்றும் போக்குவரத்துத் துறைகளில் வேலை வாய்ப்பு அளித்து வருகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்**

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் ஆலங்குளம், அரியலூர் ஆகிய இரண்டு இடங்களில் சிமெண்ட ஆலைகளை நிறுவி நடத்தி வருகின்றது. ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் துணைப் பொருட்கள், ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தப் பொருள்கள் ஆகியவை உற்பத்தி செய்வதற்கு 2 ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. 3100 நபர்கள் இத்தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். கடந்த 10 ஆண்டுகளில் இந்நிறுவனத்தினால் நடத்தப்படும் ஆலங்குளம் சிமெண்ட் ஆலை பல தேசிய பாதுகாப்பு விருதுகளைப் பெற்றுள்ளது.

**தமிழ்நாடு உப்பு நிறுவனம்**

மிகவும் பின்தங்கிய இடமாகவும், வேறு தொழிற்சாலைகள் இல்லாத விவசாயம் அல்லது



தமிழ்நாடு புளோரின் மற்றும் அலைடு கெமிக்கல்ஸ், கடலூர்

வியாபாரம் மூலம் வேலை வாய்ப்பும் அளிக்க இயலாத கிராமங்களில் வாழும் மக்களுக்கு உப்பு உற்பத்தித் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்தில், வங்காள விரிகுடாக் கடற்கரை ஓரமாக உள்ள இடங்களில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது, கடல் நீரிலிருந்து உணவு உப்பு மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தகுந்த உப்பு மற்றும் எல்லா வகையான உப்பும் தயாரிப்பதுடன் உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உபபொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வதாகும். இந்நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கம் என்னுமிடத்தில் ஒரு உப்புத் திட்டத்தையும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தம்பிக்கோட்டை என்னுமிடத்தில் சர்தார் வேதாரத்னம் உப்புத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

கடந்த 10 ஆண்டிற்குள் மொத்த உப்பு உற்பத்தியானது 700 டன்னிலிருந்து 60000 டன்னுக்கும், ஒரு எக்டேர் பரப்பளவில் உற்பத்தி 3 டன்னிலிருந்து 136 டன்னுக்கும் உயர்ந்துள்ளது.

நமது நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் பரவி வரும் இரத்தச் சோகை நோய் வராமல் தடுக்க இரும்புச் சத்து கலந்த உப்பை 15000 டன் உற்பத்தி செய்ய ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. யூனிசெப் மற்றும் மத்திய அரசு (உணவுத் துறை) உதவியுடன் ரூ. 12 இலட்சம் செலவில் சிறந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இரும்புச் சத்துக்கலந்த உப்பை மதிய சத்து உணவுத்திட்ட மையங்களுக்கு வழங்குவதன் மூலம் சிறுவயதிலேயே இரத்தச் சோகை வராமல் தடுக்க இந்நிறுவனம் அரிய முயற்சி செய்து வருகிறது.

**பின் தங்கிய பகுதிகளில் தொழில்கள் தொடங்குவதற்கு மூதலீட்டு மானியம் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் போன்ற சலுகைகளைத் தமிழக அரசு அளித்து வருகிறது.**

**தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் மூலம் 1,500 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும் 5,000 பேருக்கு மறைமுகமான வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளது.**

**ரூ. 640 இலட்ச மூதலீட்டில் பாறை அறுத்து மெருகிடும் தொழிற்சாலை மணலியில் நிறுவப்பட்டுள்ளது.**

**தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் 1978 முதல் 1987 வரை ரூ. 2005 இலட்சம் அந்நியச் செலாவணி கிட்டியுள்ளது.**

## தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு 50,000 டன் செய்தித்தாளையும், 40,000 டன் அச்சிடும் மற்றும் எழுதும் காகிதத்தையும் உற்பத்தி செய்ய திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காகித ஆலை ஒன்றைத் தொடங்கி உள்ளது. 18.10.1985 அன்று இவ்வாலை தனது வணிக உற்பததியைத் தொடங்கியது. அச்சிடும் மற்றும் எழுதும் காகிதங்களை உற்பத்தி செய்வதோடு ''மேப் லித்தோ'' என்ற வகையையும் இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் 1500 பேர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பு அளித்துவருவதோடு 5,000 பேருக்கு வேறு வகையில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தின் நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தொடங்க முன்வருவோர்க்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் தமிழக அரசு செய்து தருவதோடு புதிய தொழில்கள் பலவற்றைத் தொடங்கித் திறம்படவும் நடத்தி வருகின்றது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடன் தொழில் முனைவோர் பலருக்குக் கடனுதவியளிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய பகுதிகளில் பல்வேறு தொழில்கள் தொடங்கத் தொழில் முனைவோரை ஊக்குவிக்க முதலீட்டு மானியம், வட்டியில்லா விற்பனைக்கடன் போன்ற சலுகைகளைத் தமிழக அரசு அளித்து வருகிறது.



# ஏழைகளை வாழ வைக்கும் எழிலான தொழில்கள்

இந்திய நாட்டின் உயிர் நாடி கிராமங்களில் இருக்கிறது என்பதைக் கண்ட அண்ணல் காந்தியடிகள்அவற்றின்வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை வகுத்துத் தந்தார். அவற்றில் ஒன்று தான் கதர் கிராமத் தொழில் திட்டம். தமிழ் நாட்டில் இத்திட்டங்களை பேரறிஞர் அண்ணா அவர்கள் போற்றிவளர்த்தார்கள். அண்ணா வழியில் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1977-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது முதல், கதர் கிராமத்தொழில் திட்டங்கள் சீரும் சிறப்புமாக வளர்வதற்கு வழிவகைகளை வகுத்துத் தந்துள்ளார்கள். புரட்சித் தலைவர் அவர்களின் 10 ஆண்டு பொற்கால ஆட்சியில் அகில இந்திய அளவில் மத்திய அரசும், கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவும் பாராட்டும் வகையில் இவ்வாரியம் வளர்ச்சியடைந்துள்ளது. அகில இந்தியாவிலேயே கதர் கிராமத்தொழில் திட்டங்களை நேரடி நிர்வாகத்தில் செயல் படுத்திக் கொண்டு வருவது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தான் என்பது குறிப்பிடத்தக்கது. **மற்ற மாநிலங்களுக்கு தமிழ்நாடு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாடும் ஏழை மக்களின் வாழ்வு மலர கடந்த 10 ஆண்டுகளில் இவ்வாரியத்தின் சிறப்பான பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கிராமத்தீக் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல், புதிய ரக நவீன கருவிகளை வாங்கி வழங்குதல், தொழில் கூடங்களைக் கட்டித்தருதல், தொழிற்கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துதல், சுயவேலைவாய்ப்புக்கு நிதி உதவி, தொழில் நுட்ப உதவி அளித்தல் போன்றவற்றில் கதர் வாரியம் தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அகில இந்திய அளவில் கீழ்க்கண்ட கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

எண்ணெய்த் தொழில்
பனைத் தொழில்
குளியல் சோப்பு மற்றும்
சலவை சோப்புத்தொழில்
தேனீ வளர்ப்பு
பாலியஸ்டர்

1977-78ல் வாரியத்தின் கதர் கிராமத்தொழில் பொருட்கள் மொத்த உற்பத்தி ரூ. 24 கோடியாக இருந்தது. 1986-87ல் ரூ.140கோடியாகஉயர்ந்துள்ளது. 10 ஆண்டுகளில் வாரியத்தின் வளர்ச்சி 583 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அகில இந்திய அளவில் கதர் உற்பத்தியில் உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்த இடத்தையும், கிராமத்தொழில் உற்பத்தியில் இந்தியாவிலேயே முதலிடத்தையும் தமிழ்நாடு வகிக்கிறது. **கதர் கிராமத் தொழில் உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியது.**

புரட்சித் தலைவர் 1977ஆம் ஆண்டு பதவி ஏற்றுக் கொண்ட போது இவ்வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றோர் எண்ணிக்கை 3,33,157;1986-87 வேலை வாய்ப்புப் பெறுவோர் எண்ணிக்கை 7,94,263 ஆகும்.

## கதர்

**பருத்தி:** கதர் திட்டத்தின் மூலம பெண்களுக்குத்தான் அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் 591 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒரு கிராமிய நூற்பு நிலையத்திற்கு 30 நபர்கள் வீதம் சுமார் 17,700 பேருக்கு நிரந்தர வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் உற்பத்தியாகும நூலைக் கொண்டு சுமார் 6,000 பரம்பரை நெசவாளர்கள் கதர்த் துணிகளை உற்பத்தி செய்து நிரந்தர வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். வாரியத்தில் 81 கதர் உற்பத்தி அலகுகள் செயல்படுகின்றன. ஆதி

திராவிட மக்கள் மற்றும் வறு மைக்கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப் புற மக்கள் ஆகியோரை கதர் நெசவுத்தொழிலில் ஈடு படுத்தி அவர்களுக்கு மாற்றுத் தொழிலாக அமையும் வகையில் நேபாளித் தறிகள் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன. பல்வேறு அரசுத் திட்டங்கள் கதர் ஆணைக்குழுத் திட்டங்கள் மூலம் 68 நேபாளித் தறி அலகுகள் அனுமதிக்கப்பட்டு அவற்றின் மூலம் 5,280 நபர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக் கப்படுகிறது.



**பாலியஸ்டர்**

கதர்த்துறையில் பாலியஸ்டர் உற்பத்திஒரு புதிய முற்போக்குத் திட்டமாகும். மக்களின் நாகரிகத் தேவைகளுக்கு ஏற்பத் தரமான பாலியஸ்டர் துணி வகைகள் வாரியத்தில் தயாரிக்கப்படுகின் றன. வாரியத்தில் மொத்தம் 38 பாலியஸ்டர் நூல் உற்பத்தி அல குகள் செயல்பட்டு வருகின்றன. அவை 86-87ல் மொத்தம் ரூ.180 இலட்சத்திற்குக் கதர் பாலியஸ் டர் துணிகளை உற்பத்தி செய் துள்ளன. சேலம் மாவட்டம் எஸ்.பாலம் கிராமத்தில் பாலியஸ் டர் மற்றும் பஞ்சுக்கலவை அலகு ரூ.55 இலட்சம் மதிப்பில் அனு மதிக்கப்பட்டு பூர்வாங்க வேலை கள் நடைபெறறு வருகின்றன. பாலியஸ்டர் துணி ரகங்களைச் சாயமிட்டு அச்சிடுவதற்கு பிரத்தி யேகமாக பவானிசாகரில் தனித் தொழில் கூடம் துவக்கப்பட்டுள் ளது. **கதர் உற்பத்தியில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்தான் கதர் பாலியஸ்டர் துணிகளைத் தயாரித்து அறிமுகப்படுத்தியது.**

**பட்டு**

தரமுள்ள நவீன ரகப் பட்டுப் புடவைகள் கதர் வாரியத்தில் தயாரிக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் 17 பட்டு அலகுகள் செயல்படுகின்றன. 1977ஆம் ஆண்டு கதர்ப்பட்டு உற்பததி மதிப்பு ரூ. 61 இலட்சமாக இருந் தது. 1986-87ல ரூ.5,400 இலட் சத்திற்கு உற்பத்தி உயர்நதுள் ளது. இவற்றின் மூலம் 1,200 பட்டு நெசவாளர்களுக்கு நிரந் தர வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. பட்டு நெசவாளர் களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600- முதல் ரூ. 700 வரை வருவாய் கிடைக்கிறது.

## கிராமத் தொழில்

**சோப்புத் தொழில்**

வாரியத்தில் 38 சலவை சோப்பு அலகுகள் செயல்பட்டு வருகின் றன. இவற்றின் மூலம் சுமார் 200 நபர்கள் நிரந்தர வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். வாரி யத்தின் மூலம் உற்பத்தியாகும் சலவை சோப்பிற்கு ''கோபுரம் மார்க்'' சலவை சோப்புகள் என்று பெயர். அரசின் துறை களான மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் போன்ற வற்றிற்கும் இந்த சோப்புகள் அனுப்பப்படுகின்றன. வாரியம் முதன் முறையாக குளியல் சோப் புகளை இந்தியப் பாதுகாப்புத் துறைக்கு அனுப்புகிறது. சுற்று லாத்துறையின் தேவைக்கான குளியல் சோப்பு முழுவதையும் வாரியம் தயாரித்துக் கொடுக்கி றது. **வாரியத்தின் சலவை சோப் பிற்குக் கேரள மாநிலத்தில் அமோக வரவேற்புள்ளது.**

## தோல் தொழில்கள்

**தோல் பதனிடுதல்**

தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள அருந்ததியச் சமுதாயத்தினர் வாழ்வு வளம் பெற வாரியம் பற் பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டியுள்ளது. அவர்களுக்கு நிதி யுதவியும், தொழில் நுட்ப உதவி யும், பொதுப் பணிக்கூட உதவி யும், வேலைவாய்ப்பும் வாரியம் அளித்து வருகிறது.

சிறப்புத் திட்டத்தின் கீழ் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, பெரியார் மாவட்டம், கொங்கம்பாளையத்தில் நவீன தோல் பதப்படுத்தம் அலகு ரூ. 20.69 இலட்சம் செலவில் சுமார் 200 நபர்கள் பயனடையும் வகையில் துவக்கியுள்ளது.

**காலணித் தொழில்**

வாரியத்தில் 45 காலணி அலகுகள், 46 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. 1977ல் ரூ. 124 இலட்சமாக இருந்த உற்பத்தி 86-87ல் ரூ. 905 இலட்சமாக உயர்ந்துள்ளது.

**காலணிப் பெட்டிகள்**

கொளுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் நாள் முழு வதும் சாலை ஓரங்களில் துன்பப் படும் காலணித் தொழிலாளர் களின் துயர் துடைக்கப் புரட் சித் தலைவர் அவர்களின் அரசு நிழ்ல் தரும் காலணித் தொழில் கூடங்களை இந்தியாவிலேயே முன்னோடித்திட்டமாகத் தயா ரித்து வழங்கி வருகிறது. ஒவ் வொன்றும் ரூ. 8,500 மதிப்புள்ள காலணித் தொழில் கூடம், கருவி கள், தையல் இயந்திரங்கள் உட் பட காலணித் தொழிலாளருக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்விதம் தமிழகம் முழுவதும் 1,000 பணிக்கூடங்கள் வழங்கப் பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டு 750 பணிக்கூடங்களை வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது. இவை வாரியத்தின் அலகு களில் தயாரிக்கப்பட்டு வழங்கப் படும்.

**நிதி உதவி**

தோல் பதனிடுவோர் மற்றும் காலணித் தொழிலாளர்களுக்குக் கடன், மான்யமாக வாரியம் நேரடியாக நிதியுதவி செய்து வருகிறது. இதுவரை தோல் பத னிடுவோர் சுமார் 5,500 நபர்க ளுக்கும், காலணித் தொழில் செய் வோருக்கும் கடனும் மானியமும் வழங்கப்பட்டுள்ளன.

## பனைத் தொழில்

சுமார் 5 கோடி பனை மரங் கள் தமிழ்நாட்டில் உள்ளன.

பனைமரத் தொழிலாளர்களின் நலனுக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும், புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பல அரிய செயல் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. தமிழ்நாட்டில் 1,698 பனைத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 6 மாவட்ட பனை வெல்ல சம்மேளனங்களும் சென்னை மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவுச் சம்மேளனமும் செயல்பட்டு வருகின்றன. 1977-78ல் பனைப்பொருள் உற்பத்தி ரூ.101 இலட்சமாக இருந்தது. 86-87ம் ஆண்டில் பனைப்பொருட்களின் மொத்த உற்பத்தி ரூ. 3,475 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. பனஞ்சீனி, பனஞ்சர்க்கரையைக் கொண்டு தயாரிக்கப்படும் ''பாம்டா, பாம்கூலா'' மக்களிடத்தில் நல்ல வரவேற்புப் பெற்றுள்ளன. இத்தொழிலில் 1977-78-ம் ஆண்டில் வேலை வாய்ப்பு பெற்றோர் சுமார் 2,34,000 நபர்கள் 1986-87ல்வேலை வாய்ப்புப்பெறுவோர் 5.70 இலட்சத்திற்கு மேல் ஆவர். இதில சுமார் 2,24,000 பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

பனைப்பெருவளத்திட்டம் தமிழகத்தில் 12 இடங்களில் துவக்கிடத் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ஆண்டுதோறும் ரூ. 75 இலட்சம் மதிப்புள்ள பனைத்தும்பு மற்றும் பனை ஓலைப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**பனைத் தொழிலாளர் விபத்து நிதி**

பனைத்தொழிலாளர்கள் தங்கள் தொழிலில ஈடுபடும்போது ஏற்படும் விபத்துக்களுககு அரசு நிவாரணம் வழங்கி வருகின்றது. இத்திட்டத்தினால் சிறு விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுககு ரூ. 100ம் பெரும் விபத்தினால பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.500 மரணமுற்றவரின் குடும்பத்திற்கு ரூ. 1000-ம் நிவாரணமாக வழங்கி வந்தது. புரட்சித்தலைவர் ஆட்சிக் காலததில் மரணமடைநதவரின் குடும்பத்தினருக்கு ரூ. 5000- நிவாரணமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரையில் 1,065 நபர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படடுள்ளது. இது போல் நிரந்தர ஊனம் அடைந்தோர்க்கும் ரூ.5,000 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் அளிக்க அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**தேனீ வளர்ப்புத் தொழில்**

உடல் நலத்திற்கு ஓர் அருமருந்து, தேன். தமிழகத்தில் 4,286கிராமங்களில் இத்தொழில் செயல்பட்டு வருகிறது. இத்தொழிலில் சுமார் 57,000 நபர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆண்டுக்கு 15 இலட்சம் கிலோ தேன் உற்பத்தியாகிறது.

ஒருங்கிணைந்த மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஜவ்வாது மலை, கல்ராயன் மலை, கொல்லி மலை ஆகிய மலைப் பிரதேசங்களில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், தேனீ வளர்ப்பு உப கிளைகள் துவக்கப்பட்டுள்ளன. இது வரை 19,400 தேனீ பெட்டிகள் மலைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்



நீலகிரி மாவட்டத்தில் 13,500 தேனீப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**எண்ணெய்த் தொழில்**

பரம்பரையாக இயங்கி வந்த மாட்டுச்செக்குத்தொழிலில்புதுய தொழில் நுட்பங்களைப் புகுத்தி மின்விசைச செக்கினை வாரியம் தமிழகத்தில் அறிமுகம் செய்தது. மாட்டுச் செக்கினை இயக்குவதுல் ஆகும் செலவினத்தை விட மின்விசைச் செக்கினை இயக்கிடச் செலவினம் மிகவும் குறைவாகும். இதுவரை தமிழகத்தில் 3,828 மனவிசைச் செக்குகள் வழங்கப்பட்டுள்ளன. எளிதில் இடம் விட்டு இடம் மாற்றிக்கொள்ள ஏதுவான நவீன மின் விசைச் செக்குகள், வாரியத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் 38 எண்ணெய் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

**எண்ணெய் உற்பத்தியில் அகில இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது.** 1977-78ல் எண்ணெய் உறபத்தி ரூ. 351 இலட்சமாகும். 86-87ல் ரூ.3,825 இலட்சம் மதிப்பு உற்பத்தியை அடைந்துள்ளது. இது சுமார் 11 மடங்கு அதிக வளர்ச்சியாகும்.

**மட்பாண்டம்**

தமிழ்நாட்டில் மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு புரட்சித் தலைவரின் ஆட்சியில் பலவேறு நன்மைகள் தொடர்ந்து செய்யப்பட்டுவருகின்றன. பல கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு வேண்டிய நிதியுதவி தடை யில்லாமல அளிக்கப்பட்டு வருகிறது. இன்று தமிழ்நாட்டில் 70 மட்பாண்டக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. வாரியம் 3 அலகுகளை நடத்தி வருகிறது. இவைதவிர 6,420 மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு வாரியம் நேரடியாக நிதியுதவி அளித்து அவர்கள் சுயமாகத் தொழில் செய்து வாழ்க்கையில் முன்னேற வழிகாட்டியுள்ளது.

1983ஆம் ஆண்டில் இயற்கைச் சீற்றங்களால் பாதிககப்பட்ட 1,182 மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 2.77 இலட்சமும் 1984ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்ட 1,006 மட்பாண்டத்தொழிலாளர்களுக்கு ரூ. 1.60 இலட்சமும், 1985ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட 2,333 மட்பாண்டத்தொழிலாளர்களுக்கு தலா ரூ. 300 வீதம் ரூ. 7 இலட்சமும் மானியமாக வழங்கப்பட்டது.

**தச்சு கருமார்த் தொழில்**

தச்சு கருமார்த் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 9,159 நபர்களுக்கு வாரியம் கடன், மான்யமாக நிதியுதவியும், அவர்களுக்குத் தொழில் கருவிகளும், வாங்கி வழங்கியுள்ளது. வாரிய நிர்வாகததில் தமிழநாட்டில் பல்வேறு இடங்களில் 48 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், 4 அலகுகளும் இயங்கி வருகின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 1978ஆம்ஆண்டுஅரசு நிறுவனங்கள், அரசுத்துறைகள், பள்ளிகள் போன்றவற்றிற்குத் தேவையான மரம், இரும்பு ஆகியவைகளை கதர் வாரியததிலிருந்து வாங்க வேண்டுமென்று ஆணை வழங்கியதன் பயனாய் வாரியத்தில் உற்பத்தியாகும், நாற்காலி, மேஜை, பீரோக்கள் மிகவும் அதிகமாக விற்பனையாகின்றன. இத்தொழிலில் 15,920 கைவினைஞர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றார்கள். 1977-78ஆம் ஆண்டில் இத்தொழிலில் உற்பத்தி ரூ.54 இலட்சமாக இருந்தது. 1986-87ல் ரூ. 885 இலட்சமாக உயர்ந்துள்ளது.

பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு உகந்த தொழில் கைமுறைக் காகிதத் தொழிலாகும். வாரியத்தில் 11 அலகுகளும், 5 கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. அரசுத்துறைகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் தேவையான காகிதங்களை வாரியத்தில் வாங்க வேண்டும் என்று அரசாணை பிறப்பித்ததால் உற்பத்தி விற்பனை பெருகியுள்ளது. 1977-78ம் ஆண்டு ரூ. 13 இலட்சம் ஆக இருந்த உற்பத்தி 86-87இல் ரூ. 45 இலட்சமாக உயர்ந்துள்ளது. சுமார் 1,500 நபர்கள் இதன் மூலம் நிரந்தரமாக வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள்.



## சிறப்புக் கூட்டுத் திட்டம் மற்றும் கிராம வளர்ச்சித் திட்டம்

இத்திட்டம் 1981-82 முதல் செயல்படத் துவங்கியது. தெருவோரம் வெயிலிலும், மழையிலும் சிரமப்பட்டு வரும் காலணித் தொழிலாளர்களுக்கு தனித் தனியே தையல் இயந்திரத்துடன் பெட்டிக்கடைகளை உருவாக்கி அதன் மூலம் சுயவேலை வாய்ப்புப்பெறும்பொருட்டு அவற்றினை வழங்கி வருகின்றது. இதன் மூலம் காலணித் தொழிலாளர்கள் தமது வருவாயை தினசரி ரூ. 15 முதல் ரூ. 125 வரை உயர்த்திக் கொள்ள ஏதுவாகிறது. இதுவரை 1000 காலணித் தொழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர். கிராமத் தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கிராமிய நூற்பு நிலையம், நேபாளித் தறி அலகு, பனைத்தொழில் பொருட்கள், கைமுறைக்காகித அலகு, காலணி உற்பத்தி அலகு, பாய்முடைவோர் கூட்டுறவுச் சங்கம், பிரம்பு மற்றும் மூங்கில் தொழில் கூட்டுறவுச்சங்கம் ஆகிய கதர்கிராமத் தொழில்களைத் துவக்கி அவற்றின் மூலம் ஆங்காங்குள்ள ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியும்வருகின்றது. இதுவரை இத்திட்டங்கள் மூலம் 20,055 ஆதி திராவிடர்கள் பயனடையும் வகையில் ரூ. 1404.91 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் பல நிலையில் செயல்படுத்தப்பட்டுவருகின்றன.



ஏழாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் ரூ. 3,960 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 63,000 நபர்கள் பயனடையும் வகையிலான திட்டங்களை வாரியம் தீட்டியுள்ளது. 1985-86-ம் ஆண்டில் ரூ. 193 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் 576 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

நாட்டின் இன்றுள்ள சூழ்நிலையில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பது மிகப்பெரிய செயலாகும். குறைந்த மூலதனத்தில் ஆங்காங்கே கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது ஒன்றே சிறந்த வழி. இந்தப் பணியினை தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் தமிழ்நாட்டில் அமைதியாக கிராமப்புற ஏழை எளிய மக்களுக்குச் செயலாற்றி வருகிறது.

கதர் கிராமத் தொழில் வாரியப் பணிகளை ஆய்வு செய்திட மத்திய அரசினால் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியில் முன்னாள் துணைத் தலைவரும், ஒரிசா மாநில அரசின் முன்னாள் தலைமைச் செயலருமான திரு எம். இராமகிருஷ்ணய்யா அவர்களைத் தலைவராகக் கொண்ட இக்குழு கடந்த 1985 டிசம்பர் மாதத்தில் தமிழகத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு கதர் கிராமத் தொழில் அலகுகள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தது. குழுவின் தலைவர் அவர்கள் வாரியத்தின் பணியை வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சிறப்புக்களையும் அது தமிழக மக்களுக்கு ஆற்றி வரும் சிறப்பான சேவைகளையும் மத்திய அரசு தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு என்.டி. திவாரி அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

அண்ணல் காந்தியடிகள் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இந்தத் திட்டம் கிராமிய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள நம் நாட்டிற்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகும். இதனை உணர்ந்துள்ள நமது புரட்சித்தலைவர் அவர்கள் கடந்த 10 ஆண்டு பொற்கால ஆட்சியில் கதர் கிராமத்தொழில் திட்டங்களின்பால் நல்ல ஆர்வம் காட்டிச் சிறப்பாக வளர்ச்சியுறச் செய்துள்ளார்கள் என்பது வெள்ளிடைமலை.



# வீரவிளையாட்டில் தீரமிகு முயற்சிகள்

தமிழ்நாட்டில் விளையாட்டின் தரத்தை மேலோங்கச் செய்யவும் இளைஞர்களைப் பயனுள்ள பணிகளில் ஈடுபடுத்தவும், 'இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை' என்னும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. 1979-ஆம் ஆண்டு தோன்றிய இந்தத் துறை எட்டாண்டுக் காலத்தில் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருகிறது.

அரசுக்கு ஆலோசனை வழங்கும் நிலையில் 1956-ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த 'தமிழ்நாடு மாநில விளையாட்டு மன்றம்' 1979-ஆம் ஆண்டு இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறையின் ஓர் உறுப்பாக அமைந்து ஆக்க பூர்வமான பணிகளில் ஈடுபட்டது. இந்த மன்றம் 1984-ஆம் ஆண்டு முதல் 'தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம்' என்னும் பெயருடன் செயல்படத் துவங்கியுள்ளது.

விளையாட்டு வளர்ச்சி, இளைஞர் நலம் என்னும் குறிக்கோள்களை நோக்கி இவற்றின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இத்துறை தோன்றிய 1979-80 நிதியாண்டில் சுமார் அரைக் கோடி ரூபாயை விளையாட்டு வளர்ச்சிக்குச் செலவிட்ட தமிழ்நாடு இப்போது, கடந்த 1986-87-ஆம் நிதியாண்டில் இரண்டே முக்கால் கோடி ரூபாய் செலவு செய்கிறது. எட்டாண்டுகளில் இதன் செலவினங்கள், அதாவது விளையாட்டுக்கு உதவும்தொகை ஐந்து மடங்குக்கு மேல் கூடியுள்ளது.

இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறையானது தனது நேரடிப் பொறுப்பில் செயல்படுத்திவரும் திட்டங்கள் பலவாகும்.

தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக்கழகம் செயல்படுத்தி வரும் திட்டங்களும் பலப்பல.

## விளையாட்டுப் பள்ளிகள்

சென்னை, நெய்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் விளையாட்டுப் பள்ளிகள் உள்ளன. கோயம்புத்தூரில் பெண்களுக்கென்று தனி விளையாட்டுப் பள்ளியும் உள்ளது. மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் விளையாட்டு விடுதிகள் உள்ளன.

விளையாட்டில் திறம் பெற்ற தகுதிமிக்க மாணவ மாணவிகள் இவற்றில் தங்குகிறார்கள். பள்ளி நேரங்களில் பொதுக் கல்வியும் காலை, மாலை நேரங்களில் விளையாட்டு நுட்பங்களும் அவர்களுக்குச் சொல்லித் தரப்படுகின்றன. அவர்களுக்குச் செலவாகும் உணவு, உறையுள் செலவுகளையெல்லாம் அரசே ஏற்கிறது.

எட்டாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் இந்த விளையாட்டு மாணவ மாணவிகள் பன்னிரண்டாம் வகுப்பு முடிக்கும் வரையிலும் தொடர இங்கே வாய்ப்பு உண்டு.

## இளமையில் தெரிந்தெடு

விளையாட்டுப் பள்ளி விளையாட்டு விடுதிகளில் தங்கிப்படிக்கும் வாய்ப்பு இல்லாத மாணவ மாணவியரில் திறம்பெற்றவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு முறையாக அவர்கள் பயிலும் பள்ளித் திடலிலோ அருகாமையில் உள்ள மாவட்ட மன்ற விளையாட்டுத் திடலிலோ விளையாட்டு நுட்பங்களைச் சொல்லித் தந்து சிறந்த விளையாட்டு வீரராக உருவாக்கும் திட்டந்தான் 'இளமையில் தெரிந்தெடு' போட்டிகள் ஆகும்.

பதினாறு வயதுக்கு உட்பட்ட ஆண் பெண் மாணவர்களுக்கு மாநில அளவில் ஆண்டுதோறும் போட்டிகள் நடத்தி அந்தப் போட்டிகளின்போது திறமையானவர்கள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் தொடர்புடைய மாவட்ட மன்ற விளையாட்டுப் பயிற்றுநரிடம் ஒப்படைக்கப்பட்டுச் சிறந்த வீரர்களாக உருவாக்கப்படுகிறார்கள்.

பாலர் பள்ளிகளில் பயிலும் பருவத்திலேயே விளையாட்டில் ஆர்வமுள்ள குழந்தைகளைக் கண்டறிவதிலும், எந்த விளையாட்டில் அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதைக் கண்டறிவதும் 'மிக இளமையில் தெரிந்தெடு' விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதன் நோக்கம் ஆகும். இந்த விளையாட்டு

களில் போட்டி இல்லை. வெற்றி தோல்வி இல்லை. திறமை, ஊக்கம், ஆர்வம் ஆகியவை கண்டறியப்பட்டுப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

நடுநிலைப் பள்ளிகளில் விளையாட்டுக்கெனத் தனியே ஆசிரியர் இல்லை. அந்தப் பள்ளிகள் ஒன்று சேர்ந்து விளையாட்டுப் போட்டிகள் நடத்த அரசு உதவுகிறது.

பத்து உயர்நிலைப்பள்ளிகள் ஒன்று சேர்ந்து விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை உதவுகிறது. இதில் வெற்றி பெற்றவர்கள் படிப்படியாக மாநிலக் குடியரசு நாள் போட்டி வரையில் முன்னேறிச் செல்ல வாய்ப்பு உண்டு.

பதினோராம், பன்னிரண்டாம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு அணி விளையாட்டுகளில் நடத்தப்படும் போட்டிகள், பாரதி நாள் விளையாட்டுப் போட்டிகள் என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளன.

குடியரசு நாள் விளையாட்டுப் போட்டியையும், பாரதி நாள் விளையாட்டுப் போட்டியையும் பள்ளிக் கல்வி இயக்ககம் பொறுப்பேற்று ஆண்டுதோறும் நடத்துகிறது.

தமிழ்நாட்டில் 378 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் அந்த ஒன்றியத்தைச் சேர்ந்த எல்லா மக்களும் போட்டியிடக்கூடிய விளையாட்டுப் போட்டிகள் நடத்த 'ஒன்றிய விளையாட்டுப் போட்டிகள்' என்னும் திட்டத்தின் கீழ் விளையாட்டுத்துறை உதவி வருகிறது.



## முதல்வர்-ஆளுநர் கேடயங்கள்

'தமிழ்நாடு முதல்வர் கேடயம்' 'தமிழ்நாடு ஆளுநர் கேடயம்' என்ற பெயர்களில் விளையாட்டில் வெற்றி பெற்ற சேம்பியன்களுக்கு வழங்கப்படும் சுழல் கேடயங்கள் எல்லா ஒன்றியங்களுக்கும் வழங்கப்படுகின்றன. இதுவரை 193 ஊராட்சி ஒன்றியங்கள் இந்தக் கேடயங்களைப் பெற்று விளையாட்டு வீரர்களுக்குச் சுழல் முறையில் வழங்கி வருகின்றன.

அரசு அலுவலகங்களில் பணியாற்றும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் அனைத்திந்திய அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு அரசு இதுவரையில் இதன் பல விளையாட்டுப் போட்டிகளைப்பொறுப்பேற்று நடத்தியுள்ளது. கிரிக்கெட் (1980), வாலிபால் (1981), தடகளம், பாட்மிண்டன் (இரண்டும் 1982), ஹாக்கி - டென்னிஸ் (இரண்டும் 1983), மேசைப்பந்து (1984), பளுதூக்குதல், வலுதூக்குதல் (காட்சி), உடற்கட்டு விளையாட்டுகள் (1985), நீச்சல் (1986), தடகளம் (1987) இப்படி பல விளையாட்டுகள் தமிழ்நாடு அரசால் அனைத்திந்திய அரசுப் பணியாளர்களுக்கு நடத்தப்பட்டன.

இந்த ஆண்டு கோயம்புத்தூரில் நடந்த தடகளப் போட்டியில் தமிழ்நாட்டு அரசுப் பணியாளர்கள் குழுவினர் வெற்றி பெற்றனர்.

விளையாட்டில் ஆர்வம் கொண்டுள்ள குழுக்கள், ஆங்காங்கே தோன்றி 'கிளப்புகள்' என்ற பெயரில் விளையாட்டு வீரர்களை உருவாக்கி வருகின்றன. அவற்றில் சிறந்த முறையில் பணியாற்றும் விளையாட்டுக் கிளப்புகள் கண்டறியப்பட்டு ஒவ்வொன்றுக்கும் ஆண்டுக்கு 500 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

உடல் உரம் மிக்க வீரர்கள் நாட்டுப்புறங்களில் இருக்கிறார்கள். அவர்களுக்கு விளையாட்டைச் சொல்லித் தந்து முன்னுக்குக் கொண்டு வந்தால் சிறந்த வீரர்கள் தோன்றுவார்கள். இந்த நோக்கத்தோடு தோற்றுவிக்கப்பட்டவைகள்தான் 'ஊரகவிளையாட்டு மையங்கள்'. இவை நாட்டுப்புற மக்களுக்கு நல்ல பொழுதுபோக்கு மையங்களாகவும் விளங்க முடியும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஊரக விளையாட்டு மையம் ஒன்றாவது இருக்க வேண்டும் என்பது அரசின் திட்டம். இப்போது தமிழ்நாட்டில் 378 ஒன்றியங்கள் இருக்கின்றன. ஆனால் 338 ஊரக விளையாட்டு மையங்கள்தான் இயங்கி வருகின்றன.

இந்த மையங்களில் விளையாட்டைச் சொல்லித் தருவதற்கென்று பக்கத்து உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் விளையாட்டு ஆசிரியர் அமர்த்தப்பட்டுள்ளார். அவருக்கு மதிப்பாண்மை ஊதியமாக மாதம் 50 ரூபாய் தரப்படுகிறது. மற்றும் அந்த மையத்திற்குவிளையாட்டுப் பொருள்கள் வாங்குவதற்காகவும் ஆண்டுக்கு அறுநூறு ரூபாய் தரப்படுகிறது.

## விருதுபெற்ற தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள்

**தேசிய இளைஞர் விருது —**

திரு ஏழுமலை, மணி என்.எஸ்.எஸ். தொண்டர் (ஆண்டு 1985)

**பத்மஸ்ரீ விருது —**

திரு வி. பாஸ்கரன், முன்னாள் இந்திய ஹாக்கிக்குழு காப்டன் (ஆண்டு 1980)

**அர்ஜுனா விருதுகள் —**

திரு ஏ ரமணராவ்- வாலிபால் - 1977

திரு டி.விசயராகவன் கூடைப்பந்து- 1977-78

திரு எம். தமிழ்ச் செல்வன்- பளுதூக்குதல் 1977-78

திரு ஏ. கருணாகரன் பளுதூக்குதல் - 1979

திரு ஞானசேகரன் விளையாட்டுப் போட்டிகள்-1980

திரு ரமேஷ் கிருஷ்ணன் டென்னிஸ்- 1981

திரு ஜி.இ. ஸ்ரீதரன் வாலிபால் - 1984

திரு டி. ராஜாராம் பூப்பந்தாட்டம் - 1984

திரு வி. ஆனந்த் செஸ் - 1985

திரு ஆனந்த் அமிர்தராஜ் டென்னிஸ் - 1985

ஊரக விளையாட்டு மையங்களில் விளையாட்டுப் பொருள்களை வைத்துப் பாதுகாக்க ஒரு கட்டடம் கட்டப்படுகிறது. அதன் மாடியில் படி இருக்கைகள் (காலரிகள்) கட்டப்படுகின்றன. அவற்றில் அமர்ந்து சுமார் 300 பேர் ஒரே சமயத்தில் விளையாட்டை நன்றாகப் பார்க்க முடியும். இது போன்ற கட்டடங்கள் ரூ. 35,000 செலவில் கட்டப்படுகின்றன. எனவே இவற்றைச்' சிக்கன விளையாட்டு அரங்கங்கள்' என்கிறோம். 17 சிற்றூர்களில் இந்த அரங்கங்கள் கட்டப்பட்டுள்ளன.

## இளைஞர் விடுதிகள்

வெளியூர்களுக்குப் பயணம் செய்யும் இளைஞர்கள் குறைந்த செலவில் தங்குவதற்காக 'இளைஞர் விடுதி'கள் உள்ளன. சென்னை அடையாறு பகுதியில் 46 படுக்கைகள் கொண்ட இளைஞர் விடுதி ஒன்று உள்ளது. இதில் மேலும் 50 பேர் தரையில் படுக்க வசதி உண்டு. இதன் கிளை விடுதியாகக் 'கொடைக்கானல்' மலை மீது ஒரு விடுதி உள்ளது. இதில் 30 படுக்கை வசதிகள் உண்டு. இதன் உறுப்பினர்களும், மாணவர்களும் இதில் தங்கினால் சென்னையில் ஐந்து ரூபாயும், கொடைக்கானலில் ஆறு ரூபாயும் நாள் ஒன்றுக்குக் கட்டணமாகத் தந்தால் போதும்; இடம்இருந்து மற்றவர்கள் தங்கினால்,முறையே ரூ. 8 ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும்.

கோயம்புத்தூர், திருச்சி, குற்றாலம், கடலூர், ஏலமலை, கல்வராயன்மலை ஆகிய இடங்களிலும் இளைஞர் விடுதிகள் கட்டப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நாட்டுப்புறங்களில் இருபதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் கூடி அவரவர் ஊருக்குத் வேண்டிய பொதுப் பணிகளைச் செய்யும் மன்றங்கள் உள்ளன. 'ஊரக இளைஞர் மையங்கள்' என்னும் இந்த அமைப்புகளுக்கு இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறை நிதி உதவி நல்குகிறது. மன்ற உறுப்பினர்கள் சீருடைக்காகவும் செய்திப் பலகைகள் எழுதுவதற்காகவும், ஒவ்வொரு மன்றத்திற்கும் ஆண்டுக்கு 880 ரூபாய் தரப்படுகிறது. இந்த உதவித் தொகையை இப்போது தமிழ் நாட்டில் 145 மையங்கள் பெறுகின்றன.

ஆண்டுக்கு ரூ. 2,800 உதவித் தொகை பெற்று எட்டு விழைபணி மையங்கள்—ஹாபி சென்டர்—தமிழ்நாட்டில் இயங்கிவருகின்றன.

மாநிலக் குடியரசு நாள் விளையாட்டுப் போட்டி, மாநிலப் பொங்கல் விளையாட்டுப்போட்டி ஆகியவற்றில் தடகளப் போட்டிகளில் தங்கப்பதக்கம் பெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் ஆண்டுக்கு ரூ. 600 விளையாட்டு ஊக்கத்தொகை— 'ஸ்காலர்ஷிப்' — வழங்கப்படுகிறது. இந்தப் போட்டிகளில் இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு ரூ. 400 இந்த முறையில் வழங்கப்படுகிறது. இந்தப் போட்டிகளிலும் பாரதியார் நாள் விளையாட்டுப் போட்டியிலும் அணி விளையாட்டுகளில் முதன்மை பெறும் அணி வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 600 விளையாட்டு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

பள்ளிகளில் விளையாட்டுத் தளங்களைப் பன்னாட்டுப் போட்டித் தரமுள்ளவைகளாக அமைக்கவும், ஒளி வெள்ள விளக்குகள் அமைக்கவும் மைய அரசு உதவித்தொகை நல்குகிறது. அவற்றை முறையாகக் கோரி, தகுதி வாய்ந்த பள்ளித் திடல்களைச் செப்பனிட இத்துறை உதவுகிறது.

## விளையாட்டுப் புத்தகம்

விளையாட்டுத் தொடர்பான ஆய்வு நூல்கள் பல தோன்ற வேண்டும். விளையாட்டு நுட்பங்களை விளக்கும் படங்களுடன் விளையாட்டு நூல்கள் தமிழில் தோன்ற வேண்டும்; ஆங்கிலத்தில் இருப்பினும் ஏற்கலாம். தமிழ் நாட்டவர் பயன் பெறும் வகையில் அமைய வேண்டும். இத்தகைய நூல்கள் தமிழ்நாட்டு அறிஞர்களால் எழுதப்படுமானால் அவற்றை வெளியிடத் தமிழ்நாடு அரசு ரூ. 5000-க்கு மிகாமல் உதவித்தொகை வழங்கும்.

விளையாட்டுத்துறையில் ஆராய்ச்சிப் படிப்பில் ஈடுபட்டிருக்கும் அறிஞர்களுக்கு ஆய்வுப்பொருளின் தகுதி அறிந்து உதவித்தொகை வழங்கப்படுகிறது. மாதம் ரூ. 450 வீதம் மூன்றாண்டுக் காலத்திற்கு வழங்கப்படும் இந்த உதவித்தொகையை இப்போது இரண்டு ஆய்வாளர்கள் பெற்று வருகின்றனர்.

விளையாட்டு நுட்பங்களை விளக்கும் திரைப்படங்கள் இத்துறையினால்காட்டப்படுகின்றன. தாண்டுதல், எறிதல், ஓடுதல், பாட்மிண்டன், கூடைப்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ் (சீருடற்பயிற்சி), மற்போர், கால்பந்து, வாலிபால், நீச்சல் முதலான விளையாட்டுகளையும், உடற்பயிற்சி முறைகளையும், மலையேற்றம், வானத்தில் பறத்தல் முதலான தீரச் செயல்களையும்விளக்கும் திரைப் படங்கள் 50 இத்துறையிடம் உள்ளன. அவை கல்வி நிறுவனங்களிலும், விளையாட்டு நிறுவனங்களிலும் இலவசமாகப் போட்டுக் காட்டப்படுகின்றன. தமிழ்நாடு அரசு நடத்திய சிறந்த விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பான வீடியோ படங்களும் போட்டுக் காட்டப்படுகின்றன.

'தமிழர் விளையாட்டு மடல்' என்னும் மாத இதழ் தமிழ்நாடு அரசால் ஐந்து ஆண்டுக் காலமாக வெளியிடப்படுகிறது.

துவக்கப்பள்ளிகளில் விளையாட்டுக்கெனத் தனியே ஆசிரியர் இல்லை. இந்தக் குறையைப் போக்கத் துவக்கப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு—பள்ளிக்கு ஒருவர் விளையாட்டுப் பயிற்சி தரப்படுகிறது. அந்தப் பள்ளிக்கு விளையாட்டுப் பொருள்கள் வாங்க ஆண்டுக்கு ரூ. 225- ம் அதனைப் பயிற்று



விக்கும் ஆசிரியருக்குச் சிறப்பு ஊதியமாக மாதம் இருபது ரூபாய் பதினொரு மாதங்களுக்கும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு 21 விளையாட்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அதன் தலைநகரங்களில் விளையாட்டு வளர்ச்சிப் பணியைத் தீவிரமாகச் செய்து வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம்120-க்கு மேல் என். ஐ. எஸ். பயிற்சி பெற்ற விளையாட்டுப் பயிற்றுநர்கள் விளையாட்டு நுட்பங்களைச் சொல்லித் தருகின்றனர்.

இந்த ஆண்டு தேசியப் போட்டியில் உயரம் தாண்டுவதில் தங்கப் பதக்கம் பெற்ற தமிழ்நாட்டுப் பெண் செல்வி ஏஞ்சலா வின்சி நெல்லை மாவட்டத்து விளையாட்டுப் பயிற்றுநரால் உருவாக்கப்பட்டவர் ஆவார்.

34 மாநில விளையாட்டுக் கழகங்கள் தமிழ்நாடு அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றின் வீரர்கள் தேசியப் போட்டிகளிலும் பன்னாட்டுப் போட்டிகளிலும் பங்கு கொள்ளவும், அவர்களுக்குப் பயிற்சி முகாம்கள் நடத்தவும், தென் மண்டல, தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் இந்த மாநில விளையாட்டுச் சங்கங்களுக்குத் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக்கழகம் நிதி உதவி தருகிறது. இந்த வகையில் ஆண்டுக்கு ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேல் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆண், பெண் அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய விளையாட்டுப் போட்டி ஒன்று இக்கழகத்தால் நடத்தப்படுகிறது. இதற்கு 'மாநிலப் பொங்கல் விளையாட்டுப் போட்டி' என்று பெயர்.

பல பள்ளிகள் ஒன்று சேர்ந்து 'லீக்' முறையில் அணி விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் இந்தக் கழகம் தன் கீழ் இயங்கும் மாவட்டக் கிளைகளின் மூலம் உதவுகிறது.

பல கிளப்புகள் கூடி லீக் போட்டிகள் நடத்துவதற்கும் இந்தத் தமிழ்நாடு அரசுக் கழகம் உதவுகிறது.

திரைப்பட அரங்கிற்குச் சென்றால் திரைப்படம் பார்க்கலாம். அதுபோல விளையாட்டு அரங்கிற்குச் சென்றால் விளையாட்டுப் போட்டியைப் பார்க்கலாம். இந்த நிலை வரும்படி 'ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விளையாட்டுப் போட்டி' என்னும் திட்டம்



செயல்படுத்தப்படுகிறது. பல்வேறு விளையாட்டுத் திடல்களில் மாற்று முறையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## அண்ணா பிறந்தநாள் போட்டி

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டெம்பர் 15-ஆம் நாளன்று காலை சரியாக ஏழு மணிக்குத் தமிழ்நாட்டிலுள்ள 21 மாவட்டத் தலைநகரங்களில் கொடி அசைக்கப்படும். 16 வயதுக்கு உட்பட்ட மாணவ மாணவிகளின் மிதிவண்டி சாலை ஓட்டப் போட்டி துவங்கும். வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். இது 'அண்ணா பிறந்த நாள் மிதி வண்டிப் போட்டி' எனப்படும். இதில் 7 வயது முதல் 70 வயது வரை எல்லாரும் ஓடலாம். ஓடுபவர்கள் ஆளுக்கு ஒருரூபாய் கொடுக்க வேண்டும். ஓடி முடித்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும். அவர்கள் தந்த நிதி, விளையாட்டு வீரர்களின் நலனைப் பேணவும், விளையாட்டுத் திடல்கள் உருவாக்கவும் பயன்படுத்தப்படும். இப்படி நடத்தப்படுவதுதான் 'இராசசேகரன் நினைவு ஓட்டம்'.

தமிழ்நாட்டில் இதுவரையில் சென்னை, மதுரை, திருச்சி, நெல்லை, கோவை, வேலூர் ஆகிய ஆறு இடங்களில் இந்த விளையாட்டு ஓட்டம் நடத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊரிலும் பல்லாயிரக்கணக்கில் திரள் திரளாக ஓடினர்.

## பெண்களுக்கான போட்டி

தேசிய அளவில் பெண்களுக்கென்று தனியே விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு அரசு பத்தாவது பெண்கள்தேசிய வாகையப் போட்டியைக் கோயம்புத்தூரில் நடத்திக் குழு வாகையமும் பெற்றது. மற்றும் ஆண்டுதோறும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இந்தப்போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி தந்து தேசியப் போட்டிக்கு அரசுச் செலவில் அனுப்பி வைக்கிறது.

ஊரக விளையாட்டுப் போட்டிகள் 16 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு, நாட்டுப்புறச் சிறுவர் சிறுமியர்களுக்கு தேசிய அளவில் நான்கு தொகுதிகளாக நடைபெறுகின்றன. நாட்டுப்புறச் சிறுவர் சிறுமியர்களுக்குப் பயிற்சி தந்து இந்தக் கழகம் அவர்களைத் தேசியப் போட்டிகளுக்கு அனுப்பி வைக்கிறது. அண்மையில் திருச்சியில் இத்தகைய போட்டி ஒன்றைத் தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகம் ஏற்று நடத்தியுள்ளது.

பன்னாட்டுப் போட்டிகளிலும் தேசியப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற தமிழ்நாட்டு வீரர்களைப் பாராட்டி விருதுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற ஹாக்கி வீரன் திரு பாஸ்கரனுக்கு ரூ. 15,000 தொகை விருதும், 1980-ஆம் ஆண்டு ரூ. 50,000 மதிப்புள்ள அழகான வீடும் விருதுகளாக வழங்கப்பட்டன. மற்றும் ரூ. 10,000, 5,000 3,000, 2,000, 1,000, 500, 250 என்று தகுதிக்கேற்பத் தேசியப் போட்டியில் இரண்டாம் நிலை பெற்றவர்கள் வரையில் விருதுத் தொகைகள் வழங்கப்படுகின்றன.

வறுமையால் நலிவுற்றிருக்கும் சிறந்த விளையாட்டு வீரர்கள் 60 பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியம் மாதம் ரூ. 75. இந்தத் தொகையைக் கூடுதலாக்கி வழங்கவும், அதிகம் பேருக்கு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மற்றும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள பால்க் கடலிடுக்கை நீந்திக் கடக்கும் போட்டி 1980-ல் நடத்தப்பட்டதும், 'விளையாட்டு உதவி' என்ற பெயரில் ஓடியவர்கள் தந்த நிதி உதவியோடு சேர்த்து 8,00,000 ரூபாய் இந்திய விளையாட்டு உரிமத்திடம், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர், எம். ஜி. ஆர் அவர்கள் இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களை விட அதிகத் தொகையாக வழங்கியதும், தாண்டுதல், ஓடுதல், எறிதல் ( JRT ) கிளப்புகள் பள்ளிகளில் தோற்றுவித்திருப்பதும் இயக்கத்தில் விளையாட்டு நூலகம் அமைத்துப் பயன்படுத்தப்படுவதும் போன்ற பற்பல திட்டங்களைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்லூரிக் கல்வி வளர்ச்சியும் சாதனையும்





தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வியின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தையும், கல்லூரிக் கல்வி விரிவுபடுத்தலையும் நோக்கமாகக் கொண்டு, பொதுக் கல்வித் துறையிலிருந்து 1965ஆம் ஆண்டு அக்டோபரில் கல்லூரிக் கல்வி இயக்ககம் உருவாக்கப்பட்டது. கல்லூரிக் கல்வி இயக்ககம் தனியாக உருவாக்கபபட்ட பின்னர் இத்துறை வேகமாக முன்னேறி வளர்ச்சியடைந்துள்ளது.

தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள், கீழ்த்திசை மொழிக் கல்லூரிகள், உடற்கல்வியியல் கல்லூரிகள், சமூகப் பணி கல்வி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. கடந்த பத்தாண்டுகளில் இத்துறையின் கீழ் இயங்கும் கல்லூரிகளின் எண்ணிககை, அதில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஊக்கமளிக்கும் வகையில் உள்ளன. இக்கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பலகலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகங்களின் இசைவு பெற்றுச் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளாகக் கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகாக்கவில்லை. ஏனெனில் கலைக் கல்லூரிகள் புதிதாகத் துவங்கப்படமாட்டாது என்பது அரசின் கொள்கையாகும். தமிழ் நாட்டில் உள்ள ஆயிரத்திற்கு மேற்பட்ட மேல் நிலைப் பள்ளிகளில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் +2 வகுப்பில் வெற்றி பெற்ற மாணவர்கள் கல்லூரிகளில் சேர்வதற்கு வசதியாகச் சொந்த நிதியில் கல்லூரி துவக்க விரும்பும் தனியாரகளுக்கு அரசு தற்போது ஊக்கமளித்து வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழகத்தில் 11 சுய நிதிக் கல்லூரிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. பொதுவாகப் புதிய கல்லூரிகளைத் துவக்குவது இல்லை என்று அரசு முடிவு எடுத்திருந்தாலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்ட வகுப்புகளில் மாணவர்களைச் சேர்ப்பதில்லை என்று முடிவு எடுத்ததின் விளைவாக சிதம்பரத்தில் அரசினர் கலைக் கல்லூரி ஒன்று 1982-83 ஆண்டு முதல் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**தன்னாட்சிக் கல்லூரிகள்:** இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் முதன் முதலாக பல்கலைக் கழக மான்யக்குழுவின் ஆலோசனைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சில தனியார் கல்லூரிகளுக்கு 1979-80 முதல் தன்னாட்சி வழங்கப்பட்டது. தன்னாட்சி வழங்கப்பட்ட கல்லூரிகள் பாடதிட்டங்களை வகுத்துக்கொள்வதற்கும், தேர்வுகளை நடத்துவதற்கும் உரிமை பெற்றுள்ளன. தன்னாட்சிக் கல்லூரி ஒவ்வொன்றுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சம் ரூபாய் வீதம் பல்கலைக் கழக மான்யக் குழு அளித்து வந்த நிதியுதவி ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**அஞ்சல் வழிக் கல்வி:** அஞ்சல் வழிக் கல்வி மூலமாக ஆண்டொன்றுக்குச் சுமார் 2 லட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். சென்னை, மதுரை, காமராசர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் அஞ்சல் வழிக் கல்வியை வழங்கி வருகின்றன.

கல்லூரிகளில் மாணவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதில் அரசு அதிக கவனம் செலுத்தி வந்துள்ளது. குடிநீர் வசதி, விடுதிகள் கட்டுதல், விளையாட்டு மைதானங்களைச் சீர் செய்தல் போன்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கி மாணவர்களுக்குரிய வசதிகளை விரிவுபடுத்தியிருக்கிறது. முக்கிய அரசுக் கல்லூரிகளில் நூலகங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்களை விரிவுபடுத்துவதற்கும் ஆசிரியர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும் கடந்த பத்து ஆண்டுகளில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக மான்யக் குழு சம்பள விகிதங்கள் 1.1.1974 முதல் அமுலாகி 1.1.1977 முதல் வழங்கப்பட்டன. மூன்றாண்டு அல்லது அதற்கு மேல் பணி செய்த விளக்குநர்கள் (Demonstrators) பயிற்றுநர்கள் (Tutors) அவரவர் துறையில் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்றிருந்தவர்களுக்கு 1.12.1977 முதல் துணைப் பேராசிரியர் பதவி அளிக்கப்படுகிறது. 1.12.1977க்குப் பின் இந்தச் சலுகை அவரவர் உரிய கல்வித் தகுதியை அடையும் நாள் முதல் அளிக்கப்பட்டு வருகிறது. 2263 விளக்குநர்-பயிற்றுநர்கள் இத்திட்டத்தினால் இதுவரை பயனடைந்துள்ளனர். 10 ஆண்டுகள் அதற்கு மேலும் பணிசெய்திருந்த துணைப் பேராசிரியர்கள் 1.4.1980 முதல் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்படுகிறார்கள். இதுவரையில் 4357 உதவிப் பேராசிரியர்கள் இத்திட்டத்தின்படி பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

**நேரடி சம்பளம் வழங்கும் திட்டம்:**

தனியார் கல்லூரிகளில் பணி புரியும் ஆசிரியாகள் மற்றும் இதர பணியாளர்கள் மாதந்தோறும் முழுமையாகவும், குறித்த காலத்திலும் ஊதியம் கிடைக்க 1.4.1980 முதல் நேரடி சம்பளப் பட்டுவாடா திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 5 மண்டல அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வலுவலகங்கள் தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கு நேரடி சம்பளப்பட்டுவாடா செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டு துணை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. ஓய்வு காலப் பலன்கள், அரசுக் கல்லூரி பணியாளர்களுக்குள்ள உரிய விகிதம் போலவே முழுமையாகத் தனியார் கல்லூரி ஊழியர்களுக்கும் வழங்கபபடுகிறது. அரசு ஊழியர்களுக்கு உள்ளது போலவே விடுப்புச் சலுகைகள் தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

கல்லூரி ஆசிரியர்கள் கல்வித்தர உயர்வுக்காக 821 ஆசிரியர்கள் எம்.பில்., பிஎச்டி., போன்ற மேற்படிப்புகளுக்குச் சம்பளத்துடன் அனுப்பப்பட்டுள்ளனர். அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக் கூட வசதிகள் பெருக்கப்படுகின்றன. இதற்காக அரசுக் கல்லூரிகளுக்கு இதுவரை ரூ. 35 லட்சம் தனி நிதி வழங்கப்பட்டுள்ளது. கல்லூரி ஆசிரியர்கள், பிற பணியாளர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரின் குறைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்காகக் கல்லூரிகளில் ஆசிரியர் மாணவாகள் மற்றும் ஆசிரியரல்லாத நலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கலைக் கல்லூரிகளில் பாடத்திட்டங்களை மாற்றியமைத்து மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெறும் வகையில் மாற்றம் செய்து பல்கலைக் கழகங்கள் முயற்சி செய்து வருகின்றன. வேலை வாய்ப்பை அளிக்கும் வகையில் புதிய பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குப் பல்கலைக் கழக மான்யக் குழுவும் நிதி உதவி அளித்து வருகின்றது. இந்த வகையில் கலைக் கல்லூரிகளில் அடுத்த சில ஆண்டுகளில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புதிய வகுப்புகளைத் துவக்குவதற்கு வசதிகள் செய்து தரப்படும். அஞ்சல் வழிக் கல்வி அடுத்த சில ஆண்டுகளில் பெரிய அளவில் விரிவு அடைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற வசதிகளை அடிப்படையாகக் கொண்டு அஞ்சல் வழிக் கல்வி செயல்படுத்தப்படும். இத்தகைய மாற்றங்களின் அடிப்படையில் தமிழ்நாட்டில் உயர் கல்வி பயில விரும்பும் ஒவ்வொருவருக்கும் வாய்ப்புகள் அளிக்கப்படும். பிற்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் உயர்வதற்கு நிதி உதவி அளித்து அவர்களுக்கும் உயர் கல்வி பெறுவதற்கு வசதிகள் செய்து தரப்படும்.

**தமிழ் வழி பயிலும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு:**

கல்லூரிகளில் தமிழ் பயிற்றுமொழியை ஊக்குவிக்கும் வகையில் பட்ட வகுப்புகளில் தமிழ் மொழிமூலம் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 180 வீதம் ஊக்கத் தொகை கல்வி ஆண்டின் துவக்கத்திலேயே வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாணவர்கள் பயனடைந்தனர்.

**மாணவர்களுக்குப் போக்குவரத்துச் சலுகைகள்:**

மாணவர்களுக்குப் பேருந்துக் கட்டணச் சலுகை அளிப்பதன் பொருட்டு ஏற்படும் இழப்புக்காகப் பல்வேறு போக்குவரத்துத் துறை கழகங்களுக்கு ரூ. 83.94 லட்சம் 1986-87ல் (இறுதி திருத்திய மறுமதிப்பின்படி) ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**புதிய கல்வி கலந்துரையாடல்:** மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தும்பொருட்டு, தமிழக அரசு நான்கு மண்டல அளவிலான கருத்தரங்குகளை நடத்தியது. சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இக்கருத்தரங்குகள் நடத்தப் பெற்றன. இக்கருத்தரங்குகளில் மாண்புமிகு கல்வி அமைச்சர், துணை வேந்தர்கள், கல்லூரிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர்கள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு புதிய கல்விக்கொள்கை பற்றிய தமது மேலான கருத்துக்களைத் தெரிவித்தனர். இக்கருத்துக்கள் கல்லூரிக் கல்வி இயக்குநரால் தொகுக்கப்பட்டு, மத்திய, மாநில அரசுகளுக்கு ஒரு விரிவான அறிக்கையாக அளிக்கப்பட்டுள்ளது. இக்கருத்துக்கள் புதிய கல்விக் கொள்கை அடிப்படையில் உயர் கல்வியை வளர்க்க உதவி செய்யும் எனக் கருதப்படுகிறது.

# சிறுகுடும்ப நெறி பரவ சிறப்பான திட்டங்கள்

மக்கள் மனமுவந்து தன்னிச்சையாக ஏற்கும் திட்டமாகத் தேசியக் குடும்பநலத் திட்டம தமிழகத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற இந்திய மாநிலங்களோடு ஒப்பிடுகையில், பலதரப்பட்ட மக்களின் நல்ல ஒத்துழைப்பைப் பெற்று, தமிழ்நாடு குடும்பநலத் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றி, முன்மாதிரியாக இருந்து வருகிறது.

1981ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 4.84 கோடி ஆகும். அதே கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 26.1 என்றும் இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 10.9 என்றும் உள்ளதாகத் தெரிகிறது. அதே நேரத்தில் இந்தியாவின் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 33.3 என்றும் இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 12.5 என்றும் இருக்கிறது. இந்த நூற்றாண்டின் இறுதி வாக்கில், நிகர மக்கள் தொகைப்பெருக்க விகிதத்தை ஒன்றாக ஆக்க வேண்டுமென்பது தேசிய நல் வாழ்வுக் கொள்கையின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் நிகர மக்கள் தொகைப் பெருக்க விகிதத்தை 1991-92ஆம் ஆண்டுக்குள்ளாகவே ஒன்று எனக் குறைக்க வேண்டுமென்பது முக்கியக் குறிக்கோளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தக் குறிக்கோளை அடைவதற்குத் தமிழகத்தில் பிறப்பு விகிதத்தையும், இறப்பு விகிதத்தையும் முறையே ஆயிரத்துக்கு 21 என்றும், 9 என்றும் குறைத்தாக வேண்டும்.

சிசு மரண விகிதத்தை, உயிரோடு பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் 60 எனக் குறைக்க வேண்டும். குடும்பநலத் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட தம்பதிகளின் விகிதம் 60 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டும்.

1956 ஆம் ஆண்டில் குடும்பநலத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே குடும்பநலத் திட்டச் சாதனையில் தமிழகம் மிகச் சிறந்த மாநிலமாக-முன்னணியில் உள்ள மாநிலமாக-திகழ்ந்து வந்திருக்கிறது. உதாரணமாக 1956 ஆம் ஆண்டுக்கும் 1978 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 27.8. இலட்சம் குடும்பநல நிரந்தர சிகிச்சைகள் தமிழ்நாட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அதே காலக் கட்டத்தில் மிகப் பெரிய மாநிலங்களான உத்திரப்பிரதேசம், பீகார். ஆகியவை முறையே 22.5 இலட்சம் மற்றும் 18.4 இலட்சம் குடும்பநலத் திட்ட நிரந்தர சிகிச்சைகளையே செய்து முடித்திருக்கின்றன. திட்டச் சாதனை ஏற்படுத்துவதில் அண்மைக் காலத்திலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

1980-81 ஆம் ஆண்டுக்கும், 1985-86 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், தமிழ்நாட்டில் 21.3 இலட்சம் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த காலக் கட்டத்தில், உத்தரப்பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களில் முறையே 19.1 இலட்சம் மற்றும் 10.6 இலட்சம் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மிகச்சிறந்த சாதனையின் காரணமாக 1971-81 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பத்தாண்டுகளில், இந்திய நாட்டிலேயே மிக மிகக் குறைந்த மக்கள் தொகை வளர்ச்சியைத் தமிழகம் பெற்றுள்ளது.

தந்தைமார்கள் குடும்பநல நிரந்தரச் சிகிச்சை ஏற்பது, தாய்மார்கள் குடும்பநல நிரந்தர சிகிச்சை ஏற்பது ஆகியவற்றில் கடந்த பத்தாண்டுகளில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. 1776-77ஆம் ஆண்டில் குடும்பநல நிரந்தரச் சிகிச்சை ஏற்ற தந்தைமார்கள் 67.1 சதவிகிதம் என்றிருக்க, 1985-86ஆம் ஆண்டில் இச்சிகிச்சை ஏற்ற தந்தைமார்கள் 10.7 சதவிகிதத்தினராகவே உள்ளனர்.



பெண் குடும்பநல நிரந்தரச் சிகிச்சையின் செல்வாக்கு உயர்ந்து வருகிற அதே நேரத்தில், 'லேப்ராஸ்கோபிக்' வகையிலான குடும்ப நல நிரந்தரச் சிகிச்சை தாய்மார்களிடையே மிக அதிகமான செல்வாக்கைப் பெற்று வருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் நடைபெற்ற மொத்த பெண் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகளில் 55.58 சதவிகிதம் 'லேப்ராஸ்கோப்' முறையிலான குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் என்பதே, வளர்ந்து வரும் அதன் செல்வாக்கை விளக்குவதாக உள்ளது.

தமிழகத்தில் பல ஆண்டுகளாக மிகப் பெரிய செல்வாக்குப் பெற்று விளங்கியது குடும்பநல நிரந்தரச் சிகிச்சை என்றபோதிலும், கருத்தடை வளையம், நிரோத், உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகள் ஆகிய கருத்தடை முறைகளை ஏற்றுச் செயல்படுத்துவோரின் தொகையில் ஏற்றம் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்குக் காரணம், குழந்தைகளுக்கு இடையே தக்க இடைவெளி தரவேண்டியதன் அவசியம் குறித்தும், தற்காலிகமாகக் குடும்பநல முறைகள் குறித்தும் மக்களிடையே கருத்துக்களைப் பரப்புவதற்கான குடும்பநலத் துறை இயக்ககம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் விளைவே எனலாம்.

பல்வேறு குடும்பநலத் திட்ட முறைகளை மக்கள் கடைப்பிடித்ததன் காரணமாக ஏராளமான பிறப்புகள் தவிர்க்கப்பட்டன. தமிழ்நாட்டில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து சுமார் 61 இலட்சம் பிறப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட காலத்தில் பிறப்பு விகிதங்கள் குறைக்கப்பட்டதன் அடிப்படையில, குடும்பநலத்திட்டம ஈட்டித் தந்த மொத்த வெற்றியை நிர்ணயிக்கலாம். இந்தியாவின் மொத்த பிறப்பு விகிதம் 33 என ஒரே நிலையில் இருக்க, தமிழ்நாட்டினுடைய பிறப்பு விகிதம் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வந்திருக்கிறது. தமிழ்நாட்டில குடும்ப நலத் திட்டம் மிக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதற்கு இது எடுத்துக் காட்டாக உள்ளது.

**தன்னலம் தேவைதான்; அது பொதுநலமாகப் பரிணமிக்க வேண்டும்...**

**புறத்தில் உள்ள சட்டம் வெற்றி பெற வேண்டுமாயின் மக்களின் அகநிலை, அதற்கு முழுமையான ஆதரவை அளிக்க வேண்டும்.**

**—மாண்புமிகு முதல்வர்**
**டாக்டர் எம்.ஜி.ஆர்**

தற்போது தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் ஐந்துமுனை உத்தியின் அடிப்படையில் சீரான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவை—

1. குடும்ப நலத் திட்டத்தின் கீழ் மக்கள் கல்வி மற்றும் விளம்பரப் பணிகள் ஆற்றுதல், 2. களப் பணியாளர்களின் மூலம் விரிவாக்கக் கல்வி அளித்தல், 3. கருத்தடை முறைகளைப் பின்பற்றுவதற்கான சேவைப் பணிகளை நல்குதல், 4. பின் கவனிப்பு, 5. தாய்சேய் நலம்.

தகுதி வாய்ந்த தம்பதிகளைத் திட்டத்திற்கு ஆதரவாக ஊக்குவித்து 'சிறு குடும்ப நெறி' ஏற்பவர்களாக மாற்றுவதில் மக்கள் கல்வி மற்றும் குடும்ப நல விளம்பரத் திட்டம் மிக முக்கியமான பங்குபணிகளை ஆற்றி வருகிறது. சமுதாயத்தின் குறிப்பிட்ட குழுவினர்களுக்கான குடும்பநலச் செய்திகள் தயாரிக்கப்பட்டு முறையாகவும் வெற்றிகரமாகவும் விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன. மாதச் சம்பளம் பெறும் குழுவில் அடங்கிய தாய்மார்கள், தங்களுடைய 25வது வயதிலேயே பிள்ளைப்பேற்றை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் மக்கள் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குடும்பநலத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மக்கள் கல்வித் திட்டம், மகளிர் மன்றங்களை அமைப்பதையும், இளைஞர் மன்றங்களை உருவாக்குவதையும் தன்னுடைய மிக முக்கியமான கூறுகளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. சுமார் 160 இளைஞர் மன்றங்கள் தமிழ்நாட்டில்ஏற்படுத்தப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற குடும்பநலத் தலைவர்களும், 18 வயதும் அதற்கு மேற்பட்ட இளைய சமுதாயத்தினரும், இந்த இளைஞர் மன்றங்களில் உறுப்பினர்களாகத் தகுதி படைத்தவர்களாவர்.

விரிவாக்கக் கல்வியைத் தொடர்ந்து மக்களிடையே செய்திகள் (Mass Communication) பரப்பப்படுகின்றன. குடும்பநலத் துறையைச் சார்ந்த களப்பணியாளர்கள் தகுதி வாய்ந்த தம்

**குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட வருடாந்திர இலக்கினைத் தமிழகம் 1983-84 லிருந்து 1986-87 வரையில் தொடர்ச்சியாக நூறு விழுக்காட்டுக்கும் மேலாகவே நிறைவேற்றியுள்ளது.**

**1984-85-லிருந்து தொடர்ச்சியாக இரண்டு ஆண்டு தமிழகம் மைய அரசிடமிருந்து ரூ.2·5 கோடி பரிசாகப் பெற்றுள்ளது.**

**மைய அரசு 1985-86-ல் நிகழ்த்திய பத்து வாரச் சிறப்பு முகாம்களில், தமிழகம் திறம்படச் செயல்பட்டதற்கு ரூ. 4.5 லட்சம் பரிசாகக் கிட்டியது.**



பதிகளை நேருககு நேர் சந்திதது விரிவாக்கக் கல்வி அளிககிறார்கள். இதன் பொருட்டு ஒவ்வொரு நகர்ப்புற குடும்பநலத் திட்ட நிலையததிலும, கிராமப்புற குடும்பநலத் துட்ட நிலையத்திலும் தகுதி வாய்ந்த தம்பதியர் பதிவேடுகள்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பதிவேடுகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் சரிசெய்யப் படுகின்றன.

தகுதி வாய்ந்த தம்பதியர்களைத் திட்டத்திற்கு ஆதரவாக ஊக்குவித்து, 'சிறு குடுமப நெறி'யை ஏற்க அவர்களிடையே மனப்பூர்வமான ஒப்புதலை உருவாக்கியவுடன், அவரவர் தங்களுக்குப் பொருந்தக்கூடிய கருததடை முறைகளைப் பின்பற்றுவதற்கு வசதியாகத் தேவையான சேவை வசதிகள் அனைத்தும் செய்து தரப்படுகின்றன. தற்போது குடும்பநல நிரந்தரச் சிகிச்சை செய்வதற்குரிய வசதிகள் அநேகமாக எலலா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும் இருக்கின்றன. இதோடு உள்ளாடசி நிறுவனங்களான மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் தன்னியக்க நிறுவனங்கள் ஆகியவை குடும்ப நல நிரந்தரச் சிகிச்சை செய்வதற்கான வசதிகளை நல்கி வருகின்றன. இதற்காக அவை அரசிடமிருந்து மானியம் பெறுகின்றன.

திட்டத்தை ஏற்பவருக்குச் சரியான பின் கவனிப்புப் பணிகளை நல்கினால்தான் அவர் முழுமையாக மனநிறைவு அடைகிறார். குடும்பநல நிரந்தரச் சிகிச்சை செய்துகொள்பவர்கள், கருத்தடை வளையம் பொருத்திக் கொள்பவர்கள் மற்றும் உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்துவோர் ஆகியோரிடையே குறிப்பிட்ட கருத்தடை முறையைப் பின்பற்றியதால் ஏதாவது பின்விளைவுகள் உண்டாகியிருக்கிறதா என்பதைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதன் பொருட்டு, மருத்துவ-மற்றும் துணை மருத்துவ ஊழியர்கள் தொடர்ந்து பின் கவனிப்புப் பணிகளைச் செய்ய வேண்டியது மிக மிக இன்றியமையாததாகும். இந்தப் பணி, திட்டத்தை ஏற்பவர்கள், அவர்களுடைய உறவினர்கள் மற்றும் அவர்களுடைய அக்கம் பக்கத்தில் வாழ்பவர்கள் ஆகியோரது உள்ளங்களில் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

தகுதி வாய்ந்த தம்பதிகளை 'சிறு குடும்ப நெறி' ஏற்குமாறு ஊககப்படுத்த, பிறந்த ஒவவொரு குழந்தையும் நிச்சயமாக உயிர் வாழும் நலமிக்க வாழ்வை நடத்தும் என்ற உறுதிப்பாட்டை நாம் அவர்களுக்குத தந்தாக வேண்டும். வியாதியால் குழந்தைபாதிக்கப்பட்டு, அதன்மூலம் அக் குழந்தையை இழக்க நேரிடும் எனற அச்சத்தை அகற்றி விட்டால், குடும்பத்தைச் சிறியதாக அமைத்துக் கொள்ளப் பெற்றோர்கள் விருப்பம் தெரிவிக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டத்தின் அங்கமாகக் குழந்தை நல்வாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான வசதிகள் எல்லா அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் இருக்கின்றன.

மக்கள் தொகையில் 40 சத விகிதத்திற்கும் அதிகமான குடிசை வாழ் மக்களைக் கொண்ட நகர்ப்புறப் பகுதிகளில், குடிசை வாழ் மக்களின் வீடுகளிலேயே நல்வாழ்வு, குடும்பநலத் திட்டச் சேவைகள் கிடைக்குமாறு செய்ய வேண்டி, குடும்பநல, தாய்-சேய் நல முனைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெரிய நகரங்களிலும் மற்றும் நகராட்சிகளிலும் குடும்பநலத் திட்டத்தை மிகச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக, இத்திட்டம் 'சிறு குடும்ப நெறி'யைப் பரப்பும்.

இந்த ஐந்து முனை உத்தியின் வாயிலாக, தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம் மிக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வகையில் பல மாநிலங்களுக்குத் தமிழ்நாடு முன்மாதிரியாக இருக்கிறது.

**1956-ஆம் ஆண்டில் குடும்பநலத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே குடும்ப நலத் திட்டச் சாதனையில் தமிழகம் மிகச்சிறந்த மாநிலமாக-முன்னணியில் உள்ள மாநிலமாகத் திகழ்ந்து வந்திருக்கிறது.**

**1980-81-ஆம் ஆண்டுக்கும், 1985-86-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், தமிழ்நாட்டில் 21.3 இலட்சம் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அதே கால கட்டத்தில், உத்தரப்பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களில் முறையே 19.1 இலட்சம் மற்றும் 16.6 இலட்சம் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகளே செய்யப்பட்டுள்ளன. இந்த மிகச் சிறந்த சாதனையின் காரணமாக 1971-81-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பத்தாண்டுகளில், இந்திய நாட்டிலேயே மிகக் குறைந்த மக்கள் தொகை வளர்ச்சியைத் தமிழகம் பெற்றுள்ளது.**

**பல்வேறு குடும்பநலத் திட்ட முறைகளை மக்கள் கடைப்பிடித்ததன் காரணமாக ஏராளமான பிறப்புகள் தவிர்க்கப்பட்டன. தமிழ்நாட்டில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து சுமார் 61 இலட்சம் பிறப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன.**



# ஊட்டச்சத்து வழங்கினோம்!



மனிதனின் உடல் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது ஊட்டச்சத்து நிறைந்த உணவாகும். பள்ளிப் பருவமடையாக் குழந்தைகளின் இறப்பில் 90 சதவீதம் 3 வயதுக்குட்பட்டவர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் 75 சதவீதம் இறப்புக்களில் ஊட்டச் சத்துப் பற்றாக்குறையே முக்கிய காரணமாக உள்ளது.

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் முதன் முதலாக மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டி வட்டாரத்தில் சோதனை முறையில் 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் செயல்படத் தொடங்கியது. படிப்படியாக இத்திட்டம் மதுரை அண்ணா, பசும்பொன் முத்து ராமலிங்கம், காமராசர், இராம நாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, வடஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய ஒன்பது மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. 30.6.1986 அன்று முடிவு அடைய வேண்டிய இத்திட்டத்திற்கான காலம் உலக வங்கியின் உதவியால் 31.3.1988 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த ஒதுக்கீடு ரூ. 55.78 கோடியாகும். இத்திட்டத்தின் குறிக்கோள், மக்கள் நலம், ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்த அரசு எடுத்து வரும் முயற்சிகளை மேலும் திறன் படைத்ததாகச் செய்து அதன் மூலம் பயனை அதிகப் படுத்துவதாகும்.

ஊட்டச்சத்துக் குறைவினால் அதிகமாகப் பாதிப்பு ஏற்படக் கூடிய 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையிலான குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைவினைப் போக்குவதன் மூலம் இத்திட்டத்தின் குறிக்கோளை அடைய முதல் முறையாக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஊட்டச்சத்துக் குறைவினால், பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், பள்ளி முன்பருவக் குழந்தைகள் ஆகியவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் இது வரை 15.4 லட்சம் குழந்தைகளும் (6-36 மாதம்), 4.6 லட்சம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் பயன் பெற்றுள்ளனர்.

சத்துணவைத் தொடர்ந்து கொடுப்பது இத்திட்டத்தின் நிரந்தர நோக்கமல்ல. மக்கள் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பற்றிய விவரங்களை அறியவும், அப்பணிகளைத் தாங்களாகவே முன்வந்து ஏற்றுக் கொள்வதோடு தங்கள் கடமையை உணர்ந்து உணவுப் பழக்க வழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளச் செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் நான்கு பிரிவுகளாகச் செயல்படுகிறது. அவை—

1. ஊட்டச்சத்துப் பணிகள்
2. கிராமச்சுகாதாரப் பணிகள்
3. தொடர்புப் பணிகள்
4. தகவல்கள் அறிதல் மற்றும் மதிப்பிடுதல்

திட்ட நடவடிக்கைகள் ஒழுங்காகச் செயல்பட மூலகாரணமாக விளங்குவது சமுதாய ஊட்டச் சத்து மையம். திட்டப் பகுதிகளில் ஒவ்வொரு 1500 மக்கள் தொகைக்கும் ஒரு சமுதாய ஊட்டச்சத்து மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் செயல்படும் கிராமங்களில் உள்ள 6 முதல் 36 மாதம் வயதுள்ள சுமார் 125 குழந்தைகளின் எடை எடுத்தல் மற்றும் இணை உணவு வழங்குதல் ஆகிய பணிகளைச் செய்வதில் இது முக்கிய இடம் வகிக்கிறது. கிராமத் தாய்மார்களின் வசதிக்கேற்ப இங்கு நேரம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

6 முதல் 36 மாதம் வரையுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துவது இப்பணியின் நோக்கமாகும். பிறந்த மாதம் முதல் 3 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளின் எடையும் மாதா மாதம் எடுக்கப்படுகிறது. குழந்தை நலக் குறிப்பேட்டில் மாதந்தோறும் எடுக்கப்படும் எடை குழந்தை நலக் குறிப்பேட்டில் குறிக்கப்பட்டு அதன் வளர்ச்சி கண்காணிக்கப்படுகிறது.

வயதுக்கேற்ற எடையில்லாத ஆபத்தான நிலையில் உள்ள குழந்தைகள், தேவையான எடை கூடாத குழந்தைகள் மற்றும் எடை இழக்கும் குழந்தைகளுக்கு இணை உணவு 90 நாட்கள் அளிக்கப்படுகிறது. குறிப்பிட்ட

# ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மூலம் இதுவரை 15.4 இலட்சம் குழந்தைகளும் (6-36 மாதம்), 4.6 இலட்சம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் பயன் பெற்றுள்ளனர்.

சுமார் ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட ஒரு வட்டாரத்துக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும் ஒரு சுகாதாரத் துணை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் இணை உணவு அளிக்கப்பட்டுகிறது. தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துக் கல்வி அளிக்கப்படுகிறது.

ஊட்டச்சத்து நிலையைப் பாதிக்கும் சில நோய்களைத் தடுப்பதற்கான பூச்சி நீக்க மருந்து, வைட்டமின் 'ஏ' திரவம் ஆகியவை குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும் தாய்மார்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

சுமார் ஒரு லட்சம் மக்கள் தொகை கொண்ட ஒரு வட்டாரத்துக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது ஒவ்வொரு 5000 மக்கள்தொகைக்கும் ஒரு சுகாதாரத் துணை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஒரு பெண் சுகாதாரப் பணியாளர் பணிபுரிந்து வருகிறார்.

பிரசவ கா..ப பராமரிப்பு, பிரசவத்திற்குப் பின் பராமரிப்பு, தடுப்பு ஊசிகள் போடுதல் மற்றும் குடும்ப நலப் பணிகள், சுகப் பிரசவம் பார்த்தல், சிக்கலான பிரசவங்களை ஆரம்பச் சுகாதார நிலையத்துக்கு அனுப்புதல் ஆகிய தாய்சேய் நலப் பணிகளைப் பெண் சுகாதாரப் பணியாளர் செய்து வருகிறார். மேலும் குறிப்பிட்ட நாட்களுக்கு இணை உணவு அளித்தும் எடைகூடாத, ஆபத்தான நிலையில் உள்ள குழந்தைகளை மேல் மருத்துவப் பரிசோதனைக்காக ஊட்ட்ச் சத்துப் பணியாளர் அனுப்பும் போது அவர் தகுந்த சிகிச்சை அளிக்கிறார்.

மக்களின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து சம்பந்தமான அறிவுத்திறன், மனப்பான்மை மற்றும் பழக்க வழக்கங்களில் நல்லதொரு மாற்றம் ஏற்படுத்தும் நோக்கத்தோடு இத்திட்டத்தின் தொடர்புப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

திட்டப்பணிகளைப் பற்றி வண்ணங்களில் பல திரைப்படங்கள் தயாரித்து, திரையரங்குகளில் திரையிட்டு வருகிறது. மேலும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பணியாளர் கல்வியளிப்பதற்கு உதவியாகப் பல கல்வி உதவிச் சாதனங்கள், ஸ்லைடுகள், புகைப்படச் சுருள், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் அடங்கிய காசட்டுகள் ஆகியவற்றைத் தயாரித்துப் பணியாளர்களுக்கு விநியோகம் செய்துள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் பெண்கள் தொடர்புக் குழுக்களை ஏற்படுத்தி அவர்கள் மூலமாக மற்ற தாய்மார்களின் ஒத்துழைப்பைப் பெறுவதோடு, மக்கள் திட்டப் பணிகளில் தீவிரமாக ஈடுபடத் திட்டம் வகுத்துச் செயல்பட்டு வருகிறது. பணியாளர்களின் செயல்திறனையும், அறிவையும் பெருக்கும் நோக்கத்தோடு அவ்வப்போது பணியரங்குகள், பணியிடைப் பயிற்சிகள் ஆகியவை நடத்தி வருகிறது. திட்டப்பகுதிகளில் சில முக்கியமான பணிகளுக்கு உதவியாகக் கல்வி முனைப்பு இயக்கங்களை நடத்தி சிறந்த வெற்றி கண்டுள்ளது.

தகவல் அறிதல் மற்றும் மதிப்பிடுதல் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஊட்டச்சத்துப் பணிகள், சுகாதாரப் பணிகள், தொடர்புப் பணிகள் ஆகியவை கிராமத்தில் எந்த அளவுக்குச் செயல்பட்டு வருகின்றன, அவற்றில் என்னென்ன முன்னேற்றங்கள் அல்லது தடைகள், பிரச்னைகள் உள்ளன என்பதை ஆய்ந்து அறியும் நோக்கத்துடன் இப்பிரிவு இயங்கி வருகிறது. இதனால் பணிகளைச் சரியான முறையில் குறைகளின்றிச் செயலாக்க வழி வகுக்கப்படுகின்றது.

இத்திட்டம் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, குறிப்பாக குழந்தைகள் இறப்பு விகிதம் குறைய வெற்றிகரமாகத் தமிழகத்தில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.





# மகளிர் மேம்பாட்டுக் கழகம் – பணிகள் பயன்கள்

தமிழக மகளிர் மேம்பாட்டுக் கழகம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் மூலதனத்துடன் 9.12.1983 அன்று தொடங்கப்பட்டது. ஆங்கிலத்தில் சுருக்கமாக இந்தக் கழகத்தை DEW என அழைக்கிறோம். ஆங்கிலத்தில் DEW என்ற வார்த்தையும் DUE என்ற வார்த்தையும் ஒன்றாகவே உச்சரிக்கப்படுகின்றன. இந்தக் கழகத்தை நிறுவியவர்கள் இந்த இரண்டு வார்த்தைகளுமே இந்தக் கழகத்திற்கு மிகவும் பொருந்தும் என நினைத்தார்கள். சுருக்கமாகச் சொன்னால் இக்கழகம் வளர்ச்சிப் பணியில் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு உரித்தான பங்கினைப் பெற்றுத்தர முயற்சி செய்யும் என எதிர்பார்த்தார்கள். இந்த நாட்டில் வளர்ச்சித் திட்டங்கள் 40 ஆண்டுகளாகத் திட்டமிடப்பட்டுச் செயல்பட்ட போதிலும், அந்த வளர்ச்சிப் பணிகளின் பயன்கள் மகளிர்களுக்குச் சேர வேண்டிய அளவினை எட்டவில்லை என்பது நிதர்சனமான உண்மையாகும். ஆண்கள் மட்டும் முன்னேற்றம் அடைய, மகளிர் பின் தங்கிய நிலையில் இருந்து வரும், ஏற்றத் தாழ்வுள்ள வளர்ச்சியை, எந்த ஒரு நாடும் ஏற்றிட இயலாது. இந்த ஓர் அடிப்படை முரண்பாட்டை அறிந்து கொண்டதனாலும் இனியாவது மகளிரின் மேம்பாட்டுக்கு வழிவகுக்க வேண்டும் என்ற எண்ணத்தினாலும் தொடங்கப்பட்டது தான் இந்த மகளிர்மேம்பாட்டுக் கழகம்.

இந்த மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் ஆணையும் விதிகளும் ''மகளிர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்'' என்ற குறிக்கோளைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இந்தக் குறிக்கோளை அடைந்திட, இந்தக் கழகம் மகளிர் பயிற்சித் திட்டங்களை ஏற்று நடத்தி அதன்மூலம் மகளிர் வேலைவாய்ப்பினை ஏற்படுத்திடும். இதன் மூலம் இந்தக் கழகத்தின் குறிக்கோள் மகளிருக்கு வேலைவாய்ப்பினைக் கொடுப்பதுடன் வேலை வாய்ப்பினை அடையக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிப்பதாகும். இந்தக் கழகம் துவங்கி 4 ஆண்டுகளே ஆகி இருந்தபோதிலும் மகளிரின் பொருளாதார நிலை வளர்ச்சி அடையப் பல்வேறு பணிகளைச் செயல்படுத்தியுள்ளது. இதன் மூலம் பெண்களுடைய பொருளாதார நிலை மேம்பாடு அடைவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் பணிகள் விரிவான மூன்று வகைகளாகப் பாகுபாடு செய்யப்படலாம்.

பெண்கள் ஊதியம் பெறுவதற்கு ஏதுவாக கழகமே நேரிடையாக உற்பத்திக் கூடங்களை அமைப்பது.

தொண்டு நிறுவனங்கள் மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் உற்பத்திக் கூடங்களை அமைப்பது.

பெண்கள் தங்களுடைய கிராமங்களிலேயே குறைந்த தொழில் நுட்பம் கொண்ட திட்டங்களின் மூலம் கூடுதல் வருமானம் பெறுவதற்கு ஏதுவாக சுயதொழில் திட்டங்கள் தொடங்க தனிப்பட்ட மற்றும் மகளிர் குழுக்களுக்கு உதவுதல்.

இப்போது இந்த மூன்று பிரிவுகளின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள திட்டங்களைப் பற்றிச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

**தொடங்கப்பட்டுள்ள தொழிற் கூடங்கள்:**

பலவண்ண அச்சுக்கூடம் தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இக்கழகம் 1984ஆம் ஆண்டு எடுத்தது. சாதாரணமாக ஓர் அச்சுக் கூடத்தில் பெண்கள் அச்சுக்கோத்தல் மற்றும் பைண்டிங் செய்தல போன்ற பணிகளில் தான் ஈடுபடுத்தப்படுவார்கள். ஆனால் இக்கழகம் ஒரு நவீன அச்சுக்கூடத்தை நிறுவி Treadle மற்றும் கோடிடும் இயந்திரங்கள் வாங்கி, பெண்களை அச்சுக் கூடத்தில் உள்ள அனைத்து வேலைகளிலும் ஈடுபடுத்த முடிவு செய்தது. சென்னைக்கு அருகில் உள்ள தாம்பரத்தில் ரூ. 28 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ள அச்சுக்கூடத்தில் 75 பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பான்மையானோர் சமூக நலத்துறை நடத்தும் சேவை இல்லத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் திக்கற்றவர்கள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப் பட்டவர்கள். இவர்களுக்கு அச்சுக்கூடத்தில் முன் அனுபவம் இல்லாத காரணத்தால் ஒரு வருடம் பயிற்சிகொடுக்கப்பட்டு, அதன்பின் நிரந்தரமாக வேலை வழங்கப்படுகிறது. இந்த அச்சுக்கூடத்தின் வருடாந்தர உற்பத்தி மதிப்பு ரூ. 24

இலட்சம் ஆகும். இக்கூடம் இப்போது கிட்டத்தட்ட அதனுடைய முழு உற்பத்தித் திறனுக்கு ஈடாக இயங்கி வருகிறது. புத்தகங்களை அச்சடித்தல், பேரேடு அச்சடித்தல் மற்றும் ரசீதுப் புத்தகங்கள் அச்சடித்தல் ஆகிய பல்வேறு அச்சு வேலைகளை மேற்கொண்டுள்ளது. இப்போது இரண்டாவது வேலைப்பிரிவை இயக்குவதன் மூலம், மேலும் 75 பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதுடன் வருட உற்பத்தி மதிப்பை ரூ.24 இலட்சத்திலிருந்து இரட்டிப்பாக்க முடியும் என எதிர்பார்க்கிறோம்.



50 பெண்கள் வேலைபார்க்கக் கூடிய கல்வி உபகரணங்கள் உற்பத்திக் கூடம் ஒன்றையும் இக்கழகம் நிறுவியுளளது. இதற்கான மொத்த மதிப்பீடு ரூ. 12 லட்சம் ஆகும். இதில் சுழற்றும் இயந்திரங்கள், ரமபங்கள், சமன் செய்யும் இயந்திரங்கள் மற்றும் மரம் வெட்டும் இயந்திரங்கள் ஆகியவை நிறுவபபட்டுள்ளன. பாலர் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிகக தேவைப்படும் கல்வி உபகரணங்கள் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வசதிகளை இக்கூடம் பெற்றுள்ளது. இக்கூடததில் 18 வகையான எணகள், புதிர்கள், சிறு வண்ணத்தட்டுக்கள், சிறு விளையாட்டுக் கடிகாரங்கள் எண்ணிக்கைச் சட்டம் ஆகியவை அடங்கிய கல்வி உபகரணங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை அனைத்தும் முதலமைசசரின் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் தமிழக அரசால் நடத்தப்படும் பாலர் பள்ளிகளில் உபயோகிக்கப் படுகின்றன. இதுவரை இக்கூடம் 4065 கல்வி உபகரணப் பெட்டிகளைத் தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்துள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி உபகரணங்கள் கூடத்துடன் இணைந்து நடத்தும் திரை அச்சுக்கூடத்தையும் ரூ. 5,50,000 செலவில் இக்கழகம் நிறுவியுள்ளது. திரை அச்சுத் தொழில் செய்வதற்கு அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது. இப்போது இக்கூடம் கல்வி உபகரணங்கள் தயாரிப்பதில் தேவையான திரை அச்சுத் தொழில்களைச் செய்வதற்குக் கல்வி உபகரணங்கள் கூடத்திற்கு உதவுகிறது. நவீன தொழில் நுட்பத்தின் வளர்ச்சிக்கு ஈடாக செயல்பட நினைத்து ஒரு மின்னணுவியல் கூடத்தையும் ரூ.5,94,[illegible] மூலதனத்துடன் தாம்பரத்தில தொடங்கியுள்ளது. இதில் 16 பெண்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. இந்துஸ்தான் தொலை அச்சு நிறுவனம், பாரத மின்னணுவியல் நிறுவனம், மற்றும் சில தொலைக்காட்சிப் பெட்டி உற்பத்தியாளர்களுக்குத் தேவையான மின்னணுவியல் பாகங்களை ஒன்று சேர்க்கும் வேலையை மேற்கொண்டுள்ளது. இக்கூடத்தை விரிவுபடுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு அதற்காக 1987-88ஆம் ஆண்டில் ரூ. 4,68,000 செலவில் மேலும் ஒரு மின்னணுக் கூடத்தை அமைப்பதற்காக அங்கீகாரம் பெற்றுள்ளோம். இதற்கிடையில் இக்கழகம் கிண்டி தொழிற்பேட்டையில் நிலம் மற்றும் கட்டிடத்தை வாங்கியுள்ளது. கல்வி உபகரணங்கள் உற்பத்திக்கூடம், திரை அச்சுக்கூடம் மற்றும் மின்னணுவியல் கூடம் ஆகியவற்றை இந்தப் பெரிய கட்டிடத்திற்கு மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதிகப் பரப்பளவுகொண்ட இக்கட்டிடத்தில் இருந்து கொண்டு மேலும் அதிக ஆணைகளைப்பெற்று அதிக வளர்ச்சியை அடைய முடியும்.

மேலும் ஒரு அச்சுக்கூடம் காமராஜர் மாவட்டத்தில் உள்ள சிவகாசியில் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இககூடம் தனிச்சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் அதில் உடல் ஊனமுற்ற 75 பெணகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட இருக்கிறது. மேலும் இத்திட்டம் சிறுவர் தொழிலாளர்களின் நிலைப்பாட்டினைக் குறைப்பதற்கான வழிமுறைகளை ஆராயும் ஒரு முன்னோடித் திட்டமாகவும் விளங்கும். 75 சிறுவர் தொழிலாளர்களின் தாய்மார்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதன் மூலம் இத்திட்டம் அந்த நிலையை ஆராய்ந்து ஒரு தாய்க்குப் பொருத்தமான வேலை வாய்ப்பினைக் கொடுப்பதன் மூலம் அவள் தனது குழந்தையைத் தொழிற்சாலைக்கு வேலைக்கு அனுப்புவதைத்தடுக்க முடியுமா என ஆராயும். இந்த அச்சுக் கூடத்தின வருட உற்பத்தி மதிப்பு சுமார் ரூ 60. இலட்சம். இத்திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 53 இலட்சம் ஆகும். இதில் 150 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டு பாட நூல் நிறுவனம் மின்சார வாரியம் மற்றும் பல அரசு மற்றும் அரசு உபநிறுவனங்களின் மூலம்ஒட்டு மொத்த ஆணைகளைப் பெற்று இதன் அதிக அளவு உற்பத்தித் திறனுக்கு ஈடாக ஆணைகளைப் பெற வாய்ப்ப உள்ளது.

**தொண்டு நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்புகள்:**

ஆரம்பத்திலிருந்தே இந்தக் கழகம் வேலைவாய்ப்ப அளிக்கும் கூடங்களைத் தனது ஆதரவின் கீழ் மட்டுமே நடத்த இயலாது என உணர்ந்திருந்தது. பெண்

களுக்கு அதிக வேலைவாய்ப்பினை அளிப்பதன் முழுப்பயனைப் பார்க்க வேண்டுமானால் மற்ற நிறுவனங்கள் மூலம் செயல்படுவது அத்தியாவசியமானது. இதை மனதில் கொண்டு சர்வோதய நிறுவனங்களுடன் இக்கழகம் பேச்சு வார்த்தைகளை நடத்தியது. தமிழ்நாட்டில் இத்தகைய 63 நிறுவனங்கள் உள்ளன. இவை அனைத்தும் பம்பாயிலுள்ள கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழுமூலம் அங்கீகாரம் மற்றும் சான்றிதழ் பெற்றவை. இவை கிராமப் புறங்களில் மெச்சிறந்த சேவையைச் செய்த மரபினைக் கொண்ட நிறுவனங்கள். ஆகையால் இக்கழகம் அந்த நிறுவனங்களை அணுகி அவற்றிற்கு பெண்களுக்கு மட்டும் வேலைவாய்ப்பினை அளிக்கும் உற்பத்திக் கூடங்களைத் தொடங்குவதற்கு மானியம் அளிக்க முன்வந்துள்ளது. இதற்கான பேச்சு வார்த்தைகளில் கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் மண்டல இயக்குநரும் கலந்து கொண்டார். அவர்களுடைய விற்பனைத்திறன் பற்றிய மதிப்பீட்டைக் கொண்டு 71 நூற்பு மற்றும் நெசவுத்தொழில் மையம் நிறுவ முடிவு செய்யப்பட்டது.

இந்த நூற்பு மற்றும் நெசவுக் கூடங்கள் நவீன தொழில் நுட்பத்தை உபயோகிக்கின்றன. 12 கதிர் ராட்டையும், நேபாளி தறிகளுமே உபயோகிக்கப்படுகின்றன. பெண்கள் அம்பர் சர்க்காக்களை இயக்குவதில் மட்டும் பயிற்சி பெற்ற நாட்கள் கடந்துவிட்டன. 12 கதிர் ராட்டைகளை இயக்கும் பெண்கள் நாளொன்றுக்கு ரூ. 10க்கு குறையாமல் ஊதியம் பெறுகிறார்கள். தேர்வு செய்யப்பட்டுள்ள பெண்கள் அனைவரும் கிராமப்புறப் பெண்கள். ஆகவே அவர்கள் அதே சுற்றுப்புறங்களில் கிராமப்புற சூழ்நிலைகளில் வாழ்ந்து கொண்டு ஒரு கௌரவமான ஊதியம் பெற்று வாழ வழி வகை செய்யப்பட்டுள்ளது. இந்த 71 கூடங்களின் மூலம் பெறும் கூடுதல் உற்பத்தியின் மதிப்பு ரூ. 1,00,00,000. இந்த கணிசமான கூடுதல் உற்பத்தி இந்த சர்வோதய சங்கங்கள் ஏற்கனவே நடத்தும் விற்பனை கூடங்களின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

மேற்கண்ட 16 சர்வோதய சங்கங்களின் வெற்றிகளினால் ஊக்குவிக்கப்பட்டு மேலும் 16 சர்வோதய சங்கங்கள் மேலும் 50, 12 கதிர் ராட்டை கூடங்களையும் நேபாளி தறிக்கூடங்களையும் அமைப்பதற்கு வேண்டுகோள் விடுத்தன. இதற்கு ரூ. 1,45,00,000 இந்தக் கழகம் முதலீடு செய்து அதை ஒரு மானியமாக கொடுக்கிறது. இதன் மூலம் கூடுதலாக 1200 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். இதன்மூலம் ரூ. 1,00,00,000 மதிப்புள்ள கூடுதல் உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய பனைஓலை தொழில் நுட்ப நிறுவனம் என்ற மற்றுமொரு தொண்டு நிறுவனத்துடன் வெற்றி கரமாக இணைந்துள்ளது. இந்த நிறுவனம் பனை பொருட்கள் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதில் ஆழ்ந்து ஈடுபட்டுள்ளது. இந்த நிறுவனம் இப்போது சென்னையில் 4 பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் பனைநார் உற்பத்திக் கூடத்தைத் தொடங்க உள்ளது. பனைநார் செய்யும் இயந்திரங்கள் வாங்குவதற்குத் தேவையான நிதி உதவி மற்றும் 40 பெண்களுக்கான பயிற்சிச் செலவினையும் இக்கழகம் அளித்தது. இதன் நிதி முதலீடு ரூ. 55,000 என்றாலும் முக்கியத்துவம் கிராம அடிப்படை கொண்ட ஒரு தொழிலில் 40 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாகும்.

**தனிப்பட்ட பெண்கள், பெண்கள் குழுக்கள் சுயதொழில் வளர்ச்சிக்கு:**

சொத்துக்களைப் பெண்களின் பெயர்களில் மாற்றுவதன் மூலம் மட்டுமே உண்மையான பொருளாதார மேம்பாடு இருக்க முடியும் என்று இந்தக் கழகம் நம்புகிறது. சொத்து, பெண்களின் பெயர்களில் இருக்கும்போது மட்டுமே அந்தச் சொத்திலிருந்து பெறும் வருமானத்தைச் செலவழிக்கும்-வரியைத் தீர்மானிக்கும் உரிமை அப்பெண்ணிற்கு கிடைக்கும் என இக்கழகம் உணருகிறது. மேலும் சொத்து உரிமையானது சமுதாயம் மற்றும் பொருளாதார விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இதுவே ஒரு கல்வியாகவும் அமைகிறது. இந்தக் குறிக்கோளை மனதில் கொண்டு ஆரம்பத்திலிருந்தே இந்தக் கழகம் பெண்ணின் பெயர்களில் சொத்துரிமைகள் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதில் ஒன்று கறவை மாடுகளையும், செம்மறி ஆடுகளையும் பெண்களுக்கு வழங்கும் திட்டமாகும்.

1984-ஆம் ஆண்டு இந்தக் கழகம் மதுரை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 400 பெண்களுக்குச் செம்மறி ஆடுகளை வழங்கும் திட்டத்தினை எடுத்துக் கொண்டது. நலிந்த பிரிவினைச்சேர்ந்த பெண்களுக்கு ரூ. 6400 பெறுமான 20 ஆடுகள் மற்றும் ஒரு கடாவைக்கொண்ட ஆட்டு மந்தையினை வாங்க வழி செய்துள்ளது. இப்பணத்தில் 50 சதவிகிதம் இக்கழகத்தால் மானியமாகக் கொடுக்கப்படுகிறது. மீதமுள்ள 50 சதவிகிதம் 5 வருடத்தில் திருப்பிச் செலுத்தக்கூடிய கடனாக வங்கியில் இருந்து பெற்றுத்தரப்படுகிறது.

இயற்கைப் பெருக்கத்தின் மூலம் 20 ஆடுகள் மற்றும் ஒரு





கடா 5 வருடங்களில் 54 ஆடுகள் மற்றும் 42 கடாக்களாகப் பெருகுகின்றன. மேலும் ஒவ்வொரு வருடமும் புதியதாகப் பிறக்கும் ஆட்டுக்கடாக்கள் ஆட்டுக்குட்டிகள் ஆகியவற்றை விற்றுவிட்டு பெட்டை ஆடுகளை வைத்துக் கொள்ளலாம். இப்படியாக 5 வருடத்தில் 41 ஆட்டுக்கடாக்களை விற்கலாம். இதனால் சொத்து மதிப்பு ரூ. 6400ல் இருநது ரூ. 10500 ஆகக் கூடுகிறது. கடன் திரும்பச செலுத்தப்பட்ட வேண்டிய 5 ஆணடு காலத்தில் ஒரு பெண்ணால் நிகர வருமானமாக மொத்தம் ரூ.250 கடன் பாக்கி போக பெறமுடிகிறது. இத்திட்டம் மிகவும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. பெண் கடனாளிகள் மிகவும் மனச்சாட்சியுடன் உரிய சமயத்தில் கடன்களைத் திரும்ப செலுத்துவதாக வங்கிகள் கூறியுள்ளன. அவர்களுடைய அனுபவத்தில் பெண்கள ஆண்களைவிடச் சிறந்தவர்களாகவும் நம்பத் தகுந்த கடனாளிகளாகவும் இருக்கிறார்கள்.

400 பெண்களுக்கு ஆடுகள் வழங்கிய சிறிய ஆனால் வெற்றிகரமான தொடக்கத்தினால் உற்சாகப்படுத்தப்பட்டு, மேலும் 1500 பெண்களுக்கு 1987-88ம் வருடத்தில் அண்ணா, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ரூ. ஒரு கோடி செலவில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 1500 பெண்களும் 50 அனைத்து பெண்கள் ஆடு வளர்ச்சிச் சங்கமாக அமைககப்பட்டு ஒவ்வொரு சங்கமும் அதே கிராமத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்ட ஒரு பெண்ணைச் செயலாளராகக் கொண்டு இருக்கும். கால்நடை பராமரிப்பு துறைகளில் ஒரு வருடத்திற்கு அப்பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் பின் அப்பெண் அந்த கிராமத்தில் இருக்கும் கால்நடைகளுக்குச் சிறந்த முறையில் மருத்துவ உதவி அளிக்க முடியும். ஆடுகளைத் தவிர இக்கழகம் கறவை மாடுகளையும் வழங்க உள்ளது. 1984 ஆம் வருடத்தில் 200 பெண்களுக்கு தலா 2 கறவை மாடுகள் 50 சதவீத மானியத்துடன் வழங்கப்பட்டன. இத்திட்டம் வெற்றிபெற்றுள்ளது.1987-88-ம் ஆண்டில் ரூ. 25 லட்சம் செலவில் தென்னார்க்காடு மாவட்டத்தில் 100 பெண்களுக்குக் கறவை மாடுகள் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

### மற்றுமொரு சுயவேலை வாய்ப்புத் திட்டம் :

பெண்களை மையமாகக் கொண்ட மற்றுமொரு சுய தொழில் திட்டம் கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம். இத்திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டத்தின் கீழ் 15 முதல் 20 உறுப்பினர்கள் கொண்ட மகளிர் குழுக்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. சாதாரணமாக அவர்கள் பொதுவான ஒரு தொழிலைமேற்கொள்கிறார்கள. அது நெசவு, மண்பானை செய்தல் ஆடைகள், பட்டு ஜமக்காளம் நெய்தல், உணவு விடுதி நடத்துதல் போன்ற ஏதாவது ஒன்றாக இருக்கலாம்.

இந்தக்குழு நடவடிக்கைகளை மேற்கொளவதற்கான கடன், வங்கிகள் மூலமாகத் தரப்படுகிறது. மானியம் அளிப்பது பயன் பெறுவோரின் பொருளாதார நிலையைப் பொறுத்து 30 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உள்ளது. இது வட்டார வளர்ச்சி முகமைகள மூலமாக வழங்கப்படுகிறது. இதுவரை மொத்தம் 910 பெண்களுக்கு, குழுக்கள் மூலமாக மேம்படுத்தப்பட்டு ரூ. 444.13 லட்சம் கடனாகவும் ரூ. 223.16 லட்சம் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது என்பதை இக்கழகம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது. கிட்டத்தட்ட 15700 பெண்கள் இத்தகைய குழுக்களாக அமைக்கப்பட்டு வெற்றிகரமாக வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். நாட்டிலேயே தமிழ்நாட்டில் தான் இத்திட்டம் மிகவும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் தமிழ்நாட்டில் தாமபுரி, பெரியார் மற்றும் திருச்சி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வருடம் இக்கழகம் மேலும் ஒரு புதிய தொழில் தொடங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. தொழில் அபிவிருத்தி மையம் ஒன்று, சுய வேலை முனைவோருக்கு ஆலோசனைக் குழுவாக இயங்கும். ரூ.5 லட்சத்திற்கும் அதிகமாக முதலீடு கொண்ட சிறு தொழில் கூடங்களைத் தொடங்க இருக்கும் பெண் சுயவேலை முனைவோரை இக்கழகம் ஊக்குவிக்கும். அத்தகைய சுய வேலை முனைவோர் இக்கழகத்தை அணுகினால் அவர்கள் வெற்றிகரமாக அவர்களுடைய தொழில் கூடங்களைத் தொடங்குவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளும் வழங்கப்படும். 'சிட்கோ' நிறுவனத்தின் மூலமாக அவர்களுக்கு உற்பத்திக் கூடங்கள் பெறுவதற்கு உதவி வழங்கப்படும். தேவையானால் அவர்களுக்கு மின்சார இணைப்புப் பெறுதல், நிதியுதவிபெறுவதற்கு நிதி நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெற்றுத்தருதல் போன்றவற்றிற்கும் உதவி அளிக்கப்படும். தகுந்த சுயவேலை முயற்சிகள் பற்றி அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படும். பொதுவாக அது சிறு தொழில் தொடங்கும் பெண்களுக்கு ஒரு ஆலோசகராக விளங்கும். இந்தக் குறிக்கோளை அடைவதற்காக இக்கழகம் 1987-88ல் 25 பெண் சுயவேலை முனைவோரை மேம்படுத்தும் ஒரு சிறு குறியீட்டினை வகுத்துக்கொண்டு இருக்கிறது. ஆரவாரம் இன்றி தனது குறுகிய 4 ஆண்டுக்காலத்திலேயே, இந்தக் கழகம் குறிப்பிட்ட நடவடிக்கைகளைச் செவ்வனே செய்து முடித்திட்டதன் மூலம் சுமார் 22000 மகளிர் 12.72 கோடி ரூபாய் மூலதனத்துடன் வேலைவாய்ப்பினைப் பெற்றிட உதவியுள்ளது.

# சீர்திருத்தப் பள்ளிகளும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பும்

பரந்து விரிந்த இந்நாட்டில் சமூகநலக் களப்பணிகளிலும் குறிப்பாகக் குழந்தைகள் நலத்திலும் தமிழ்நாடு பிற மாநிலங்களினின்றும் தனித்து சிறந்து விளங்குகிறது. நாட்டில் குழந்தைகள நலப் பணித் திட்டத்தை ஏற்று அமுலுக்குக் கொண்டுவந்த முதல் மாநிலமும் இதுவேதான்.

'சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப் பணி என்று அழைக்கப்படும் இத்துறை இரண்டு முக்கியப் பணிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒன்று 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்படி நிறுவப்பட்ட சீர்திருத்தப்பள்ளியும் மற்றொன்று சமுதாய ஏற்றத்தாழ்வுகளினாலும் சமூக விரோதிகளாலும் வஞ்சிக்கப்பட்ட ஆதரவற்ற, தவறிழைத்த, கடின மனப்பாங்குடைய, நடத்தை தவறிய பெண்கள் மற்றும் சிறுமிகள் ஆகியோரை அப் படுகுழியிலிருந்து மீட்பதையே குறிக்கோளாகக் கொண்ட 1956-ஆம் ஆண்டு பெண்கள் மற்றும் சிறுமியர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மகளிர் காப்பகங்களும் ஆகும். முறையான பாதுகாப்பும் சீர்திருத்த நெறிமுறைகளில் வழிநடத்தியும் கல்வி மற்றும் தொழிற்கல்வியில் பயிற்சியும் வழங்குவதே இத்துறையின் முக்கியக் குறிக்கோளாகும். மேலும் சீர்திருத்த நிறுவனங்களிலிருந்து வெளியேறுபவர்களுக்கு முறையான பிற்காலப் பராமரிப்பும் இத்துறை அளிக்கிறது.

அரசின் பராமரிப்பின் கீழ் 11 வரவேற்பு இல்லங்களும் இது தவிர தனியார் பராமரிப்பின் கீழ் மூன்று வரவேற்பு இல்லங்களும் சீர்திருத்தப் பள்ளிகளில் அரசின் பராமரிப்பின்கீழ் ஒன்பது சீர்திருத்தப்பள்ளிகளும், தனியார் பராமரிப்பின்கீழ் 11 சீர்திருத்தப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

**விழிப்புப்பணி இல்லங்கள் பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் மீட்பு இல்லங்கள் :**

அரசின் பராமரிப்பின் கீழ் ஐந்து விழிப்புப்பணி மற்றும் பாதுகாப்பு இல்லங்களும் மகளிர் மீட்பு இல்லங்களில் அரசின் பராமரிப்பின் கீழ் 6-ம் மற்றும் தனியார் பராமரிப்பின்கீழ் 2-ம், பிற்காப்பு இல்லங்கள் மூன்று அரசு பராமரிப்பின் கீழும், இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் மூன்று தனியார் பராமரிப்பின் கீழும் இயங்கி வருகின்றன.

1977-ஆம் ஆண்டு ஜூன் முதல் 1987 ஏப்ரல் வரை இத்துறையில் ஏற்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்கள்:

1977-ஆம் ஆண்டு: சென்னை இராயபுரத்தில் இயங்கி வந்த குழந்தைகள் நல இல்லத்தை அரசு பொறுப்பேற்று அவ்விடத்தில் ஒரு இளநிலை சீர்திருத்தப் பள்ளியும், இராமநாதபுரம் மாவட்டம் மல்லிபுதூர் எனும் இடத்தில் 4.93 இலட்சம் செலவில் ஒரு இளநிலை சீர்திருத்தப் பள்ளியும் நிறுவப்பட்டன.

1978-ஆம் ஆண்டு: இராமநாதபுரம் மாவட்டம் அமராவதி புதூர் எனும் இடத்தில் விசாரணைக் கால சிறுவர்களுக்கென ஒரு வரவேற்பில்லம் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டது.

தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரத்தில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் விசாரணைக்காலச் சிறுவர்களுக்கென ஒரு வரவேற்பில்லமும், செங்கல்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளியில் ஆர்க் வெல்டிங் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டன.

சென்னை நிறுவனங்களிலுள்ள சிறுவர் மற்றும் பெண்களின் உபயோகத்திற்கென ரூபாய் 60,000 செலவில் ஒரு மட்டடார் மினி பஸ் வாங்கப்பட்டது.

1979-ஆம் ஆண்டு : செங்கற்பட்டு, அரசினர் மாணவர் பிற்காப்பு இல்ல வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்ததை மாற்றி அதற்கென ஆத்தூர் என்னுமிடத்தில் ரூபாய் 2.00 இலட்சம் செலவில் புதிய கட்டடமும் சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் விசாரணைக் காலப் பெண்களுக்கெனத் தனி இல்லம் ரூ. 1.50 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டன.

1980-ஆம் ஆண்டு : இராயபுரம், அரசினர் இளநிலைச் சீர்திருத்தப்பள்ளியில் புத்தகம் கட்டும் பயிற்சிப் பிரிவும் ஆத்தூர் அரசினர் மாணவர் பிற்காப்பில்லத்தில் வெல்டிங் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டன.

சென்னை, அரசினர், பெண்கள் சீர்திருத்தப்பள்ளியில் குழந்தைகள் காப்பகம் ஒன்றும் செங்கல்பட்டு, அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளியில் சோப்பு உற்பத்திப் பிரிவு ஒன்றும் தொடங்கப்பட்டன. சென்னை, செங்கற்பட்டு, இராணிப்பேட்டை, விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ள அரசு நிறுவனங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டன.

சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் இல்லவாசிகளின் வசதிக்காகக் கூடுதல் படுக்கைக் கூடம் கட்டப்பட்டது.

மகளிர் காப்பகங்கள் மற்றும் பெண்கள் சீர்திருத்தப் பள்ளிகளில் பயின்று திருமணம் செய்து கொள்ளும் பெண்களுக்குச்சீதனத் தொகையாக ரூ. 500-லிருந்து ரூ. 1000-க்கு உயர்த்தப்பட்டது.

தென்மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களில் நேரடிக் கண்காணிப்புக்கென ஒரு துணை இயக்குநரின் பொறுப்பில் மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது.

சேலத்தில் இயங்கி வந்த, தனியார் வரவேற்பு இல்லத்தின் பொறுப்பை அரசு ஏற்றது.

சென்னை, அரசினர் பெண்கள் சீர்திருத்தப்பள்ளியின் மாணவிகளுக்கென நவீன வசதியுடன் உணவுக்கூடம் ரூ. 2.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

திருநெல்வேலி, விழுப்புரம், அமராவதி புதூர் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வரவேற்பில்லத்தில் பாய்நெசவு தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



இத்துறையைச் சார்ந்த மாணவர்கள் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற செங்கல்பட்டு, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் தொழிற்பயிற்சி நிலையங்களில் முறையே ஒவ்வொரு ஆண்டும் 7, 7, 16 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

*1981-ஆம் ஆண்டு :* தருமபுரி மாவட்டத்தில் தர்மபுரியின் விசாரணைக் காலச் சிறுவர்களுக்கென ஒரு வரவேற்பு இல்லம் ரூ. 1.25 இலட்சம் செலவிலும், பெரியார் மாவட்டத்தில் ஈரோடு என்னும் இடத்தில் விசாரணைக் காலச் சிறுவர்களுக்கு ஒரு வரவேற்பில்லம் ரூ. 1.25 இலட்சம் செலவிலும் ஆரம்பிக்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம் மல்லிபுதூரில் உள்ள இளநிலை சீர்திருத்தப்பள்ளி மாணவர்கள் உபயோகத்திற்கென ஒரு ஸ்டாண்டர்டு வாகனம் ரூபாய் 75,000 செலவில் வாங்கப்பட்டது.

கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் இருந்த குறுகிய கால மகளிர் இல்லங்கள் நீண்டகால மகளிர் காப்பகங்களாக மாற்றப்பட்டன.

தர்மபுரி மாவட்டத்திலுள்ள பஞ்சப்பள்ளியில் முன்னாள் சென்னார் நீர்த்தேக்கத் திட்ட கட்டடங்களில் ஒரு அரசினர் முதுநிலை மற்றும் இளநிலை சீர் திருத்தப்பள்ளி ரூ. 5.00 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டது.

மதுரை, அரசினர் மகளிர் காப்பகத்தில் பாய்நெசவுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

சீர்திருத்தப்பள்ளி விழிப்புப் பணி இல்லங்களில் திருமணம் செய்து கொள்ளும் நாளன்று எதிர்நோக்கும் செலவினத்திற்கு ரூ.100 அனுமதி வழங்கப்பட்டது.

*1982-ஆம் ஆண்டு:* இராணிப்பேட்டை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள சீர்திருத்தப் பள்ளிகளில் தச்சுப் பிரிவினை எந்திரமயமாக்குவதற்கு அரசு அனுமதி அளித்து கட்டடம் கட்ட மற்றும் இயந்திரங்கள் வாங்க ரூ. 8.17 இலட்சமும் சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் இல்லவாசிகளைப் பயிற்றுவிப்பதற்காக ஒரு மின் சாரப் பிரிவு ஆரம்பிக்க அரசு அனுமதித்ததன் பேரில் இதற்குக் கட்டடம் கட்ட வாகனம் வாங்க மற்றும் இயந்திரங்கள் வாங்க ரூ. 5.50 இலட்சமும் அனுமதிக்கப்பட்டது.

சென்னை, இராயபுரம் கடலூர், மல்லிபுதூர் ஆகிய இடங்களிலுள்ள இளநிலை சீர்திருத்தப்பள்ளிகளில் வாத்தியக்குழு இசையில் பயிற்சி அளிப்பதற்கு இசைப்பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

மதுரை, மண்டல அலுவலகம், மல்லிபுதூர், அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, மதுரை அரசினர் மகளிர் காப்பகம், விழுப்புரம், அரசினர் வரவேற்பில்லம் ஆகிய நிறுவனங்களுக்குத் தொலைபேசி வசதியும் மதுரை மண்டல அலுவலகத்திற்கு ஒரு ஜீப் வண்டியும் வழங்கப்பட்டது.

இத்துறையைச் சேர்ந்த அரசினர் மற்றும் தனியார் சீர் திருத்தப்ப்ள்ளிகள் மற்றும் விழிப்புப்பணி இல்லங்களில் பயிற்சி பெறும் மாணவ/மாணமாணவிகள்/இல்லவாசிகள் வெளியில் சென்று உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் படித்து அரசினர் பொதுத் தேர்வு எழுதுபவர்களுக்குத் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

*1983-ஆம் ஆண்டு :* நீண்ட காலமாக நிரப்பப்படாமல்இருந்த இத்துறையின் மனோதத்துவ நிபுணர் பதவியிடம் புதுப்பிக்கப்பட்டு நிரப்பப்பட்டது.

நன்னடத்தை அலுவலர்கள் பிரிவு விரிவாக்குதல் சம்பந்தமாகக் கோயம்புத்தூர் மதுரை, திருநெல்வேலி, தருமபுரி வட ஆர்க்காடு மாவட்டங்களில் 5 நன்னடத்தை அலுவலர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர்.

சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் 18 முதல் 40 வயது வரை உள்ள பெண்களுக்கு, மனை இயல் பயிற்சி அளிக்கும் பொருட்டு மனை இயல் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் பயிற்சிக்காலம் 6 மாத காலமாக நிர்ணயிக்கப்படட்டுள்ளது.

தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலம் நியமிக்கும் பதவிகளைத் தவிர மற்ற பதவிகளில் ஏற்படும் காலியிடங்களுக்கு இத்துறையைச் சார்ந்த தகுதிவாய்ந்த முன்னாள் மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம் மறுவாழ்வு அளிக்க அரசினரால் உத்தரவு வழங்கப்ட்ட்டது.

ஒருங்கிணைந்த சீர்திருத்தப் பள்ளிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி 27-5-83 முதல் 29-5-83 வரை தஞ்சாவூர், அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியில் நடைபெற்றது.

இத்துறையைச் சார்ந்த அரசினர் மற்றும் தனியார் சீர் திருத்தப்பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணி இல்லங்களில் பயிற்சி பெறும் மாணவ/ மாணவிகள் இல்லவாசிகள் வெளியில் சென்று உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் படித்து அரசினர் பொதுத்தேர்வு எழுதுபவர்களுக்குத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை, அரசினர்பெண்கள் சீர்திருத்தப்பள்ளியில் எட்டாம் வகுப்பு முடித்த பெண்கள் வெளி உயர்நிலைப்பள்ளிகளில் சென்று படிப்பதைத் தவிர்த்து உயர்கல்வி தொடருவதற்காக ஒன்பதாம் வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

பஞ்சப்பள்ளி, அரசினர் முதுநிலை மற்றும் இளநிலை சீர் திருத்தப்பள்ளியில் நீரடிக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 80,000-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தனியார் கட்டடத்தில் இயங்கிவந்த திருநெல்வேலி அரசினர் வரவேற்பு இல்லத்திற்காகப் புதிய கட்டடம் கட்டு

வதற்காக 5,000 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை, அரசினர் பெண்கள் சீர்திருத்தப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு முடித்த மாணவிகள் தொடர்ந்து பத்தாம் வகுப்பு படிப்பதற்காக அப் பள்ளியில் பத்தாம் வகுப்பு தொடங்கப் பட்டு, உயர்நிலைப்பள்ளியாக மாற்றப்பட்டுள்ளது.

தனியார் மேம்பார்வையில் இயங்கிவந்த திருச்சி குழந்தைகள் உதவிச் சங்கத்தின் கீழயங்கும் வரவேற்பு இல்லம் மற்றும் வேலூர் வடஆர்க்காடு மாவட்ட குழந்தைகள் உதவிச் சங்கத்தின் கீழியங்கும் வரவேற்பில்லம்ஆகிய நிறுவனங்கள் மாணவர்களின் நலனை முன்னிட்டு அரசினரால் பொறுப்பேற்கப்பட்டது.



அரசினர் வரவேற்பில்லம், அரசினர், மாணவர் பிற்காப்பில்லம் அரசினர் மகளிர் மீட்பு இல்லம் ஆகிய நிறுவனங்களில் உணவுச் செலவினம் ரூ. 1.75-லிருந்து ரூ. 2.50 ஆக உயர்த்தப்பட்டது.

அரசினர், வரவேற்பில்லம், சேலம் அரசினர் மகளிர், காப்பகம், சேலம், திருச்சி, கோயம்புத்தூர், அரசினர் மாணவர் பிற்காப்பில்லம், மதுரை ஆகிய நிறுவனங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டன.

சீர்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் காப்பக மாணவ மாணவிகள் நாடகம் நாட்டியம் பாட்டு முதலிய துறைகளில் தங்கள் திறமையை வெளிபடுத்தும் பொருட்டு, 12-3-86 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் கலை நிகழ்ச்சி நடத்தப் பெற்றது.

1987-ஆம் ஆண்டு : சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் இல்லவாசிகள் கைத்தொழிலைக் கற்றுக் கொள்ளவும் கற்கும் காலத்திலேயே பொருள் ஈட்டவும் மின்சாரத்திலே இயங்கும் சலவைக் கூடம் 4-2-87 முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

# குமரி மாவட்டத்தில் புதிய நீர்த்தேக்கத் தொட்டி



கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில், கணபதிபுரம் என்ற கிராமத்தில் 8 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியையும், சூரப்பள்ளம் கிராமத்தில் புதிய நீர்வழங்கு குழாயையும் மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு டி. இராமசாமி அவர்கள் 5.7.1987 அன்று திறந்து வைத்தார்.

கணபதிபுரம் கிராமத்தில் 3,120 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் நீர் வீதம் தினசரி 1,24,800 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இதன் மூலம் வழங்கப்படும். சூரப்பள்ளம் கிராமத்தில் 1,560 நபர்களுக்கு, நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் வீதம் தினசரி 62,400 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் அழகன்விளை மற்றும் சில கிராம மக்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியபோது, "1977 முதல் 87ஆம் ஆண்டுவரை கிராமப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க 277.62 கோடி ரூபாயும், நகர்ப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க 143.17 கோடி ரூபாயும் தமிழக அரசு செலவிட்டுள்ளது" எனக் குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சிக்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு உகம்சந்த் அவர்கள் தலைமை தாங்கினார்.

# நிலத்தடி நீர் - ஆய்வுப் பணி



அறிவியல் ரீதியாக நிலத்தடி நீர் ஆய்வு (தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் இருப்பைக் கணக்கிட) 1965 ஆம் ஆண்டின் ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் உதவியோடு நான்கு குறிப்பிட்ட பகுதிகளில் முதன் முறையாக மேற்கொள்ளப்பட்டது.

சென்னை மாநகரிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் தொழிற்சாலைகள் பெருக வேண்டி ஒரு நாளைக்கு 27.5 மில்லியன் காலன் நிலத்தடி நீரை மீஞ்சூர், பஞ்சட்டி, தாமரைப்பாக்கம் பகுதிகளில் உற்பத்திக் கிணறுகளை உருவாக்கி இத்துறை வழங்கி வந்தது. தற்பொழுது இக்கிணறுகள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன.

நிலத்தடிநீர் ஆய்வு மற்ற பகுதிகளுக்கும் பின்னதாக விரிவுபடுத்தப்பட்டது. 1970-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பொதுப் பணித் துறையில் நில நீர்ப் பிரிவு தனியாக அமைக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் இத்தகைய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் 1978-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் கிராம வாரியாக நுண்ணிய நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கிராம வாரியாகவும் ஒன்றிய வாரியாகவும், தொழில்நுட்ப அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. அந்த நுட்ப அறிக்கையில் ஒவ்வொரு ஆற்றுப் படுகையிலும், எவ்வகைக் கிணறுகள், எத்தனை கிணறுகள், கிணறுகளுக்கு இடையே இருக்க வேண்டிய இடைவெளி போன்ற விவரங்கள்கொடுக்கப்படுகின்றன தமிழ்நாட்டில் நிலநீர் வளம் பற்றி நிலநீர்ப் பிரிவினால் ஆய்வு செய்யப்பட்டு, (நபார்டு) தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிறுவனத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இருக்கின்ற நிலநீர் அலகுகளின் தன்மை குறித்து, தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், கருமை நிலப்பகுதி பழுப்பு நிறப் பகுதி மற்றும் வெண்மை நிறப் பகுதிகளாக பிரிக்கப்பட்டு உள்ளது. நிலநீர் எடுப்பு 85 விழுக்காடுகளுக்கு மேல் இருந்தால் அவை கருமை நிறப் பகுதிகளாகவும் நிலநீர் எடுப்பு 65 முதல் 85 விழுக்காடுகளுக்கும் இருந்தால் அப்பகுதிகள் பழுப்பு நிறப்பகுதிகளாகவும், நிலநீர் எடுப்பு 65 விழுக்காடுகளுக்கு குறைவாக இருந்தால், அப்பகுதிகள் வெண்மை நிறப்பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களில் தற்பொழுது 60 ஊராட்சி ஒன்றியங்கள் முழுமையாக கருமைப் பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளது. 113 ஒன்றியங்கள் பழுப்பு நிறப் பகுதியாகவும் 185 வெண்மை நிறப்பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. வெண்மை பழுப்பு, நிறப்பகுதிகளில் சிறு பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 80 கருமை நிற ஊராட்சி ஒன்றியங்களில் இத்துறையினால் நுண்ணிய நிலநீர் ஆய்வு கிராம வாரியாக செய்யப்பட்டதின் விளைவாக, தற்பொழுது 18 ஊராட்சி 'ஒன்றியங்கள்தான் முழுமையாக கருமை நிறப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மேலும் வறட்சிக் காலங்களில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த நுட்ப அறிவுரை வழங்குதல், குடிநீர் வடிகால் வாரியத்திற்காக துளையிட இடம்தேர்வு செய்தல், மற்றும் துளையிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குழாய்க் கிணறு வாரியத்திற்குத் தேவையான குழாய்த் கிணறுகள் இத்துறையினால் போட்டுத்தரப்படுகின்றன.

தமிழ்நாட்டில் தற்போதுள்ள கிட்டத்தட்ட 2100 கிணறுகள் ஆய்வுக் கிணறுகளாக தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திங்களும் ஆய்வுக் கிணறுகளில் நீர் மட்டம் கவனித்தல் தொடரப்படுகின்றது. இதனோடு தானியங்கி நீர்மட்ட அளவைக் கருவிகளால் துளைக் குழிகளில் நீர்மட்டஏற்ற இறக்க ஆய்வு தொடரப்படுகின்றது. நீர்மட்ட ஏற்ற இறக்க அளவுகளில் ஆய்வு ஒரு இடத்தில் நிலத்தடி நீரின் இருப்பை கணக்கிட வெகுவாக உதவுகின்றது.

நிலத்தடிநீரின் இருப்பைக் கணக்கிட அவசியமான, மழையளவு, நீர் ஓட்டம், நீர் ஆவியாதல், மண் ஈர அளவுகளுக்கு இடையே உள்ள தொடர்புகளை அறிய வேண்டி இத்துறை தமிழ்நாடு முழுவதும் பரவலாக 13 இடங்களில் நீர் வடிநில ஆய்வகங்கள் நிறுவியுள்ளது.

வீண்வெளி மற்றும் தொலை உணர்வுப் புகைப்படங்களைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்தின் நிலவியல், நில அமைப்பியல் நில உபயோகம் ஆகியவற்றை ஆய்ந்தறியலாம். மேலே அறிந்தவற்றை அடிப்படையாகக்

கொண்டு 1:60,000 அளவுற்ற வரைப்படத்தில் நிலத்தடி நீர் இடைக்க வாய்ப்புள்ள இடங்களைக் குறிக்கலாம். ஆய்வினால் வெடிப்புச் சிதைவு உள்ள இடங்களை அறிந்து கிணறு அமைக்க இடம் சொல்ல உதவியாக இருக்கும். கடந்த 10 ஆண்டுகளில் வட்ட ரீதியான நிலப்பயன்பாடு மற்றும் புவிப்புறவியல் வரைபடங்கள் 1,30,069 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்குத் தயாரிக்கப்பட்டன.

நிலத்தடிநீர் ஆய்வில் நில இயற்பியல் ஆய்வு நிலத்திற்கு அடியில் உள்ள நிலநீரியல் தன்மைகள் அதாவது நீர்ப்படிவத்தின் (அக்யுபர்) ஆழம், வேறுபட்ட பாறைகள், நீரின் தரம் ஆகியவற்றை அறிய ஆற்றப்படுகின்றது. அது நிலப்பரப்பில் ஆற்றும் ஆய்வு, நிலத்தடி ஆய்வு என பாகுபடுத்தப்படுகின்றது.

உட்படுகை வாரியாக நுண்மட்ட நிலத்தடிநீர் ஆய்விற்கு நிலப்பரப்பில் நில இயற்பியல் மின் தடை ஆய்வு ஆற்றப்படுகின்றது. மேலும் இப்பணி உழவர்களுக்கும் அரசுத்துறைகளுக்கும் கிணறு அமைக்க இடம் தேர்வு செய்து கொடுக்கப் பயன்படுகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் 15,800 இடங்களில் ஆய்வாற்றப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதிலும் நிலத்தடிநீர் இருப்பை உட்படுகை வாரியாகக் கணக்கிடும் பணியை இத்துறை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 17,000 கிராமங்களுக்கும் நுண்மட்ட நிலத்தடிநீர் ஆய்வின் வழி நிலத்தடிநீர் இருப்பைக் கணக்கிட வேண்டி நில உபயோகம் நீர்ப்பாசன வழிமுறைகளில் நீர்ப்பரப்பு பகுதி கிணறுகளின் எண்ணிக்கை நீர்இறைப்புக்குறிப்புகள் சேகரிக்கப்படுகின்றன.

கசிவு நீர்க் குட்டையினால் ஊற்றின் தன்மை ஊற்றுக்களின் ஆய்வு ஆகியவற்றை அறிய வேண்டி இத்துறை கசிவு நீர்க் குட்டை ஊற்றாய்வுப்பணி மேற்கொண்டுள்ளது. மாநிலம் முழுவதும் இதற்காக 36 கசிவு நீர்க் குட்டைகள் தேர்வு செய்யப்பட்டு ஊற்றின் ஒப்புமைத் தொடர்பு ஆய்வுக்காக இக்குட்டையினால் பயனடையும் பகுதியிலும், பயனடையாப் பகுதிகளிலும் கிணறுகள் தேர்வு செய்யப்பட்டு மாதமிரு முறை நீர்மட்ட ஏற்ற இறக்கம் அறியப்படுகின்றது.

இத்துறையானது தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் நிலப்பரப்பு நீரும், மற்றும் நிலத்தடி நீரையும் ஒருங்கிணைத்து பயன்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டப் பணி மேற்கொண்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் சவுட்டஹல்லி, பென்னேஸ்வர மடம், ஆகிய இரண்டு கிராமங்களில் 221 ஏக்கர் நிலப்பரப்பில் தெளிவான ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த முன்னோடித் திட்டப் பணியின் நிலப்பரப்பு நீர் கடைக்கோடிப் பகுதியில் விடப்பட்டு நிலத்தடி நீர் முன் நிலங்களில் உபயோகப்படுத்தப்படும். நிலப்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் மாறிமாறி உபயோகிப்பதால் தரமான நீரின் மேலாண்மை எய்தப்படலாம். மேலும் ஒரு பயிர் விளைவிக்கக் கூடுமா என்றும் ஆராய்வு செய்யப்படுகிறது.

பொதுப் பணித் துறையின் நிலத்தடிநீர் பிரிவு கலந்தறிதல் பணியை விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் அரசு துறைகளுக்கும் பூபௌதிக ஆய்வின் மூலம் ஆய்வு செய்து கிணறுகள் தோண்டவும், துளை கிணறுகள் துளையிடவும், இருக்கும் கிணறுகளை ஆழப்படுத்தவும், தகுதியான இடங்கள் குறைந்த கட்டணத்தில் தேர்ந்தெடுத்து கொடுக்கிறது. விவசாயப் பெருமக்கள் இத்திட்டத்தின் பயனைப் பெற்று மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள். இந்தக் கால கட்டத்தில் சுமார் 1,527 கலந்தறிதல் பணிகள், விவசாயிகளுக்கும், அரசுக்கும் மற்ற துறைகளுக்கும் செய்து கொடுத்திருக்கிறது.

ஆய்வின் ஒரு பகுதியாக துளை கிணறுகள் போடும் பணி நிலத்தடி பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. துளையிடுதலால் பல ஆழங்களில் உள்ள நீரைத் தரும் அமைப்புகள் வெளிப்படுகின்றன.



நீரைத் தரும் அமைப்புகளில் குணாதிசயங்களைத் தீர்மானிக்க நீர் இறைப்புச் சோதனைகள் நடத்தப்படுகின்றன.

கடந்த 10 ஆண்டுகளில் 2,065 துளைக் கிணறுகள் துளையிடப்பட்டுள்ளன. சில இறவைக் கிணறுகள் தமிழ்நாடு குழாய்க் கிணறு கழகத்திற்காகவும், தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரியத்திற்காகவும் இத்துறையினால் துளையிடப்பட்டன.

பார்வைக் கிணறுகள் துளை கிணறுகள், ஆறுகள் இவற்றிலிருந்து அவ்வப்பொழுது சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகள் வேதியியல் பூர்வமாக விவசாயத்திற்கும் குடிப்பதற்கும் ஏற்றவையாக இருக்கின்றனவா என்று பகுத்தாய்ந்து உணரப்படுகின்றன. இப்பணி சென்னை மற்றும் தஞ்சாவூர் முக்கிய ஆய்வகங்களிலும் சேலம் மற்றும் திருநெல்வேலி சிறிய ஆய்வகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் 49,208 நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுத்தாய்வு செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஆற்றுப் படுகைகளின் நீர் உள்ளாற்றலை (வாட்டர் பொடென்சியல்) கணித்து மதிப்பிடவும், பிற்காலத் தேவையை சமாளிக்க தகுதி வாய்ந்த நீர் மேலாண்மை செயற்குறிப்புகள் கொண்டு வரவும் நீர் ஆய்வு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

''நீர் ஆய்வு நிறுவனத்தை வலுப்படுத்துதல்'' என்ற திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் கழக உதவியால் 2,74,000 அமெரிக்க டாலர்களைப் பெற்றிருக்கிறது. மேலும் தமிழ்நாடு அரசு ரூ. 29 இலட்சம் வைகைப் படுகையின் விரிவான ஆய்வுக்காக தன் பங்காக வழங்கியது.

தொழிலக நீரியிற் கழிவுகளாலும், உரங்களினாலும் நீர்த் தூய்மைக் கேடு ஏற்படுவது பொதுவானது. முக்கியமாக ஓடைப்பகுதிகளிலும் ஆற்றுப் படுகைகளிலும் இவை கலப்பதால் விதை சார்ந்த பகுதிகள் தூய்மைக் கேடு அடைகின்றன. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள பகுதிகளில் ஒன்று பாலாறு, இத்தொழிற்சாலைகள் நீரியற் கழிவுகளை இவ்வாற்றில்கலக்கச் செய்கின்றன. இதுபோன்ற ஊறுபடத்தக்க இடங்களில் இருந்து நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுத்தாயப்பட்டிருக்கின்றன.



# கவின்மிகு கட்டடக் கலை வளர்ச்சி

தலைமைக் கட்டடக் கலைஞா அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் திட்டங்களுக்குத் தேவையான எல்லாத் துறைகளுக்கான கட்டடங்களின் வடிவமைப்புகள் (தொழில், கூட்டுறவு, தொழில் நுட்பக்கல்வி ஆகிய துறைகளைத் தவிர) தயாரிக்கப்படுகின்றன. உள்ளாட்சி மன்றங்கள், பேரூராட்சிகள் மற்றும் தன்னாட்சிக் கழகங்களுக்குத் தேவையான வடிவமைப்புகளும் தயாரிக்கப் படுகின்றன.

மருத்துவ விடுதிகள், அரசு அலுவலகங்களுக்கான அடுக்கு மாடிக் கட்டடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், ஆராய்ச்சிக்கூடங்கள் கடைகள், திரையரங்குகள், தொழில் கட்டடங்கள், பேருந்து நிலையங்கள், நீதிமன்றங்கள் சிறைச்சாலை, விளையாட்டு அரங்குகள், குடியிருப்புகள், பூங்காக்கள், நினைவாலயக் கட்டடங்கள் போன்ற பல்வேறு பணிகளுக்கான வடிவமைப்புகள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப் படுகின்றன.

குறிப்பாக ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கிறது. தமிழ்நாடு மாநிலம் முழுவதும் ஆங்காங்கே மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், சத்துணவுக் கூடங்கள், தொழில் கட்டடங்கள், அச்சுக் கூடங்கள், காவல் நிலையங்கள், தீயணைப்பு நிலையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் தேவையான 125-க்கும் மேற்பட்ட இடங்களில் பேருந்து நிலையங்கள் அமைக்கத் தேவையான வரைபடங்களும், 75-க்கும் மேற்பட்ட இடங்களில் வணிக வளாகம், மற்றும் தினசரி அங்காடிகளுக்கான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கட்டணக் கழிப்பறைகளுக்குத் தேவையான வரைபடங்களும் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன.

பொது மக்களுக்கும் அதிலும் குறிப்பாக ஏழை மக்களுக்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களும் குடும்ப நல அறுவை சிகிச்சை நிலையங்களும் பல்வேறு மாவட்டங்களில் உள்ள சிற்றூர்களில் அமைக்கப்பட்டுள்ளன. காச நோய் மற்றும் புற்றுநோய் சிகிச்சைக்கான நிலையங்கள் தாலுகா அளவிலும், மாவட்ட அளவிலும் அமைப்பதற்கான வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன. சென்னை, திருச்சி, சிவகாசி. சேலம், ஓசூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நல காப்பீட்டு மருத்துவமனைகளும் சிறிய அளவிலான மருந்தகங்கள், பெரும்பாலான தொழிற்சாலைகள் உள்ள இடங்களில் அமைக்க வரைபடங்கள் தயார் செய்யப்பட்டன. தர்மபுரி மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் மலைவாழ் மக்களின் மேம்பாட்டுக்காக மருத்துவ நிலையங்கள் அமைக்க வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. மேலும் ஊரக சுகாதார பயிற்சி நிலையங்கள் பல்வேறு மாவட்டங்களில் உலக வங்கி உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

டென்மார்க் நாட்டின் உதவியுடன் டேனிடாத் திட்டத்தின்

ழ் கிராமப் புறங்களில் அறுவை சிகிச்சை வசதியுடன் கூடிய மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலக் கட்டடங்கள் கட்டுவதற்கான வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன. ஊரக குடும்பநலத் திட்ட கட்டடத்திற்கான மாதிரி வரைபடம் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டது. பயிற்சி பெறுகிற பார்வையற்ற ஆண், பெண்களுக்கான தங்கும் விடுதிகள் மதுரை பொது மருத்துவமனை வளாகத்தில் கட்ட இவ்வலுவலகத்தில் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. ஊனமுற்றோர் செயற்கை உறுப்புகள் பொருத்தும் கட்டடத்திற்கான வரைபடங்களும் தயாரிக்கப்பட்டன.

சென்னை, எழும்பூரில் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில் பலமாடி கட்டடத்திற்கான வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன.

ஸ்டான்லி மருத்துவமனை வளாகத்தில் அறுவை சிகிச்சைக்கான பலமாடி கட்டடத்திற்கு வரைபடங்களும் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன. மேலும் குழந்தைகள் நல மருத்துவத்திற்கான பலமாடி கட்டடங்களின் வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன.

அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் எலும்புமுறிவு சிகிச்சைப் பிரிவு மற்றும் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு ஆகிய பலமாடி கட்டடத்திற்குரிய விவர வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலும் சென்னையில் செயல்படும் அனைத்து அரசு மருத்துவமனைகளில் உள்ள விரிவாக்கப் பணிகளுக்கான வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்படுகின்றன. மேலும் மற்ற மாவட்டங்களில் உள்ள தலைமை மருத்துவமனை வளாகத்திற்குரிய விரிவாக்கப்பணிகளுக்கும் இவ்வலுவலகத்தில்வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு உதவும்வகையில் விதை சுத்திகரிப்பு நிலையங்கள், பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தின் செய்தி மையம், சீரமைக்கப்பட்ட விற்பனை நிலையங்கள் ஆகியவற்றிற்கான கட்டடங்களின் வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன. அரக்கோணத்தில் செஞ்சிலுவை இயற்கை சீற்ற நிவாரண (Disaster Relief) மையக் கட்டடத்தின் வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன.

தமிழ்நாடு கடற்கரை ஓரங்களில் புயல் பாதுகாப்பு புகலிட (Cyclone Shelter) கட்டடங்களின் வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயார் செய்யப்பட்டன.

தமிழக முதல்வரின் வாழ்க்கைத் தொழில் பயிற்சி மையங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் தோற்றுவிப்பதற்கான வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயார் செய்யப்பட்டன. இளம் குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப் பள்ளிக் கட்டடங்கள் சில முக்கிய நகரங்களில் கட்டுவதற்கான வரைபடங்கள் தயார் செய்யப்பட்டன.

பிற்பட்ட மாணவ மாணவியருக்கான தங்கும் விடுதிகள் தமிழ்நாட்டின் பல இடங்களில் கட்டப்படுவதற்கு இவ்வலுவலகத்தில் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டன. கிராமப்புறங்களில் கால்நடை மருத்துவத் துணை நிலையங்கள் அமைக்கப்படுவதற்கான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன.

மகாபலிபுரம், குற்றாலம் போன்ற இடங்களில் தொழிலாளர்களுக்கான விடுமுறைக் கால இல்லங்கள் கட்டுவதற்கான வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின் துணை நிலையங்களை பல்வேறு கிராமங்களில் அமைக்கத் தேவையான வரைபடங்கள் தயார் செய்யப்பட்டன.

இலங்கையிலிருந்து திரும்பிய தமிழர்களுக்கு தனித்தனி குடியிருப்புகள் தூத்துக்குடி மண்டபம் ஆகிய இடங்களில் குறைந்த விலையில் கட்டுவதற்கான வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன.

தமிழக காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான குடியிருப்புகள் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் கட்ட வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன. மேலும் வேளாண்மைத்துறை, மருத்துவத் துறையினருக்கான குடியிருப்புகளும் தமிழகமெங்கும் கட்டுவதற்கான வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயார் செய்யப்பட்டன.

மக்களின் குறைகளை விரைவில் அறிந்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டும், திறமையான நிர்வாகத்திற்காகவும் தமிழ்நாட்டில் உள்ள பெரிய மாவட்டங்கள் இருபிரிவுகளாகவும், முப்பிரிவுகளாகவும் அரசு ஆணைப்படி புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக காமராசர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், இராமநாத



புரம் மாவட்டம், அண்ணா மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மரவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அதற்குத் தேவையான பெருந்திட்ட வளாகத்தின் விவர வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன. தவிர மாவட்ட தலைமம இடங்களுக்கு தேவையான அலுவலகக் கட்டடங்கள், மாவட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்றம், பொதுப் பணித்துறை, காவல் கண்காணிப்பாளர் மேலும் இதர அலுவலகங்களுக்கும் பொது வசதிகளுக்குரிய கடைகள், சமுதாயக்கூடம், சுகாதார நிலையம், வங்கி, கலையரங்கம், தீயணைப்பு நிலையம், பள்ளிக்கூடம், பணிபுரியும் மகளிர் விடுதி, விருந்தினர் மாளிகை போன்ற கட்டடங்களுக்கும், மேலும் அலுவலர்களின் இல்லங்களாகிய மாவட்டாட்சியர், நீதிபதி, மாவட்ட வருவாய்த் துறை அலுவலர், காவலர் கண்காணிப்பாளர், கண்காணிப்புப் பொறியாளர் போன்ற உயர் அலுவலர்களுக்கும் மற்ற இதர அலுவலர்களுக்குரிய குடியிருப்புகளுக்கான விவர வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன.




மத்திய அரசின் கனரக ஊடுருவும் உலோகக் கலவைத் தொழிற்சாலைக்கான குடியிருப்பு பெருந்திட்ட வளாகத்தை வடிவமைத்து அதில் சம்பள விகித அடிப்படையில் 6 விதமான குடியிருப்புக் கட்டடங்கள், குடியிருக்கும் மக்களுக்குத் தேவையான அங்காடிகள், சுகாதார நிலையம், பள்ளிக் கூடங்கள், சமுதாயக் கூடம், வங்கி மற்றும் தபால் தந்தி நிலையம், தங்கும் விடுதி, விருந்தினர் மாளிகை மற்றும் பல வசதிகளுக்குரிய கட்டடங்களின் விவர வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன.

சென்னையிலுள்ள தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னையிலுள்ள குழந்தைகள் அருங்காட்சியகம், ஈரோடு பெரியார் மாவட்டாட்சியர் அலுவலகம், மற்றும் அதைச் சார்ந்த அரசு கட்டடங்கள். கோவை மண்டல வருங்கால வைப்புநிதி ஆணையர் அலுவலகம்; மதுரை மண்டல வருங்கால வைப்புநிதி ஆணையர் அலுவலகம், ஆகியன இத்துறை வடிவமைத்துக் கட்டப்பட்ட புகழ் வாய்ந்த கட்டடங்களாகும்.

மேலும் இதர துறை அலுவலர்களுக்கும் கட்டட வடிவமைப்புகள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன. உதாரணமாக, சென்னை துறைமுகக் கழகத்திற்கு மூன்று கட்டட வடிவமைப்புகள் தயாரித்துக்கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை நகரில் உயர்நீதி மன்றக் கட்டட வளாகத்தில், உயர்நீதி மன்றத்திற்குரியகூடுதல் கட்டடத்திற்கான விவர வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடத்திற்காக அடுக்கு மாடி - கட்டடத்திற்கு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

புழலில் உருவாக்கப்படும் மத்திய சிறைச்சாலைக்குரிய அனைத்துக் கட்டட வரைபடங்களும் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டவையாகும். பல்வேறு மாவட்டங்களில் உள்ள சிறைச்சா.லைகளுக்கு கூடுதல் கட்டடங்களுக்கான விவர வரைபடங்களும் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்படுகின்றன.

கன்னியாகுமரி கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு சின்னத்திற்கு அருகில் தோற்றுவிக்கப்பட விருக்கும் திருவள்ளுவரின் உருவச்சிலை உலோகத்தால் அமைப்பதற்கான விவர வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்திற்குத் தேவையான பல்வேறு திட்டங்களுக்கு வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன. சான்றாக காஞ்சிபுரம், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் பயணியர் விடுதிக் கட்டடங்கள், மண்டபம், திருச்சி மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் இளைஞர் விடுதிகளும், குற்றாலம் பிச்சாவரம், கடலூர், திருவையாறு ஆகிய இடங்களில் சிற்றுண்டிச் சாலை அமைப்பதற்கான விவர வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன. மேலும் பூங்காக்களும் திரையரங்குகளும் பல்வேறு இடங்களில் அமைப்பதற்குத் தேவையான வரைபடங்கள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டன.

* வன்முறைதான் போராட்ட முறை என்றால், தோல்விதான் அதற்குப் பரிசாகக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

* நம்பிக்கை எதன் மீது ஏற்பட்டாலும் சரிதான்; அது உண்மையில் நம்பிக்கைக்கு உரியதாக இருக்க வேண்டும். அப்போதுதான் வெற்றி கிட்டும்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்



# ஊரக சுகாதாரப் பணிகள்

தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகையான 480 இலட்சத்தில் 330 இலட்சம்மக்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமப்புற மக்களின் சுகாதாரமே நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு உயிர்நாடி.

அவர்கள் வாழுமிடங்களுக்கு மிக அருகாமையில் துணைச் சுகாதார நிலையங்கள், கூடுதல் சுகாதார நிலையங்கள், மேல்நிலைப் படுத்தப்பட்ட சுகாதார நிலையங்களை அமைத்து அவற்றின் வழியாக நோய் விகிதத்தைக் குறைக்கப் பல்வேறு பணிகளை அரசுசெய்து வருகிறது.

எனவே அரசின் இந்தக் கொள்கை, ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதிலும் துணை நிலையங்கள், நடமாடும் சுகாதாரக் குழுக்கள், சிறு சுகாதார நிலையங்கள், மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதிலும் பிரதிபலித்துள்ளது.

தமிழ்நாட்டில் 1977-78ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 383 ஆரம்பச் சுகாதார நிலையங்களும், தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 54 சிறு சுகாதார நிலையங்களும், 24 நடமாடும் சுகாதாரக் குழுக்களும் இயங்கி வந்தன. ஆல்மா ஆட்டா பிரகடனத்தின்படி பெருகிவரும் மக்கட் தொகைக்கேற்ப கி.பி. 2000 ஆண்டுக்குள் மிகப்பெருமளவில் கூடுதல்ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, 30,000 மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் வீதம் தற்போதுள்ள ஏற்கெனவே இயங்கிவந்த 383 ஆரம்பச் சுகாதார நிலையங்களுடன் மேலும் கூடுதலாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் திறக்க வேண்டுமென்பதே அரசின் உறுதியான கொள்கையாகும். இக்கொள்கைக்கு ஏற்ப, கடந்த 10 ஆண்டுகளில் மொத்தம் 461 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக, தற்போது 383 லிருந்து 461 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதியளிக்கப்பட்டு வருகின்றன. இதோடு, மட்டுமல்லாமல் 196 கிராமப்புற அரசு மருந்தகங்களை ஆரம்பச் சுகாதார நிலையங்களாக 1985-86ஆம் ஆண்டில் மாற்ற அரசு ஆணை வழங்கியுள்ளது.

முதல் தடவையாக 1981-82-ஆம் ஆண்டில் அரசு 15 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 1982-83-ல் 15 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே உள்ள 6 படுக்கைகளுடன் 24 படுக்கை வசதிகளுடன் மேம்படுத்தி அரசு ஆணை வழங்கியுள்ளது. இதில் ஊடுகதிர்ச் சாதனம் கொண்ட பிரிவு உயிர் வேதியியல் மற்றும் நோய்க் குறியியல் சோதனைக் கூடங்கள், குருதிச் சேமிப்பு வங்கி, அறுவை அரங்கம் போன்றவைகளுடன் அறுவைச் சிகிச்சை நிபுணர் (எம்எஸ்) ஒருவருடனும், மகளிர் நோயியல் (டிஜிஓ) மருத்துவர் ஒருவருடனும் இந்த மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் பார்வை நிலையங்களாக வட்ட மருத்துவ மனைக்கு இணையாகச் செயல்பட்டு வருகின்றன.

**தமிழ்நாட்டில் 461 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 269 சிறு சுகாதார நிலையங்கள், 274 நடமாடும் சுகாதாரக் குழுக்கள் இயங்கி வருகின்றன. 5,000 மக்களுக்கு ஒரு சிறு சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிறு சுகாதார நிலையத்திற்கும் ஆண்டுக்கு ரூ. 27,000 செலவு செய்யப்படுகிறது.**

1985-86ஆம் ஆண்டில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டது. மேலும் 41 வட்ட அல்லது மருத்துவ மனைகள் 1986-87ஆம் ஆண்டிற்கு மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றப்பட அரசு ஆணை வழங்கியுள்ளது. அவை ஒவ்வொன்றிலும் புதிதாக ஒரு பெண் செவ்லியர் நியமிக்கப்படவுள்ளார்.

தமிழ்நாட்டுக் கிராமங்களில் வசிக்கின்ற மக்களுக்கு-குறிப்பாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இல்லாத தூரமான இடங்களில் உள்ள மக்களுக்கு வாயில்தோறும் சுகாதார வசதிகளைக் கொண்டு செல்லும் எண்ணத்தில் 1977-78ஆம் ஆண்டு முதல் 274 ஆரம்பச் சுகாதாரக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

தற்போது 274 நடமாடும் சுகாதாரக் குழுக்கள் இயங்கி வருகின்றன. ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஆண்டுதோறும் ரூ. 20,000க்கான மருந்துகளை வழங்குவது தவிர, நடமாடும் குழுக்களுக்கென மேலும் ரூ. 20,000க்கு மருந்துகள் வழங்கப்படுகின்றன.

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நடமாடும் சுகாதாரக் குழு மூன்று மருத்துவ அலுவலர்களுடன் தொடங்கப்பட்டது. காலை, மாலையில் ஒரு மருத்துவர் தலைமை நிலையத்தில் நோயாளிகளைக் கவனிக்க மற்ற இரு மருத்துவர்களும் களப்பகுதிகளில் சென்று மக்களை நேரில் அணுகிச் சிகிச்சையில் ஈடுபடுவர். இவ்வாறு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியும் ஒரு வாரக் காலத்திற்குள் மருத்துவர் மற்றும் பணியாளர்களால் முழுமையாக மேற்பார்வைக்குள்ளாகும். சிக்கலான 'கேஸ்கள்' அருகிலுள்ள மருத்துவமனைக்கு நிபுணர்களின் ஆலோசனைக்கு அனுப்பிவைக்கப் படுவார்கள்.

இந்த நடமாடும் மருத்துவக்குழுவிற்கு 112 ஊர்திகள் அரசு வாங்கியுள்ளது. இந்த நடமாடும் சுகாதாரக் குழுக்களின் வேலைக்கு உதவிபுரிய அமைக்கப்பட்டுள்ள ஊர் நலக் குழு உறுப்பினர்கள் மக்களிடையே சுகாதாரக் கல்வியைப் போதித்து உடல்நல நடவடிக்கைகளில் உதவுவார்கள்.

ஊரக மக்களுக்கு மருத்துவச் சுகாதார வசதிகளை மேம்படுத்தி பல்வேறுபட்ட சுகாதாரத் திட்டங்களிடையே தொண்டுநிறுவனங்களின் மூலம் நடத்தப்பட்டு வரும் சிறு சுகாதார நிலையங்களும் மக்களுக்கு ஒருங்கிணைந்த சுகாதாரப் பணிகளை மேற்கொண்டுள்ளன. 5000 மக்கட் தொகைக்கு ஒரு சிறு சுகாதார நிலையம் வீதம் ஒவ்வொரு சிறு சுகாதார நிலையத்திற்கும் ஆண்டுக்கு ரூ. 27,000 செலவு செய்யப்படுகிறது. இந்தத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை (ரூ.9,000) மாநில அரசும், மற்றொரு பகுதியை மத்திய அரசும் ஏற்றுக்கொண்டு ரூ. 18,000 மானியமாகத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. மீதமுள்ள ரூ. 9000-ஐ பயனடையும் தொண்டு நிறுவனங்கள் மக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டி அல்லது சேகரிப்பாகப் பெற்றுச்செலவை ஈடு செய்கின்றது. எனினும் சிறு



சுகாதார நிலையத்தைத் தொடங்கத்தொண்டு நிறுவனம் தமது சொந்த நிதியைத் தருவதோடு கட்டடம், உபகரணங்கள், மரச்சாமான்களையும் அளிக்க வேண்டும். இந்த வகையில் கடந்த 10 ஆண்டுகளில் ஏற்படுத்த அரசாணை வழங்கிய சிறு சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 273.

இவ்வாறாக 273 சிறு சுகாதார நிலையங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டு தற்போது 269 சிறு சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

ஆரம்பச் சுகாதாரப் பணிகளை மேம்படுத்துவதற்கும் பல்வேறுபட்ட சுகாதாரப் பணிகளைத் திட்டமிட்டுச் செயலாக்கம் தரவும் தனித்து இயங்க அதிகாரம் கொண்ட முழு நேர இயக்குநர் ஒருவரைக் கொண்ட ஆரம்பச் சுகாதார நிலைய இயக்ககம் பிப்ரவரி 1980இல் அரசால் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

புதிய நிர்வாகத்தின் கீழ் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல் நிர்வாகத்தை மேற்பார்வை செய்து கீழ்க்கண்ட ஆக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 14,000 மதிப்புள்ள மருந்துகள் போதுமானதாக இல்லாததால் ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் ரூ. 20,000க்கு மருந்துகள் வழங்க அனுமதிக்கப் பட்டது.

டானிடா திட்டத்தின் கீழ் சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளுள் சேலம் மாவட்டத்தில் 12 ஆரம்பச்சுகாதார நிலையங்களுக்கும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 11 ஆரம்பச் சுகாதார நிலையங்கட்கும் கட்டடப் புனரமைப்பு வேலைகளும் அடங்கும். 1982-83ல் சேலம் மற்றும் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 69 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிரசவப் படுக்கைப் பலகைகள்,

இரத்த அழுத்தச் சோதனை செய்யும் கருவிகள், ஊசி மருந்து குழல்கள், ஊசி கொதிகலன்கள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. மேலும் இம் மாவட்டங்களில் ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் ஒரு செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பதவி வீதம் இத்திட்டத்தின் கீழ் 69 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டு அவை நிரப்பப்பட்டுள்ளன.

தேசிய கண்ணோய்த் தடுப்பு, பார்வைப் பாதிப்பைக் குறைத்து இன்னும் பல கண்ணோய்க் கோளாறுகளைத் தடுத்தல் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, அண்ணா, காமராஜர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களின் பிற்பட்ட பகுதிகளிலுள்ள 45 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வைச் சோதனை எழுத்துக்கள் பலகையும் சோதனைப் பார்வைக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் கண்நலக் கல்வியைப் போதித்து கண்பாதுகாப்பை மக்கள் உணர்வதற்கும் கண்நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கும் இவ்வாரம்பச் சுகாதார நிலையங்களில் கண் சிகிச்சை உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மொத்தம் 95 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

நீலகிரி மாவட்ட மலைவாழ் பகுதி மக்களுக்கு மருத்துவவசதி அளிக்கும் பொருட்டாக, கடந்த 10 ஆண்டுகளில் ஏற்கெனவே இருந்த 6 ஆரம்பச் சுகாதார நிலையங்களோடு மேலும் 6 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இவற்றால் ஆரம்பச் சுகாதார நிலையம் பந்தலூர், மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. 6 ஆரம்பச்சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் நடமாடும் சுகாதாரக் குழுவும் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

**கிராமப்புற மக்கள் வாழுமிடங்களுக்கு மிக அருகாமையில் துணை சுகாதார நிலையங்கள், கூடுதல் சுகாதார நிலையங்கள், மேல்நிலை சுகாதார நிலையங்கள் அமைத்து நோய் விகிதத்தைக் குறைக்கப் பல்வேறு பணிகள் செய்யப்படுகின்றன.**

மருத்துவக் கல்வியில் மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், 3 ஆரம்பச்சுகாதார நிலையம் வீதம் 8 மருத்துவக் கல்லூரிகளுடன் 24 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இணைக்கப்பட்டு கிராமப்புற மக்களுக்கு நவீன சிறப்பு முறையில் மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

173 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பிரிட்டிஷ் அரசு உதவித் திட்டத்தின்கீழ், அறுவைச் சிகிச்சை அரங்குகள் நிர்மாணிக்கப்பட்டு உள்ளன.

முதல் கட்டமாக 1979-80இல் நான்கு தென் மாவட்டங்களிலும் 107 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் அவசர விபத்துக் காலச் சிகிச்சை வசதியை அரசு துவக்கியது. படிப்படியாகச் 337 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 10 ஊராட்சி ஒன்றியங்களில் 1260 பாம்புக்கடி முதலுதவியாளர்களை நியமிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவர்கள் தகுந்த பயிற்சி பெற்ற பின் அந்தந்த வட்டாரத்தில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இணைக்கப்பட்டுப்பணியாற்றி வருகின்றனர். இவர்கள் பாம்புக் கடிக்கு முதலுதவியளிப்பதுடன் விபத்து மற்றும் அவசரக் கால முதலுதவிப் பணிகளையும் கவனித்து வருகிறார்கள்.

இத்திட்டம் 1982ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் செயல்பட்டுவரும் பள்ளி புகாச்சிறார்களின் நிலையங்களை, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணியாற்றும் 1369 மருத்துவ அலுவலர்கள் மேற்பார்வையிட்டு சத்துணவு மையங்களில் உள்ள குழந்தை கட்குத் தடுப்பு ஊசி போடுதல் மற்றும் நோய்வாய்ப்படும் குழந்தைகளைக் கண்டுபிடித்து, தக்க தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தல், சிகிச்சையளித்தல் முதலியவற்றுடன் தீவிரச் சிகிச்சை அளித்தல் போன்ற பணிகளையும் செய்கிறார்கள்.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 9 ஊராட்சி ஒன்றியங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இதில் ஏற்கெனவே 1977ஆம் ஆண்டின் முழுமைபெற்ற ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்கூறிய 9 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஆலங்காயத்தில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையம் மேல்நிலைப்படுத்தப்பட்டுள்ளது. ஏழாவது திட்ட காலத்தில் 1986-87ஆம் ஆண்டில் மேலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஜவ்வாது மலை ஒன்றியம் நம்பியம்பட்டு கிராமத்தில் வடஆர்க்காடு மாவட்டம் ரூ. 8.98 லட்சம் செலவில் வழங்கியுள்ளது.

# குடிநீர் வசதி

**1987-88ல், குடிநீருக்காக மட்டும் 15 கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது. இவ்வகையில் 985 புதிய திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன.**

**நகரக் குடிநீருக்கென ஒருகோடியே 63 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். மாநிலம் முழுவதும் 8,600 கைப் பம்புகள் அமைக்கப்படும் திட்டத்தில் கிட்டத்தட்ட 7,000 கைப்பம்புகள் பொருத்தப்பட்டுவிட்டன. மாநிலம் முழுவதும் கிராமப்புறக் குடிநீருக்காக 47 கோடி ரூபாயும், நகரக் குடிநீருக்காக 25 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்ய அரசு அனுமதித்துள்ளது.**

**இதைத் தவிர உலக வங்கியிடமிருந்து 20 கோடி ரூபாயும், ஐரோப்பிய ஐக்கிய மேம்பாட்டுத் திட்டம் மூலம் 5 கோடி ரூபாயும் கடனாகப் பெறப்பட்டு, பணி நடைபெறுகிறது. எல்.ஐ.சி.யிடமிருந்து 16 கோடி ரூபாய் இவ்வகைக்கெனக் கடன் பெறப்பட்டுள்ளது.**




ஏறத்தாழ அனைத்து மத்திய சிறைகளிலும், 16 மி.மீ. அல்லது 35 மி.மீ. திரைப்படக் கருவிகள வாங்கப்பட்டுள்ளன. மாதம் ஒன்று அல்லது இரண்டு பொழுது போக்குத் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், மாநில மகளிர் சிறையிலும் ஒரு பண்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்குப் பொது மக்களிட மிருந்து உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர். இக்குழு அடிக்கடி கூடி, சிறையில நடதத வேண்டிய கலை நிகழ்ச்சிகள பற்றி முடிவு செய்யும. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 இவ்வகையில செலவிட 1971ல் ஆணையிடப்பட்டுள்ளது. பின்னர் 1978ல் இத்தொகை ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டு மீண்டும் 1985 ஏப்ரலில் ரூ. 1,000 மாக உயர்த்தப்பட்டுள்ளது. சிறையில் நடக்கும் கலை நிகழ்ச்சிகளில் சிறைவாசிகளும் பங்கேற்கலாம். ஒவ்வொரு ஆண்டிலும் அக்டோபர் மாதம 2ஆம் தேதி காந்திஜெயந்திநாளில் சிறைவாசிகள் நல நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. சிறைவாசிகள் விளையாட்டுப் போட்டியும் அந்நாளில் நடைபெறுகிறது.

**ஊதிய ஈட்டுத் திட்டம்**

1978ல் சேலம் மத்திய சிறையில் மட்டும் ஊதிய ஈட்டுறுதித் திட்டம் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், 1982ல் அனைத்து மத்திய சிறைகட்கும், மாநில மகளிர் சிறை, வேலூருக்கும் விரிவுபடுத்தப்பட்டது. முதலில் இத்திட்டம் ஆரம்பித்த போது நாள் ஒன்றுக்கு முழுத்திறன் பெற்றவர், அரைத்திறன் பெற்றவர் மற்றும்திறன் பெறாதவர்கட்கு முறையே 40 காசு, 20 காசு, 10 காசு என்று வழங்கப்பட்ட ஊதியம் பின்னர் முறையே 100, 50 மற்றும் 25 காசு என்று உயர்த்தப்பட்டது. பல்வேறு சிறைகளில் சுமார் 2300 சிறைவாசிகள் இவ்வாறு பணி செய்து ஊதியம பெற்று வருகின்றனர். ஆண்டொன்றுக்கு ரூ. 6 இலட்சம் ஊதியமாக வழங்கப்படுகிறது. **விசாரணைச் சிறைவாசிகட்கும் இச்சலுகை வழங்கிட 1986ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**புகார்ப் பெட்டிகள் வசதி**

உச்ச நீதிமன்ற ஆணைப்படி அனைத்து மத்திய சிறைகளிலும் மாநில மகளிர் சிறை, வேலூரிலும், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டையிலும் சிறைவாசிகள் குறைகளைத் தெரிவிக்க, சிறைவாசிகளின் நலன் கருதிப் புகார்ப் பெட்டிகள் வைத்திட 16.8.82ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி அனைத்துச் சிறைகளிலும் புகார்ப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. முத்திரையிடப்பட்ட இப்பெட்டிகள் ஒவ்வொரு மாதமும் முதல் நாளில் மாவட்ட நீதிபதியால் திறக்கப்படும். மனுக்களை எடுத்தவுடன், பெட்டிகள் மீண்டும் சிறைகட்கு அனுப்பப்படும். புகார் மனுக்களின நகல்கள் சிறைத்துறைத் தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு நடவடிக்கைக்காக அனுப்பப்படும். அரசு அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய மனுக்கள் உயர்நீதிமன்றம் வழியாக அரசுக்கு அனுப்பப்படும.

**இலவசச் சட்ட உதவி**

1977 முதல் இம்மாநிலத்தில் இலவசச் சட்ட உதவி மற்றும் அறிவுரைக்கான சங்கம் செயற்பட்டு வருகிறது. பொது மக்களின் வழக்குகளை நடத்துவதுடன், சிறைவாசிகளின் வழக்குகளையும் இச்சங்கம் கவனித்து வருகிறது. கீழ்க்கண்ட வகைகளில் இச்சங்கம் சட்ட உதவிகள் செய்து வருகிறது.

விசாரணைச் சிறைவாசிகளில் முதியோர், தாய்மையுற்றோர், சிறு குழந்தைகளுடைய பெண்டிர் இவர்களுக்கு வழக்குகளை முடித்திடச் சட்ட உதவிகள் வழங்குதல்.

விசாரணைச் சிறைகளில் வழக்குகள் முடியாமல் குறிப்பிட்ட காலம் கழித்தவர்களை அதாவது 3 மாதங்கள் விசாரணைச் சிறைவாசியாக இருந்தும் வழக்கு முடிவு பெறாதவர்கள், வழக்கறிஞர்கள் வைத்துக் கொள்ள வசதியற்றவர்கள் இவர்களுக்குச் சட்ட உதவி வழங்குதல்,

பிரிவு 41 குற்றவியல் முறைச் சட்டத்தின் படி, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 15 நாட்கள் விசாரணை நாட்கள் கழித்தவர்கள்.

விசாரணைச் சிறைவாசிகளை 18 வயது முடியாதவர்கள் என்று கண்காணிப்பாளர் கருதும் சிறைவாசிகள் மற்றும் தனித்து வைத்துப் பாதுகாக்க வேண்டிய இளங் குற்றவாளிகள் ஆகியவர்கட்குச் சட்ட உதவி வழங்குதல் இயலாதது. சட்ட உதவிக் கழகத்தின் வழக்கறிஞர் ஒருவர் சிறையைத் தினமும் அல்லது தேவைக்கேற்பப் பார்வையிட்டு உதவிகள்

செய்து வருகிறார். இவருக்கென்று சிறைகளில் தனி இடம் ஒதுக்கப்பட்டுச் சட்ட உதவிகள் செய்ய வகைசெய்யப்பட்டுள்ளது.

### சிறைவாசிகள் பஞ்சாயத்து

**மதுரை மத்திய சிறையில் 27.12.79ன் படிச் சிறைவாசிகளின் நன்மைக்காகச் சிறைவாசிகள் பஞ்சாயத்து முதலில் துவக்கப்பட்டது. பின்னர் 1982ல் இம்முறை மற்ற மத்திய சிறைகட்கும் மாநில மகளிர் சிறை வேலூருக்கும் விரிவுபடுத்தப்பட்டது.**

வழக்கமாக, குற்றம் செய்யும் சிறைவாசிகள் வைக்கப்படும் சிறைகட்கு இப்பஞ்சாயத்துமுறை புகுத்தப்படவில்லை.

சரியான முறையில் உணவுப் பொருட்களைத் தயாரித்துச் சிறைவாசிகளுக்கு முறையாக வழங்கிடவும்.

பண்பாட்டு மற்றும் பொழுது போக்கு வசதிகளை மேற்பார்வையிடவும,

சிறையில் துப்புரவு, தூய்மை மற்றும் சுகாதாரத்தினை மேற்பார்வையிடவும் இப்பஞ்சாயத்து முறை துவங்கப்பட்டது.

### ஆழ்நிலை தியானம்

1982ஆம் ஆண்டு முதல் அனைத்து மத்திய சிறைகளிலும் மாநில மகளிர சிறை, வேலூரிலும் பார்ஸ்டல் பள்ளியிலும் ''மஹரிஷி அறிவாக்க நிறுவனம்'' ஆழ்நிலை தியானத்தினைப் பயிற்றுவிக்கிறது. அந்நிறுவனத்திலிருந்து அனுப்பப்படும் விரிவுரையாளர் அனைத்துச் சிறைகளிலும் ஆழ்நிலை தியான வகுப்புகள் நடத்தி வருகிறார்.

சிறைவாசிகளின் நன்மைக்காக ஆழ்நிலை தியானத்துடன் யோகாசனமும் பயிற்றுவிக்கப்படுகிறது.

சிறைவாசிகளுக்கு, சிறுதொழில்களில் பயிற்சி வழங்கிட வகை செய்யப்பட்டுள்ளது. சிறுதொழில்களில் பயிற்சி பெற்ற சிறைவாசிகள் விடுதலைக்குப் பின் நல்வாழ்வு பெற்றிட வகையுள்ளது.

அனைத்து 'பி' வகுப்புச்சிறைவாசிகளுக்கும், (தனிக் கிளைச் சிறைகள் மற்றும் திறந்த வெளிச் சிறைகள் உட்பட) சிறந்த வகையில் உணவு வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. சிறைச் சீர்திருத்தக்குழுவின் பரிந்துரைப்படி இரண்டு உள்ளாடைகளும் மூன்று கைத்துண்டுகளும் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.



அனைத்து இந்திய சிறைச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைப்படி பெண் சிறைவாசிகளின் குழந்தைகட்கு ½ லிட்டர் பால் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

சிறையிலிருந்து விடுதலை பெற்றுச் செல்லும் அனைத்துச் சிறைவாசிகளும் எழுத, படிக்கத் தெரிந்திட வகை செய்யும் நோக்கில் அனைத்து மத்தியச் சிறைகளிலும் மாநில மகளிர் சிறையிலும், பார்ஸ்டல் பள்ளியிலும் முதியோர் கல்வி மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. சிறையிலுள்ள ஆசிரியர்கட்கு இதற்கான பயிற்சிகள வழங்கப்பட்டுள்ளன.

1978ல் அனைத்து மத்திய சிறைகளின் அளவில மாநிலச்சிறை விளையாட்டுப் போட்டி கோவை மத்திய சிறையில் நடத்தப்பட்டது. பல்வேறு மத்திய சிறைகளிலிருந்தும் சிறைவாசிகள் கோவை மத்திய சிறைக்கு மாற்றப்பட்டனா. பல வண்ண உடைகளில் சிறைவாசிகள் பல்வேறு சிறைகளிலிருந்து வந்து விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டனர். ஏறத்தாழ 100 சிறைவாசிகள் இப்போட்டியில் கலந்து கொண்டனர்.

சிங்காநல்லூர் திறந்த வெளிச் சிறையில் விவசாயத தொழிலை நவீனப் படுத்த உதவி விவசாய அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏழாவது நிதிக்குழு மூலதன உதவியின் கீழ் ரூ. 862 இலட்சமும் மற்றும் வருவாய் உதவியின் கீழ் ரூ. 631 இலட்சமும் சிறை நிர்வாகத்தின் தரத்தினை உயர்த்திடப் பரிந்துரை செய்தது. இந்த மூலதன உதவியானது கூடுதலாக சிறைக்கட்டடங் கட்டி வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் மற்றும் தற்போதுள்ள சிறைகளில் தண்ணீர் வசதி, சுகாதார வசதி, மின் வசதி முதலியன ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் ஆகும். இநத முழு உதவியும் முழுமையாகச் செலவழிக்கப்பட்டு, இலக்கு எட்டப்பட்டது.

### வருவாய் உதவியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் வருமாறு

சிறைகளில் சத்துணவுத்திட்டத்தினை அறிமுகப்படுத்துதல் மற்றும் உணவில் முன்னேற்றம் செய்தல்.

சிறைவாசிகளுக்குக் கூடுதல் படுக்கை மற்றும் உடுப்புகள் வழங்குதல்.

கூடுதலாகக் கட்டப்பட்டுள்ள சிறைத்தொகுதிகளுக்குப் பணியாளர்கள் நியமித்தல்.

வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கிளைச் சிறைகளைச் சிறைத்துறையின் கீழ் கொணர்தல்.

ஊதிய ஈட்டுத் திட்டத்தினைச் சிறைவாசிகளுக்கு அறிமுகப்படுத்துதல்.

சிறுதொழில்களில் சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

சிறைவாசிகளுக்குச்சிற்றுண்டிச் சாலை வசதி ஏற்படுத்துதல்.

இந்த அனைத்துத் திட்டங்களும் வருவாய் உதவியுடன் நிறைவேற்றப்பட்டு இலக்கு எட்டப்பட்டது.

ரூ. 321 இலட்ச அளவில் புதிய மத்தியசிறை ஒன்று கட்டப்பட்டு வருகின்றது. இந்தப் புதிய சிறையின் கட்டுமானப்பணிகள் முடிவு பெற்றுவிட்டன. ஆனால், தண்ணீர் வசதி, கழிவு நீரகற்று வசதி, மின் வசதி முதலிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஆகவே, தற்போதுள்ள சென்னை மத்திய சிறை விரைவில் இந்தப் புதிய வளாகத்திற்கு மாற்றப்படும்.



# தொல்பொருள் ஆய்வில் துலங்கிடும் உண்மைகள்

கடந்த 10 ஆண்டுகளில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையில் தமிழநாடு அரசு தொலமபொருள் ஆய்வுத்துறை இந்திய நாட்டிலே உள்ள மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறைகளில் தலை சிறந்த துறையாக மலர்ந்துள்ளது. தமிழக வரலாற்றுக்கும், கலைக்கும், பண்பாட்டிற்கும் அரிய செய்திகள் பலவற்றை இத்துறை கண்டுபிடித்துப் பெரும் சாதனைகள் புரிந்துள்ளது. கல்வெட்டுக்கள், அகழவாய்வுகள், வரலாற்றுச் சின்னப் பாதுகாப்பு முதலிய பல்வேறு வகையிலும் பணியாற்றும் இத்துறை விஞ்ஞான அடிப்படையில் வரலாற்றை ஆய முனைந்துள்ளது.

இத்துறை மேற்கொண்டுள்ள பணிகளில் ஒரு இன்றியமையாத பகுதி கல்வெட்டு ஆய்வு ஆகும். மாவட்டங்களிலும், ஊர்களிலும் கோயில்களிலும், பிற இடங்களிலும் முழுமையாகவும், துண்டுகளாகவும் கல்வெட்டுகளைப் படி எடுத்துப் படித்து இன்றையோர் படிக்கும் வண்ணம் அச்சிட்டு வருகிறோம். தஞ்சை மாவட்டத்தில் மாயவரம், சீர்காழி, மன்னார்குடி, கும்பகோணம், திருத்துறைப்பூண்டி ,தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, நன்னிலம் ஆகிய வட்டங்களில் கல்வெட்டு ஆய்வுப் பணி முடிக்கப்பட்டுள்ளது. பிற வட்டங்களில் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

தமிழக அரசர்களின் காலங்களில் சில மாற்றங்களை இயம்பும் கல்வெட்டுக்களும், நடுகல் வழிபாட்டில் புதிய மரபுகளை உரைக்கும் கல்வெட்டுக்களும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தணிகை மலை முருகப் பெருமானுக்கு வழிபாட்டுக்கெனப் பல்லவ மன்னன் அபராஜிதனும், சோழப் பெருமன்னன் பராந்தகனும் ஊர்கள் அளித்ததைக் குறிக்கும் செப்பேடுகள் இரண்டு, திருத்தணிக்கு அருகில் வேளச்சேரியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இச் செப்பேடுகள் இத்துறைக்குப் பெறப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன

தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களிலும், ஒட்டடை படிந்து செல்லரித்துக் கிடக்கும் ஓலைச் சுவடிகளைச் சேமித்து அவற்றிலுள்ள இலக்கியங்களையும், மருத்துவ முறைகளையும் வெளிப்படுத்தி மக்களுக்குப் பயன்படும் வகையில் செய்தல் வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெரும் ஆர்வம் காட்டியதற்கிணங்க, பல்வேறு பகுதிகளி

லிருந்தும் ஓலைச் சுவடிகளைத் திரட்டி, அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகத்தில் சேமித்து வைக்க இத்துறையால் முயற்சி மேற்கொள்ளப்பட்டு 3,000க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் சேமிக்கப்பட்டுள்ளன.

ஓலைச் சுவடிகளைச் சேமிப்பது போல ஆங்காங்கே கேட்பாரற்றுச் சிதறிக் கிடக்கும் உதிரிச் சிற்பங்களைச் சேகரிக்கும் பணியிலும், மாவட்ட வரலாற்றுச் சின்னங்களின் பட்டியல் தயாரிக்கும் பணியிலும் இவ்வலுவலர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் முன்னதாகவே தமிழகத்தில் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்பதைக் காட்டும் கற்காலக் கருவி 1863-ம் ஆண்டு சென்னைக்கருகில் பல்லாவரத்தில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அதுவே இந்தியாவின் தொல்லியல் வரலாற்றுக்கு அடிப்படையாக அமைந்தது. சென்னைக்கருகில் பூண்டி, அத்திரம்பாக்கம், வட மதுரை ஆகிய இடங்களில் பழைய கற்காலக் கருவிகள் காணப்படுகின்றன. திருச்செந்தூருக்கு அருகில் சாயர்புரம், குலசேகரப்பட்டிணம் ஆகிய இடங்களில் நுண் கருவிகள் கிடைத்துள்ளன. ஆதலின் தமிழகத்தின் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட சான்றுகளை ஆய்வதற்குத் தனியாக ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வைகையாற்றங்கரை நாகரீகத்தை ஆராயும் வண்ணம், அவ்வாறு தொடங்கும் கம்பம் பகுதி தொடங்கி, ஆற்றங்கரையில் உள்ள ஊர்ப் பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாய்வு பல புதிய சான்றுகளை அளித்து வருகிறது.

தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் இன்னம் சரிவர ஆராயப்படவில்லை என்றிருந்த குறையைப் போக்கும் வகையில் பல இடங்களில் இத்துறை அகழ்வாய்வை மேற்கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் பல சிறந்த இடங்கள் இவ்வாறு ஆராயப்பட்டுள்ளன. கரூர், பழையாறை, கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சாவூர், போளுமாம்பட்டி போன்று பதின்மூன்று இடங்களில் இத்துறை அகழ்வாய்வு மேற்கொண்டுள்ளது.

மதுரையில் கோவலன்பொட்டல் என்னும் பகுதி உள்ளது. சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் இங்கேதான் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. இங்கு 2,000 ஆண்டுகட்கு முன்னர் புதைக்கப்பட்ட ஈமத்தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில அகழ்ந்து ஆயப்பட்டுள்ளன. ஒரு தாழியில் 35 வயது மதிக்கப்படும் வாலிபன் ஒருவனின் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது. இது ஈமக்காடாக 2000 ஆண்டுகளுக்கும் முன்னர் இருந்தது தெளிவாகிறது. இவ்விடத்தின் சிறப்பைச் சித்திரிக்க இங்கு ஒரு வரலாற்றுக் கூடம் அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்துறை மேற்கொண்ட அகழ்வாய்வுகளில் கங்கை கொண்ட சோழபுரம் ஆய்வு சிறந்ததாகும். ஏறக்குறைய கி.பி.1025ல் கங்கைப் பேர் ஆற்றங்கரை வரை வெற்றிவாகை சூடிய கங்கை கொண்ட சோழன் முதலாம் இராசேந்திரனால் சோழர் தலைநகராக நிறுவப்பட்ட இவ்வூர் வடக்கே துங்கபத்திரை ஆற்றங்கரையிலிருந்து தெற்கே ஈழம் முழுவதும் தன் கொடைக்கீழ் கொண்டு மேலைக் கடற்கரை முதல் வங்கக் கடல் கடந்து கடாரம், ஸ்ரீவிஜயம், (இன்றைய சிங்கப்பூர், மலேசியா சுமத்ரா, ஜாவா, அந்தமான் நிகோபார் தீவுகள்) ஆகியவற்றைக் கடற்படையால் வென்ற சீரும் சிறப்பும் மிக்க தலைநகராகத் திகழ்ந்தது. 250 ஆண்டுகள் தென்னகத்தின் வரலாறு முழுவதும் இத்தலைநகரின் ஆட்சிக்கு உட்பட்டுத் திகழ்ந்தது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஆட்சிக் காலத்தில் சோழர்அரண்மனைப் பகுதிகளை இத்துறை அகழ்ந்து வெளிக்கொணர்ந்துள்ளது. மாளிகைமேடு என்ற பகுதியில் சோழர் கால கட்டடப் பகுதிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அகண்ட செங்கற்களால் ஆன இரு சுவர்களுக்கு இடையில் மண் நிரப்பி ஒன்றாக்கி அதன் மேல் பல அடுக்கு மாளிகைகளைச் சோழர்கள் எடுத்துள்ளதை இத்துறை வெளிக்கொணர்ந்துள்ளது. கருங்கற்களை நாற்புறமும் பாவி குடிநீர்க்கால்கள் அமைந்துள்ளதையும் இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது. சீன தேசத்தோடு வாணிகத் தொடர்பு இத் தலைநகருக்கு இருந்தது எனக் காட்டும் சீனத்து பீங்கான் ஓடுகள் கிடைத்துள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாக, திருச்சியிலிருந்து சென்னை வந்தபோது திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஓர் இடத்தில் ஒரு



நீர் ஊற்று காணப்பட்டதாகவும் அந்த ஊற்றிலிருந்து வந்த நீரை மாண்புமிகு முதல்வர் பருகிய போது சுவையானதாக இருந்ததாகவும், அக்கால்வாய் எங்கு உள்ளது என்பதைக் கண்டறியும்படி இத்துறைக்கு ஆணையிட்டார்கள். அதன் பேரில் இத்துறையால் சென்னை தேசிய நெடுஞ்சாலையின் ஓரப் பகுதியில் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டது. இறுதியாக அந்த ஊற்று திருச்சியிலிருந்து சுமார் 20கி.மீ. தொலைவில் உள்ள கண்ணனூருக்கு அருகில் புள்ளம்பாடி கால்வாய் வெட்டுகையில் தென்பட்ட நீர் ஊற்று என்றறிந்து அவ்விடத்தில் அகழ்வாய்வினை இத்துறை நடத்தியது. கண்ணனூரில் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாக போசன மன்னர்கள் தங்களது தலைநகரத்தை அமைத்துக் கொண்டு தமிழ்நாட்டின் சில பகுதிகளை ஆட்சி செய்தனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் வைகை ஆறு கடலுடன் கலக்கும் இடத்தில் 2000 ஆண்டுக்கு முந்தைய துறைமுகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சங்க காலத்திற்குப் பிறகு 6-7ஆம் நூற்றாண்டுகளில் பல்லவ, பாண்டியப் பேரரசுகள் நிறுவப் பெறும் வரை தமிழகத்தின் வரலாறு தெளிவாக இல்லாததால் 'தமிழகத்தின் இருண்ட காலம்'

எனக் கூறி வந்தனர். ஆனால் இங்கு கிடைத்த சான்றுகள் மூலம் அக்காலத்தில் தமிழகக் கடல் வாணிகம் உச்ச நிலையில் இருந்தது என்பது தெளிவாகிறது.

சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களிலும் மிகச் சிறந்த துறைமுகமாகத் தமிழகத்தில் போற்றப்படுவது காவிரிப்பூம்பட்டினம் ஆகும். இத்துறைமுகத்தைக்கடல் கொண்டதாகப் பண்டைய இலக்கியம் கூறும். இங்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கடலில் கட்டடப்பகுதிகள் தென்படுவதாகவும் அப்பகுதிகளில் அதிக அளவில் மீன்கள் சிக்கிக் கொள்வதாகவும் கூறுவர். கடலுக்கு அடியில் பூம்புகாரில் பண்டைய கட்டடங்கள் மறைந்து கிடைக்கின்றனவா என ஆராய மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெளிப்படுத்திய ஆர்வத்திற்கிணங்கி இத்துறையின் கீழ் ஆழ் கடல் ஆய்வுப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டது. இத்துறையும் கோவாவில் உள்ள மத்திய அரசின் கடலாய்வு நிறுவனமும் இணைந்து இங்கு ஆய்வு மேற்கொண்டன. பூம்புகாரிலிருந்து தரங்கம்பாடி வரை கரை ஓரக் கடல் பகுதிகளில் நவீன நுண் கருவிகளைக் கொண்டு ஆய்வு செய்தன இக்கருவிகள் நுண் மீன் அலைகளை நீரின் மேற்பரப்பிலிருந்து, அடிப்பகுதிவரை செலுத்தி அங்குள்ள சிறு துண்டுகளைக் கூடக் கண்டு பிடிக்கும் திறன் பெற்றவை. இவ்வாற்றால் செய்த ஆய்வில் பூம்புகாருக்கு நேராகக் கடலூரில் ஒரு கல் தொலைவில் நீருக்கு அடியில் சில கட்டடப் பகுதிகள் மூழ்கி நிற்பதும், கரைப் பகுதிகளில் ஆங்காங்கே கலங்கள் மூழ்கிக் கிடப்பதும் தெளிவாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே ஆழ்கடல் அகழ்வாய்வுக்கென ஒரு பிரிவு தமிழகத் தொல்பொருள் துறையே முதன் முதலில் நிறுவியுள்ளது. இத்துறையின் கீழ் மொத்தம் 15 வரலாற்றுக் காட்சியகங்கள் உள்ளன. தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியில் சிறப்பினைக்கண்டு உணர்ந்து அறிவதே இக்காட்சியகங்கள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமாகும்.

1977ஆம் ஆண்டு முதல் 1987 ஜூன் மாதம் வரை இத்துறையால் 41 சின்னங்கள் பாதுகாப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. கீழ்குறிப்பிட்ட முக்கியச் சின்னங்கள் இத்துறையின் பராமரிப்பில் உள்ளன. இந்தச் சின்னங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் சுருக்கமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

அ) திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை
ஆ) தஞ்சை அரண்மனைக் கட்டடங்கள்
இ) தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை
ஈ) இராமநாதபுரம் இராமலிங்க விலாசம்.

1981-ம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி, ஒலி-ஒளிக் காட்சி, திருமலை நாயக்கர் அரண்மனையில் பிரமிக்கத்தக்க வகையில் உருவாக்கப்பட்டது. இந்தக் காட்சி அமைப்பு, தென் இந்தியாவிலேயே முதன் முறையாக இங்குதான் அமைக்கப்பட்டிருந்தது. திறந்தவெளி முற்றத்தில் இதற்கான பெரிய பார்வையாளர் மேடையும், மின் அணுக் கருவிகள் இயக்குதல் மற்றும் கட்டுப்பாட்டிற்காகக் குளிர் சாதனம் செய்யப்பட்ட ஒரு அறையும் இதற்காக உருவாக்கப்பட்டது. தற்போது காட்சி அமைப்பு மட்டும் சுற்றுலாத் துறையினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இதே போல் உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி மதுரை தமுக்கம் மைதானத்தில் இத்துறையின் சார்பாக இருபொருட்காட்சி அரங்கங்கள் உருவாக்கப்பட்டன தமிழர் கலாச்சாரம், பண்பாடு, போர்முறைகள், சமுதாயச் செய்திகள் போன்றவைகளைத் தத்ரூபமாக விளக்கும் வகையில் பிரம்மாண்டகோட்டை அமைப்பிலான ஒரு அரங்கமும், தமிழர் வீர விளையாட்டுகளை அனைவரும் காண வேண்டும் என்பதற்காக பிரம்மாண்டமான அளவில் வீர விளையாட்டுகள் அரங்கம் என்ற மற்றொரு அரங்கும் இத்துறையால் அமைக்கப்பட்டன. இந்த அரங்கங்கள் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள், மற்றும் பொதுமக்களால் பார்வையிடப்பட்டு, பெரிதும் பாராட்டப்பட்டவை.

தரங்கம்பாடியில் டேனிஷ் அருங்காட்சியகம் அமைத்தலுக்காகக் கட்டடத்தின் உட்புறம் சீர் செய்யப்பட்டு, சில பழுது பார்த்தல் பணிகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த ஜனவரித் திங்களில் மாண்புமிகு டென்மார்க் நாட்டுப் பிரதமர் வருகையினை ஒட்டி முக்கியமான பராமரிப்புப் பணிகளும் சிறு பழுது பார்த்தல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன். கோட்டைக் கட்டிடம் முழுவதற்கும் பெரும் அளவில் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.



அகழ்வாய்வில் கிடைக்கும் 'கலைப் பொருள்களையும் வரலாற்றுச் சின்னங்களையும், இரசாயன முறையில் தூய்மை செய்து பாதுகாக்க, 1980-81ஆம் ஆண்டு இத்துறையில் 'இரசாயனக் கூடம்' ஒன்று சென்னையிலும் அதன் கிளை மதுரையிலும் உருவாக்கப்பட்டுள்ளன. இது தோன்றிய நாள் முதல் 650 ஓலைச் சுவடிகள் இரசாயனக் கலவை பூசி பாதுகாக்கப்பட்டுள்ளன. களிம்பேறியிருந்த 1000 பண்டைய நாணயங்கள் தூய்மை செய்யப்பட்டுள்ளன. 2000 பானை ஓடுகளும் 200க்கு மேற்பட்ட மணிகளும், 450 இரும்புப் பொருட்களும் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

தமிழக வரலாற்றைப் பொது மக்கள் எளிதாக அறிந்துகொள்ளும் நோக்கத்துடனும், அறிஞர்கள் இத்துறை புதிய வரலாற்றுக் கண்டுபிடிப்புகளை அறிந்து கொள்ளும் நோக்கத்துடனும், தஞ்சை, திருச்சி, செங்கற்பட்டு, சென்னை, பூண்டி, கோவை ஆகிய இடங்களில் மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. மேலும் தமிழகச் சுற்றுலா வாரியம் நடத்திய சேலம், சென்னை, மதுரை, கோவை கண்காட்சிகளிலும் இத்துறை பங்கு கொண்டு சிறப்புறப் பணியாற்றியது.

தென்னிந்திய தொல்லியல் கண்காட்சி ஒன்று இத்துறையும், கர்நாடக அரசு, ஆந்திர அரசு, மகாராஷ்ட்டிர அரசு தொல்லியல் துறைகளும் இணைந்து முக்கிய வரலாற்றுக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய கண்காட்சியினை நடத்தின இது சென்னை, மதுரை, ஐதராபாத், பம்பாய் போன்ற நகரங்களிலும் தொடர்ந்து அமைத்துப் பல அறிஞர் பெருமக்களும், பொது மக்களும் அறிந்து கொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டு சேரா நாடுகள் மாநாட்டினை ஒட்டி டெல்லியில் 'தென்னிந்திய செப்புத் திருமேனிகள்' என்ற கண்காட்சியினை இத்துறை அறநிலையத் துறையோடு இணைந்து நடத்தி அனைத்துலகப் பாராட்டினைப் பெற்றதும் இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

# தீத்தடுப்பு

**1967**-ஆம் ஆண்டுஅக்டோபர் திங்கள் முதல் தனித்துறையாக தமிழ்நாடு தீயணைப்புத் துறை இயங்கி வருகிறது. தீ விபத்துகளினின்று உயிரையும் உடைமைகளையும் காப்பாற்றுவதே இத்துறையின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

தீ விபத்தினைத் தடுப்பதும் தீயை அணைப்பதும் இத்துறையின் தலையாய பணியாகும். தீ விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுத்தல், தீயணைக்கும் பணியை செய்தல் ஆகிய பணிகளுடன் இத்துறையின் கடமை முடிவதில்லை. அவசரக்கால இடருதவி பணியையும் செய்து வருகிறது. தீ விபத்துக்களால் மட்டுமின்றி, வெள்ளம், புயல், நில நடுக்கம், கட்டிடம் இடிதல் போன்ற இயற்கை சீற்றங்களாலும், விஷக்குளவுகள், விஷப்பாம்புகள், வெறி நாய்கள் போன்றவைகளால் ஆபத்து ஏற்படும்போதும் மற்ற எல்லாவித விபத்துக்களின் போதும் உயிரையும் உடைமையையும் இவர்கள் இலவசமாகவே அளிக்கின்றனர்.

பொருட்காட்சிகளிலும், திருவிழாக்களிலும் தீத்தடுப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன், சிதைந்த கட்டிடங்களின் இடுபாடுகளில் சிக்கியவர்களையும் ஆழ் கிணற்றில் வீழ்ந்தவர்களையும் வெள்ளத்தில் மூழ்கியவர்களையும் அபாயம் விளைவிக்கக் கூடிய பூச்சிகள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களையும் மற்றும் இதுபோன்ற பிற இடர்களில் சிக்கிய மக்களையும், கால்நடைகளையும் மீட்டு நற்பணி புரிந்து வருகிறது.

தமிழ்நாடு தீயணைப்புத்துறை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இம்மாநிலம் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒன்று சென்னையையும் இரண்டாவது மதுரையையும் மூன்றாவது திருச்சியையும் தலைமையிடமாகக் கொண்டு தனித்தனி துணை இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோட்டமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களைத் தன்னகத்தேக் கொண்டு ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கீழ் செயல்பட்டு வருகிறது. கோட்ட தீயணைப்பு அலுவலருக்கு நிர்வாக மற்றும் செயல் பணிகளில் உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர் உதவி புரிகிறார். அண்மையில் பல புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டதின் விளைவாக, ஒரு கோட்ட தீயணைப்பு அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்ட தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. படிப்படியாக நிர்வாகத் திறமையினை அதிகரிக்கும் நோக்கத்துடன் தற்போதுள்ள கோட்டங்களை மேற்கொண்டு பிரிக்க அரசு நடவடிக்கை எடுத்தது.

இம்மாநிலத்தில் 1987-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் 162 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

பலமாடிக் கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களின்போது தீத்தடுப்பு மற்றும் மீட்புப்பணிகளுக்காக 1980-ஆம் ஆண்டு 'ஸ்நார்க்கல்' என்ற நவீன வசதிகள் கொண்ட ஓர் ஊர்தி ரூ. 42 இலட்சம் செலவில் இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டது. இப்புதிய ஊர்தி சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் ஏற்படும் சில பெருந்தீ விபத்துக்கள் மற்றும் குடிசை விபத்துக்களின்போது பங்கேற்றுப் பணியாற்றுவதில் இத்துறைக்கு பெரிதும் உதவி புரிந்து வருகிறது.

தமிழ்நாடு தீயணைப்புத்துறையில் செயல் பிரிவில் உள்ள பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களுக்கு போதிய பயிற்சி அளிக்க ஒரு மாநிலப் பயிற்சிப் பள்ளி நிறுவப்பட்டது. இப்பயிற்சிப் பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு, அவரது பணிகளில் நிலை தீயணைப்பு அலுவலர், முன்னணித் தீயணைப்போர், தீயணைப்போர் உதவி புரிகின்றனர்.

வடமண்டல இயக்குநர் இப்பயிற்சி பள்ளிக்கு முழுமையான கட்டுப்பாடு அலுவலர் ஆவார். ஏற்கெனவே பணியில் உள்ள அலுவலர்களின் நன்மைக்காக மறு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது மேலும் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கட்கும் தனியார் நிறுவனங்கள், படைப்பகுதி ஆகியவற்றில் பணியாற்றும் அலுவலர்கட்கும் தீயை அணைப்பதற்குரிய அடிப்படை பயிற்சியும் இப்பயிற்சிப் பள்ளியில் அளிக்கப்படுகிறது. இதற்காக நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணமும் வசூல் செய்யப்படுகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் தீயணைப்புத் துறையின் முன்னேற்றம் மற்றும் சாதனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | விவரங்கள் | 1977-ம் ஆண்டின் இறுதி நிலவரம் | 1987-ஆம் ஆண்டின் தொடக்க நிலவரம் |
|---|---|---|---|
| 1. | தீயணைப்பு நிலையங்கள் | 103 | 162 |
| 2. | ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் | 3535 | 5235 |
| 3. | தீயணைப்பு நிலைய கட்டிடங்கள் | 30 | 67 |
| 4. | அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் | 80 | 200 |
| 5. | கோட்டத் தீயணைப்பு அலுவலகங்கள் | 9 | 16 |
| 6. | மண்டல தீயணைப்பு அலுவலகங்கள் | 2 | 3 |
| 7. | ஊர்திகள் | 438 | 529 |



# சாலைகள்- பாலங்கள் மேம்பாடு

அரசு சாலைகளைப் பராமரித்தல், தற்காலப் போக்குவரத்திற்குத்தகுந்தாற்போல் தற்போதைய சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் கிராமப் புறம், பழங்குடியினர், கடலோரம் மற்றும் பின்தங்கிய இடங்களின் தேவைகளை அதிகப்படுத்தச் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இத்துறையில் முக்கியமாக(அ) மாநிலச் சாலைகள் திட்டம், பிற சாலைகள் திட்டம், கிராமச் சாலைகள் திட்டம் (M. N. P.) மலை சாதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்கள் அடங்கிய மாநில திட்டங்கள் மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் மலை வாழ் மேம்பாட்டுத் திட்டம், மற்றும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் அடங்கிய மத்திய அரசு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட திட்டங்களில் பெரும்பாலும் புதிய சாலைகள் அமைத்தல், ஓடுதளமற்ற சாலைகளில் போக்குவரத்திற்கேற்ப ஓடுதளம் அமைத்து மேம்பாடு செய்தல், அரசுச் சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்துதல், வளைவுகளை நேராக்குதல், தேவைப்படும் இடங்களில் போக்குவரத்திற்குத்தடையில்லாமல் நிதி ஒதுக்கீட்டினை அனுசரித்து புதிய மற்றும் பழைய பாலங்கள் சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் திரும்பக் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சாலைகளை பேருந்து வழித்தட மேம்பாட்டு திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்தல் மற்றும் அனைத்து அரசுச் சாலைகளையும் பராமரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1-4-1977 முதல் 31-3-87 வரையிலான கால கட்டத்தில் 'சாலை மற்றும் பால' வேலைகளில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை திட்டப் பணிகளுக்கு ரூ. 226.29 கோடியும் திட்டம் சாராப் பணிகளுக்கு ரூ. 345.77 கோடியும் செலவு செய்து சாதனைகள் புரிந்துள்ளது.

1977-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் தமிழ்நாட்டில் இருந்த சாலைகளின் மொத்த நீளம் 88,938 கி.மீ. ஆகும். இது 1987-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் 1,36,626 கி.மீ. ஆக அதிகரித்துள்ளது. 1977-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் 31,545கி.மீ. நீளமுள்ள சிமிட்டி கற்கலவை மற்றும் தார்ச்சாலைகளையும் 24,678 கி.மீ. நீளமுள்ள கற்சாலைகளையும், 32,715 கி.மீ. நீளமுள்ள மேற்பரப்புள்ள சாலைகளையும் கொண்டு இருந்தது. தற்போது 40,607 கி.மீ. நீளமுள்ள சிமிட்டி கற்கலவை மற்றும் தார்ச்சாலைகளும், 35,176 கி.மீ. நீளமுள்ள கற்சாலைகளும் 58,959 கி. மீ. நீளமுள்ள மேற்பரப்புள்ள சாலைகளும் தமிழ்நாட்டில் உள்ளன. இப்புள்ளி விவரங்கள் மேற்படி கால கட்டத்தில் ஒரு தலங்களின் நீளத்திலும் தரத்திலும் ஏற்பட்டுள்ள மேம்பாட்டினைக்குறிக்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில் 170 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. சாலை மேம்பாட்டுப் பணிகள் 217 மேற்கொள்ளப்பட்டன.

மேலும் இக்கால கட்டத்தில் திருச்சி அருகே பாலக்கரையில் ஒரு வாகன சுரங்கப்பாதை, திருத்தணிகையில் ஒரு வாகன சுரங்கப்பாதை, சென்னை நெல்சன் மாணிக்கம் சாலையில் ஒரு வாகன சுரங்கப்பாதை, ஆயிரம் விளக்குப் பகுதியில் ஒரு சுரங்க நடைபாதை, சென்ட்ரல் அருகே வால்டாக்ஸ் சாலையில் ஒரு



சுரங்க நடைபாதை, வடக்கு கடற்கரைச் சாலையில் ஒரு சுரங்க நடைபாதை, சபையர் தியேட்டர் அருகே ஒரு சுரங்க நடைபாதை, இந்து நாளிதழ் அலுவலகம் அருகே ஒரு சுரங்க நடைபாதை, ஆசிரியர்கள் பயிற்சி கல்லூரி அருகே ஒரு சுரங்க நடைபாதை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி அருகே ஒரு சுரங்க நடைபாதை, கிண்டியில் ஒரு சுரங்க நடைபாதை, எல். ஐ. சி. அருகே ஒரு சுரங்க நடைபாதை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ் ஆறு கட்டங்களில் ரூ. 75.67 கோடி ரூபாய்க்கு மொத்தம் 6428 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டு கூடுதலாக ரூ. 10 கோடிக்கு 635 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 2948 கிராமங்களும் 1000-1500க்கும் இடைப்பட்ட மக்கட் தொகையுள்ள 2834 கிராமங்களும் பயன் பெறும் வகையில் ரூ. 72.60 கோடி செலவில் 6391 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டுள்ள்ன. இன்னும் 814 பெரிய கிராமங்களும் 1500 இடைப்பட்ட கிராமங்களும் 6698 சிறிய கிராமங்களும் இன்னும் இணைக்கப்படாமல் உள்ளன. 1987-88-ஆம் ஆண்டில் 200 பெரிய கிராமங்களும் (1500-க்கும் மேற்கட்ட மக்கட் தொகை) 80 இடைப்பட்ட கிராமங்களும் (1000 - 1500 மக்கட் தொகை), 150 சிறிய கிராமங்களும் (1000-க்கும் குறைந்த மக்கட்தொகை) ரூ.6.8 கோடி செலவில் சாலைகளை இணைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1977-லிருந்து 1987 முடிய ரூ. 58.08 கோடி செலவில் சுமார் 3526 கி.மீ. நீளமுள்ள சாலைகள், 1926 பெரிய கிராமங்களும் 1548 சிறிய கிராமங்களும் இணையும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

1979-ம் ஆண்டிலிருந்து 1987 வரை 8753 கி.மீ. நீளமுள்ள பேருந்து வழித்தடச் சாலைகள் அரசுச் செலவில் மேம்பாடு செய்யப்பட்டது. தற்பொழுது அரசு ஆணைப்படி இச்சாலைகள் அனைத்தும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன. அரசுச் சாலைகளாக இத்துறை மூலம் பராமரிக்க எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் ஊராட்சி மன்றங்களின் நிதிச்சுமை குறைக்கப்படுகிறது. இதுவரை சுமார் 78 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

1984-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் 100 விழுக்காடு மத்திய உதவியுடன் ஊரக நில மற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மொத்தம் 4918 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்வதற்காக ரூ.61.02 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ரூ. 39.25 கோடி செலவில் 3328 கி.மீ. நீளமுள்ள 997 சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் கட்டுமானத்தின் வெவ்வேறு நிலைமைகளில் உள்ளன.

1984-85-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி பகுதியில் உள்ள 41 கி.மீ. நீளமுள்ள கூடமலை குண்டு வெள்ளிமலை சாலைப் பணி ரூ. 260 இலட்சம் செலவில் எடுத்துச் செய்வதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. வைகை நதியின் குறுக்கே கட்டப்படும் பாலப் பணியை தவிர சாலைப் பணிகள் அனைத்தும் முடிவுறும் நிலையில் உள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 1975-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31-3-87 வரை ரூ. 1468இலட்சம் செலவிலான மொத்தம் 552 கி.மீ. நீளமுள்ள 59 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 213 கி.மீ. நீளமுள்ள 54 பணிகள் ரூ. 487 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 500 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட 165 கி.மீ. நீளமுள்ள 16 பணிகள் நடைபெற்று வருகின்றன.

பழங்குடியினர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேலம், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, தருமபுரி, திருச்சி, ஆகிய மாவட்டங்களில் உள்ள கொல்லிமலைத் தொடர்; ஏற்காடு மலைத்தொடர்; கல்ராயன் மலைத் தொடர்; அரனூர்த்து மலை; பச்சமலை; சவ்வாது மலைத் தொடர்; சித்தேரிமலைத் தொடர்; பச்சமலை ஆகிய பழங்குடியினர் பகுதிகளில் சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டம் 1976-77-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1986-87இறுதி வரை ரூ. 1498 இலட்சம் செலவிலான 380 கி.மீ. நீளமுள்ள 26 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அவற்றில் ரூ. 533 இலட்சம் செலவிலான 184 கி.மீ. நீளமுள்ள 14 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 965 இலட்சம் செலவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 196 கி.மீ. நீளமுள்ள 12 பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்கு மலைப் பகுதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்தில் 8 கி.மீ. நீளமுள்ள சிறுமலை மலைச்சாலைப் பணி ரூ.15 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ரூ. 337 இலட்சம் செலவிலான 136.50கி.மீ. நீளமுள்ள 8 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் தர்மாத்துப்பட்டி-ஆடலூர் சாலை 21 கி.மீ. நீளத்தில் ரூ. 60 இலட்சத்தில் முடிக்கப்பட்டுள்ளது. மற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்திய அரசு கிழக்குக் கடற்கரைச் சாலையில் (நாகப்பட்டினம்-கன்னியாகுமரி) 17 பாலப் பணிகளையும் 68.4 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்தும் பணிகளையும் ரூ. 3 கோடி செலவில் எடுத்து செய்வதற்காக ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 50 விழுக்காட்டு தொகையான ரூ. 1.50 கோடியை இந்திய அரசு கடன் உதவியாக அளித்துள்ளது. இப்பணிகள் முன்னேற்றத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம் சென்னைப் பெருநகரப் பகுதியில் உள்ள நெடுஞ்சாலைத் துறை மற்றும் சென்னை மாநக

ராட்சி ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைகளை மேம்பாடு செய்வதற்கு வழிவகை செய்கிறது.

12 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தி வலுப்படுத்தும் திட்டத்தின்கீழ் ஈ.வெ.ரா. பெரியார் சாலை (சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து புது ஆவடி சாலை சந்திப்பு வரை)— பணி முடிக்கப்பட்டுள்ளது.

அண்ணா சாலை - கத்திப்பாராவிலிருந்து விமானதளம் வரை தேசிய நெடுஞ்சாலை 45-ல் கி.மீ. 11/7-14/4 மேம்பாடு செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

அண்ணா நகர் சாலை சந்திப்பிலிருந்து உள் வட்டச் சாலை சந்திப்பு வரையிலான புது ஆவடி சாலையை மேம்பாடு செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

வேளச்சேரி புறவழிச்சாலை, தரமணி புறவழிச்சாலை, அமைக்கும் பணியில் நிலம் கையகப்படுத்த வேண்டிய பகுதிகளையும் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டிய பகுதிகளையும் தவிர ஏனைய பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அண்ணா நகர் மேற்கிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டை வரையிலான சாலைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

திருவொற்றியூர் - பொன்னேரி பஞ்செட்டி சாலையில் கி.மீ. 7/4 லும்; திருவொற்றியூர்-பொன்னேரி பஞ்செட்டி சாலையில் கி.மீ. 8/2லும் புதிய பாலங்கள் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

திருவொற்றியூர் - பொன்னேரி பஞ்செட்டி சாலையில் கி.மீ. 5/2-ல் பாலம் கட்டும் பணி தொடங்கப்பட உள்ளது.

கோட்டூர் புரம் அருகே அடையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

சென்ட்ரல் இரயில் நிலையம் அருகேயும் அடையாற்றில் உள்ள புற்றுநோய் மருத்துவமனை அருகேயும் உள்ள பாலங்களை திரும்பக் கட்டும் பணி நிறைவேற்றப்பட்டது.

சென்னை -கல்கத்தா சாலையில் கி.மீ. 7/6 லான பாலத்தை மீண்டும் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

உலக வங்கி நிதி உதவியுடன் இயங்கும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1977-78-ல் தொடங்கப்பட்டது. இரண்டு கட்டங்களாக வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. முதல் கட்டத்தின் மூலதனச் செலவு ரூ. 7.18 கோடியாகும். (பிரதான சாலைகளுக்கு ரூ. 4 கோடியும், மாநகராட்சிக்கு சொந்தமான மற்ற சாலைகளுக்கு ரூ. 3.18 கோடியும் இதில் அடங்கும்) இரண்டாவது கட்டத்தின் மூலதனச் செலவு ரூ. 5.32 கோடி ஆகும். ரூ. 10.88 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதற் கட்டப்பணியாக கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுவதுடன் மூன்று தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் வகையில் 11.70 கி.மீ. நீளமுள்ள உள்வட்டச் சாலை ஒன்று அமைக்கப்பட உள்ளது.

11.70 கி. மீட்டரில் 9.30 கி.மீ. முடிக்கப்பட்டுள்ளது. கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

தண்டையார்பேட்டை இரயில் நிலையம் அருகே வைத்திய நாதன் தெருவில் ரூ. 395 இலட்சம் செலவில் இருப்புப் பாதை/சாலை தரப் பிரிவு ஏற்படுத்தும் பணிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

அணுகு சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ரூ. 57 இலட்சம் செலவில் கான்டஸ் சாலை, டிமல்லோஸ் சாலை, பிரகாசம் தெரு, கீழ்ப்பாக்கம் கார்டன் சாலை, கோபதி நாராயணன் சாலை, வெங்கடநாராயணன் சாலை ஆகியவற்றில் உள்ள சிறு பாலங்களை திரும்பக் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டப் பணிகளாக ரூ.381 இலட்சம் செலவில் நிலம் கையகப்படுத்துவதுடன் பாடியில் இருந்து தேசிய நெடுஞ்சாலை-5ஐ இணைக்கும் வகையில் கி.மீ. 11/7 முதல் 17/5 வரை உள் வட்டச்சாலை அமைக்கும் பணியில் (முதற்கட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட உள் வட்டச் சாலையைத்தொடர்ந்து) நிலம் உள்ள இடங்களில் வேலை நடைபெற்று வருகிறது.

ரூ. 151 இலட்சம் செலவில் வில்லிவாக்கத்திலிருந்து ஆவடி வரை சென்னை-திருவள்ளூர் சாலை கி. மீ. 10/4 முதல் 25/0 வரை மேம்பாடு செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

கிராமங்களின் உட்பகுதியில் கரும்பை விரைவில் எடுத்துச் செல்வதற்காக கரும்புத் தீர்வை நிதியிலிருந்து சாலைகள் அமைக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன.

1-4-80 முதல் 31-3-87 முடிய 107 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. 1987-88-ஆம் ஆண்டில் மூலப்பணிகள் ரூ. 150 இலட்சமும், பராமரிப்புப் பணிக்கு ரூ. 50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.



தமிழ்நாட்டில் இராமேஸ்வரம் தீவுக்கு அருகே தேசிய நெடுஞ்சாலை 49-ல் பாக் ஜலசந்தியின் குறுக்கே உயர் மட்ட சாலை மேம்பாலம் கட்டும் பணிக்கு முதலில் ரூ. 5.33 கோடிக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. இப்பணி மைய அரசால் நிதியுதவி அளிக்கப்பட்டு மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை விசைகளையும் கடுமையான கடல் அரிப்பு,துருப்பிடிப்பு போன்ற சூழ்நிலைகளையும் எதிர்த்து,கடலின் குறுக்கே பாலம் கட்டும் இத்திட்டம்தான் இந்தியாவிலேயே முதன் முதலானதாகும்.

இப்பாலத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ.16.65 கோடியாகும். இப்பணி மார்ச் மாதம் 1988-ல் முடிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 31-3-87 முடிய ரூ. 15.53 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 13.01 கோடி 1977 முதல் 1987 வரை செலவு செய்யப்பட்டதாகும். 78 தூண்களில் 71 தூண்களும், கப்பல் போக்குவரத்து இல்லாத 76 தூண்களில் 64 தூண்களும் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. கப்பல் போக்குவரத்துத்தூண்களின் பணி நடைபெற்று வருகிறது.

1987-88-ம் ஆண்டு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாம் ஆண்டாகும். முன் ஆண்டு திட்டக் காலத்தில் பல்வேறு திட்டங்களின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படாத எஞ்சியப் பணிகள் 1987-88-ஆம் ஆண்டில் முடிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ளன. தேசிய நெடுஞ்சாலை (நகர்ப்பகுதி) மாநில நெடுஞ்சாலை, மாவட்டப் பெருஞ்சாலை, இதர மாவட்டச் சாலை மற்றும் இதர சாலைகள் திட்டம் ஆகியவற்றின் கீழ் தற்போது 204 சாலை, பால வேலைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 122 பால வேலைகளும், 82 சாலை வேலைகளும் அடங்கும். இப்பணிகள் செயல்பாட்டின் பல்வேறு நிலைகளில் உள்ளன.ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநில அரசு திட்டங்களுக்காக ரூ. 130 கோடி மூலதனச் செலவு என்று தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 1987-88-ஆம் ஆண்டின் மூலதனச் செலவு ரூ. 41.13 கோடி ஆகும்.

## இசை மேதை தியாகராயரின் தெலுங்கு கீர்த்தனைகளை தமிழில் மொழிபெயர்த்து கேசட்டில் வெளியிட முதல்வர் விருப்பம்

இசை மேதை தியாகராயர் திருவாரூரில் பிறந்தவர். அவர் சுந்தரத் தெலுங்கில் சாகா வரம் பெற்ற சாகித்தியங்களை உருவாக்கி ஒவ்வொன்றையும் தனித்தனி இராகத்தில் பாடியவர். தமிழ்நாட்டில்தான் ராகமே தோன்றியது. கர்நாடக சங்கீதம் என்பது கர்நாடக மாநிலத்தில் தோன்றியது என்று பொருள் அல்ல. கர்நாடக சங்கீதம் என்றால் காதுக்கு இனிய சங்கீதம் என்றுதான் பொருள். பொருள் நயமும், ஓசை நயமும் சொற்சுவையும் குன்றாமல் தியாகராயரின் கீர்த்தனங்களைத் தேனினும் இனிய தமிழில் அமிழ்தினுமினிய அதே இராகங்களில் பாடல்களை இசைச் சக்கரவர்த்தி பாலமுரளி கிருஷ்ணா அவர்களும் அவாது துணைவியாரும் மொழி பெயர்த்துள்ளனர். முதல் தடவையாக தமிழ் அன்னைக்கு 12 அல்லது 13 பாடல்களை இரண்டு கேசட்டுகளின் மூலம் காணிக்கையாக்க இருக்கின்றனர். திரைப்படத்தின் மூலம் ஆட்சியில் மறுமலர்ச்சியையும், புரட்சியையும் தோற்றுவித்த டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மூலம் கேசட்டுகளை வெளியிடத்தீர்மானித்து இருக்கிறோம்.

திரு வி.வி. சுவாமிநாதன்,
மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்

## கல்லூரி ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்

கல்லூரி ஆசிரியர்கள் சிறப்புடன் கற்பிக்க அவர்களின் பயிற்சிக்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன 1980-81, 81-82 ஆகிய ஆண்டுகளில் ஆங்கிலம் அல்லாத பாடங்கள் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 50 கல்லூரி ஆசிரியர்கள் 1980-81-ல் மதுரையில் நடந்த பயிற்சிக் கருத்தரங்கு நிகழ்ச்சிகளிலும், மற்றொரு 50 கல்லூரி ஆசிரியர்கள் 1981-82-ல் கோயம்புத்தூரில் நடந்த பயிற்சிக் கருத்தரங்கு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். கல்லூரி ஆங்கில ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் கல்லூரிக்கல்வி இயக்குநரகம் 30 புத்தொளிப் பயிற்சி மறுபயிற்சி நிகழ்ச்சிகளை 80-81 முதல் ஆண்டுதோறும் நடத்தி வந்துள்ளது. இவ்வாறு நடத்தப்பட்ட ஆங்கில மொழி இலக்கியம் கற்பித்தல் குறித்த நிகழ்ச்சிகளுக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 35,000 வீதம் 1980-81 முதல், அரசு நிதி பகுதி 1 திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டு வருகிறது. 1986-87ல் இத்தகைய பயிற்சிக்காக அளிக்கப்பட்டுள்ள தொகை ரூ.40,000. 300க்கும் அதிகமான கல்லூரி ஆங்கில ஆசிரியர்கள் மேற்கண்ட பயிற்சி ஏற்பாடுகளினால் பயன் பெற்றுள்ளார்கள். ஆங்கில மொழி இலக்கியப் பயிற்சி வகுப்புகள் ஆசிரியர்களை ஊக்குவித்து அவர்களின் உற்சாகம் கலந்த பங்கேற்பைப் பெற்று வருகின்றன.

# தொழிலாளர் நலம் காக்க
# முற்போக்கு நடவடிக்கைகள்



**தொ**ழில் உறவைப் பொறுத்த வரை எப்போதுமே தமிழக அரசின் கொள்கை தொழிலாளர் நலம் பெற வேண்டும், தொழில் வளம் பெருக வேண்டும் என்பதாகவே தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. இந்தக் கொள்கையை அடைய தமிழ்நாட்டில் உள்ள முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறைப்படுத்தப்படாத தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக அரசு பல முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே தொழில் தகராறுகள் ஏற்படுகிறபோது உடனே அவற்றில் தலையிட்டு இரு தரப்பாருக்கும் இடையே சுமுகமான உடன்பாடு ஏற்படுத்துவதிலும் மாநிலத்தில் தொழில் அமைதியைக் காப்பதிலும் மாநிலத் தொழிலாளர் துறை பெரும் பங்கு வகிக்கிறது. இந்த வகையில் தமிழ்நாடு நல்ல தொழில் இணக்கச் சூழலைப் பெற்றிருப்பதுடன் தொழிலாளர் நிர்வாகத்திற்கிடையே தொழில் அமைதியும், தொழில் உறவும் தொடர்ந்து நீடித்திருக்கும் நிலையையும் பெற்றுள்ளது.

1977-ஆம் ஆண்டில் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 8,508 தொழிற்சாலைகள் இருந்தன. 1986ம் ஆண்டு இறுதியில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 13,496 ஆக பெருகி உள்ளது. இத்தொழிற்சாலைகளில் 8,11,936 தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். இதைத் தவிர கடைகள், நிறுவனங்கள், உணவு விடுதிகள், பீடி தொழில் நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் தோட்ட நிறுவனங்களில் 1986-ஆம் ஆண்டில் 5,42,831 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

1986-ம் ஆண்டில் 8,076 தொழில்தகராறுகள் இநதத் துறையில் பெறப்பட்டன. இவற்றில் 1947 தொழில் தகராறு சட்டம் பிரிவு 12(3)ன் கீழ் ஏற்பட்ட உடன்படிக்கைகள் சேர்த்து 8,112 தொழில்தகராறுகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. (இதில் முந்தைய ஆண்டில் முடிவு பெறாத தொழில் தகராறுகளும் அடங்கும்) தொழில் தகராறு சமரச அலுவலர்கள் முயற்சிகளின் காரணமாக எண்பது சதவிகிதத்திற்கும் மேற்பட்ட தொழில் தகராறுகள் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

**மூ**டப்பட்ட தொழிற்சாலைகளில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அரசு இதுவரை ரூ. 46,45,600 நிதி உதவி அளித்துள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கென்று சென்னை, தேனாம்பேட்டையில் 'ஜீவா இல்லம்' கட்டப்பட்டுள்ளது. இதற்காக அரசு ரூ. 2 இலட்சம் நிதி உதவியும் 5 கிரவுண்ட் நிலமும் இலவசமாக வழங்கியுள்ளது.

எல்லாப் பெரிய தொழில் தாவாவிலும் தொழில் தகராறினைத் தீர்ப்பதற்காக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தக்க சமயத்தில் தலையிட்டு, தொழில் தகராறுகளைத் தீர்த்து வைத்து ஒரு உடன்பாடு காண பெருமளவு உதவியுள்ளார். அதி முக்கியமான சில வழக்குகளில் மாண்புமிகு முதல்வர் அவர்களே தலையிட்டு வழக்குகளை சுமுகமாக தீர்த்து வைத்து உதவியதையும் நினைவு கூர வேண்டும்.

மேலும், மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அரசு இதுவரை ரூபாய் 46,45,600 நிது உதவி அளித்துள்ளது. இந்த நிவாரணத் தொகையில் ரூ. 26 இலட்சம் சென்னை பி&சி மில் நிறுவனம் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட 13,000 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தொழிலாளர்களுக்கு பணிப் பாதுகாப்பளிக்கவும், நீண்ட நாள் தற்காலிகமாக இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டு பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நிவாரணம் தரவும், இவ்வரசு உருவாக்கியுள்ள 198[illegible]-ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம் ஒரு முற்போக்கான சட்டமாகும். இதன் மூலம், இந்த மாநிலத்தில 24 மாதங்களில் 480

நாட்கள் தொடர்ந்து பணிபுரிந்துள்ள தொழிலாளர் நிரந்தரம் ஆக்கப்படுவார். இருபதுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய இந்தச் சட்டம் 1.1.82 முதல் இந்த மாநிலத்தில் அமல்படுத்தப்படுகிறது.

இந்த வகையில் இயற்றப்பட்ட இன்னொரு சட்டமான 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கும் சட்டம் தொழிலாளர்களுக்கு அவர்களின் தற்காலிகவேலைநீக்கக் காலத்திலும் நிர்வாகம் அவர்களுக்குப் பிழைப்பூதியம் தர வழி செய்கிறது.

முறைப்படுத்தப்பட்ட தொழில்களில் உள்ள தொழிலாளாகள் நலத்தைப் பாதுகாகக எடுக்கப்படுகிற நடவடிக்கை அல்லாமல், இந்த அரசு முறைப்படுத்தப்படாத தொழில்களில ஈடுபட்டுள்ள பெரும் எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் குறைந்தபட்ச கூலிச் சட்டம், தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் போன்றவை தவிர வேறு வகைச் சட்டப் பாதுகாப்பின்றி இருப்பதையும் கவனத்தில் கொண்டே இருந்திருக்கிறது. இந்த வகையில் இந்த மாநிலததில் கைத்தறித் தொழிலாளர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

இந்த வகைத் தொழிலாளர்கள நலனைப் பாதுகாப்பதற்கென்று அரசு 1981ஆம் ஆண்டு "தமிழநாடு கைத்தற தொழிலாளா (வேலை நிலைமை மற்றும் இதர விதிகள்) சட்டம் என்ற ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்தச் சட்டம் தறிக்காரர்கள் மற்றும் கைத்தறித தொழிலாளர்களுக்கிடையே நல்ல தொழில் உறவை வளர்க்கவும், சம்பளம், பணித் தொடர்ச்சி, மற்றும் நல்வாழ்வுச் சலுகைகளை அவர்கள் பெறவும் வழி செய்கிறது. முறைப்படுத்தப்படாத பெருமளவு எண்ணிக்கை கொண்ட கைத்தறித் தொழிலாளர்களுக்காக **இப்படியொரு சட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டிலேதான் இயற்றப்பட்டுள்ளது.**

உடல் உழைப்புத் தொழிலாளர்களும் தங்கள தேவைகளுக்காகப் போராடும் முறைப்படுத்தப்படாத தொழில்களில பெரும பகுதியைச்சோந்தவாகள் ஆவார்கள. இந்த அரசு அவர்களுககும் அவாகளின் பணி நிலைமைகள உயரவும், நல்வாழ்வுச் சலுகைகள் பெருகவும், புதுச் சடடம் ஒன்றை இயற்றி நேசக்கரம் நீட்டியுள்ளது. இந்தச் சட்டம் "தமிழ்நாடு உடல உழைப்புத் தொழிலாளர் (பணி நிலைமைகள் ஒழுங்குபடுத்தும்) சட்டம், 1982 என்று அழைக்கப்படும்.

இவற்றோடு கூட இந்த அரசு கட்டுமானத் தொழிலில ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் நலனுக்கென ஒரு தனிச் சட்டம் இயறறி உள்ளது. இந்தத் தொழிலில ஈடுபட்டுளள முறைப்படுத்தப்படாத தொழில் வகையைச் சேர்ந்த பலருக்கு இது ஒரு பெரும்பயன் அளிக்கும் சட்டம் ஆகும்.

தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மறறும் சுருட்டு தயாரிக்கும் நிறுவனங்கள், கடைகள், நிறுவனங்கள் முதலியவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இதுவரை அவர்கள் மேற்கணட நிறுவனங்களில் பணியாற்றிய காலம், அல்லது பெற்ற ஊதியம் பற்றிய எந்தவிதச் சான்றும் அவர்கள் கைவசம் இல்லாதிருந்தது. ஆதலால் அவர்களால் சட்டப்படிப பெறவேண்டிய சலுகைகளைச சரிவரப் பெற இயலாமல் இருந்து வந்தது. இந்த நிலைமையை மாற்றும் வகையில் இந்த அரசு அந்தத் தொழிலாளர்களுக்கு மேற்படி நிறுவனங்கள் பணிச்சீட்டு, நேர அட்டை கட்டாயமாக வழங்கும் அளவில் பல்வேறு சட்டஙகளுக்கு திருத்தம் கொண்டு வந்துள்ளது.

அரசு 1977ம் ஆண்டுக்கு பின்பு 23 தொழில்களை குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் சேர்த்துள்ளது. இதன் மூலம் முறைப்படுத்தப்படாத தொழில் இனத்தைச் சேர்ந்த பல தொழிலாளர்கள் பயனடைவர். மேலும பாரம் ஏற்றி இறக்கும் தொழில் ஆட்டோமொபைல் பணிமனை, அச்சுத் தொழில், ஆட்டோரிக்ஷா மற்றும் வாடகை மோட்டார் தொழில் உள்ளிட்ட 17 தொழில்களுக்கு முதன் முதலாக குறைநத பட்ச ஊதியம் நிர்ணயம் செய்துள்ளது.

விலைவாசிப் புள்ளி விவரங்களுக்கு ஏற்ப பல்வேறு தொழிலில ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் குறைநதபட்சக் கூலி பெற வேண்டும என்பதைக் கருத்தில் கொண்டு அரசு இதுவரை 37 தொழில்களுக்கு ஏறகனவே நிர்ணயிககப்பட்டிருந்த குறைந்த பட்சக்கூலியைத் திருத்தியுள்ளது.

தொழிலாளர் நலத்தைப் பொறுததவரை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம மூலமாக, பல்வேறு வளாச்சித் திட்டங்களை அரசு நிறைவேறறி வந்திருக்கிறது. தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கென்று சென்னை, தேனாமபேட்டையில் ரூ.10 இலட்சத்தில் கட்டப்பட்ட கட்டடமாகும. இதற்காக அரசு ரூ.2 இலட்சம் நிதி உதவியும், 5 கிரவுணட் நிலமும் இலவசமாக வழங்கியுள்ளது. இந்தக் கட்டடம் நாடு போற்றும் மிகச் சிறந்த தொழிற் சங்க வாதியான **திரு. ப. ஜீவானந்தம்** அவர்களின் நினைவாக **'ஜீவா'** இல்லம் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆா அவர்களால் பெயர் சூட்டப்பட்டு சிறப்பாக இயங்கிவருகிறது.

தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர்கள் மனைவி மற்றும குழந்தைகள் நலனுக்காக மாநிலம முழுவதுமாக 51 தொழிலாளா நல மையங்களை பல தொழில் நகரங்களில் நிறுவியுள்ளது. இங்கே தையல் வகுப்புகளும் இளஞ்சிறாா பள்ளிகளும் நடைபெறுகின்றன.



தொழிலாளர்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிக்கவும், அவர்கள் நாட்டின் நடப்புகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையிலும் சென்னை, செங்கை, மதுரை உள்ளிட்ட 9 மாவட்டங்களில் 14 படிப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.



தொழிலாளர்கள், அவர்களின் துணைவியார்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகள் முதலியவர்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிலுவதால் ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்யும் வகையில் உதவித் தொகையாக 1986-87ல் 964 பேருக்கு ரூ. 1,07,568 வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளில் 75 பேர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 300 என்ற விகிதத்தில் உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

பொறியியல், மற்றும் மருத்துவம் மற்றும் சட்டப்படிப்புப் பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளில் தலா 25 பேர்களுக்கு உதவித்தொகை ரூ.1,000 விதம் 5 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

பொறியியல் மற்றும் மருத்துவப் பிரிவில் பட்டயப் படிப்புப் (டிப்ளமோ) பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உதவித்தொகையாக ஆண்டிற்கு ரூ. 600 வீதம் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகையால் மொத்தம் 175 நபர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயன்பெறுகிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள உயர் நிலைப் பள்ளிகளில் பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஒன்பதாம் வகுப்பு முதல் அவர்கள் தங்களுடைய இறுதிக் கல்வியை முடிக்கும் வரையில், உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டில் 16,125 பேர்கள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளார்கள். ரூ. 6,10,549-95 உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கென ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் பல்வேறு விதமான விளையாட்டுப் போட்டிகள் ஆண், பெண், இருபாலாருக்கும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதில் இப்போது 1,000க்கும் மேலான விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் கலந்து கொள்வது குறிப்பிடத் தக்கது ஆகும்.

சென்னையை அடுத்த தாம்பரத்தில் உள்ள காசநோய் மருத்துவ மனையில் தொழிலாளர்களுக்கென தனியாக 26 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவு ரூ.3.64 இலட்சம் செலவில் கட்டப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. திருப்பூர், பென்னாத்தூர் அரசு பொது மருத்துவ மனைகளிலும், ஆசாரிப் பள்ளத்திலும், காசநோய் நலப் பிரிவு கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

41 வயது முடிவடைந்து கண் பார்வை பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க உதவித் தொகையாக நபருக்கு ரூ. 60 வரை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1986-87ம் ஆண்டில் 1,28,257 ரூபாய் செலவில் 2,232 நபர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கும், அவர்களின் குழந்தைகளுக்கும் செயற்கை உறுப்புகள் தேவைக்கேற்றவாறு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1985-86ம் ஆண்டில் 30 பேர் பயனடைந்துள்ளார்கள். மேலும் கால்கள் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள், வாரியத்தால் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1986-87ம் ஆண்டில் 5 நபர்கள் இந்தத் திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

சுற்றுலா செல்லும் தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் பயனுக்காக, விடுமுறை இல்லம் ஒன்று திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் குற்றாலத்தில் கட்டப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்காக மற்றொரு விடுமுறை இல்லம் மாமல்லபுரத்தில் கட்டப்பட்டு விரைவில் திறக்கப்பட இருக்கிறது. உதகமண்டலம், கொடைக்கானல், இராமேஸ்வரம் ஓகேனக்கல் ஆகிய இடங்களிலும் விடுமுறை இல்லங்கள் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முறைப்படுத்தப்படாத கிராமப்புறத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க அவர்கள் விபத்துக்குள்ளானால் நிதி உதவி பெறும் திட்டம் ஒன்றையும் அரசு நிறைவேற்றியுள்ளது. சிறிய மற்றும் சாதாரண உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கு உதவும் விபத்து நிவாரணத்திட்டம் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15.9.84 முதல் அமுலாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி வேலையில் ஈடுபட்டிருக்கும்போது இறந்தால் ரூ.10,000, இரு கண் பார்வை அல்லது இரு உடல் உறுப்புக்கள் இழக்க நேரிட்டால் ரூ. 10,000 ஒரு கண்பார்வை அல்லது ஒரு உறுப்பு இழக்க நேரிட்டால் ரூ. 5,000- முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**இந்தத் திட்டத்தினால் இது வரை 231 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.**

## இலவச சட்ட உதவியில் முன்னணி

**ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் தான் முன்னணியில் உள்ளது.**

**1986ஆம் ஆண்டு இறுதி வரை தமிழ் நாட்டில் 50 ஆயிரத்து 633 பேரும் மத்தியப் பிரதேசத்தில் 42 ஆயிரத்து 399 பேரும் இலவச சட்ட உதவி பெற்றுள்ளனர்.**

ஆயுள் ஈட்டுறுதி-பணி ஓய்வு காலப் பயன்கள் நலச் சிறப்புத் திட்டம் 15.9.84 - முதல் அமுலாக்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், சாதாரண விவசாயிகள், கிராமக் கைவினைஞர்கள், வண்டி இழுப்போர், சலவைத் தொழிலாளர்கள், நாவிதர் போன்றோர்களுக்கு அவர்களின் 58-வது வயதில் மொத்தமாக ஓய்வூதியம் கிடைக்க வகை செய்கிறது. ரூ. 1,200த்துல இருந்து ரூ. 33,500 வரை ஓய்வூதியமாகப் பெறுவார்.

பல்வேறு தொழில் மையங்களில் பாதுகாப்பு வழி முறைகளைக் கடைப்பிடிக்க, பயிற்சியும், வகுப்பும் நடத்துவதன் மூலம், அரசு தொழிலாளர்களுக்கிடையே பாதுகாப்பு உணர்வைத் தூண்டுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



ஒரு உறுப்பினர் இறந்து போனால் இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம் அவருடைய நியமனதாரருக்கு ஈட்டுறுதித் தொகையாக ரூ. 5,000 வழங்குகிறது. இதனுடன் அவர் செலுத்தியுள்ள பங்கு தொகைக்கேற்ப ஒரு தொகையை அவரின் நியமனதாரருக்கு அரசு வழங்கும். மற்றபடி 58 வயது முடிந்ததும் ஓய்வு பெறும் ஒருவர் அவர் செலுத்தியுள்ள பங்குத்தொகைக்கு ஏற்ப

தொழிற்சாலைகள் அதிகம் உள்ள மதுரை, கோவை, சென்னை, சேலம், திருச்சி, போன்ற நகரங்களில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டதுடன் விபத்துக்கள் அதிகம் நடைபெற ஏதுவாக உள்ள அல்லது புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளை அரசு நடத்தி வருகிறது.

## எட்டு கோடி மரக்கன்றுகள்

**தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகிய இரு திட்டங்களின் கீழ் ஏறக்குறைய 8 கோடியே 38 இலட்சம் மரக்கன்றுகள் 1987 ஜனவரித் திங்கள் இறுதி வரை 61,356 எக்டேர் நிலப்பரப்பில் நடப்பட்டுள்ளன.**

தொழில் நிறுவனங்களில் நிர்வாகத்தினருக்கும், அவர்களால் நியமிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குமிடையே சுமுகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவ ஊக்குவக்கும் பொருட்டு, அரசு ''சுமுகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம்'' ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

பணியாற்றும் சிறார்களின் நிலைமையை மேம்படுத்தவும், அவர்களுக்குச் சத்துணவும், அடிப்படைக் கல்வி வசதியும், சுகாதார வசதியும் அளிக்கவும் முன்னோடித் திட்டம் ஒன்று, மத்திய அரசின் நிதியுதவியுடன் சிவகாசியில் 1986ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத் திட்டம் ரூ. 13.69 கோடி செலவில் 3 ஆண்டுக் கால அளவில் செயற்படுத்தப்படும்.

சிவகாசியில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காகப் பணியாளர் தொகுதி விபத்து காப்புறுதித் திட்டத்தையும் அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டம் மாநிலத்தில் உள்ள ஏனைய பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஆண்களைவிடப் பெண் தொழிலாளர்கள், பொதுவாக முறைப்படுத்தப்படாத தொழில்களில் உள்ளவர்கள், மிகுந்த பாதுகாப்பும், தனிக்கவனமும் தேவைப்படுபவர் ஆகிறார்கள். இப்போது அமுலாக்கப்படும் சட்டங்கள் இதற்கு போதியவையாக இல்லை என்பதோடு இந்தப் பெண் தொழிலாளர்கள் தொழிற்சங்க அமைப்புகள் கொண்டவர்களும் அல்லர். எனவே அரசு இந்தத் தொழிலாளர்களுக்கு அவர்களின் சமூக சட்ட உரிமைகளையும், சலுகைகளையும் பெற பயிற்சி தருவதற்கான பெண் அதிகாரிகளைக் கொண்ட தனி நிர்வாக அமைப்பு தேவை என்று கருதியது. அதற்கிணங்க 2 பெண் தொழிலாளர் ஆய்வாளர்கள் சிவகாசி மற்றும் கோயம்புத்தூரில் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலே கூறப்பட்ட அநேக சட்டங்களும், தொழிலாளர் நலத் திட்டங்களும் முன்னேறி வரும் நம்முடையதைப் போன்ற ஒரு நாட்டில் தொழிலாளர்கள் தாங்கள் சம்பந்தப்பட்ட தொழில்களில் உற்பத்தியைப் பெருக்கவும், உற்பத்தித் திறனை உயர்த்தவும் உதவும் அடிப்படைத் தேவைகள் என்பதைக் கருத்தில் கொண்டு இவ்வரசு நிறைவேற்றியவையாகும்.

# ஊர்-நகர் உருவாக்கும் அமைப்பு

# உயர்வுக்கு வழி வகுக்கும் சிறப்பு



தமிழகத்திலுள்ள நகரங்கள் மற்றும் கிராமங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகத் திட்டமிடும் பொறுப்பினை நகர்-ஊரமைப்புத் துறை ஏற்றுள்ளது. அதன்படி 1977ஆம் ஆண்டு முதல் கடந்த பத்தாண்டுகளில் மிகவும் முக்கியமான திட்டங்களை மேற்கொண்டு செயல்படுத்தியுள்ளது. அவற்றில் குறிப்பிடத்தக்க சில அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மதுரைக்கு ரூ. 300.23 லட்சம் ஒதுக்கீட்டுடனும், கோவைக்கு ரூ. 287.25 இலட்சம் ஒதுக்கீட்டுடனும் மேற்கொள்ளப்பட்ட பணிகள், இந்நகரங்களில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதி இரண்டு ஆண்டுகள் மற்றும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முற்பகுதி ஆகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பெற்றன.

ஒவ்வொரு நகரத்திற்கும் மாநில அரசு பாதி, மத்திய அரசு பாதி என்ற கணக்கில் ரூ. 80 லட்சம் ஒதுக்கீட்டுடன் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்க்கான மனை மேம்பாடு மற்றும் வசதிகள், பேருந்து நிலையங்கள் கட்டுதல் மற்றும் மேம்பாடு செய்தல், நாளங்காடிகள், வார அங்காடிகள், அங்காடி மையங்கள் பார உந்து மையங்கள் முதலியன கட்டுதல் மற்றும் குறைந்த செலவிலான துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதாவது 1980-85ஆம் ஆண்டுகளில் 28 நகரங்கள் தெரிவு செய்யப்பட்டு மேற்படி பணிகள் சிலவற்றை மேற்கொள்வதற்காக மொத்தம் ரூ. 2341.42 லட்சம் ஒதுக்கப்பட்டு, அதில் மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து மொத்தம் ரூ. 2209.47 லட்சம் தொகையை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் மற்றும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முதல் இரண்டு ஆண்டுகள் ஆகிய காலத்தில் செலவழித்துள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட மொத்த 179 திட்டப் பணிகளில் 31.3.85 தேதி வரைக்கும் 88 திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1985-86ஆம் ஆண்டுக்காலத்தில் 36 திட்டப் பணிகளும் 1986-87ஆம் ஆண்டுக் காலத்தில் 30 திட்டப் பணிகளும், முடிக்கப்பெற்றும், மீதமுள்ள 25 திட்டப் பணிகளில் 1987-88ஆம் ஆண்டுக் காலத்தில் 12 திட்டப் பணிகளும், மீதமுள்ளவை 1988-89ஆம் ஆண்டுக் காலத்தில் முடிக்கப்பெறும்.

மேற்படி திட்டம், ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது. இதன்படி தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு நகரமும் குறைந்த செலவில் துப்புரவுப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் ரூ. 28 லட்சம் தொகையையும் சேர்த்து மொத்தம் ரூ 120 லட்சம் மத்திய அரசு பாதி, மாநில அரசு பாதி என்ற கணக்கில் பெறத் தகுதி பெறுகின்றன.

பட்டுக்கோட்டை, அருப்புக்கோட்டை, இராமநாதபுரம், அறந்தாங்கி, மதுராந்தகம், ஆண்டிப்பட்டி, இராமேஸ்வரம், சித்தயன் கோட்டை மற்றும் பொன்னமராவதி ஆகிய 9 நகரங்கள் இவ்வகையில் தெரிவு செய்யப்பட்டு மேற்படிப் பணிகள் இவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து மேற்படித் திட்டங்கள் இந்நகரங்களில் செயல்படுத்த முதற் கட்டத் தவணைத்தொகையாக 1985-86ஆம் ஆண்டில் ரூ. 16.00 லட்சமும், 1986-87ஆம் ஆண்டில் ரூ. 182.20 லட்சமும் அளித்துள்ளன.

நகர் வளர்ச்சித் திட்டங்களுக்கு எல்லா நகரங்களுக்கும் மத்திய அரசின் உதவியை எதிர்பார்க்க முடியாது ஆதலால், மாநில அரசு தனது சொந்த நிதியிலிருந்தே உதவ முன் வந்து மாநில ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்



டம் என்பதன்ன ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் தொடங்கி இத்திட்டத்தின் கீழ் மாநில நிதியிலிருந்து நகராட்சிகளுக்கு வருவாய் தரக்கூடிய திட்டப்பணிகளான பேருந்து நிலையம், அங்காடிகள் தொகுதி, நாளங்காடி மற்றும் வாரங்காடிகள் அபிவிருத்தி, கட்டணக் கழிப்பறை மற்றும் குளியலறை ஆகியவை நிர்மாணிக்க நகராட்சி மன்றங்களுக்கு கடன் உதவி தரப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 174 திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 31.3.87 வரையிலும் ரூ. 967 லட்சம் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட 174 திட்டப் பணிகளில் 31-3-85 தேதிக்குள் 131 திட்டப் பணிகள் முடிக்கப்பெற்றுள்ளன. 1985-86ஆம் ஆண்டில் 18 திட்டப் பணிகளும், 1986-87ஆம் ஆண்டில் 21 திட்டப் பணிகளும் முடிக்கப் பெற்றும் மீதமுள்ள 4 திட்டப் பணிகள் 1987-88ஆம் ஆண்டில் முடிக்கப்பெறும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்படி மாநில ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ரூ. 600 லட்சம் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 30 பேருராட்சிகளில் இத்திட்டத்தை மேற்கொள்ள வேண்டி பேருராட்சி ஒவ்வொன்றுக்கும் ரூ.20 லட்சம் என்ற கணக்கில் முதலில் இத்தொகை ஒதுக்கப்பட்டது. எனினும் 30க்குப் பதில் 7 நகராட்சிகள் உட்பட 45 நகரங்களில் இத்திட்டத்தின் கீழ், பணிகளை மேற்கொள்ளக் கூடுதலாக ரூ. 80.00 லட்சம் நிதி உள்ளாட்சி மன்றங்களின் வேண்டுகோளுக்கேற்ப ஒதுக்கப்பட்டது. முதல் கட்டமாக 1986-87 ஆண்டுகளில் 24 பேரூராட்சிகள் மற்றும் 2 நகராட்சிகள் ஆக மொத்தம் 26 நகரங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ள மொத்தம் ரூ.140.00 லட்சம் வழங்கப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சி, வேலூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி நகராட்சிகள் ஆகியவற்றிலுள்ள பூங்காக்களையும், விளையாட்டுத் திடல்களையும் மேம்படுத்த மொத்தம் ரூ. 10 லட்சம் விடுவிக்கப்பட்டது. மேலும் கோவை நகராட்சியின் நகரப்பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்ய ரூ. 25 லட்சமும், சாலைத் தொடர் மேம்பாட்டுக்காக ரூ. 20 லட்சமும் அரசு அனுமதித்துள்ளது. ஏற்கெனவே இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செங்கல்பட்டு, ஆரணி, திருச்செங்கோடு, மேட்டுப்பாளையம், நாகப்பட்டினம், பழனி, சாத்தூர், சிவகங்கை, சங்கரன்கோவில் மற்றும் இராமநாதபுரம் நகரங்களில் இத்தகைய பணிகளுக்கான திட்டங்கள் தயாரிப்பில் உள்ளன.

**இந்தியாவிலேயே முதன்முதலாக, தமிழ்நாடு நகர்-ஊரமைப்புத் துறை, புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளுக்காக இயற்கைச் சீற்றத் தடுப்புத் திட்டத்தைத் தயாரித்துள்ளது.**

ஒவ்வொன்றும் ரூ. 5 லட்சம் செலவினதாக, புயற்பாதுகாப்பு நிலையங்களை உருவாக்க இத்திட்டம் வழிவகுக்கின்றது. புயற்காலங்களில் 500 பேருக்குப் புகலிடம் அளிப்பதுடன் அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதி, தானிய சேமிப்புக் கிடங்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் முதலியன இவற்றில் கிடைக்குமாறு வடிவமைக்கப்பட்ட இத்திட்டம், உலகெங்கிலும் இது பற்றி ஆய்ந்து அனுபவம் பெற்ற வல்லுநர்கள் உலக நாடுகள் அமைப்பின் இயற்கைச் சீற்றம்—அழிவு நிவாரண மையம் இவற்றின் பரிந்துரைக்கேற்ப உருவாக்கப்பட்டது ஆகும்.

புயல் அல்லாத காலங்களில் இந்நிலையங்கள் ஆரம்பச் சுகாதார மருத்துவமனைகளாகவோ, ஆரம்பப் பள்ளிகளாகவோ கைவினைத் தொழிற் பயிற்சி மையங்களாகவோ அல்லது அங்காடிகளாகவோ பயன்படுத்திக்கொள்ளப்படலாம். 1979ல் இத்திட்டம் துவங்கப்பட்டது. இதுவரை தமிழகத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் மொத்தம் 110 புயற் பாதுகாப்பு நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. ஐரோப்பியப் பொருளாதாரக் குழு, அகில உலகச் செஞ்சிலுவைச் சங்கம், மத்திய, மாநில அரசுகள், இந்தியப் பிரதமரின் நிவாரண நிதி, முதலமைச்சரின் நிவாரண நிதி ஆகியவற்றிலிருந்து நிதி உதவி பெற்று மேற்படி நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 15 நிலையங்கள் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உலக வங்கியின் உதவியுடன், தமிழ்நாடு நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கோவை, மதுரை, சேலம் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் நகர் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்:**

உலக வங்கியின் உதவி பெற்று கோவை, மதுரை, சேலம் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் நகர் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கென்று நகர் ஊரமைப்புத் துறையானது தமிழ்நாடு நகர் வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்தினை உருவாக்கியுள்ளது. இப்பெருநகர்களில் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியவர்கள் வாழும் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திக் கொடுக்கும் லட்சியத்துடன் மதுரைக்கு ரூ.61 கோடி, கோயம்புத்தூருக்கு ரூ.53 கோடி, திருச்சிராப்பள்ளிக்கு ரூ. 55 கோடி, சேலத்திற்கு ரூ. 40 கோடி எனக் கோரும் இத்திட்டத்தின் மூலம் மேற்படி பகுதிகளில் மனை மேம்பாடு மற்றும் வசதிகள், குடிசைகள் மேம்பாடு, போக்குவரத்து வசதிகள், நகராண்மை வசதிகள், குடிநீர் மற்றும் வடிகால் வசதிகள் முதலியன செய்து கொடுக்கப்படும். ஏற்கெனவே உலகவங்கி அலுவலர்கள் மாநில அரசு அலுவலர்களுடன் இது குறித்து முதற்கட்ட ஆலோசனை நடத்தியுள்ள நிலையில் இத்திட்டம் உலக வங்கியின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. 1987 செப்டம்பர் வாக்கில் இத்திட்டம் உறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு அரசின் 10 ஆண்டுச் சாதனைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது நில உடைமை மேம்பாட்டுத் திட்டம் என்று செப்பினால் அது மிகையாகாது.

தமிழகம், 1,30,069 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. தமிழக மக்களில் பெரும்பான்மையோர் விவசாயப் பெருங்குடி மக்கள். தங்கள் நிலத்தைச் சரிவரப் பாதுகாத்துக் கொள்ளவும், அந்த நிலத்தின் மூலம் அவர்கள் அடையக்கூடிய பயனை எவ்விதத் தங்கு தடையுமின்றி எளிதாகப் பெறச் செய்வதும் அரசின் தலையாய கடமைகளாகும்.

மறு நில அளவை மற்றும் மறு நிலவரித் திட்டம் 1937-லிருந்து எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே நில அளவைப் பதிவேடுகளில் நில உடைமையில் அவ்வப்போது ஏற்பட்ட மாறுதல்கள் சரிவரப் பதியப்படவில்லை. ஆகவே, விவசாயப் பெருங்குடி மக்கள் அரசாங்கத்தாலும், ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்களின் மூலமும் பெறக்கூடிய பலதரப்பட்ட பயன்களைப் பெறுவதில் சிரமம் அடைகின்றனர். ஆகவே, மறுநில அளவை செய்யும் வழியை அரசு ஆராய்ந்தது. நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் என்ற புதியதொரு திட்டத்தினைத் தமிழக அரசு 1-6-1979 முதல் செயல்படுத்தியது.

5-1-1982-ல் இத்திட்டத்தின் பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்திட்டம் கிராம அளவில் சமூக, பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படையானதாகவும், கணிசமான அளவில் வேலை வாய்ப்புகளைத் தருவதாகவும் உள்ளதால், இம் மேம்பாட்டுத் திட்டத்தை இரண்டு முதல் மூன்று ஆண்டு கால வரையறைக்குள் மாநிலம் முழுவதும் முடிக்க கொள்கையளவில் முடிவு எடுத்து, அதற்குத் தேவையான ஊழியர்களை அனுமதித்தார்கள்.

தமிழகத்தின் மொத்தப் பரப்பு 1,30,069 ச.கி.மீ. ஆகும். இவற்றில் ஒதுக்கப்பட்ட காடுகளும் அண்மையில் மறுநில அளவை செய்யப்பட்ட பகுதிகளும் சுமார் 25,183.80 ச.கி.மீ. பரப்பளவாகும்.

**நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் சாராம்சம்**

மேற்படி திட்டம் அமல்படுத்தப்பட்டதனால் அரசுக்கு இது நாள்வரை சுமார் ரூபாய் நாற்பது கோடி செலவு ஏற்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் முதற் கட்டப்பணி 70,485 ச.கி.மீ. பரப்பளவுள்ள 9942 கிராமங்களில் முடிக்கப்பட்டது. நிலப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு வட்ட அலுவலகங்கள்-மத்திய நில அளவை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு விட்டன. தீவிர உட் பிரிவுத் திட்டம் சுமார் 27,774 ச.கி.மீ. பரப்பளவில் பல ஆண்டுகளுக்கு முன் முடிக்கப்பட்டது. நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் மேற்படி 27,774 ச.கி.மீ. பரப்பளவு கொண்டு வரப்பட்டு, நில அளவை செய்யப்படுகிறது. இப்பணி 31-5-1987-ல் முடிவுறும். நிலப்பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு இந்த ஆண்டு முடிவிற்குள் சட்ட அலுவலகங்களுக்கும் மத்திய நில அளவை அலுவலகத்திற்கும் அனுப்பப் பட்டுவிடும்.

மேற்படி நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டு கட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட பட்டா முதலிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | வழங்கப்பட்ட பட்டாக்கள் | பயனடைந்த நபர்கள் |
|---|---|---|
| முதற்கட்டப் பணி | 73,34,000 | 1,09,44,518 |
| இரண்டாம் கட்டப்பணி (31.3.1987 வரை) | 14,46,689 | 22,73,619 |

மேற்படி பரப்பளவின்றி 500 சதுர மீட்டர் பரப்பளவுகொண்ட மலைக் கிராமங்களும், 3147 ச.கி.மீ. கொண்ட நத்தமும் 2979.20 ச.கி.மீ. கொண்ட நகரியம், முனிசிபாலிடிகள் மற்றும் கார்ப்பரேஷன்கள் நில அளவை செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இவைகள் நிறைவேற்றப்பட்டால் 1,04,885 ச.கி.மீ. பரப்பளவு நிலத்தில் நில அளவை முடிக்கப்பட்டுவிடும்.

மேற்படி திட்டத்திற்கு ஏற்படும் செலவில் பெரும்பகுதி அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நில உடைமையாளர்கள் உத்தேசமாக நஞ்சைக்கு ரூ. 27.30யும் புஞ்சைக்கு ரூ. 18.30யும் செலுத்த வேண்டியவர்களாகிறார்கள்.

இந்திய அரசின் 20 அம்சத் திட்டத்தின் 5-ல் (1)வது அம்சமாக நில மேம்பாட்டுத் திட்டம் அமைந்திருக்கிறது.

**இத்திட்டத்தின் பயன்கள்**

இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட கிராமங்களின் விவரம் நில அளவைச் சட்டத்தின்படி முதலில் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்படுகிறது. அதன் பின் ஒவ்வொரு கிராமத்திலும் பணி துவங்கும் முன் தண்டோரா மூலமும், விவசாயிகளுக்கு எழுத்து மூலமும் அறிவிப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் பட்டாக்களில் தவறு இருந்தால் அதனைத் திருத்திக் கொள்ள நில உரிமைதாரர்களுக்குப் போதிய வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. இது தவிர கிராம வாரியாக அங்குள்ள நில உரிமைதாரர்களைக் கொண்டு சிறு விழாக்கள் நடத்தி நிலச் சொந்தக்காரர்களின் ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது.

புதுப்பட்டா ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு பட்டாவுட

னும், அப்பட்டாவில் கண்டுள்ள நிலங்களின் புலப்படங்கள் நான்கு பக்க அளவுகளுடன் கொடுக்கப் படுகின்றன. விவசாயிகள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒவ்வொரு புலங்களுக்கும் வடக்குப் பக்கமுள்ள பட்டா தாரரின் பெயரும் எழுதிக் காண் பிக்கப்படுகிறது. கூட்டுப்பாட் டாக்கள் தனிப்பட்டாக்களாகப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன.

இதற்கென பிரத்தியேகமாக நில உரிமையாளரிடமிருந்து விண் ணப்பம் இல்லாமலே செய்துதரப் படுகிறது. கிராமங்களிலும்,வட்ட அலுவலகங்களிலும், உபயோகப் படுத்தப்பட்டு வரும் மூல ஆவ ணங்களான செட்டில்மெண்ட் பதிவேடு நிலச்சுவடி, சிட்டா, கிராமப்படம் ஆகியவை புதிய தாகத் தயாரிக்கப்பட்டு எதிர் வரும் 30 ஆண்டுகளுக்குப் பயன் படுமளவிற்குச் செய்து கொடுக் கப்படுகிறது. நிலங்களிலுள்ள காணாமற்போன சர்வே கற்கள் புதுப்பிக்கப்படுகிறது. அரசுக்குச் சொந்தமாக நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப் பட்டு, வட்டாட்சியர்களுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பப் படுகின்றன.

கிராமங்களில் நஞ்சையாகப் பதிந்துள்ள நிலங்கள் தற்போது புஞ்சையாகவும், புஞ்சையாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்கள் நஞ்சையாகவும் இருக்குமானால் அத்தகைய மாற்றங்களும் அது போல் பூமியில் தற்போது உப யோகத்தில் உள்ள நடைபாதை வண்டிப்பாதை போன்ற பொது மக்கள் உபயோகித்து வரும், இடங்களைப் புறம்போக்காக மாற்ற ஏதுவாக அத்தகைய புலங்களும் கணக்கெடுக்கப்பட்டு வருவாய்த்துறைக்கு மேல் நட வடிக்கைக்கு அனுப்பப்படுகின் றன.

இத்திட்டம் சுமார் 10,000 ஊழியர்களுக்கு மாதச் சம்பளத்தி லும்,சுமார் 20,000 நபர்களுக்குத் தினப்படியாகவும்வேலைகிடைக்க வழி செய்கிறது. மாதச் சம்பள ஒப்பந்தப்பணியாளர்களையும் தினக்கூலி பெரும் பிரிவு எழுத் தர்களையும், நிரந்தரமாகப் பணி யில் அமர்த்த இயலுமா என்று அரசு பரிசிலித்து வந்து பொது வாக ஒரு ஆணை வெளியிட்டுள் ளது.

இத்திட்டம் வெற்றிகரமாக அமைய விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் ஒத்துழைப்பு நல்குவதுடன் தங்கள் உரிமைகள் பற்றிய சரியாகத் தகவல் கொடுப் பதும் மிகவும் அவசியமாகும்.

**நிலப்பதிவேடுகள் பராமரிக்கும் திட்டம்**

பெரும் பொருட் செலவிடப் பட்டு நிறைவேற்றப்பட்ட நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாகத் தோற்று விக்கப்பட்ட மிக முக்கியமான நிலப்பதிவேடுகள் துல்லியமாகப் பராமரிக்கப்படுதல் மிகவும் அத்தி யாவசியமானதாகும். இதனைக் கருத்தில் கொண்டு அரசு திரும்ப வும் பராமரிப்புப் பணித் திட் டத்தை 1-5-1987 முதல் இரண்டு கட்டங்களில் அமல்படுத்தி யுள்ளது. இப்பணிக்கென மாவட்ட அளவில் ஒரு துணை ஆய்வாள ரும், ஒரு நிலப்பதிவேடுகள் வரை வாளரும், ஒரு புல உதவியாள ரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அல்லாமல் ஒரு புல அளவர் பகுதி பிர்கா அளவில் அரசு அனுமதித்து ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதனால் அரசுக்குச் சுமார் ரூ. 14 லட்சம் ஆண்டுதோறும் கூடுதல் செல வினம் ஏற்பட்டு 1604 நபர்கள் பயனடைவர்.

---




1.6.87' இதழின் முதல் அட் டைப் படம் என் கண்களுக்குக் குளிர்ச்சியூட்டியது. 'நிருபமா' சிறுகதை என் நெஞ்சைத் தொட் டது. 'வ.வே.சு.ஐயர் வாழ்விலே' என்ற கட்டுரையைப் படித்தேன். அவரது இறப்பு நிகழ்ச்சி என் னைத் திடுக்கிட வைத்தது.

எஸ்.பி.சந்தானராஜகோபால்,
களப்பாள்.

வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூ ரின் 'நிருபமா' கதையைப் படித் ததும் என்னுள் ஏக்கப்பெருமூச்சு எழும்பியது, இன்று அவர் நம்மி டையே இல்லையே என்று!

-பூம்புகார் கே.சம்பத்,
ஜாபர்கான்பேட்டை.

தமிழ் அறிஞர், பதின்கவன கர் கோவில்பட்டி இராமையா அவர்களைப் பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது.

-வே.இராசவேலன்
வாழியூர்.

''மாணவர் பக்கம்'' பகுதியில் இடம்பெற்ற அறிவுச்சுடர், தெரிந்துகொள்ளுங்கள் ஆகி யவை என்னை வியப்பில் ஆழ்த் தின. ''பாஞ்சைப் பதினைச் சொன்னாலே - வீரம் பாய்ந்து வருகுது தன்னாலே'' கட்டுரை பரவசத்தை ஏற்படுத்தியது.

பு.பாண்டியன்
திருவையாறு.

குடிநீர்ப்பிரச்சினை தீர மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் எடுத்து வரும் தீவிர நடவடிக்கைகளை 1.6.87 ''தமிழரசு'' மூலம் விவரமாகத்தெரிந்து கொண் டேன்.

சொ.முத்தமிழ்வாணன்
தஞ்சாவூர்.

நாடு விடுதலை பெறுவதற்கு அரும்பாடு பட்ட 'தியாகச் செம் மல்'களின் படங்களையும், அவர்களின் வீர வரலாற்றையும் தவறாமல் வெளியிடும் ஒரே இதழ் 'தமிழரசு' என்பதில் பெரு மையடைகிறேன். தமிழரசுக்குப் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

-ந.பாலாஜி,
கீழப்பாவூர்.

'தமிழரசு' தரும் செய்திக் கட் டுரைகளைத் தொடர்ந்து படித் துப் பயன் பெறுகிறோம். என் போன்ற வாசக அன்பர்களின் எண்ணங்களை வெளியிட புதிய பகுதி-ஒன்றை ஆரம்பித்தால், சிறப்பாக இருப்பதுடன் நாங்க ளும் மகிழ்வோம்.

எஸ்.எஸ்.வாசன்
தென் எலப்பாக்கம்.



# மீன்வளமும் மீனவர் நலனும்



ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை மற்றும் ஆறுகள், நீர்த்தேக்கங்கள், கால வாய்கள், குளங்கள், உவர் நீர்ப் பரப்புகள் போன்ற 3.69 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள உள் நாட்டு நீர்நிலைகளையுடைய தமிழகத்தில் பலதரப்பட்ட உள் நாட்டு மற்றும் கடல் மீன்வளத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. தமிழ் நாட்டிலுள்ள சுமார் 4.64 இலட்சம் கடல் மீனவர்களில் சுமார் ஒரு இலட்சம் மீனவர்கள் மீன் பிடி தொழிலில் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர். மேலும், 60,000 பேர் மாநிலத்தில் உள்நாட்டு மீன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு சுமார் 15 சதவீதமாகும். 1985-86ஆம் ஆண்டில் நாட்டின் கடல் பொருள் ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட மொத்த அந்நிய செலாவணியில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.60 கோடி ஆகும். அடுத்தடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தியதன் மூலம், தமிழ்நாட்டில் மீன் உற்பத்தி ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது. 1951-52ல் மீன் உற்பத்தி 81,700 டன்னிலிருந்து 1986-87 இறுதியில் 4.6 இலட்சம் டன்னாக உயருமென்று எதிர் பார்க்கப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் மீன் உற்பத்தி 30 சதவீதம் அதிகரித்துள்ளது. 1977-78ல் 3.55 இலட்சம் டன்னிலிருந்து 1986-87ல் 4.60 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

ஏழாவது திட்டக் குறியீடான 500 கரையேற்றும் படகுகளில் திட்ட முதலிரண்டு ஆண்டுகளில் அதாவது 1985-86 மற்றும் 1986-87 ஆம் ஆண்டுகளில 20 கரையேற்றும் படகுகள் வழங்கப் பட்டுள்ளன. இன்னும் 40 கரை யேற்றக்கூடிய படகுகள் வழங்க, 1987-88ஆம் ஆண்டுத் திட்டம் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின் கீழ், படகின் 20 சதவீதம் விலையை அரசு மானியமாக ஏற்றுக் கொள்கிறது. 20 சதவீதம் மீனவரால் செலுத்தப்பட வேண்டும். மீதம் 60 சதவீதம் வங்கிகளிடமிருந்து கடனாக மீனவர் பெற வேண்டும்.

தமிழ்நாட்டின் மொத்த கடல் மீன் உற்பத்தியில் சுமார் 70 சதவீதம் மீனை தொன்றுதொட்டு பயன்படுத்தப் பட்டுவரும் 38,000 நாட்டுப் படகுகளும் வள்ளங்களும், கட்டு மரங்களும் பிடிக்கின்றன. பெரும்பான்மையான மீனவர்களுக்கு சொந்தமான படகுகள் இல்லை. அவர்கள் படகு உரிமைதாரர்களிடமிருந்து பிடித்த மீனைப் பங்கிட்டு கொள்ளும் முறையில், படகுகளைப் பெறுகின்றனர். இதனால் படகு உரிமைதாரர்கள், பிடிக்கப்பட்ட மீனில் பெரும் பகுதியை எடுத்துக் கொள்வதால் ஈட்டப்பட்ட வருவாயில் ஒரு சிறு பகுதியே மீனவர்களுக்குக் கிடைக்கிறது. இம்மாதிரி மீனவர்களுக்கு ஒரு படகு கிடைக்கச் செய்யும் வகையில் 1987-88ல் ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாட்டுப் படகுதாரர்கள் ரூ. 15,000 விலையில் ஒரு கட்டுமரம் வாங்குவதற்கு நிதியுதவி வழங்குவதற்கு வகை செய்கிறது. இவைகளின் 20 சதவீதம் விலை அல்லது அதிகபட்சமாக ரூ. 3,000 வரை அரசு மான்ய உதவித் தொகையாக வழங்குகிறது. இத்திட்டத்தினால் பயன்பெறும் மனவர்கள் தங்களின் பங்காக ரூ. 3,000 செலுத்த வேண்டும். மீதம் உள்ள தொகை ரூ. 9,000 அரசுடைமை வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறப்படும்.



மைய அரசு உதவி திட்டத்தின் கீழ் தஞ்சை, திருச்சி, மதுரை, தருமபுரி, தென்னார்க்காடு, செங்கல்பட்டு, பெரியார் மற்றும் காமராஜர் ஆகிய மாவட்டங்களில் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் நிறுவப்பட்டுள்ளன. இம்முகமைகளின் பணியாளர் மற்றும் சில்லறைச் செலவினங்கள் நீங்கலாக மற்ற செலவினங்களை மைய அரசும் மாநில

அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இவற்றைத்தவிர தமிழ்நாடு அரசின் முழுச் செலவில் திருநெல்வேலி, வடார்க்காடு, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டன.



தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத் திட்டத்தின்கீழ் 1978-79 முதல் ரூபாய் 356.60 இலட்சம் 79 சங்கங்களுக்கு வழங்கப்பட்டு 13,914 அங்கத்தினர்கள் பயனடைந்துள்ளனர்.

மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதித் திட்டத்துன்கீழ், அரசு இதுவரை ''தாட்கோ'' மூலம் 9,865 வீடுகளும், மீன்துறை பொறியியல் பிரிவின் மூலம் 1,848 வீடுகளும் கட்ட ஒப்பளித்துள்ளது. இதுவரை ''தாட்கோ'' நிறுவனம் 9,160 வீடுகளும், மீன் துறையின் பொறியியல் பிரிவு 875 வீடுகளும் கட்டி முடித்துள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள மீனவர்களுக்கேற்படும் இறப்பு மற்றும் விபத்துக்களின்பால், மாநில மற்றும் மைய அரசு இரண்டுமே ஆண்டுக்கு தலா ரூபாய் 9 வீதம் பரிசில் கட்டணமாகச் செலுத்தி எந்தத் தொகையும் பெறாமல் மீனவர்கள் காப்புறுதி செய்கின்றனர். மேற்கண்ட காப்புறுதிக்கான ப்ரிசில் தொகை ஏதும் மீனவர்களிடமிருந்து வசூலிக்கப்படுவதில்லை. மீனவர்கள் இறந்தாலோ அல்லது நிரந்தரமாக ஊனமுற்றாலோ ரூபாய் 15,000 காப்புறுதி பணமாக காப்புறுதி செய்தவருக்கு வழங்கப்படுகிறது. ஒரு கண், அல்லது ஒரு கால் அல்லது ஒரு கை இழப்பிற்கு ரூபாய் 7,500 நஷ்ட ஈடாகப் பெற வகை உள்ளது. இதுவரை இத்திட்டத்தில் 1,36,647 மீனவர்கள் சேர்ந்துள்ளனர். 263 மீனவக் குடும்பங்களுக்கு ரூபாய் 37,42,500 காப்புறுதித் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூபாய் 20.03 இலட்சம் மீனவர் காப்புறுதிக்கான அரசின் பங்காக மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது.

மீனவ சமுதாயக் குழந்தைகளை ஊக்குவிக்கும் பொருட்டு 10 ஆவது வகுப்பில் மாநிலத்திலேயே அதிகமாக மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிக்கு தலா ரூபாய் 500 வீதமும் 12வது வகுப்பில் மாநிலத்திலேயே அதிகமாக மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிக்கு தலா ரூபாய் 1,000 வீதமும் வழங்க 1985-86 கல்வி ஆண்டிலிருந்து இந்த பரிசுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் கரையிறக்கிய மீனுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதில் பனிக்கட்டி உற்பத்தி மற்றும் குளிர் பதன நிலையங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. சென்னை, நாகப்பட்டினம், மதுரை, தூத்துக்குடி, மண்டபம் ஆகிய இடங்களிலுள்ள இந்நிலையங்கள் மீனவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதில் தொடர்ந்து பணியாற்றுகின்றன.

மண்டபம் பதப்படுத்தும் நிலையமும் எண்ணூரிலுள்ள உறைய வைப்பு நிலையமும் தொடர்ந்து குத்தகைஅடிப்படையில் இயங்கி வருகின்றன. இராயபுரம், மல்லிப்பட்டினம், மற்றும் தூத்துக்குடியில் உள்ள எரி எண்ணெய் வழங்கும் நிலையங்கள் லாபத்தில் இயங்கி வருகின்றன.



தமிழ்நாட்டில் 11 நீர் நிலைகளில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மீன் வளத்தைப்பெருக்கி மீனைப் பிடித்து அருகிலுள்ள நகர்களில் தரமான மீன் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறது. இந்நீர் நிலைகள் இருக்குமிடங்களில் நிறுவப்பட்டுள்ள மீன் பண்ணைகள் நல்ல முறையில் நிர்வகிக்கப்படுவதுடன், அவைகள் ஆண்டுதோறும் சுமார் 9 மில்லியன் தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்கின்றன. சாத்தனூரில் சீன பொறிப்பக முறையில் மீன் குஞ்சுகள் உற்பத்தி வெற்றிகரமாக செய்யப்பட்டது. பரீட்சார்த்த முறையில் மிதக்கும் கூடுகளில் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் தொழில் நுணுக்கம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி வங்கியின் முழுநிதியுதவியுடன் சிராக்கப்பட்டது.

மீன் வளத்தை உயர்ந்தபட்ச அளவுக்குப் பெருக்குவதில் தரமான மீன் பிடி வலை இன்றியமையாததது ஜப்பானிய நிதியுதவி ரூ. 70 இலட்சம் மற்றும் மாநில அரசின் உதவி ரூ. 20 இலட்சத்துடன் சென்னை இராயபுரத்தில் 54 டன்கள் மீன் பிடி வலை தயாரிக்கும் திறன் கொண்ட ஒரு மீன்பிடி வலை பின்னும் கூடத்தை 1986-ஆம் ஆண்டில் கழகம் நிறுவியுள்ளது. இப்பிரிவு 1986 செப்டம்பரில் நடைமுறை உற்பத்தியைத் துவங்கியுள்ளது. இப்பிரிவு 31.1.87 வரை ரூ. 19.2 இலட்ச மதிப்புள்ள 19 டன்கள் எடையுள்ள நைலான் வலைகளை உற்பத்தி செய்துள்ளது.



# பாசன வசதிகளைப் பெருக்கிட..

வரலாறு அறிந்த காலந்தொட்டே தமிழ்நாடு வேளாண்மையிலும், அதற்கு இன்றியமையாத பாசன வசதிகளைப் பெருக்குவதிலும் முன்னணியில் இருநது வநதிருக்கிறது. இரண்டாம நூற்றாண்டில் கரிகாலன் கட்டிய ''கல்லணை'' தாமிரபரணியாற்றில் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட அணைக்கட்டுகள், மன்னர்களும் குறுநிலக் கிழார்களும் அமைத்த எண்ணற்ற ஏரிகளும் இதற்குச் சான்றாக இன்றளவும் உள்ளன. அதன்பிறகு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்துல காவிரியின் குறுக்கே கட்டப்பட்ட ''மேட்டூர் நீர்த்தேக்கம்'', மேற்கு நோக்கிச் செல்லும் பெரியாற்று நீரை கிழக்கே திருப்பி மதுரை; இராமநாதபுரம் மாவட்டங்களில் வளம் செழிக்க உதவும். ''பெரியாறு நீர்த்தேக்கம்''. தாமிரபரணி ஆற்றில் கட்டப்பட்ட பாபநாசம் நீர்த்தேக்கம், திருவைகுண்டம் அணைக்கட்டு போன்ற பயன்தரும் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. நாட்டு விடுதலைக்குப் பின் ஐந்தாண்டுத் திட்டங்கள் வாயிலாக பெரிய நடுத்தர பாசனத்திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டு வருகின்றன,

தமிழ்நாட்டின் ஆற்று நீர் வளம் முழுவதையும் பயன்படுத்தி வருகிறோம். இனி நீர் வளத்தைப் பெருக்க வாய்ப்பேதுமில்லையெனில், கிடைக்கும் நீர் வளத்தை வீணாக்காமல் நன்கு பயன்படுத்த வேண்டிய கட்டாயம் பிறக்கிறது.

தமிழ்நாட்டின் நீர் அளவு மிகவும் குறைவு. ஒவ்வொரு துளி நீரையும் சிக்கனப் படுத்தினால் தான் ஏற்கனவே பாசனம் பெற்றுவரும் பரப்பைப் பேணிக் காக்கலாம் என்ற நிலையில் நாம் இருக்கிறோமாதலால் பாசன மேலாண்மைப் பயிற்சியின் அவசியம் என கருதப்பட்டது.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதினால் கிராமப்புற மக்களின் வருவாயை உயர்த்துவது பாசன மேலாண்மைப் பயிற்சித் திட்டத்தின் அடிப்படைநோக்கமாகும். அமெரிக்க அரசின் பன்னாட்டு வளர்ச்சிக்கான நிதிஉதவி நிறுவனத்தின் (USAID) உதவியுடன் இத்திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டின் ''பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்'' 1.4.1984 முதல் சென்னையைத் தற்காலிகத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவருகிறது. இந்நிறுவனத்தின் பணிகளை முறைப்படுத்த பொதுப்பணித்துறைச் செயலரைத் தலைவராகக் கொண்ட ஒரு ஆட்சிமன்றக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நிலையத்தின் நிரந்தர தலைமையிடமாக திருச்சியில் வட்டாரப் பொறியியல் கல்லூரிக்கு அடுத்தாற்போல் 30 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. இக்கட்டுமான பணிகளுக்கு ரூ.100 இலட்சம் தமிழக அரசிடமிருந்தும் ரூ.150 இலட்சம் அமெரிக்கக் கடனுதவியாகவும்பெறப்பட்டுள்ளன. உலக வங்கி உதவியும் எதிர்பார்க்கப்படுகிறது. சிறந்த முறையிலும், விரைவாகவும் கட்டுமானப் பணிகள் நிறைவேறி வருகின்றன. நிர்வாக அலுவலகம், வகுப்பறைகள், நூலகம், பரிசோதனைச் சாலை, மாணவர் விடுதி, தவிர அலுவலர் குடியிருப்பு ஆகியவை கொண்ட விரிவான வளாகமாக அமைந்திருக்கிறது. இதன்றி இவ்வளாகத்திற்கடுத்தாற்போல் பல்வேறு பாசன முறைகளை விளக்கும ஒரு மாதிரிப் பண்ணையும் தயாராகி வருகிறது.

இப்பயிற்சி நிலையத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் பல்வேறு துறைகளைச் சோந்த அலுவலர்களுக்கு நம் நாட்டிலும், அமெரிக்க நாட்டிலும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாசிரியர்கள் நீர்ப்பாசனத் துறை, விவசாயத்துறை, விவசாயப் பொறியியல் துறை, கூட்டுறவுத்துறை மற்ற துறைகளிலுள்ள அலுவலர்களுக்கும் விவசாயிகளுக்கும் தொடர்ந்து பயிற்சி முகாம்கள் நடத்தி வருகிறார்கள். 1984-85ம் ஆண்டில் 7 பயிற்சிகள் 1985-86ம் ஆண்டில் 17 பயிற்சிகள், 1986-87ம் ஆண்டில் 25 பயிற்சிகள் என்று இதுவரை 49 பயிற்சிகள் நடத்தப்பட்டன. மொத்தம் 1336 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

1987-88ம் ஆண்டில் 36 பயிற்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டு அதன்படி மே மாத இறுதிவரை 6 பயிற்சிகள் நடந்தேறின.

பயிற்சி வகுப்புகளில், நேரடி வகுப்புகள், கலந்துரையாடல், பாசனப் பகுதியில் நேர்முகப் பயிற்சி, பயிற்சியாளர்கள் தயாரிக்க வேண்டிய ஆய்வறிக்கை என்று பலவிதமான முறைகளில் பாசன மேலாண்மை பற்றிய விளக்கமாக கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. பயிற்சிக்கு உதவியாக தொலைக்காட்சி போன்ற கருவிகளும் கம்ப்யூட்டர் ஒன்றும் இந்நிலையத்தில் உள்ளன. பாசன மேலாண்மை தொடர்பான சிறந்த புத்தகங்களைக் கொண்ட நூலகம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. பயிற்சி பாடங்கள் அவ்வப்போது அதற்கான ஒப்புதல் பெறப்பட்ட பாடத்திட்டங்களின் படி தயாரிக்கப்பட்டு பயிற்சி பெறுவோர்க்கு அளிக்கப்படுகின்றன.

இந்நிலையத்தின் மற்றொரு அங்கமான ''செயல் திட்டப் பிரிவு'' தஞ்சை மாவட்டம் திருவாரூரில் 1.4.85 முதல் இயங்கி வருகிறது. காவிரி டெல்டா பாசனப் பரப்பில் ஒரு சிறிய பகுதியை(2000 ஏக்கர் நுண் ஆய்வுக்காகவும், செயல் திட்டத்தை அமல்படுத்தவும்) ஏற்றுக்கொண்டு களப்பணிகள் நடந்து வருகின்றன.

அப்பாசனப் பகுதியைப் பற்றிய சமூகப் பொருளாதார ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. அப்பகுதியில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக செய்யவேண்டிய பணிகள் பற்றி பாசனத்துறை, வேளாண்மைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை வல்லுநர்கள், அப்பகுதிவாழ் விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்ட கருத்தரங்கு ஒன்றை நடத்தி முடிவுகள் மேற் கொள்ளப்பட்டன.

''கால்வாயைக் காப்போம்'' என்ற முகாம் ஒன்றை நடத்தி விவசாயிகள் கால்வாயை சுத்தமாகப் பராமரிப்பதன் அவசியம் பற்றி உணரவும், கால்வாய்களை மேம்பாடு செய்யவும் அப்பகுதி வாழ் விவசாயிகளிடம் பரவலாக விளக்கம் செய்யப்பட்டது.

பாசன வாய்க்கால் ஓரமாக இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி கால்வாய் பராமரிப்புக்கும் நீர் விநியோகத்திற்கும் உதவும் வகையில் கால்வாய்க்கரை மேல் வண்டி செல்லும் பாதை அமைக்கப்பட்டது.

வேளாண்மைப் பொறியியல் பணித்துறையினரால் இப்பகுதிக்கென்றே தனி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மண் தன்மை, அமைப்பு பற்றி விரிவான நுண்ணாய்வு நடத்தப்பட்டு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நிலத்தடி நீர் பற்றிய ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. ''கோடை உழவு'' முன்மாதிரியாக நூறு ஏக்கர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டது. அப்பகுதியில் உள்ள 12 சமுதாய குட்டைகளை ஆழப்படுத்தி மேம்படுத்தப்பட்டது. அப்பகுதி விவசாயிகளுக்கென ஆண்களுக்கும் பெண்களுக்கும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. விவசாய கூட்டுறவு சங்கம் ஒன்றும் நிறுவப்பட்டது.

ஓராண்டிற்குப்பிறகு மீண்டும் பல்துறை அலுவலர்கள், விவசாயிகள் கலந்துகொண்ட கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டு இதுவரை செய்யப்பட்ட பணிகள், இனி செய்யவேண்டிய பணிகள் இவை பற்றி முடிவுகள் எடுக்கப்பட்டன.

இச்செயல் திட்டப்பணிகளை மத்திய நீர்வள அமைச்சகம், மற்றும் அமெரிக்க வல்லுநர்கள் குழு, ஆகியோர்கள் சிறப்பாகப் பாராட்டி மற்ற மாநிலத்தில் உள்ள இதுபோன்ற பயிற்சி நிலையங்களில் உள்ளவர்களுக்கு, இச்செயல் திட்டம் பற்று பயிற்சி முகாம் ஒன்றை நடத்த விரும்பிய தன் பேரில் 1987 பிப்ரவரி 2-14ல் தேசிய கருத்தரங்கு ஒன்று திருவாரூரில் சிறப்பாக நடந்தேறியது.

இவ்வாறு நிறுவப்பட்ட 5 மாநில பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையங்களின் பணிகளை அவ்வப்போது கண்காணிக்க மத்திய நீர் வளக்குழுவில் ஒரு தனிப்பட்ட இயக்ககம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயக்ககம் அவ்வப்போது கூட்டங்கள் கூட்டி மேற்கொள்ள வேண்டிய பணிகளைப் பற்றியும், மேலைநாடுகளில் பயிற்சி பெற ஏற்பாடுகளையும், மேலைநாடுகளிலிருந்து வாங்க வேண்டிய கருவிகளைப் பற்றியும் மேலைநாட்டு வல்லுநர்களை இப்பயிற்சியில் ஈடுபடுத்த வேண்டிய ஏற்பாடுகளையும் விவாதிக்கிறது.

இத்திட்டத்திற்காக ஆகும் செலவினை தமிழ்நாடு அரசும், அமெரிக்க நிதி உதவி நிறுவனமும் பகிர்ந்துகொள்கின்றன. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 1112 இலட்சங்கள். தமிழக அரசின் பங்கு ரூ. 414 இலட்சங்களாகும். அமெரிக்க அரசின் நிதிஉதவியில் கடன் ரூ. 254 இலட்சங்களாகும், மான்யம் ரூ. 454 இலட்சங்களாகும். இத்திட்டத்திற்கு 1991-ஆம் ஆண்டு மார்ச் முடிய அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் நிதி உதவி வழங்கப்படும். அதற்குள் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்ட தன்னாட்சி அமைப்பாக இந்நிலையம் செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது. 1991ம் ஆண்டு முதல் தமிழக அரசே இப்பயிற்சி நிலைய வளர்ச்சியில் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளும்

இத்திட்டத்தின் கீழ் நிலையம் அளிக்கும் பயிற்சியின் விளைவாக வேளாண்மை வளர்ச்சியில் சம்பந்தப்பட்ட பல்வேறு அரசுத் துறை அலுவலர்களிடையே, பாசனமேலாண்மை பற்றிய விழிப்புணர்வு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. விழிப்புணர்வு பெற்ற அலுவலர்கள் தங்களுடைய துறையை சார்ந்த பாசனப் பணிகளில் தண்ணீரை சிக்கனமாகப்பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகரிப்பார்கள் என்று நம்பப்படுகிறது.





**பொ**துப்பணித்துறையில் நீர்ப்பாசனத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக நீர்ப்பாசன ஆய்வுப் பிரிவு தனியாக ஒரு தலைமைப் பொறியாளரின் கீழ் 1975ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

இந்த ஆய்வுப் பிரிவு பெரிய நடுத்தர, சிறுபாசனம் மற்றும் சிறப்பு சிறு பாசனத்திட்டங்களை ஆய்வு செய்வதுடன் வரைபடம் மற்றும் வடிவமைப்புகளைத் தயாரித்தல், தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நீர்படுகைகளில் உபரியாக உள்ள நீரின் அளவை கணக்கிட ஓடைகள் மற்றும் ஆறுகளின் நீரளவைகள் எடுத்தல் ஆகிய பணிகளைச் செய்கின்றது.

இதைத் தவிர பாசன அமைப்புகளை நவீனமாக்கும் திட்டம் மற்றும் 200 ஏக்கர் முதல் 500 ஏக்கர் வரை ஆயக்கட்டுகள் உள்ள ஏரிகளை நவீனமாக்கும் திட்டம் தீட்டப்பட்டு ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தினரின் பொருளாதார உதவியின் கீழ் வேலைகள் செயல்பட்டு வருகின்றன.

அநேக நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு திட்ட அறிக்கைகள் அவ்வப்பொழுது அரசுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 132 நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 49 திட்டங்களுக்கான மதிப்பீட்டு தொகை ரூ. 472 கோடிக்கு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேற்படி திட்ட காலத்தில் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 10 நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ. 94 கோடி தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டங்களை முடிவு செய்வதற்காக சுமார் 153 இடங்களில் நீரளவைகள் எடுக்கும் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இதைத் தவிர தமிழ்நாட்டில் உள்ள 33 படுகைகளில் நீரியல் விவரங்கள் தயாரிக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

1982-1983லிருந்து சுமார் ரூ. 98 கோடி மதிப்புள்ள 828 சிறப்பு சிறுபாசனத் திட்டங்களின் ஆய்வுப்பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் சுமார் ரூ. 17 கோடி மதிப்புள்ள 103 சிறப்பு சிறு பாசனத் திட்டங்களை முடிவு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. சிறப்பு சிறுபாசனத் திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட திட்டங்களில் பல திட்டங்கள் ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழும், வறட்சி நிவாரணப் பணியின் கீழும் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் கீழும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதைத் தவிர கடந்த 1984ம் ஆண்டில், சுமார் ரூ. 2 கோடி மதிப்புள்ள 170 கசிவு நீர்க் குட்டைகளுக்கான திட்டங்கள் (மதுரை மாவட்டத்தில் 120 கசிவு நீர்க் குட்டை மற்றும் பெரியார் மாவட்டத்தில் 50 கசிவு நீர்க் குட்டைகள்) முடிவு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அவை எடுத்துக் கொள்ள அனுப்பப்பட்டுள்ளன. இதைத் தவிர ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தினரின் உதவி நிதித் திட்டத்தின் கீழ் ஏரிகளை நவீனப்படுத்தும் 100 திட்டங்களுக்காகச் சுமார் ரூ.20 கோடிக்கு தயார் செய்து தலைமைப்பொறியாளர் (சிறுபாசனம்) அவர்களால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதைத் தவிர இரண்டாவது கட்டமாக சுமார் ரூ. 4.5 கோடி மதிப்புக்கு ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டங்கள் இந்த ஆய்வுப் பிரிவில் தயார் செய்யப்பட்டுள்ளன.

1986-1987ம் ஆண்டில் 35 பெரிய மற்றும் நடுத்தர பாசன திட்டங்களுக்கான திட்டங்கள் திட்டமிடுப்பட்டுள்ளன. அதில் சுமார் ரூ. 124 கோடிக்கு 23 திட்டங்கள் அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

இதே போல் 1986-87ம் ஆண்டில் 171 சிறப்பு சிறுபாசனத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதில் சுமார் ரூ. 1468.75 இலட்சத்திற்கு 102 திட்டங்கள் அரசின் ஒப்புதல் பெற அனுப்பப்பட்டுள்ளன.

1987-88ம் ஆண்டில் 18 நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்களையும் 169 சிறப்பு சிறுபாசன திட்டங்களையும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.


செய்தியே சித்திரமே!
சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுக்கு மூன்று ஆண்டுகளில் முப்பது இலட்சம் குடியிருப்புகள் கட்டப்படும்.
கிராமப்புறத்தில் எட்டாவது வகுப்பு வரை பயிலும் ஏழை மாணவர்களுக்கும் தாய்மார்களுக்கும் 30 கோடி ரூபாய் செலவில் காலணி வழங்கப்படும்.
ஆதரவற்ற முதியோர் அனைவருக்கும் மாதந் தோறும் முப்பத்தைந்து ரூபாய் உதவித் தொகை வழங்குவதுடன் ஆண்டுதோறும் இரண்டு முறை இலவச வேட்டி சேலைகள் வழங்கப்படுகின்றன. இலவச சத்துணவும் வழங்கப்படுகின்றது.
சாமி

தமிழுக்கு என்று தனிப் பல்கலைக் கழகமும், மகளிருக்கு என்று ஒரு தனிப் பல்கலைக் கழகமும் தொழில் நுட்பப் பல்கலைக் கழகமாக அண்ணா பல்கலைக் கழகமும் அமைக்கப்பட்டுவிட்டன. மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கப்படுகின்றது.




ஆலய மேம்பாட்டுக்கும், அன்றாட வழிபாட்டுக்கும் ஆலயப் பணியாளர் நலத்துக்கும் அரசு அமைத்த ஒப்பற்ற திட்டம்தான் 7 கோடி ரூபாய் வைப்பு நிதித் திட்டம்.





தமிழ்நாட்டிலுள்ள பதினைந்து போக்குவரத்துக் கழகங்களில் மொத்தம் **11,167** பேருந்துகள் உள்ளன. நாள்தோறும் **104** இலட்சம் பயணிகள் இந்தப் பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். தினம் இவை ஓடும் தூரம் **36** இலட்சம் கிலோ மீட்டர்.



# எண்ணெய் வித்து உற்பத்தி ஏற்றம் பெற்றது இந்நாளில்

எண்ணெய்வித்துப் பயிர்கள் தமிழகத்தில் சாகுபடிப் பரப்பிலும், உற்பத்தியிலும், பயறு வகைப் பயிர்களுக்கு அடுத்த இடத்தை வகிக்கிறது. நிலக்கடலை, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு ஆகிய எண்ணெய் வித்துப் பயிர்கள் முக்கியமானவையாகும். இவை ஆண்டொன்றில் 12 இலட்சம் எக்டேர் பரப்பில் சாகுபடியாகிறது. இது மொத்தச் சாகுபடிப் பரப்பில் 15 விழுக்காடு ஆகும்.

எண்ணெய்வித்து மற்றும் தென்னைச் சாகுபடியைப் பெருக்கும் நோக்குடன் எண்ணெய் வித்துத்துறை 1980-81ல் தனியே அமைக்கப்பட்டது. எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கிட, இத்துறை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மானாவாரி சாகுபடிப்பரப்பை நிலைப்படுத்தி, உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு உரிய வழிமுறைகள் மேற்கொள்ளல்.

இறவைச் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்தியும் உற்பத்தியைப் பெருக்கிடும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல்.

> எண்ணெய் வித்துப்பயிர்கள் சாகுபடியாகும் பரப்பு 1976-77-ஆம் ஆண்டில் 10.13 இலட்சம் எக்டேர் என்ற அளவிலிருந்து 1986-87ல் 12.75 இலட்சம் எக்டேர் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. எண்ணெய் வித்துக்களின் மாநில உற்பத்தி 8.28 இலட்சம் மெட்ரிக் டன்கள் என்ற நிலையிலிருந்து 14.07 இலட்சம் மெட்ரிக் டன்கள் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.

பெரும்பாலான விவசாயிகளில் கடைப்பிடிக்கக்கூடிய கீழ்க்கண்ட புதிய தொழில் நுட்ப உத்திகள் பரவலாக்கப்பட்டன.

—அதிக உற்பத்தியை அளித்திடும் இரகங்களின் தரமான விதைகளைப் பயன்படுத்துதல்:

அதிகமான உற்பத்தியை அடைந்திடும் நோக்கத்துடன், விவசாயிகளுக்குத் தேவையான தரமான விதைகள் மற்றும் நாற்றுக்களின் விநியோகத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரித்துள்ளது, இத்துறையின் முக்கிய பணியாகும்.

மேற்கண்ட நோக்கத்தை எய்திட, துறையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

அவற்றில் முக்கியமானவை:

எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம்.

தேசிய எண்ணெய்வித்துப் பெருக்குத்திட்டம்.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் பெருமளவில் உதவிடும் திட்டம்.

சிறப்புப்பகுதித் திட்டம்.

தென்னை வளர்ச்சித் திட்டங்கள்.

**எண்ணெய்வித்து உற்பத்திப் பெருக்குத்திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் தரமான விதைகள் உற்பத்தி செய்து, விநியோகிக்கப்பட்டன. நிலக்கடலை சாகுபடிப் பரப்பில் 5%, எள்சாகுபடிப் பரப்பில் 15%, சூரியகாந்தி சாகுபடிப் பரப்பில் 50% ஆமணக்கு சாகுபடிப்பரப்பில் 30% என்ற அளவிற்கு, துறையின் தரமான விதை விநியோகம் மூலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டது. எண்ணெய்வித்துத் துறை மூலம் விநியோகம் செய்யப்பட்ட விதைகளின் அளவு 1879-80ல் 2516 டன்னாக இருந்தது; 1986-87ல் 9001 டன்னாக அதிகரித்துள்ளது.

**தேசிய எண்ணெய்வித்து வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் இடுபொருள்களான ரைசோபியம் கல்சர், ஜிப்சம், வேளாண்மைக் கருவிகள், பயிர்ப்பாதுகாப்புச் சாதனைகள் ஆகியவைகளின் உபயோகம் விவசாயிகளிடையே பரப்பப்பட்டு வருகின்றன. பெருமளவிலான செயல்விளக்கப் பாத்திகள் அமைப்பதன் மூலம் எண்ணெய்வித்துச் சாகுபடியில் பல்வேறு புதிய உத்திகள் விவசாயிகளுக்கு ஆற்றுவிக்கப்படுகின்றன.

**சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பெருமளவில் உதவிடும் திட்டம்**

சிறப்பு விதை மினிகிட்கள் (சிறுதளை) வழங்குவதன் மூலம் சிறு/குறு விவசாயிகள் பயன்பெறும் இத்திட்டம் 1983-84-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 1.07 இலட்சம் சிறு/குறு விவசாயிகள் பயன்பெறுகின்றனர்.

**சிறப்புப்பகுதித் திட்டம்**

இதே போன்று எண்ணெய் வித்துகளும் தென்னங்கன்றுகளும் 25% மானிய விலையில் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு வழங்கிடும் சிறப்புப் பகுதித் திட்டம் 1981-82 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் மூலம் ஆண்டொன்றுக்கு 14000 ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

**தென்னை வளர்ச்சித் திட்டம்**

தென்னை வளர்ச்சிக்காக, இத்துறை 34 நாற்றுப்பண்ணைகள் அமைத்து, 25 இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்து, நெட்டை இரகம் மற்றும் வீரிய ஒட்டு இரகங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

தரமான நாற்றுகள் வழங்கவும், குட்டை, நெட்டை, வீரிய ரக நாற்றுப்பண்ணைகளும் இரண்டு நெட்டை இரக தாய் மரத் தோட்டங்களும் அமைந்துள்ளன. ஆண்டொன்றுக்கு 2000 குட்டை-நெட்டை நாற்றுகள் விநியோகிக்கப்படுகின்றன.

தென்னைச் சாகுபடியில் தண்ணீர்க்கட்டுப்பாடு மேலாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த முறையில் தண்ணீர் உபயோகித்து, தென்னைத்தோட்டங்கள் பராமரிக்க, 1986-87ல் சொட்டு நீர்ப்பாசனச் சாதனங்கள் சிறு-குறு விவசாயிகளுக்கு ரூ.2.9 இலட்சம்செலவில்வழங்கப்பட்டுள்ளன. தென்னையைத் தாக்கும் கருந்தலைப்புழுவைக் கட்டுப்படுத்த, துறையின் ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்கள் மூலம் ஒட்டுண்ணி உற்பத்தி செய்து ஆண்டொன்றுக்கு 5000 எக்டேர் பரப்பில் தென்னை பாதுகாக்கப்படுகிறது. காண்டா மிருக வண்டு ஒன்றே தென்னையைத் தாக்கும் மிகப் பெரிய பூச்சியாகும். இதன் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த ''கிரீன் மஸ்காரிடின்பங்கஸ்'' பயன்படுத்தப்படுகிறது. இதற்காக இரண்டு ஆய்வகங்கள்/மையங்கள் 1984-85ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. ஆண்டொன்றுக்கு 2000கிரீன் மஸ்கார்டின்பங்கஸ் புழுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.



# அருட் பெருஞ் சாதனைக்கு அறநிலையத் துறை

தோன்றுதொட்டே, தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையில் அறநிலையங்களாகிய திருக்கோயில்கள் மற்றும் சமயத் தொடர்புடைய நிறுவனங்கள் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்ந்து வருகின்றன. பழங்காலத்தில் திருக்கோயில்கள் கல்விக் கூடங்களாக விளங்கின. இசை நடனம் சிற்பம் ஓவியம் முதலிய கலைகளை வளர்க்கும் நிலைக்களன்களாகத் திகழ்ந்தன. மேலும் நூலகங்களாகவும், நீதிமன்றங்களாகவும் அவைகள் இருந்திருக்கின்றன. ஆணைக் காப்பகங்களாகவும் அறச்சாலைகளாகவும் பயன்பட்டன. பணியாளர்களுக்கு மருத்துவவசதிகள் வழங்கியும் பணி புரிந்துள்ளன. தம்மைச்சார்ந்துள்ள மக்களுக்குப் பலவகைத் தொழில் தரும் நிறுவனங்களாகவும் அவை இயங்கி வந்துள்ளன. கடந்த பத்தாண்டுக் காலமாக ஆன்மீகத் துறையின் பொற்காலம் இக்காலமே என்று ஆன்றோர்கள், சான்றோர்கள் போற்றுகின்ற வண்ணம் அறநிலையத்துறை தன்னுடைய நிர்வாகத்தைச் சீரும் சிறப்புமாக நடத்தி வருகிறது.

## உயர்ந்து வரும் ஆலய வருமானம்

**ஆலயங்களின் ஆண்டு வருவாய்**

**(ரூ. கோடியில்)**

| | | |
|---|---|---|
| 1975-76 | ... | 11.69 |
| 1976-77 | ... | 13.79 |
| 1977-78 | ... | 14.65 |
| 1978-79 | ... | 15.17 |
| 1979-80 | ... | 15.59 |
| 1980-81 | ... | 16.10 |
| 1981-82 | ... | 16.56 |
| 1982-83 | ... | 18.57 |
| 1983-84 | ... | 19.74 |
| 1984-85 | ... | 21.86 |
| 1985-86 | ... | 22.88 |
| 1986-87 | ... | 25.98 |

பெருமைப்படத்தக்க சாதனை அல்லவா இது! தற்போதைய ஆண்டு வருமானம் 25.98கோடி கடந்த 10 ஆண்டுகளில் ஆலயங்களின் வருமானம் இரட்டிப்பாக உயர்ந்திருப்பது பெருமைப்படத்தக்க சாதனையாகும்.

## தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் யார் காலத்திலும் செயற்படுத்தப்படாத புதிய திட்டம்

வருவாய் அற்ற ஆலயங்களின் வழிபாட்டுச் செலவிற்காக ஐந்து கோடி ரூபாய், கிராமப் புறக் கோயில்களின் திருப்பணிக்காக ரூபாய் ஒரு கோடியும் - ஆலயப் பணியாளர் மருத்துவம் மற்றும் அவர்தம் பிள்ளைகள் கல்விநிதிக்காக ரூபாய் ஒருகோடியும் - ஆக ஏழு கோடி ரூபாய்கள் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டமே ஏழு கோடி ரூபாய் வைப்பு நிதித் திட்டம் எனவும், ஆலய மேம்பாட்டுத் திட்டம் எனவும் அழைக்கப்படுகின்றது.

சமயத் தலைவர்கள் அனைவரும் இந்த ஏழு கோடி ரூபாய் வைப்பு நிதித் திட்டத்தை மிகப்

போற்றி வரவேற்றுள்ளனர். இத்திட்டத்தால் வருவாய் அற்ற ஆலயங்களின் வருடாந்திர பூஜை செலவிற்காக ரூ. 5,000 வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 1335 ஆலயங்கள் தலா ரூ. 5,000 பெற்றுப் பயன் அடைந்திருக்கின்றன. இத்திட்டத்தினால் ஏழு கோடி ரூபாயிலிருந்து ஆண்டொன்றுக்குக் கிடைக்கும் வட்டித் தொகை சுமார் ரூ. 70 இலட்சங்கள் நலிவுற்ற ஆலயங்களுக்கும், ஆலயப் பணியாளர்களுக்கும் வரப்பிரசாதமாக அமைய இருப்பது, பத்தாண்டு அறநிலையத்துறை சாதனைகளில் தலையாய சாதனையாகும்.

## தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் யார்காலத்திலும் செயற்படுத்தப்படாத புதிய திட்டம்

வருவாய் இல்லாத ஆலயங்களின் வழிபாட்டுச் செலவிற்காக ஐந்து கோடி ரூபாய், கிராமப்புறக் கோயில்களின் திருப்பணிக்காக ரூபாய் ஒருகோடியும், ஆலயப் பணியாளர் மருத்துவம் மற்றும் அவர்தம் பிள்ளைகள் கல்வி நிதிக்காக ரூபாய் ஒரு கோடியும் — ஆக ஏழு கோடி ரூபாய் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமே ஏழு கோடி ரூபாய் வைப்பு நிதித் திட்டம் எனவும் ஆலய மேம்பாட்டுத் திட்டம் எனவும் அழைக்கப்படுகின்றது.

சமயத் தலைவர்கள் அனைவரும் இந்த ஏழு கோடி ரூபாய் வைப்பு நிதித் திட்டத்தை மிகப் போற்றி வரவேற்றுள்ளனர். இத்திட்டத்தால் வருவாய் அற்ற ஆலயங்களின் வருடாந்திர பூஜை செலவிற்காக ரூ. 5,000 வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 1335 ஆலயங்கள் தலா ரூ. 5000 பெற்றுப் பயன் அடைந்திருக்கின்றன. இத்திட்டத்தினால் ஏழு கோடி ரூபாயிலிருந்து ஆண்டொன்றுக்குக் கிடைக்கும் வட்டித் தொகை சுமார் ரூ. 70 இலட்சங்கள் நலிவுற்ற ஆலயங்களுக்கும், ஆலயப் பணியாளர்களுக்கும் வரப்பிரசாதமாக அமைய இருப்பது பத்தாண்டு அறநிலைய சாதனைகளில் தலையாய சாதனையாகும்.

### வசதியற்றோர்க்குச் சிறப்புத் திருமணங்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் ஆலயங்களில் வசதியற்றவர்க்கு இலவசச் சிறப்புத் திருமணங்கள் நடத்தி வைக்கும் சீரிய திட்டம் 1981-ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

அவற்றின் விபரம் வருமாறு:

| ஆண்டு | திருமணங்களின் எண்ணிக்கை | பயன்பெற்ற ஆதிதிராவிடர் | பயன்பெற்ற பிற்படுத்தப்பட்டோர் | கலப்புத் திருமணங்கள் |
|---|---|---|---|---|
| 1981 | 220 | 183 | 31 | 6 |
| 1982 | 512 | 385 | 103 | 24 |
| 1983 | 182 | 152 | 23 | 7 |
| 1984 | 112 | 84 | 28 | |
| 1985 | 210 | 144 | 53 | 13 |
| 1986 | 622 | 481 | 112 | 29 |



1987 ஆம் ஆண்டு முதல் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் ஆண்டுதோறும் 365 சிறப்புத் திருமணங்கள் நடத்தி வைக்கத் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

### சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழாக்கள்

'ஒன்றே குலம். ஒருவனே தேவன்' என்றார் திருமூலர். 'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்' என்றார் திருநாவுக்கரசர்.

இத்தகைய சான்றோர்களின் மொழிபோற்றி, 1981 ஆம் ஆண்டு முதல் நம்முடைய ஆலயங்களில் அனைத்து இனத்தவரும் பங்கேற்கும் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழாக்களை நடத்தி வருகிறது, நம்முடைய அறநிலையத்துறை. 5,000 ஆலயங்களில் ஆண்டுதோறும் 5 இலட்சம் மக்கள் இவ்விருந்து விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பித்து வருகின்றனர்.

### திருக்குட நீராட்டு விழாக்கள்

1977-க்குப் பிறகு ஆலயங்களில் நடைபெறும் திருக்குட நீராட்டு விழாக்களின் எண்ணிக்கை மிக அதிகமாகி இருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

குடநீராட்டுவிழா நடைபெற்ற ஆலயங்கள் 1981-ல் 88; 1982-ல் 69; 1983-ல் 114; 1984-ல் 84; 1985-ல் 117; 1986-ல் 64.

மாமன்னன் ராஜராஜனால் நிர்மாணிக்கப்பட்ட தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயம், அநபாயச் சோழனால் பொன்வேயப்பட்ட தில்லைப் பொன்னம்பலம், குலசேகரர், திருமங்கை மன்னர், அச்சுதராயர் போன்றவர்களால் வளர்க்கப்பட்ட திருவரங்கம் ஆலயம், பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்ட தென்காசி விசுவநாதர் ஆலயம், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் ஆலயம், மாங்காடு காமாட்சியம்மன் ஆலயம் போன்ற புகழ் பெற்ற ஆலயங்கள் உள்ளிட்ட எண்ணற்ற ஆலயங்களுக்கும் இப்பத்தாண்டுக் காலத்தில்தான் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுக் குடநீராட்டு விழாக்கள் நடத்தப்பட்ட பெருஞ்சாதனை எண்ணி மகிழத்தக்கது. அதிலும் 25-3-87-ல் தென் கிழக்காசியாவிலேயே உயர்ந்த கோபுரமாகத் திருவரங்கம் இராஜகோபுரம் 236 அடி உயரத்தில் கட்டி முடிக்கப்பட்டு மகா சம்ப்ரோட்சணம் நடைபெற்றதில், மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திருமிகு ஆர். வெங்கட்டராமன் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களும் மகா சம்ப்ரோட்சண வைப

வத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இத்தகைய குடநீராட்டு விழாக்களுடன் ஒன்பது கோடி ரூபாய்களுக்கு மேல் செலவு செய்யப்பட்டு 1549 திருப்பணிகள் இப்பத்தாண்டுகளில் நிறைவேற்றப்பட்டிருப்பதும் பெருமைப்படத்தக்க சாதனைகளாகும்.

**உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்**

தமிழ்நாட்டிற்குத் தனிப் பெயரையும், புகழையும் பெருமையையும் சேர்ப்பன, ஆலயங்களிலுள்ள உலோகத் திருமேனிகள் ஆகும். தொல்பொருள் ஆய்வுத் துறையில் இதுவரை 30,163 திருவுலாத் திருமேனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பல ஆலயங்களில் விக்கிரகங்களைப் பாதுகாக்கப் போதுமான வசதிகள் இல்லை. ஆகவே மின்சார எச்சரிக்கை மணி பொருத்தப்பட்டு நவீன பாதுகாப்பு வசதிகளுடன் விக்கிரகப் பாதுகாப்புக் கூடங்கள் கீழ்க்கண்ட மூன்று இடங்களில் அமைக்கத் திட்டமிடப்பட்டன.

(1) அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருவாரூர் தஞ்சாவூர் மாவட்டம்.

2. அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மாள் திருக்கோயில் நெல்லை.

3. அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக் காவல்.

இவற்றில் திருவாரூர் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ரூ. 12,900.00 செலவில் கட்டப்பட்டு 11.10.1986-இல் திறக்கப்பட்டு முதற்கட்டமாக 281 திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மற்ற இரண்டு உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**திருக்குளத் திருப்பணிகள்**

ஒவ்வொரு ஆலயமும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும் சிறப்புப் பெறுகிறது. புண்ணியத் தீர்த்தங்கள் உள்ள திருக்குளங்களைத் தூய்மையுடன் பேண வேண்டுவது மக்களின் தலைசிறந்த கடமையாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி ஆலயத் திருக்குளத்தையும், அருள்மகு கபாலீஸ்வரர் ஆலயத் திருக்குளத்தையும் பார்வையிட்டு திருக்குளத் திருப்பணிகளை வேகப்படுத்தி விரைந்து முடிக்க ஆணையிட்டுள்ளார்கள்.

இப்பொழுது நடைபெற்று வரும் திருக்குளத் திருப்பணிகள் சிலவற்றின் விவரம் வருமாறு:—

(1) அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் திருவல்லிக்கேணி, திருக்குளத் திருப்பணி மதிப்பீட்டுத்தொகை ரூ. 11 இலட்சம்.

2. அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் திருக்குளத் திருப்பணி மதிப்பீட்டுத்தொகை ரூ. 14 இலட்சம்.

3. அருள்மிகு திருத்தளிநாதர் திருக்கோயில் திருப்பத்தூர் இராமநாதபுரம் திருக்குளம் திருப்பணி மதிப்பீட்டுத்தொகை ரூ. 9.50 இலட்சம்.

4. அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் கமலாலயத் திருக்குளத் திருப்பணி ரூ. 1 இலட்சம்.

5 அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயில், திருக்குளத் திருப்பணி மதிப்பீட்டு தொகை ரூ. 60,000.

## புதிய தங்கத் தேர்கள்

**1977-க்கு முன் தங்கத்தேர்கள் இருந்த ஆலயங்கள் மூன்று மட்டுமே; அவை**

**1. அருள்மிகு தண்டாயுதபாணிசாமி திருக்கோயில், பழனி.**

**2. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம், திருத்தணி.**



**3. அருள்மிகு செந்திலாண்டவர் ஆலயம், திருச்செந்தூர்.**

**1977-க்குப் பின் தங்கத் தேர்கள் புதிதாக ஒன்பது ஆலயங்களில் உருவாக்கப்பட்டிருப்பது அறநிலையத்துறை சாதனைகளில் குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாலயங்கள் வருமாறு:**

**1. அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை.**

**2. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.**

**3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.**

**4. அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி.**

**5. அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.**

**6. அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில், சென்னை.**

**7. அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், சென்னை.**

**8. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சீபுரம்.**

**9. அருள்மிகு சங்கரநாராயணசாமி திருக்கோயில், சங்கரன்கோவில்**

இன்னும் பல திருக்குளங்களின் திருப்பணியும் நடந்து வருவது குறிப்பிடத் தக்கது.

### வெளிநாடுகளுக்கு உதவி

வெளி மாநிலங்கள், வெளிநாடுகளிலும் ஆன்மீகம் தழைக்கச் செய்ய நம்முடைய அறநிலையத் துறை கடந்த பத்தாண்டுக்காலங்களில் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை மானியமாக வழங்கியுள்ளது.

இலங்கை அருள்மிகு திருக்கேதீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிக்கு ரூபாய் 2 இலட்சம் வழங்கியுள்ளது. கலிபோர்னியா சான்பிரான்சிஸ்கோவில் கட்டப்படும் இந்துக்கோயிலுக்கு அருள்மிகு மதுரை மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயம் ரூ. 1,06,975-ம் அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில் பூஜை சாமான்கள் வழங்கிய வகையில் ரூ. 9,354-ம் வழங்கியுள்ளன.

இவ்வாறே இந்தியாவில் மற்ற மாநிலங்களில் அமைக்கப்படும் ஆலயங்களுக்கும் அறநிலையத் துறை வழங்கியுள்ள மானியங்களின் விவரம் வருமாறு:

அருள்மிகு சதார உத்திர சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு ரூ. 3,53,000.

அருள்மிகு அலகாபாத் ஆதி சங்கரர் விமானம் கட்ட ரூபாய் 2,00,000.

மகாராஷ்டிர மாநிலம், செம்பூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருப்பணிக்கு ரூபாய் 25,000.

### மின் இழுவை ரயில்

பழநியில் படிக்கட்டுகளின் வழியாக ஏறிச்சென்று இறைவனைத் தரிசிக்க இயலாத பக்தர்களுக்காக ஒரே ஒரு மின் இழுவை ரயில் மட்டுமே 1976-க்கு முன் இருந்து வந்தது. இரண்டாவது மின் இழுவை ரயில் ஒன்று1977-க்குப் பின் அமைக்கப்பட்டு பயன்பட்டு வருகிறது. தற்போது 40 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் மூன்றாவது மின் இழுவை ரயில் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

### ஓடாத தேர்கள் ஓடுகின்றன

பல ஆலயங்களில் திருத்தேர்கள் பழுதுபட்ட நிலையில் தேர்கள் ஓட்டப்படாமல் பல ஆண்டுக் காலங்களாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் கோயில் தேரை அறநிலையத் துறை ரூபாய் ஏழு இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்த்து 1985-ஆம் ஆண்டு முதலாகத் தேரோட்டம் நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்க சாதனையாகும். அவ்வாறே அருள்மிகு பார்த்த சாரதி ஆலயத் தேரும் பழுது பார்க்கப்பட்டு ஓட்டப்பட்டு வருகிறது. திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் ஆலயத்திலும், காஞ்சீபுரம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் ஆலயத்திலும் உள்ள தேர்களுக்கு பெல் (BHEL) நிறுவனத்தின் மூலம் இரும்புச் சக்கரங்கள் செய்து பொருத்தப்பட்டு தேரோட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.



### ஆலயப் பணியாளர்களின் ஊதிய உயர்வுகள்

துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் நிர்வாக அதிகாரிகள் உள்ள திருக்கோயில் பணியாளர்களின் 125 ஊதிய விகிதங்களை 20 ஊதிய விகிதங்களாக மாற்றி 1-4-1986 முதல் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாணைகளினால் 2944 ஆலயப் பணியாளர்கள் பயன் அடைகின்றனர். இதனால் அறநிலையத்துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 22.32 இலட்சம் கூடுதல் செலவாகிறது.

முதல் நிலை முதல் நான்காம் நிலை வரையில் உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு கருணைப் பணிக்கொடையாக ரூ. 200 வழங்கிடவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

### கம்பர் கோட்டம்

கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கு அவர் பிறந்த தேரழுந்தூரில் கோட்டம் அமைக்க 10-10-54-இல், ஆளுநர் ஸ்ரீபிரகாசா அடிக்கல் நாட்டினார். ஆனால் இத்திட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்தது. அறநிலையததுறை கம்பருக்குக் கோட்டம் அமைக்க முடிவு செய்து ஒரு ஏக்கர் 10 சென்ட் நிலத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலம் இந்தப் பணியை முடிக்க எண்ணி பணியை 18-3-84-ல் தொடங்கியது. 10-12-84-ல் கோட்டத்தையும் கட்டி முடித்துத் திறந்து வைத்துவிட்டது.

### திட்டமிடப்பட்டுள்ள பிற பணிகள்

கம்பருக்குக் கோட்டம் அமைத்ததைப் போல் தெய்வச் சேக்கிழாருக்கும் இளங்கோவிற்கும் வள்ளலாருக்கும் கோட்டங்கள் காணவும் அறநிலையத்துறை எண்ணியுள்ளது. கம்பர் பள்ளத்தாக்கில் கண்ணகி கோட்டத்தை மிகச் சிறப்பாக அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

காஞ்சிப் பெரியவர் தவத்திரு ஜெயேந்திரசரசுவதி சுவாமிகளின் அருளாணையின்படி, சென்னையில் பெசன்ட் நகருக்கு அருகில் அறுபடை வீடாலயம் அமைக்கவும் திட்டமிடப்பட்டு பணிநடைபெற்று வருகிறது. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயப் பூஜைக்காக ரூ. 5 இலட்சம் நிலையான வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருப்பதும், சிதம்பரத்தில் சேக்கிழார் விழா நடத்தப்படுவதற்கு ரூ. 5 இலட்சம் நிலையான வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கடந்த 10 ஆண்டுக் காலத்தில் அறநிலையத்துறை ஆற்றியிருக்கும் பணிகள் மிகப் பல. மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகவும் மகேசன் தொண்டே மக்கள் தொண்டாகவும் சிறப்புற அறநிலையத்துறை தன்னுடைய பணிகளை ஆற்றி வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-2




# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002


